வரு.74 இல. 15 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்

வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

2022 ஏப்ரல் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

April 10 Sunday, 2022

32 பக்கங்கள் 50/-

05
எமது கோரிக்கைகளை அரசு பொருட்டாக கொள்ளவில்லை

07
ஆர்ப்பாட்டங்களை வன்முறையாக்கும் குழுக்கள்!

18
நடிகைக்கு வலைதளங்களில் விமர்சனம்

24
மலிங்கவின் சாதனையை முறியடித்த பிராவோ!

IMF உடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க துரிதமான ஏற்பாடு

மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்துடன் தொழில்நுட்ப கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், நேற்று முன்தினம் (08) இரவு முதல் அதன் செயற்பாடுகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார். அதன்படி நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கோரப்படும்.

04

இடைக்கால அரசை நிறுவ ஜனாதிபதிக்கு ஆலோசனை

11 கட்சிகள் இணைந்து யோசனை முன்வைப்பு

அனைத்துக் கட்சிகளை உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கத்தை நிறுவுவதற்கான யோசனை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஆளும் கட்சியிலிருந்து வெளியேறிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவினால் இந்த யோசனை முன்மொழியப்பட்டுள்ளது. பொது அமைதியின்மையை சீர்செய்யவும், மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்கவும், மக்கள் தங்கள் விருப்பப்படி

04

கஷ்டங்கள், துன்பங்கள் இல்லை என்று இல்லை;

நாட்டு மக்கள் பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியம்

சர்வமதத் தலைவர்கள் வினயமாக வேண்டுகோள்

நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள், வீதி மறியல்கள், ஆர்ப்பாட்டங்கள்

04

ஸ்திரமான அரசை அமைக்க இவ்வாரம் புதிய அமைச்சரவை

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விசேட உரையையும் நிகழ்த்துவார்

லோரன்ஸ் செல்வநாயகம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் ஸ்திரமான அரசொன்றை அமைக்கும் நோக்குடன் புதிய அமைச்சரவை இந்த வாரத்தில் நியமிக்கப்படவுள்ளதாக ஆளும் கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது அமைச்சரவை கலைக்கப்பட்டுள்ளதையடுத்து அவசிய தேவை கருதி முக்கியமான மூன்று அமைச்சர்கள் ஏற்கனவே. ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளபோதும் அமைச்சரவையை முழுமைப்படுத்தும் நடவடிக்கைகள் இந்த வாரம் முன்னெடுக்கப்படுமென அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, இந்த வாரம் நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றவுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்க வட்டாரங்கள் தெரிவிப்பு

ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார் அல்லது ஊடக நிறுவனங்களின் தலைவர்களை அழைத்து நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் அவர்களுக்கு தெளிவு படுத்துவாரென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்போது நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை மற்றும் அரசியல் நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் ஜனாதிபதி கருத்துக்களை வெளியிடுவாரென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

04

வாசகர்களுக்கு புதுவருட வாழ்த்துகள்

(படம்: கயான் புஷ்பிக்க)

பணவீக்கத்தை குறைக்கும் நோக்கத்தில்

நாணய சபை வட்டி வீதத்தை இறுக்கியது மத்திய வங்கி

04

போராட்டங்கள் சுற்றுலா பயணிகளை பாதிக்காது

வெளிநாட்டமைச்சு அறிவிப்பு

04

சித்திரை புத்தாண்டு சுபகிருது வருஷப் பிறப்பு

வாக்கிய பஞ்சாங்க கணிப்பின்படி சித்திரை 01ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை காலை 7.50 மணியளவில் சுபகிருது வருஷம் பிறக்கிறது.

திருக்கணித பஞ்சாங்க கணிப்பின்படி சித்திரை 01ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை காலை 8.41 மணியளவில் சுபகிருது வருஷம் பிறக்கிறது.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி புத்தாடை நிறம்

நல்ல சிவப்பு அல்லது மஞ்சள் நிற பட்டாடை அல்லது சிவப்பு கரை அமைந்த புதிய பட்டாடை அணிவது நல்லது.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புத்தாடை நிறம்

மஞ்சள் நிற பட்டு அல்லது மஞ்சள் கரை கொண்ட வெள்ளை வஸ்திரம்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி ஆபரணம்

பவளம்,புஸ்பராகம் கொண்ட ஆபரணம்.

04

அனைத்து வங்கிகளும் 11,12ஆம் திகதிகளில் திறக்கப்படும்

11 12

அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளும் நாளை 11 ஆம் திகதி மற்றும் 12 ஆம் திகதியும் பொதுவான வங்கித் தொழில்பாடுகளுக்காக திறக்கப்படுமென அனைத்து பொதுமக்களுக்கும் மத்திய வங்கி அறிவித்துள்ளது.

ஜனாதிபதியுடன் கடந்த வாரம் பேசியோர் இந்தவாரம் கோஷம்

அரசியல் வஞ்சகம் என்கிறார் புலம்பெயர் அரசியல் ஆய்வாளர் கவியழகன்

04

எங்கள் கருத்து...

ஊடகங்கள் முன்பாக இன்றுள்ள பாரிய தார்மீகப் பொறுப்பு

நாட்டில் அமைதியற்றதொரு சூழ்நிலை நிலவுகின்ற இன்றைய சந்தர்ப்பத்தில், ஊடகங்கள் தமக்குரிய தார்மீகப் பொறுப்பை உணர்ந்து செயற்படுகின்றனவா எனும் கேள்வி எழுந்துள்ளது.

'ஒரு நாட்டின் மூன்றாவது கண்' அல்லது 'காவலன்' என அழைக்கப்படுகின்ற ஊடகங்கள், தமது நாட்டின் அமைதியான சூழலுக்கும் மக்களது நிம்மதியான வாழ்வுக்கும் வழியமைத்துக் கொடுக்க வேண்டிய பாரிய சமூகப் பொறுப்பைக் கொண்டுள்ளன.

ஆனால் இலங்கையில் இன்று தோற்றுவிக்கப்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையானது மேலும் தீவிரமடைவதற்கு தூபம் இடும் வகையில் பல ஊடகங்கள் செயற்பட்டு வருகின்றமை வேதனைக்குரிய விடயமாக உள்ளது. தொலைக்காட்சிகள், பத்திரிகைகள், வானொலிகள் மற்றும் இணையத்தளங்கள் போன்றவற்றில் கணிசமானவை மாத்திரமே தார்மீகப் பொறுப்புடன் செயற்படுகையில், ஏனைய ஊடகங்கள் நிலைமையை மோசமாக்கும் விதத்தில் செயற்பட்டு வருகின்றன. அவை உண்மை நிலையை

04

அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

இன்று முன்வைக்க ஐ.ம.ச. ஏற்பாடு

அரசாங்கத்துக்கு எதிராக கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை இன்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்றக் குழு கூட்டத்தில் முன்வைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.அதன்படி இன்று ஐக்கிய மக்கள் சக்தியின்

04

எரிபொருளின் தரம் குறைவா? குற்றச்சாட்டில் உண்மையில்லை

CPC ஆய்வுப்பிரிவு முகாமையாளர் நளின் சந்திரசிறி

எரிபொருளின் தரம் தொடர்பாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களில் எந்த உண்மையுமில்லை. தரம் தொடர்பில் பிரச்சினை இருந்தால் முறையிடலாமென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் ஆய்வு பிரிவு முகாமையாளர் நளின் சந்திரசிறி தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் (9) நடைபெற்ற

04

தனியார் பஸ்களுக்கு சலுகை விலையில் டீசல்

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

புத்தாண்டு காலத்தில், வெளிமாகாணங்களுக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களுக்கு, இலங்கை போக்குவரத்து சபை பஸ் நிலைய எரிபொருள் நிரப்பு நிலையங்களில், டீசலை வழங்கத் தீர்மானித்துள்ளதாக, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. மட்டக்குளி, மொரட்டுவை. தலங்கம,

04

விக்கல் வீராச்சாமி

அண்ணே, நாட்டில எங்க பாத்தாலும் ஒரே ஆர்ப்பாட்டமும், போராட்டமும், வீதிமறியலுயுமா இருக்குதே நாடு எங்கே போகப்போகுதோ....

நாட்டை திருத்த எண்டு சிலர் புறப்பட அதில சிலர் அரசியல் செய்ய பாக்கினம், அவையிண்ட எண்ணம் ஒருநாளும் நிறைவுறாது பாரும்...!!!

FUN BLASTER இடமிருந்து

மாதம் முழுவதும் Fun ஆக இருக்க மிகச்சிறந்த UNLIMITED பக்கேஜ்

Facebook WhatsApp and YouTube

உடன் மேலதிக டேட்டா*

ரூ.347/- மட்டுமே

மேலதிக வரிகள் இல்லை

செயற்படுத்தல் ரீலோட், MyDialog App அல்லது #678# மூலம்

* 1GB Anytime Data மற்றும் 1GB Free Night Bonus உள்ளடக்கப்பட்டுள்ளது

SD (360p) Video தரத்தினை வழங்குகின்றது

4G SIM அட்டையுடன் 4G ரூதயசுகயிறுடெ அவசியமாகும்

Dialog

எதிர்காலம் இன்றே.

மானிப்பாய் மருதடி விநாயகராலய தேர்த்திருவிழா

யாழ்ப்பாணத்தை தமிழரசர் ஆண்ட காலத்தில் சைவ சமயத்தின் மகத்துவங்களை நிலை நாட்டினார். இக்காலத்தில் ஒரு தபசிரேஷ்டரானவர் தமிழரசர் பிற் காலத்திலும் பறங்கியர் யாழ்ப்பாணத்தை தம்வயப்படுத்திய சொற்ப காலங்களுக்கு முன்னருமாய் மானிப்பாய் மருதடி விநாயகராலயத்தில் நிஷ்டையில் இருந்து சமாதியாய் விட்டார். மேற்படி மகான் சமாதி அடைந்த காலத்தில் பறங்கியர் மருதடி விநாயகர் ஆலயத்தை இடித்துச் சவக்காலையாக்கி விட்டனர்.

இந்நாட்களில் மக்கள் மகான் சமாதியடைந்த இடமும் இப்பொழுது மூலஸ்தானத்திற்கு கிழக்கில் இருப்பதுமாகிய மருதமரத்தின் கீழ் கண்களுக்கு புலப்படாத நேரங்களிலும் பொங்கலிட்டு கற்பூரமெரித்து இவ்வாறாக பல இக்கட்டான நிலைகளைக் கடந்து வரும் கால கட்டத்தில் நாற்பது வருடங்களின் பின்னர் பறங்கியர் அரசு ஒல்லாந்தர் கைக்கு மாறியது. இராக்காலங்களிலும் பறங்கியர் விநாயகரை வழிபட்டு வந்தார்கள். ஒல்லாந்தர் அரசு காலத்தில் பொங்கல் வணக்கங்கள் மருதடியில் விசேடமாகவும் வெளிபொருளாயும் நடந்து வந்தன. இக்காலத்தில் தொண்டை மண்டலத்தில் இருந்து வந்த தியாகராசுக் குருக்கள் நவாலி தூக்கிணி கோவிலடியில் தங்கினார். தூக்கிணி வைரவ கோவிலில் இருந்து ஒரு வருடமாக சிவபூசை வணக்கம் செய்து வரும் நாட்களில் அங்கு வேள்வி நடைபெற ஆயத்தமாகியது. பெரியவர் இக்கோவிலில் பெருந்தொகையான ஆடுகள் வெட்டப்படுமென்று கேள்விப்பட்டார். உடனே அவ்விடத்தை விட்டு மானி நகரிலுள்ள மருதஞ்சோலையை அடைந்தார்.

அங்கு எமது கொப்பாட்டன் சுவாமிநாத முதலியாரின் உதவியை நாடி நிலம் பெற்று சிறு வீடு கட்டியிருந்தார். அந்த நாட்களில் இவ்விடத்தில் அனேக சனங்கள் பொங்கல் வணக்கஞ் செய்து வந்தமை கண்டு ஓர் விநாயகர் சிலை வைத்துப் பூசாக்கிரமங்கள் செய்து வந்தார். பின்னர் சுவாமிநாத முதலியாரின் உதவியுடன் மருதமரத்தின் மேற்குத் திசையை நோக்கிக் கர்ப்பக் கிரகமும் அர்த்த மண்டபமும் கட்டி முடித்து எஞ்சிய பாகங்களை மரந்தடிகளால் உருவாக்கிய பங்குனி மாசத்தில் மகோற்சவம் ஆரம்பஞ் செய்து சித்திரை முதலாம் திகதியில் ஆருஷம் ஆரம்பமாகும் போது இரதோற்சவமும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடத்தி வந்தார். ஆலயம் உற்பத்தியான காலங்களில் ஒல்லாந்த அரசு முடிந்து ஆங்கிலேயர் காலம் உதயமானது.

ஆங்கிலேயர் காலத்தில் மருதடியாலயம் அதி உன்னத மகத்துவ மேம்பாட்டு நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. கோயில் திருப்பணி வேலைகள் பல பெரியோர்களால் செய்யப்பட்டது. இத்திருப்பணி வேலைகளை பெரியவர்கள் ஒவ்வோர் காரணம் பற்றிச் செய்வித்தார்கள். உதாரணமாக இரகுநாத முதலியார் சின்னத்தம்பி ஒருமுறை கொடிய விஷம் தீண்டப்பெற்று அவ்விஷம் இறங்கினால் விநாயகருக்கு இரதஞ் செய்து வைப்பதாகப் பிரார்த்தனை செய்ததாகவும் அதனால் அக்கொடிய விஷம் நீங்கி அவர் சுகம் பெற்றதாகவும் அறியக் கூடியதாக உள்ளது. சைவசமயத்தை நிலை நிற்கசெய்து ஆலயங்களில் ஒன்று. இம் மருதடி ஆலயமே தற்பொழுது தர்மகத்தா சபையினர் ஆலயத்தை நிகர்வாகம் செய்கின்றனர்.

புது வருடம் ஆரம்பமாகும் நேரத்தில் விநாயகப்பெருமான் அதி உன்னத விசித்திர அலங்காரம் அமைக்கப் பெற்ற இரதத்தில் ஏறி வீதிவலம் வருகின்ற அற்புதக் காட்சியை எல்லோரும் கண்டு இன்புறுகின்றனர்.

வருஷம் பிறந்த இரண்டாம் நாள் தீர்த்தோற்சவம் நடைபெறுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த மருதடியில் 22.03.2022. கொடியேற்றம் ஆரம்பமாகி வருஷப்பிறப்பன்று இரதோற்சவம் நடைபெறுகிறது.

சுவாமிநாதன் தர்மசீலன் JP

நுவரெலியாவின் வசந்த விழா

பயணிகளை அரவணையுங்கள் அபகரிப்பதாக வேண்டாம்

நூரளையூரான்

நுவரெலியா மாநகர சபையின் ஏற்பாட்டில் வருடந்தோறும் நடாத்தப்படும் ஏப்ரல் வசந்தக்கால கொண்டாட்டங்கள் இம் முறை கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. இம்மாதம் முழுவதும் எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த முதலாம் திகதி பாடசாலை மாணவ மாணவிகளின் பேண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் நுவரெலியா மாநகரசபை முதல்வர் சந்தனலால் கருணாரட்ன மற்றும் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட ஆகியோர் ஏப்ரல் வசந்தகால நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தனர். இந் நிகழ் ஆரம்பித்து சிறிது நேரத்தில் திடீரென புகுந்த ஒரு குழுவினர் அரசாங்கத்திற்கு எதிராக கோஷமிட்டு தொடர்ந்து நிகழ்வுகளை நடத்தவிடாமல் இடையூறு விளைவித்தனர்.

நுவரெலியா ஏப்ரல் வசந்தக்கால நிகழ்வு ஆரம்ப வைபவம் இடையில் நிறுத்தப்பட்டாலும் என்ன எதிர்ப்புக்கள் வந்தாலும் ஏற்கனவே திட்டமிட்டப்படி ஏப்ரல் வசந்தகால நிகழ்வுகள் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை நடைபெறும் என மாநகர சபை தெரிவித்துள்ளது. ஏப்ரல் வசந்த காலத்தை முன்னிட்டு நுவரெலியா பொது மைதானத்தில் கிரிக்கெட், கரப்பந்தாட்டம், கால்பந்தாட்டம் போட்டிகளும், மாநகர விளையாட்டு உள்ளரங்

வசந்தத்தில் டீசல், பெற்றோல், எரிவாயு, மின்சாரம் தடையின்றி கிடைக்குமா?

கில் மேசை பந்து (டேபல் டெனிஸ்) பூப்பந்தாட்டம் (பெட்மிடன்) மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகளும் நடைபெறும் என ஏப்ரல் வசந்தக்கால ஏற்பாட்டுக்குழு தலைவரும் நுவரெலியா மாநகர முதல்வருமான சந்தனலால் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

நுவரெலியா ஒரு சுற்றுலா நகரம் இங்கு 90 வீதமானோர் சுற்றுலா துறையை நம்பியே வாழ்க்கை நடத்துகின்றார்கள். இங்கே வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தும் சுற்றுலாவை மையப்படுத்தியே இருக்கும். இவர்களின் வருடாந்த வருமானத்தின் பெரும்பகுதியை ஏப்ரல் மாதமே தேடிவிடும் அவசரத்தில் இவர்கள் இருப்பார்கள். இங்கு வாழும் மக்களின் நலன் கருதியே நுவரெலியா மாநகரசபை வருடம் தோறும் ஏப்ரல் வசந்த காலத்தை கோலாகலமாக நடத்தி வருகின்றது. இதனை குழப்பி நுவரெலியா வாழ் மக்களின் வயிற்றில் அடிக்கக்கூடாது.

ஏப்ரல் வசந்த காலத்தில்தான் நுவரெலியாவிலுள்ள சுற்றுலா விடுதிகள், வாடகை விடுதிகள், பழ வியாபாரிகள், மரக்கறி வியாபாரிகள், நகர வர்த்தகர்கள் வாடகை வாகன சாரதிகள் மட்டக்குதிரை சவாரி தொழில் செய்பவர்கள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகள் என அத்தனைத் துறைகளைச் சார்ந்தவர்களும் பணம் பார்க்கும் சந்தர்ப்பமே ஏப்ரல் சீசன்.

நுவரெலியா குதிரைப்பந்தய திடலில் எதிர்வரும் 15, 23 ஆம் திகதிகளில் குதிரைப்பந்தயப் போட்டிகளும், அதனை சுற்றியுள்ள பிரதான பாதையில் வருடம் தோறும் நடைபெறும் மோட்டார் காரோட்டப் போட்டியும் நுவரெலியா கிறகறி வாவியில் நடைபெறும் படகோட்டப் போட்டியும் இம்முறை நடைபெறாது, கிறகறி வாவிக் கரையில் எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் 4 ★ 4 ஜீப் ஓட்டப் போட்டியும் மோட்டர் குரோஸ் மோட்டர்சைக்கள் ஓட்டப் போட்டி எதிர்வரும் 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறும்.

நுவரெலியா விக்டோரியா பூங்காவில் எதிர்வரும் 17, 18 ஆம் திகதிகளில் மலர் கண்காட்சி போட்டி நடைபெறும், தினந்தோறும் காணிவேல் களியாட்ட நிகழ்வுகள் நுவரெலியா பொது விளையாட்டு மைதானத்திலும் நுவரெலியா கிறகறி வாவிக் கரையிலும் நடைபெறும். தினசரி இசை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளது.

நுவரெலியாவிற்கு வருகை தரவிருக்கும் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான அடிப்படை தேவைகளை கவனிப்பதற்காக நுவரெலியா மாநகரசபை மேற்கொண்டுள்ளது. விசேட பாதுக்காப்பு ஏற்பாடுகளுடன் நுவரெலியா பொலிஸாரும் இணைந்துள்ளனர்.

தற்பொழுது நுவரெலியா மாநகர பொது மைதானத்திலும் நுவரெலியா கிறகரி வாவிக்கரையிலும் காணிவேல் களியாட்ட நிகழ்வுளும் ஆரம்பமாகியுள்ளன. கிறகரி வாவியின் கரையில் வசந்தக்கால தற்காலிக கடைகளும் அமைக்ககப்பட்டு வருகின்றன.

கடந்த வருடங்களைவிட இவ்வருடம் பெருந்தொகையான சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள் என வசந்தகால நிகழ்வு ஏற்பாட்டு குழுவினர் எதிர்பார்த்துள்ளனர்.

நுவரெலியா சுற்றுலா ஹோட்டல்களிலும், சுற்றுலா விடுதிகளிலும், வாடகை வீடுகளிலும் தங்குவதற்காக பயணிகள் முன்கூட்டியே தம்மை பதிவு செய்திருப்பதாக ஹோட்டல் வட்டாரங்களை விசாரித்தபோது தெரிய வந்தது.

தற்பொழுது நாட்டில் டீசல் பெற்றோல் மண்ணெண்ணெய் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவுவதால் மக்கள் தினந்தோறும் காலையில் எழுந்தவுடன் ஏதாவது ஒரு வரிசைக்கு செல்ல வேண்டியுள்ளது. இந்த ஏப்ரல் மாதத்திலாவது நுவரெலியாவில் தட்டுப்பாடு இல்லாமல் டிசல், பெற்றோல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு வழங்க சம்பந்தப்பட்டவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஏப்ரல் வசந்தக்கால ஏற்பாட்டு குழுவினரும் நுவரெலியா வாழ் சுற்றுலாத் துறையினரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நுவரெலியாவுக்கு லிட்டில் லண்டன் என்ற பெயரும் உண்டு. என்பது ஒரு உல்லாச வாசஸ்தலம். வெள்ளைகாரர்கள் இந்த இடத்தை கண்டு பிடித்ததில் இருந்து இந்த நுவரெலியா நகரம் உல்லாச பயணிகளுக்கான நகரமாகவே இருந்து வந்துள்ளது. இங்கு வாழும் மக்களின் பிரதான வருமானம் மரக்கறிச் செய்கை மற்றும் சுற்றுலாத் துறை ஆகிய இரண்டில் இருந்தே பெறப்படுகிறது.

ஏப்ரல் மாத வருமாம் பெரிய ஹோட்டல்களில் இருந்து பாதையோர மரக்கறி விற்பனையாளர் வரை பிரிந்து செல்கின்றது.

கடந்த 2019 ஆண்டு ஏப்ரல் மாத குண்டுவெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து ஏப்ரல் வசந்தகாலம் படுத்துவிட்டது. அடுத்த வருடம் கொஞ்சம் நிமிர முனைந்தபோது கொவிட் தொற்றினால் தொடர்ந்து இரண்டு வருடங்களாக வசந்த காலத்தில் வெளியார் அற்ற நகரமாக நுவரெலியா இருந்தது.

இந்த வசந்தகாலத்திலும் இடர்கள் இல்லாமல் இல்லை. இம்முறை எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த சூழ்நிலையில் நுவரெலியாவிற்கு வருகை தரும் சுற்றுலா பயணிகளிடம் அதிக விலை கூறாமல் பொருட்களையும், உணவுப் பண்டகளையும், வாடகை அறைகளையும் நியாயமான விலையில் விற்பனை செய்ய வேண்டும் என வசந்தகால ஏற்பாட்டு குழுவினர் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

2018ம் ஆண்டு வசந்தகாலம் என்று நினைக்கிறேன். சுற்றுலாவுக்கு வந்தவர்கள் நுவரெலியாவுக்கு வெளியே தங்கி நுவரெலியாவுக்கு பகல் பொழுதில் வந்து சென்றார்கள். ஏனென்று கேட்டால், நுவரெலியாவில் அனைத்துமே விலை அதிகம் என்று சொன்னார்கள். அதற்கு முதல் வருடம் விலை அதிகம்; எக்கச்சக்கம் என்று சொல்லி பல பயணிகள் நுவரெலியா வருவதைத் தவிர்த்தார்கள். அனைத்துக்கும் ஒரு விலை உண்டு. அதைத் தாண்டி யானை விலை குதிரை விலைகளில் பொருட்களையும், மரக்கறிகளையும் உணவுப் பண்டங்களையும் விற்பனை செய்ய வேண்டும். ஒரு கஷ்ட காலத்தில்தான் இவ் வசந்த விழா வந்திருக்கிறது. அவர்களை அழைத்து அரவணைத்து புன்சிரிப்புடன் அனுப்பி வையுங்கள்.



இன்றைய தற்காலிக பின்னடைவு ஒரு மாத காலத்தினுள் நீங்கிவிடும்

'நாடு சொந்தக் காலில் நிற்கும்' என்கிறார் முன்னாள் அமைச்சர் சி.பி. ரத்னாயக்க

மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அரசியல்வாதிகள் அனைவரும் நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண ஒன்றிணைய வேண்டும் என்ற எண்ணத்தில் இருப்பதாக முன்னாள் அமைச்சர் சி.பி.ரத்னாயக்க தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து எமக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே முன்னாள் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

கே: பொருளாதார நெருக்கடி நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன. இது பற்றி உங்கள் நிலைப்பாடு என்ன?

பதில்: தற்போதைய அரசாங்கத்தின் பொருளாதார கொள்கையால் அல்ல இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அன்றைய நல்லாட்சி அரசாங்கத்தினால் பொருளாதாரம் சரியான முறையில் நிர்வகிக்கப்பட்டிருந்தால், இன்று நாம் நெருக்கடியை எதிர்கொண்டிருக்க மாட்டோம். கடந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளினாலேயே இன்று நாம் பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளோம். ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை விற்று பெற்ற பணத்தை என்ன செய்தார்கள்? அரசாங்கம் என்ற வகையில் நாம் அந்தப் பரிவர்த்தனைகள் குறித்துக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதே உண்மை. கடந்த அரசாங்கத்தின் தவறான பொருளாதார முகாமைத்துவத்தினால் நாம் இந்தப் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உலகப் பொருளாதார மந்தநிலையும் உள்ளது என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும்.

கே: ஜனாதிபதியால் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு பொருளாதார நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வு காண உதவுமா?

பதில்: நிச்சயமாக. முதலில் நாம் அனைவரும் அரசியலில் ஈடுபட ஒரு நாடு இருக்க வேண்டும். ஒரு நெருக்கடி அல்லது தேசிய பேரிடரின் போது, அரசியல் வேறுபாடுகள் இல்லாமல் அனைவரும் கைகோர்க்க வேண்டும். மியான்மர் முன்னாள் அதிபர் ஆங்சான் சுகி, ஆளுங்கட்சியினரின் அனைத்து விதமான தொல்லைகளையும் சந்திக்க வேண்டியிருந்தது. தனது நாடு ஒரு நெருக்கடியையும் தொற்றுநோயையும் சந்தித்த போது, அவர்கள் அனைவரும் தங்கள் தாய்நாட்டின் சார்பாக ஒன்றாக நிற்க வேண்டும் என்ற செய்தியை உலகுக்கு வழங்கினார். இவ்வாறான கடந்த கால அனுபவங்கள் உலகில் இருக்கும் போது, சில பிரிவினர் தங்களின் உள்நோக்கத்தை உணர்ந்து கொள்ள வேண்டும். எப்படியாவது அதிகாரத்தை கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணத்தை கைவிட வேண்டும்.

மக்களுக்கு பல்வேறு நிவாரணங்களை வழங்குவதை விடுத்து தமது குழந்தைகளுக்காக தாய்நாட்டைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் சூழ்நிலையை மக்களுக்கு முறையாகக் கற்பிக்க வேண்டும். முதலில், சாதி, மதம் மற்றும் பிற அரசியல் வேறுபாடுகளைப் பொருட்படுத்தாமல் தாய்நாட்டைப் பாதுகாப்பதற்கு நாம் அதிக முன்னுரிமை கொடுக்க வேண்டும். அதன் பிறகு நம் அரசியலை செய்யலாம்.

கே: நெருக்கடிக்குத் தீர்வு காண அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து விரைவில் தேசிய இணக்கப்பாடு எட்டப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்திருந்தார். இதனை எப்படிப் பார்க்கின்றீர்கள்?

பதில்: இது ஒரு நல்ல போக்கு. சில அரசியல்வாதிகள் தங்கள் நாட்டையும் அதன் மக்களையும் உண்மையாக நேசிக்கிறார்கள். எல்லா அரசியல்வாதிகளையும் ஒரே கோணத்தில் பார்க்கக் கூடாது. நான் சுமார் 30 வருடங்களாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளேன். எனக்கு வாக்களித்த அனைவரின் சார்பாகவும் ஏதாவது செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும். நான் ஒரு மக்கள் பிரதிநிதி. மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்ட அரசியல்வாதிகள், தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண ஒன்றிணைய வேண்டும் என்ற எண்ணத்தில் உள்ளனர். மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக நாம் முடிவுகளை எடுக்க வேண்டும். நாட்டின் எதிர்காலம் மற்றும் அதன் குழந்தைகள் சார்பாக நாம் நமது கடமையை நிறைவேற்ற வேண்டும்.

கே: இரட்டைக் குடியுரிமை பெற்ற எவரும் இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினராகவோ அல்லது ஜனாதிபதியாகவோ பதவி வகிக்க முடியாது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் கொண்டு வரவுள்ளதாக முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்திருந்தார். இது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?

பதில்: குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற முயற்சிப்பதை விட மக்கள் சார்பாக முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். முதலில், பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, நம் முடிவுகளை எடுக்க வேண்டும். இதனை விடுத்து இரட்டைக் குடியுரிமை போன்ற பிரச்சினைகளை எழுப்பி எந்தப் பயனும் இல்லை. அவர்கள் ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர்களின் இரட்டைக் குடியுரிமை பிரச்சினையை மாத்திரமே எழுப்புகின்றனர். அப்படியானால் எத்தனை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள்?

கே: மின்வெட்டு மற்றும் எரிபொருள், சமையல் எரிவாயுத் தட்டுப்பாடு காரணமாக மக்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர். நிலைமையை சமாளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

பதில்: இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண அரசு முயற்சித்து வருகிறது. பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க இந்தியாவும் தனது தொடர்ச்சியான ஒத்துழைப்பை நீடித்துள்ளது. சர்வதேச நாணய அமைப்புகளுடன் கலந்துரையாடிய பின்னரே நெருக்கடியை சமாளிக்க முடியும். சீனா, ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் எமக்கு தொடர்ந்து உதவிகளை வழங்குவதாக உறுதியளித்துள்ளன. அண்மையில் முடிவடைந்த பிம்ஸ்டெக் உச்சிமாநாட்டின் போது, பங்களாதேஷ் இலங்கைக்கு தனது உதவிகளை வழங்குவதாக உறுதியளித்திருந்தது. உலக வங்கியும் நம் மீது கவனம் செலுத்துகிறது. ஒரு மாத காலத்துக்குள் இந்த தற்காலிக பின்னடைவைக் கடந்து சொந்தக் காலில் நிற்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

கே: உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதிப்படுத்த அரசாங்கம் தவறியமை குறித்து கொழும்பு மறைமாவட்ட ஆயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தியுள்ளார். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் சுயாதீனமாக தொடர்கின்றன. முன்னாள் 'யஹபாலன' அரசாங்கத்தைப் போன்று, அரசியல் எதிரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு, நாங்கள் நீதிபதிகளையும், சட்டமா அதிபர் திணைக்கள அதிகாரிகளையும் அலரிமாளிகைக்கு அழைப்பதில்லை. விசாரணையில் தாமதம் ஏற்படலாம். 2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக ஏராளமான மக்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்து குற்றவாளிகளும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள், ஆனால் அரசாங்கம் விசாரணையில் தலையிடாது.

> **2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை அன்றைய நல்லாட்சி அரசாங்கத்தினால் பொருளாதாரம் சரியான முறையில் நிர்வகிக்கப்பட்டிருந்தால், இன்று நாம் நெருக்கடியை எதிர்கொண்டிருக்க மாட்டோம்.**

> **மக்களின் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண அரசியல்வாதிகள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்**

மக்கள் தேவைகளை உடன் நிறைவேற்றக் கூடிய முறைகளை புதிதாக உருவாக்குவது அவசியம்

மோசமான பொருளாதாரப் பிரச்சினைகளால் பாதிப்படைந்துள்ள மக்கள், பாதைக்கு இறங்குவது ஒருவிதமான திருப்புமுனையாகும். ஆட்சி முறைக்கு எதிராக எழுகின்ற சக்தி, மத்திய தரப்பாரின் எழுச்சியாகும். சந்தர்ப்பம் இல்லாமல் போவது தொடர்பான துயரத்தின் ஒரு பக்கமே அதுவாகும். மக்கள் மீது சுமையை சுமத்தும் முறையை தாங்கிக் கொள்ள சமூகம் தயாரில்லை. அதற்கு மாற்றம் தேவை. பொருளாதார மற்றும் சமூகப் பிரச்சினைகள் எம் அனைவருக்கும் பொதுவானவை. நாட்டுக்கு ஏற்படும் பிரச்சினைகளை குடிமக்களும் அனுபவிக்க நேரிடுகிறது. அதில் குறைகள், சமத்துவமின்மை மற்றும் அநீதிகளும் உள்ளன.

முறைகள் பற்றிய நம்பிக்கை மிகவும் முக்கியமாகும். தலைமை குறித்த நம்பிக்கை உயர்வாக இருக்க வேண்டும். நம்பிக்கை இழந்த சமூகத்தில் முடிவு பயங்கரமானதாகும்.

இலங்கையானது உலகில் அதிர்ஷ்டமான நாடுகளில் ஒன்றாகும். துரதிர்ஷ்டவசமாக எம்மிடையே ஒற்றுமை இல்லை. நம்பிக்கை பழுதடைந்துள்ளது. சமூகத் தலைமை, முன்மாதிரியான பாத்திரம், சிறந்த நடத்தை புறக்கணிக்கப்பட்டுள்ளன. கலாசாரம், பரம்பரை பரம்பரையாக வரும் பழக்கவழக்கங்கள் மறந்து போய் விட்டன. இதன் பின்னணிக் காரணம் பற்றி புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

சந்தர்ப்பவாத அரசியல் யுத்தம் எமது சிறப்பான தனித்தன்மையை பழுதடையச் செய்துள்ளது. குலம், கோத்திரம் என சமூகம் பிரிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. இனம் ,மதம் தாண்டி பாரிய நடுக்கம் ஏற்பட்டுள்ளது. ஒற்றுமை இல்லை. தீர்க்கமுடியாத பாதிப்புகளுக்குக் காரணமான பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்குக் கூட நாம் ஒன்றிணையாதது அதன் தீவிரத்தைக் காட்டுகின்றது.

முன்னர் குறிப்பிட்டவாறு நம்பிக்கை இழப்பு என்பது நாட்டில் ஏற்பட்டுள்ள மோசமான பிரச்சினையாகும். மதத்தலைவர்கள்,தேசியத் தலைவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் மீது உள்ள நம்பிக்கை மற்றும் கௌரவத்தைப் பற்றி எண்ணுங்கள். ஒருபுறம் அவர்கள் அதனை இழந்துள்ளார்கள். இன்னொருபுறம் சரியான கௌரவத்தை வழங்கி நம்பிக்கையை ஏற்படுத்த பெரும்பான்மையானோர் தயாரில்லை. இந்த இரண்டு முனைகளும் எமது சீரழிவை காட்டுகின்றன.

உலகத்திற்குத் தேவை நேர்மை ஆகும். நேர்மையாக செயற்படுவதன் மூலம் உறுதி செய்யப்பட்ட நம்பிக்கை ஏற்படும். சந்தேகத்தைத் தீர்க்கும் வெளிப்படையான பாத்திரங்களால் சமூகத்தில் கௌரவத்தைப் பெற முடியும்.

சரித்திரத்திலேயே இல்லாத அளவு பாரிய பொருளாதார பாதிப்பினால் மக்கள் ஆத்திரப்படுவதை எதிர்பார்க்க வேண்டும். ஜனநாயக சமூகத்தில் மக்களிடம் ஏற்படும் அழுத்தத்தை வெளியிடுவதற்கான பொறிமுறைகள் உள்ளன. மக்களின் விருப்பம் மற்றும் முடிவுகளை கேட்கும் முறை உள்ளது. தேர்தல் மற்றும் சமூக ஆய்வுகள் அவற்றில் பிரதானமானவை.

மக்களிடம் சென்று அவர்களுடன் கலந்துரையாடுவதால் அழுத்தம் குறையும், எதிர்பார்ப்பு உண்டாகும், நம்பிக்கை அதிகரிக்கும். மக்களிடம் இருந்து விலகும் மத, சமூகத் தலைவர்கள் மற்றும் விசேடமாக பொதுமக்களின் பிரதிநிதிகள் இன்று காணப்படும் துரதிருஷ்டவசமான நிலைவரத்துக்கு நாட்டை இட்டுச் சென்றுள்ளார்கள். இதிலிருந்து மீள்வது எம் அனைவரினதும் முயற்சியாகும். உலகில் ஏனைய நாடுகளிடமோ, ஏனைய தலைவர்களிடமோ புதிய ஒன்றை எதிர்பார்க்க முடியாது.

அடிப்படைவாத சக்திகள், அவற்றின் பின்னால் இருந்து செயற்படுபவர்கள் ஏற்படுத்தும் குழப்ப நிலைமை பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். அண்மைக் காலம் வரை நாட்டில் இருக்க வேண்டிய பெறுமதி வாய்ந்த மற்றும் தைரியமான இளைஞர்களின் வாழ்வை எமக்கு இல்லாமல் செய்தது மோதல்கள் மற்றும் போராட்டங்களே என்பதை ஞாபகப்படுத்த வேண்டும். போராட்டம் செய்ய வேண்டிய முறைகளை மாற்ற வேண்டும். நபர்களை விரட்டுவதன் மூலம் முறைகள் மாற்றம் அடையாது. நபர்களை விரட்டி புதிய தலைவர்களை மிக உயரத்தில் வைத்து நாம் அனைவரும் தலைவர்களிடமிருந்து மாயாஜால தீர்வை எதிர்பார்க்கின்றோம்.

'சிஸ்டம் சேஞ்ச்' ஒன்றுக்கான முயற்சி நாட்டுக்கு அவசியமாகவுள்ளது. மக்களுக்கு சேவை செய்யும், மக்களின் தேவைகளை உடனடியாக நிறைவேற்றக் கூடிய முறைகளை புதிதாக உருவாக்குவது அவசியமாகும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

ஜனாதிபதியுடன் கடந்தவாரம் பேசியோர் இந்தவாரம் கோஷம்

அரசியல் வஞ்சகம் என்கிறார் ஆய்வாளர் கவியழகன்

கடந்த வாரம் ஜனாதிபதியோடு பேச்சுவார்த்தைக்கு போனவர்கள் இந்தவாரம் 'Go Home Gota' என்று போராட அழைப்பது அரசியல் வஞ்சகம் என்றும், இப்படியான அரசியல் வாதிகளிடத்தில் தமிழ் இளைஞர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும் பிரபல புலம்பெயர் அரசியல் ஆய்வாளர் குணா கவியழகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ் அரசியல் தலைவர்கள் தங்கள் அரசியல் முதலீடாக இன்றைய நெருக்கடியை பயன்படுத்துவது நேர்மையற்ற செயலென்றும் அவர் சாடியுள்ளார் .

இலங்கையில் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் பற்றி அவர் வெளியிட்டுள்ள ஒரு காணொலியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"தமிழ் இளைஞர்கள் அரசாங்கத்துக்கு எதிரான போராட்டத்தில் கலந்துகொள்வதில் அர்த்தமில்லை. அது ஆபத்தானதும் கூட. திரை மறைவு நிகழ்ச்சி நிரலால் தமிழ் இளைஞர்கள் போராட தூண்டப்படுகிறார்கள். சிங்களக் கட்சிகள் ஆட்சியை கவிழ்க்கவும் தமது செல்வாக்கை உயர்த்தவும் போராட்டம் நடத்துவார்கள். மக்களை தூண்டுவார்கள். வெளி நாட்டு சக்திகளும் பின் நிற்கும். அதற்கு தமிழர்கள் பயன்படுவது அரசியல் திசை திரும்பும் ஆபத்தை உருவாக்கலாமெனவும் அவர் எச்சரிக்கிறார் .

இந்த அரசாங்கத்தால் இன்றுள்ள பொருளாதார நெருக்கடி மேலும் மோசமடைந்து வன்முறை சூழல் நாட்டில் உருவாகுமென்றும் தமிழ் மக்கள் பஞ்சத்தை எதிர்கொள்ள தேவையான உற்பத்தி மற்றும் பங்கீட்டு பொறிமுறைகளை உடன் உருவாக்க வேண்டுமே தவிர அரசியல் வன்முறைகளில் பலியாகிவிடக் கூடாதென்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சமூகத் தலைவர்கள் முன் வந்து இன்றைய நெருக்கடி நிலைமையைக் கையாள வேண்டுமென்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பணவீக்கத்தை குறைக்கும் நோக்கத்தில்

நாணய சபை வட்டி வீதத்தை இறுக்கியது மத்திய வங்கி

நாணய சபை வட்டி வீதங்களை இறுக்கப்படுத்துவதற்கு மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி, துணைநில் வைப்பு வீதம் 13.50 சதவீதமாகவும், துணைநில் கடன் வீதம் 14.50 சதவீதமாகவும் அதிகரிக்கப்பட்டது. இதன்படி, இந்த இரண்டு வட்டி வீதங்களும் 700 அடிப்படை புள்ளிகளால் அதிகரிக்கப்பட்டது.

இந்தநிலையில் வட்டி வீதம் அதிகரிப்பு தொடர்பில் கருத்துரைத்த, கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி,

நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கத்தை குறைக்கும் நோக்கிலேயே இலங்கை மத்திய வங்கி நாணய சபை வட்டி வீதங்களை இறுக்கப்படுத்தியுள்ளது. இந் நடவடிக்கை, நாணய மாற்று விகிதத்தின் நிலைப்படுத்தலுக்கும் வழிவகுக்குமென்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக...

பாராளுமன்றக் குழு கூட்டம் நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.இப் பிரேரணையில் கையொப்பங்களை பெற்றுக் கொள்ளும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

இந்த நிலையில் கையெழுத்துகள் பெறப்பட்டதன் பின்னர் அதனை சபாநாயகருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவை பெற்றுக் கொள்வதற்காக பாராளுமன்றத்திலுள்ள ஏனைய அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடல் நடத்தப்படுமென ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு 113 என்ற பெரும்பான்மை இல்லை என்பதை வெளிப்படுத்துவதே தங்களது பிரதான நோக்கமாகுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

சித்திரை புத்தாண்டு சுபகிருது வருஷப் பிறப்பு

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி ஆபரணம்

புஸ்பராகம் கொண்ட ஆபரணம்.

தோஷ நட்சத்திரம்

பரணி, மகம், பூரம் ,உத்தரம் 1ஆம் பாதம், பூராடம், உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம்,திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி கைவிஷேட சுப நேரம்

சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை பகல் 7.57 முதல் 8.47 வரை

சித்திரை 2 ஆம் திகதி (15 .04.2022) வெள்ளிக்கிழமை பகல் 7.52 முதல் 9.51 வரை சித்திரை 2 ஆம் திகதி (15.04.2022) வெள்ளிக் கிழமை இரவு 6.12 முதல் 8.12 வரை

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி கைவிஷேட சுப நேரம்

சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை பகல் 8.50 முதல் 9.42 வரை

சித்திரை 2 ஆம் திகதி (15.04.2022) வெள்ளிக்கிழமை பகல் 8.35 முதல் 9.50 வரை

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி விஷ_ புண்ணிய காலம்

14.04.2022 அதிகாலை 3.50 மணி முதல் முற்பகல் 11.50 மணி வரை

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷ_ புண்ணிய காலம்

14.04.2022 அதிகாலை 4.41 இல் இருந்து பகல் 12.41 வரை

மருத்து நீர்

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கடப்பம் இலையும் காலில் கொன்றை இலையும் வைத்து ஸ்நானஞ் செய்ய வேண்டும். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கொன்றை இலையும் காலில் புங்கம் இலையும் வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும்.

ரமழான் சிந்தனை

நோன்பின் ஊடான எதிர்பார்ப்பு

மனிதன் பல்வேறு பண்புகளையும் தன்னகத்தே ஒருங்கே பெற்றுக்கொண்டுள்ள படைப்பாவான். இப்பண்புகளில் நல்லவையும் உள்ளன. தீயவையும் இருக்கின்றன. அதனால் வரையறுக்கப்பட்ட வாழ்வுக் காலத்தை இவ் வுலகில் பெற்றுக்கொண்டுள்ள மனிதனை இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்றவனாக புடம்போட்டு பக்குவப்படுத்திட வேண்டும். அதற்கு இறைவழிகாட்டலும் இறையச்சமும் இன்றியமையாததாகும்.

மனிதனை இம்மைக்கும் மறுமைக்கும் பயன்படக்கூடிய நற்பண்புகள் நிறைந்தவனாக உருவாக்கிக் கட்டியெழுப்பத் தவறும் பட்சத்தில் அவனில் காணப்படும் தீய பண்புகள் மிகைத்து அவனை ஈருலகிலும் நஷ்டத்திற்கும் கைசேதத்திற்கும் உள்ளானவனாக ஆக்கிவிடும்.

அவ்வாறான நிலையிலிருந்து மனிதனைப் பாதுகாப்பதற்கான தெளிவானதும் உயிரோட்டமானதுமான ஏற்பாடாகவே அல்லாஹ்தஆலா இறைவழிகாட்டலை முஹம்மத் (ஸல்) அவர்கள் ஊடாக உலகிற்கு அருளி இருக்கின்றான். அவ்வழிகாட்டலின் பிரதான கடமைகளில் ஒன்றாக அல் குர்ஆன் அருளப்பட்ட மாதத்தில் நோன்பு நோற்பது கடமையாக்கப்பட்டுள்ளது. அதாவது ஈருலக வாழ்விலும் மனிதன் விமோசம் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளில் ஒன்றாகவே அது உள்ளது. அதனால் தான் நபி (ஸல்) அவர்கள், 'நோன்பு ஒரு கேடயம்' என்றார்கள். (ஆதாரம்: புகாரி).

உண்மையில் நோன்பு ஒரு கேடயமேயாகும். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. நோன்பை அதற்குரிய ஒழுங்கில் நிறைவேற்றும் போது மனிதனின் இம்மை மறுமை வாழ்வுக்கு தீங்காக அமையக்கூடிய எதுவும் அவனை அணுக இடமிருக்காது.

அத்தோடு 'நோன்பு நோற்ற நிலையில் கெட்ட பேச்சுக்களில் ஈடுபட வேண்டாம்' (ஆதாரம்: புகாரி) என்றும் நபி (ஸல்) அவர்கள் குறிப்பட்டுள்ளார்கள்.

நோன்பின் ஊடாக மனிதன் எவ்வாறு புடம்போட்டு பக்குவப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளான் என்பதை இந்த நபிமொழிகள் தெளிவுபடுத்திக் கொண்டிருக்கின்றன.

ஆகவே இறைவழிகாட்டல்களுக்கு ஏற்ப நோன்பு கடமையை நிறைவேற்றி ஈருலகிலும் நன்மைகள் பெற்றுத் தரக்கூடிய பண்புகளை வளர்த்துக் கொள்வோம்.

மர்லின் மரிக்கார் ...

சமூக சேவையாளர் பாஸி ஸுபைரின் மைத்துனர் காலமானார்

தர்கா நகர் பிரபல அறிவிப்பாளரும் எழுத்தாளருமான எம்.பாஸி ஸுபைரின் மைத்துனர் முஹம்மத் இர்பான் (63) நேற்று தர்கா நகரில் காலமானார்,

ஜனாஸா நேற்று மாலை தர்கா நகர் தெருவு மீரா ஜும்மா பள்ளி மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஜனாஸாவில் அரசியல் பிரமுகர்கள், சமூக சேவையாலர்கள், எழுத்தாளர்கள், உலமாக்கள், தினகரன் ஆசிரியர்பீட உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர் .

போராட்டங்கள் சுற்றுலா பயணிகளை பாதிக்காது

வெளிநாட்டமைச்சு அறிவிப்பு

இலங்கையில் இடம்பெறும் சமீபத்திய அமைதியான போராட்டங்கள் மூலம் சுற்றுலா பயணிகள் அல்லது சுற்றுலா தளங்கள் இலக்கு வைக்கப்படவில்லையென வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. இலங்கைக்கு வருகைதரும் அனைத்து சுற்றுலாப் பயணிகளும் நாடு முழுவதும் சுதந்திரமாக பயணிக்க முடியுமென்றும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள அமைச்சு,

இலங்கை தொடர்பாக கடந்த 06 ஆம் திகதி அமெரிக்கா வெளியிட்டுள்ள பயண வழிகாட்டல்களை மீளாய்வு செய்வதில் கவனம் செலுத்தி வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்றுடன், கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் இலங்கை தொடர்பாக அமெரிக்காவின் பயண எச்சரிக்கை மூன்றாம் மட்டத்தில் காணப்பட்டது. எனினும் இது அண்மையில் புதுப்பிக்கப்படவில்லையென்பதை வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துக் கொள்கிறது.

அது தவிர உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் விடுக்கப்பட்ட அமெரிக்க பயண ஆலோசனையில் பயங்கரவாதம் பற்றிய குறிப்பு, பயங்கரவாதம் இருந்த அல்லது ஆபத்தில் இருக்கும் உலகிலுள்ள நாடுகள் தொடர்பில் அமெரிக்க பயண ஆலோசனையின் நிலையான மொழியின் அடிப்படையிலானது என்றும் கூறியுள்ளது, இலங்கை தனது தாயகத்துக்கு வருகை தருபவர்களை தொடர்ந்து வரவேற்கிறது மற்றும் அனைவருக்கும் அதிகபட்ச பராமரிப்பு மற்றும் சேவைகளை வழங்க உறுதிபூண்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருளின் தரம் குறைவா?...

செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,..

எரிபொருள் இறக்குமதி செய்யும்போதே எமது தரம் தொடர்பில் நாங்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்புகின்றோம்.

அதேபோன்று எரிபொருள் கப்பலுக்கு ஏற்றும்போது அது தொடர்பான தரம் பரிசோதிக்கப்பட்டு எமக்கு அறிக்கை வழங்குவார்கள். அதன் பின்னர் கப்பலில் வரும்போது அதற்கு அந்த கம்பனி பொறுப்பேற்கின்றது.

அதேபோன்று எரிபொருள் கப்பல் இங்குவந்து நங்கூரமிட முன்னர் அதில் இருக்கும் எரிபொருளின் தரம் தொடர்பில் மாதிரி பெற்றுக்கொள்ளப்படுகின்றது. அதன் பின்னரே எரிபொருளை இறக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

மேலும் எரிபொருள் களஞ்சியப்படுத்துவதற்கு முன்னர் மீண்டும் தரம் தொடர்பாக சிபெட்கோ நிறுவனமும் எமது ஆய்வு பிரிவும் பரிசோதனை செய்தே களஞ்சியப்படுத்துகின்றோம். அதேபோன்று எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அனுப்புவதற்கு முன்னர் மீண்டும் அதன் தரம் தொடர்பில் ஆய்வு செய்தே வெளியில் அனுப்புகின்றோம்.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் எரிபொருள் தொகை 04 தடவைகள் பகுப்பாய்வுக்குட்பட்டு அதன் தரம் உறுதிசெய்யப்பட்ட பின்னரே எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றது.

அவ்வாறு இருந்தும் எரிபொருள் தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட் டுக்கமைய அதிகார சபை எமது கூட்டுத்தாபனத்துக்கு வந்து, எமது ஆய்வு அறிக்கைகளை பரிசோதித்து பார்த்தது.

ஆனால் அவ்வாறான எந்த தவறும் காணப்படவில்லை. என்றாலும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஏதாவது மோசடிகள் மேற்கொள்வதை யாராவது கண்டால் அதுதொடர்பில் எமக்கு முறையிடலாம்.

இடைக்கால அரசை நிறுவ...

ஒரு அரசாங்கத்தை தேர்ந்தெடுக்கவும் உதவும் சூழ்நிலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் இந்த யோசனையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 10 சுயேச்சைக் கட்சிகள் சார்பில் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களான அனுர பிரியதர்சன யாப்பா மற்றும் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் இந்த யோசனை அடங்கிய ஆவணத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.

01.பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களை உள்ளடக்கிய தேசிய நிறைவேற்று சபையை நிறுவுதல்

02.இடைக்கால அரசாங்கத்தை நடத்துவதற்கு குறைந்த எண்ணிக்கையிலான அமைச்சர்களை நியமித்து தேசிய நிர்வாக சபையால் அவர்களின் கடமைகள் தீர்மானிக்கப்படும்.

03. தேசிய நிறைவேற்று சபையின் பரிந்துரையின் பேரில் ஜனாதிபதியினால் புதிய பிரதமர் நியமிக்கப்படுவார்.

04. தேசிய நிறைவேற்று சபையின் அறிவுறுத்தலின் பேரில் ஜனாதிபதியால் வரையறுக்கப்பட்ட அமைச்சர்கள் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்படும்.

05. தேசிய நிறைவேற்று சபையின் அறிவுறுத்தலின் பேரில் ஜனாதிபதியினால் குறைந்த எண்ணிக்கையிலான அமைச்சு செயலாளர்கள் நியமிக்கப்படுவர்.

06. அமைச்சர்கள் வேதனம் பெறாமல் செயல்பட வேண்டும்.

07 மருந்துகள், அத்தியாவசிய உணவுகள், மின்சாரம், பெற்றோலியம், சமையல் எரிவாயு, உரம், விவசாயம் மற்றும் தொழில்துறை உள்ளீடுகளின் போதுமான தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்தல்.

08.அரசியலமைப்பின் 19ஆவது திருத்தத்தை திருத்தங்களுடன் மீண்டும் அமுல்படுத்துதல் அரசாங்கம் மாறினாலும் மாறாத கல்வி, சுகாதாரம் மற்றும் எரிசக்தி போன்ற துறைகளுக்கு 06 மாத காலத்திற்குள் தேசிய கொள்கையை உருவாக்குதல்.

தனியார் பஸ்களுக்கு...

மஹரகம முதலான இலங்கை பஸ் மத்திய போக்குவரத்துச் சபை நிலையத்துக்குச் சொந்தமான எரிபொருள நிரப்பு நிலையங்களில், ஒரு லீற்றர் டீசல் 125 ரூபாவுக்கு வழங்கப்பட உள்ளதாக போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நிலான் மிராண்டா தெரிவித்துள்ளார். அத்துடன், வெலிசறை கடற்படை எரிபொருள் நிரப்பு நிலையத்திலும், இவ்வாறு எரிபொருளை வழங்க கடற்படைத் தளபதி இணங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

IMF உடன் பேச்சுவார்த்தையை...

இதேவேளை, ஜனாதிபதியின் கோரிக்கைக்கமைய கடன்களை செலுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டார்.

அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு இரண்டு முக்கிய கூறுகள் இருப்பதாகவும், அதில் முதலாவது கடனைத் திருப்பிச் செலுத்த நிதி வழங்குவதென்றும், இரண்டாவது அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு வெளிநாட்டு நாணயங்களை வழங்குவதென்றும் மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டார்.

பொருளாதாரத்தை மீட்டெடுக்க கடனைப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) விரைவில் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டார். சர்வதேச நாணய நிதியத்துடனான தொழில்நுட்ப கலந்துரையாடல்கள் எதிர்வரும் 18ஆம் திகதி ஆரம்பிக்கப்படுமென தாம் எதிர்பார்ப்பதாக கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

2021ஆம் ஆண்டு வரலாற்றில் மிகப் பெரும் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை தேவையற்ற வரிக் குறைப்பினால் ஏற்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் புதிய ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

நாட்டு மக்கள் பொறுப்புடன்...

நாட்டில் கஷ்டங்களை எதிர்கொண்டுள்ள மக்களது உணர்வை காட்டுவதாக அமைந்துள்ளன. தமது மனக்குமுறல்களை நாட்டு மக்கள் வெளிக்காட்டி வருகின்றனர். அது அவர்களுக்குரிய ஜனநாயக உரிமையாகும்.

ஆனால் இந்த விடயத்தில் நாட்டு நிலைமையை கருத்தில் கொண்டு பொறுப்பான முறையில் தமது ஆர்ப்பாட்டங்களை வழிநடத்த வேண்டும். எமது போராட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் ஏனைய நாடுகளில் நகைப்புக்கிடம் ஆகிவிடக்கூடாது. மக்களுக்கு துன்பங்கள், துயரங்கள், வாழ்வியல் கஷ்டங்கள் உள்ளன.

குறிப்பாக அன்றாடம் சமைத்து உண்பதற்கு எரிவாயு இல்லை, தமது பயணங்களை, பொதுப் போக்குவரத்துகளை மேற்கொள்வதற்கு டீசல் இல்லை, பாடசாலைப் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு இடையூறாக மின்தடை மேற்கொள்ளப்படுகிறது. இவை குறித்து மக்கள் தமது மன ஆதங்கத்தை வெளிப்படுத்தியேயாக வேண்டும். ஆனால் மறுபுறம் இவை எவற்றையும் அரசாங்கம் வேண்டுமென்றே மக்கள் மீது திணிக்கவில்லையென்பதையும் பொதுமக்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென சர்வ மதத்தலைவர்கள் தெரிவித்துள்ளனர். உண்மையில் இரண்டு வருட காலங்களுக்கு மேலாக கொரோனா காரணமாகவும், இன்று ரஷ்யா உக்ரேய்ன் யுத்தம் காரணமாகவும் இந்த நிலை முழு உலகுக்கும் ஏற்பட்டுள்ளது. அதில் எமது நாடும் விதிவிலக்கல்ல. எனினும் இத்தகைய கஷ்ட நிலை வரும் என்பதை முன்கூட்டியே அறிந்து அதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் நிச்சயம் செய்திருக்க வேண்டும். ஆனால் அரசாங்கத்திலுள்ள ஒரு சிலரது தவறான வழிநடத்தல் இவற்றுக்கு வித்துட்டு இருக்கலாம். அதற்கான தீர்வை அரசாங்கம் உடனடியாகவே மேற்கொண்டுள்ளது. இன்று நடைபெற்று வரும் ஆர்ப்பாட்டங்கள் அரசாங்கம் பொருளாதார விடயத்தில் தன்னைத்தானே மீள்பரிசீலனை செய்வதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளது. அதனை ஏற்படுத்திக் கொடுத்தது உண்மையிலேயே மக்களது ஆர்ப்பாட்டங்களும் போராட்டங்களுமே என்றால் அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

எனவே மக்கள் போராட்டங்களில் வேறு சிலர் நுழைந்து தமது அரசியல் அபிலாசைகளை இந்த ஒரு இக்கட்டான சந்தர்ப்பத்தில் நிறைவேற்றிக் கொள்ள முயல்வதை எவ்வகையிலும் அனுமதிக்க முடியாது.

அதற்கு போராட்டக்காரர்கள் இடம் கொடுக்காது தமது போராட்டங்களை அமைதியாக முன்னெடுக்க வேண்டுமென இந்து மத குருவான பிரம்மஸ்ரீ பாபு சர்மா இராமச்சந்திர குருக்கள் முஸ்லிம் மத பெரியார் கலாநிதி ஹசன் மௌலானா மற்றும் பௌத்த கிறிஸ்தவ மதப் பெரியார்களும் பொதுமக்களை வினயமாக கேட்டுள்ளனர்.

ஸ்திரமான அரசை அமைக்க...

நாட்டின் தற்போதைய நிலையை கவனத்தில் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வாரத்தில் அமைச்சரவையை கலைத்து இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்காக அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருந்தார். அதற்கான வாய்ப்புகளும் வழங்கப்பட்டிருந்தன.

அதேவேளை நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்களின் பின்னணியில் எதிர்க்கட்சிகளே உள்ளதாக ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார். மக்கள் ஆர்ப்பாட்டம் என்ற போர்வையில் குறுகிய அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக எதிர்க்கட்சிகள் மிக மோசமாக செயல்பட்டு வருவதாகவும் மக்களை ஆர்ப்பாட்டங்களுக்கு தூண்டி வருவதைக் காண முடிவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பது தொடர்பில் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்துக்கு வெளியிலும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டனவே தவிர இடைக்கால அரசாங்கம் அமைப்பது தொடர்பில் கட்சிகள் இணைந்து தீர்மானம் எதனையும் இதுவரை முன்வைக்கவில்லை.

அதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இன்று கூடி முக்கியமான தீர்மானங்களை மேற்கொள்ளவுள்ளதாக அந்த கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பில் இன்றைய கூட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்படவுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கையில்லா பிரேரணைக்கு அரசாங்கத்தின் சுயாதீன குழுக்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக அந்த கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையை அரசியல்வாதிகள் தமக்கு சாதகமாக பயன்படுத்துவதற்கு முயற்சி செய்து வருவதாகவும் ஆட்சியை கைப்பற்றுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றமை கவலைதரும் விடயமாகுமென கொழும்பு பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான கல்வி பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி மொகமட் மஹீஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையை வேறு திசையில் முன்னெடுத்துச் செல்வதற்கு அரசியல்வாதிகள் சுயநலத்துடன் செயற்பட்டு வருகின்றார்களா? என்ற சந்தேகம் எழுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகங்கள் முன்பாக இன்றுள்ள பாரிய தார்மீகப் பொறுப்பு....

மறைத்து, பொய்களை உரக்கக் கூறுகின்றன. பல ஊடகங்கள் முற்று முழுதாக எதிர்க்கட்சி தரப்பின் அரசியல் ஆதாயத்துக்கு வாய்ப்பாகவே செயற்படுகின்றன. இவ்வாறான பக்கச்சார்பான போக்கு ஊடக தர்மத்திற்கு எதிரானதாகும். உண்மையை உண்மையாகக் கூறுவதே ஊடகங்களின் பணியும், தர்மமும் ஆகும். அதனை விடுத்து கட்சி சார்பாக ஒரு வெகுஜன ஊடகம் செயற்படுமேயானால் அந்த ஊடகத்தை நடுநிலை ஊடகமாக ஒருபோதும் கருத முடியாது.

நாட்டில் மக்களுக்கு இன்று பலவிதமான சிக்கல்கள் உள்ளமை வெளிப்படையான உண்மையாகும். மின்சாரம் பல மணி நேரம் துண்டிக்கப்படுகிறது, சமையல் எரிவாயு தேவைக்கேற்றவாறு கிடைப்பதில்லை, பொருட்களின் விலைகள் அதிகரிக்கின்றன, எரிபொருட்கள் குறிப்பாக டீசல், மண்ணெண்ணெய் போன்றவை இன்றுவரை சாதாரண தேவைக்குக் கூட கிடைப்பதே அறுதியாக உள்ளது.

எனவே மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்ல சிரமப்படுகையில், தமது வெறுப்பை அரசாங்கம் மீது வெளிப்படுத்தவே செய்வர். அதனை தவறு என்று கூற முடியாது. ஆனால் மக்களின் ஆதங்கத்தை சில அரசியல் கட்சிகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட முனைவதும், அதற்கு சில ஊடகங்கள் துணைபோவதும் கண்டிக்கத்தக்கதாகும்.

உண்மையில் அரசாங்கம் அத்தியாவசிய பொருட்களை வேண்டுமென்றே மக்களுக்குக் கிடைக்க விடாது செய்து, மக்களை துன்புறுத்தலுக்கு ஆளாக்கியிருப்பின் அதனை எதிர்த்து எவரும் குரல் கொடுப்பதில் தவறில்லை. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால் முழு உலகையுமே ஆட்டிப் படைத்து விட்ட கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் தாக்கமானது எமது நாட்டுக்கும் பொருளாதார ரீதியாக பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. பெருந்தொற்றான கொவிட் தாக்கத்திலிருந்து உலகம் மீண்டெழுந்து வருகையில், ரஷ்யா உக்ரைன் யுத்தம் மீண்டும் உலகப் பொருளாதாரத்தை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது.

உலக நாடுகள் அத்தனையுமே ஏதோ ஒருவகையில் பாதிப்புக்கு முகங்கொடுத்து வருகையில், இலங்கை போன்ற வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளின் நிலைமை பற்றி நாம் இங்கு கூறத் தேவையில்லை. இந்த உண்மை நிலையை சாதாரண பாமர மக்களுக்கு எடுத்துக் கூறி தெளிவுபடுத்துவது அனைவரதும் கடமையாகும்.

ஆனால் எமது நாட்டில் அதனை விடுத்து அரசியல் புரிவதிலேயே கவனம் செலுத்தப்படுகின்றது. ஊடக வியாபாரம் நடத்தப்படுகின்றது, அதன் மூலமாக இளைஞர், யுவதிகள் தூண்டப்படுகின்றனர். இந்த ஒழுக்கநெறியற்ற செயலை விடுத்து ஆரோக்கியமான எதிர்காலத்திற்கு வித்திடும் வகையில் இனிமேலாவது ஊடகங்கள் தமது பணியை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது கருத்தாகும்.

இந்த அரசாங்கம் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக எவ்வித முடிவுகளையும் எடுக்கவுமில்லை; அவை தொடர்பாக முன்னெடுக்க எம்முடன் கலந்து ஆலோசித்து முடிவுகளை எடுக்கவுமில்லை. இரசாயன உரம் தடைசெய்யப்பட்டபோது எமது கோரிக்கைகளுக்கு சரியானதோர் முடிவையோ பதிலையோ ஜனாதிபதி வழங்கவில்லை. நானும் இ. தொ.கா பொதுச் செயலாளர் ஜீ வன் தொண்டமானும் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் மருதுபாண்டி ராமேஸ்வரனும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷடன் கலந்து உரையாடியதன் பின்னரே மலையக தோட்டங்களுக்கு ஜனாதிபதி உரம் வழங்க முடிவெடுத்தார். மலையக மக்களின் தேவைகளை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்தே பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. இவற்றின் விளைவாகவே பாராளுமன்றத்தில் எமது இரு தொ.கா. உறுப்பினர்களும் சுயேச்சையாக செயல்பட தீர்மானித்தனர். மக்களின் நலனே முக்கியம் என்ற நிலையில் இ.தொ.கா சுயேச்சையாக செயல்பட ஆரம்பித்தது.

“ மனரீதியாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுவே போராட்டமாக மாறியுள்ளது.

எமது கோரிக்கைகளை அரசு பொருட்டாக கொள்ளவில்லை

இ.தொ.காவின் புதிய தலைவர் செந்தில் தொண்டமான் வாரமஞ்சரிக்கு அளித்த பேட்டி

கே: ஜனாதிபதி கோட்டாபயாவின் ஆட்சியில் பங்காளி கட்சியாகுவதற்கு முன்னரேயே ஏதேனும் உடன் படிக்கை செய்து கொண்டீர்களா?

தேர்தலின் போது நாம் பல கோரிக்கைகளை முன்வைத்தோம். இ.தொ.கா என்பது அரசியல் ரீதியாகவும், தொழிற்சங்க ரீதியாகவும் வலிமையானது. எமது மக்களின் நலத்திலும் சமூக மற்றும் கல்வி வளர்ச்சிக்காகவும் பல தியாகங்களை மேற்கொண்ட வரலாறு இ.தொ.கா வுக்கு உண்டு.

நாம் மலையக பெருந்தோட்ட மக்களின் ஒரு நாள் சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்துமாறு கோரினோம். அது வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டது.

மலையக பல்கலைக்கழகம், பிரதேச செயலக அதிகரிப்பு, தொழிற் பயிற்சி கல்லூரி அமைத்தல், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலை கட்டமைப்புக்குள் உள்வாங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தோம்.

கே: இடைக்கால அரசு ஒன்று அமையுமானால் அவ்வரசுடன் இணைந்து செயல்படுவீர்களா?

இடைக்கால அரசு அமைக்கப்படுமானால் இப் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீண்டுவருவதற்கான நடைமுறை சாத்தியமான, வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதா என்பதை காங்கிரசின் உயர் மட்டக்குழு ஆராய்ந்து பார்க்கும். இந்த ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படுமானால் அதன் பின்னர் ஒரு முடிவுக்கு வருவோம்.

கே: ஜனாதிபதியை பதவி விலகச் சொல்லி போராட்டம் நடைபெறுகிறதே இது தொடர்பாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

எந்த நிலையிலும் இ.தொ.கா நாட்டு மக்களின் பக்கமே நிற்கும். இரண்டரை கோடி மக்களை கொண்ட நாடு இது. தற்போது மக்கள் துன்பத்தில் வாழ்கின்றனர். மக்களின் உணர்வை அரசு உணர வேண்டும். புரிதல் அவசியம். இதன் அடிப்படையில் அரசு தன் செயல்பாடுகளை மாற்றிக் கொள்ள கடமைப்பட்டுள்ளது. மக்களின் குரல் ஜனநாயக வடிவம் கொண்டது. அதை கொச்சைப்படுத்த கூடாது.

கே: அரசை விட்டு இ.தொ.கா வெளியேறியமைக்கு கபினெட் அமைச்சரவை அந்தஸ்து கொண்ட அமைச்சர் பதவி வழங்கப்படாமையே காரணம் என சிலர் தெரிவிக்கின்றனர். இதில் உண்மை உண்டா?

இது தவறான கருத்து இ.தொ.கா அமைச்சரவை அமைச்சு பதவி கோரிக்கையை அரசின் முன்வைத்திருக்குமாயின் அரசும் அப்பதவியை வழங்கத் தயாராகவே இருந்தது. எமது அமைச்சு பதவியை தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக உயர்த்தவும் அரசு முன் வந்தது. ஆனால் மக்கள் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கையில் நாம் அமைச்சு பதவியை ஏற்பது பொருத்தமானதாக இருக்காது. மக்கள் இப்பிரச்சினையிலிருந்து விடுபட பொருத்தமான வழிமுறைகள் தேவை. இன்றைய சூழலில் நாம் அமைச்சுப் பதவியை ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலையில் இல்லை.

அமைச்சரவை அமைச்சு பதவி கோரிக்கையை அரசின் முன்வைத்திருக்குமாயின் அரசும் அப்பதவியை வழங்கத் தயாராகவே இருந்தது. எமது அமைச்சு பதவியை தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக உயர்த்தவும் அரசு முன்வந்தது. ஆனால் மக்கள் பெரும்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கையில் நாம் அமைச்சு பதவியை ஏற்பது பொருத்தமானதாக இருக்காது.

கே: பொருளாதார பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் எனக் கருதுகிறீர்கள்?

இன்று நாடு தாழமுடியாத கடன் சுமையில் தத்தளிக்கிறது. வெளியில் பெருமளவு கடன்களைப் பெற்று இந் நாட்டை ஆட்சி செய்தவர்கள் கொண்டுவந்த அபிவிருத்திதான் என்ன? இக் கடன் சுமைக்கு அனைத்து ஆட்சியாளர்களும் பொறுப்பாளர்கள். ஒவ்வொரு ஆட்சியாளரும் தாம் பதவி வகித்த காலத்தில் பெற்றுக் கொண்ட கடன்கள் வாயிலாக மேற்கொண்ட அபிவிருத்தியால் கிட்டிய இலாபம் என்ன? என்பதை ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது.

இந்நாட்டுக்கு நல்ல இலாபத்தையும் டொலர்களையும் அளித்த நான்கு துறைகளான தேயிலை உற்பத்தி, உல்லாச பயணம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு, ஆடைத் தொழில் என்பன பின்னடைவை சந்தித்துள்ளன. கொவிட் தொற்றின் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாகக் குறைந்துவிட்டது. இரசாயன உரம் பாவனை நிறுத்தப்பட்டதால் பெருந்தோட்டக் கைத்தொழில் பெரும் வீழ்ச்சியை கண்டுள்ளது. டொலர் பெறுமதி அதிகரிப்பைத் தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது. கடன் சுமை தொடர்ந்ததால் அரசு பெரிதும் பாதிப்பைடைந்துள்ளது.

அரசு முன் கூட்டியே முறையான முடிவுகளை எடுக்காமையினால் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பின்னர் எரிவாயு சிலிண்டர்களில் சிக்கல் ஏற்பட்டது. பின்னர் சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு. பின்னர் டொலர் பிரச்சினை. அடுத்ததாக மின் வெட்டு.

இவற்றுக்கெல்லாம் காரணம் திட்டமிடல் இல்லாத நிர்வாக கட்டமைப்பே. ஏனைய நாடுகளைப் போன்று முன்னரேயே எமது நாட்டிலும் சூரியசக்தி மின் பாவனையை மக்களிடம் எளிய வழிமுறைகளின் ஊடாக அறிமுகம் செய்திருந்தால் இன்றைய மின்வெட்டு பிரச்சினை எழுந்திருக்காது. நாட்டின் அனைத்து துறைகளிலும் முறையான திட்டமிடப்பட்ட கட்டமைப்பு செயற்பாட்டில் இல்லை. இதனால் தான் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியை நோக்கியே நகர்கிறது.

இன்று சர்வதேச நாணய சபையின் ஒத்துழைப்பைக் கோரி நிற்கிறது அரசு. இச்சபையின் ஆலோசனைகள் மற்றும் அவற்றுக்கு அமைவான பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்த ஏழு, எட்டு மாதங்களாவது செல்லும். எதிர்வரும் மாதங்களில் நாட்டில் பெரும் பொருளாதார கஷ்டத்தை மக்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும்.

இன்றைய பொருளாதார சிக்கலிலிருந்து விடுபட அந்நிய நட்பு நாடுகளிடம் உதவியை பெற வேண்டும். இன்று மக்கள் தடுமாறுகின்றனர். எதிர்வரும் நாட்களில் உணவுத்தட்டுப்பாடு ஏற்படலாம். கிரேக்கம், தாய்லாந்து ஆகிய நாடுகள் பொருளாதாரத்தில் கடந்த காலத்தில் வீழ்ச்சியை கண்டன. ஆனால் அந்நாட்டு பொருளாதார நிபுணர்கள் மேற்கொண்ட பல்வேறு மாற்றுத் திட்டங்களால் அந்நாடுகள் இன்று மீண்டு வந்துள்ளன.

இவற்றை நான் நேரடியாக ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளேன். அதுமட்டுமல்லாது, இவ்விரு நாட்டு பொருளாதார நிபுணர்களையும் இங்கு வரவழைத்து ஆலோசனைகளை பெற்றோமானால் இப் பொருளாதார சிக்கலிலிருந்து விடுபட்டு வெற்றிபெறலாம் எனவும் ஜனாதிபதியிடம் தெரிவித்தேன். எனினும் சாதகமான சமிக்ஞைகளை எதுவும் கிட்டவில்லை.

ஐ.நாவில் அங்கத்துவம் கொண்டுள்ள எமது நட்பு நாடுகளின் உதவியையும் ஜனாதிபதி பெற வேண்டும். எந்தவொரு முடிவும் ஆக்கபூர்வமான முடிவாக இருக்க வேண்டும். பல நாட்டுத் தலைவர்களுடன் ஜனாதிபதி பேச வேண்டும். துபாய் பாலைவனப் பிரதேசம். இன்று எமக்கு உதவி வழங்குகிறது. எமது அரசின் அனைத்து நடைமுறைகளும் தோல்வியடைந்துள்ளன. இன்றைய சூழலுக்கு ஏற்றவகையில் அவை மாற்றப்பட வேண்டும்.

எமது நாட்டில் உள்நாட்டு உற்பத்தி பெருக வேண்டும். மூலதன அதிகரிப்பு நடைபெற வேண்டும். பொருளாதார அபிவிருத்தியே எமது முதல் இலக்காக அமைய வேண்டும்.

கே: அண்மையில் சமூகவலைத்தளங்கள் முடக்கப்பட்டன. இது தொடர்பாக கருத்து எவ்வாறானது?

சமூக வலைத்தளம் என்பது இன்று பெரியதோர் ஊடகத்துறையாக வளர்ச்சிப்பெற்றுவிட்டது. நாட்டில் மின்சாரம், எரிவாயு, உரம் என மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மனரீதியாக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அதுவே போராட்டமாக மாறியுள்ளது. தீர்வு காணப்படாத போராட்டங்கள் வன்முறை வடிவெடுக்கும். இதன் எதிரொலியாகவே சமூக வளைத்தளங்கள் முடக்கப்பட்டு பின்னர் செயல்படத் தொடங்கின. இது ஜனநாயக நாடு. இச் செயலை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. இன்று மக்கள் சிந்தித்து செயல்பட ஆரம்பித்து விட்டனர்.

- **இந்நாட்டுக்கு நல்ல இலாபத்தையும் டொலர்களையும் அளித்த நான்கு துறைகளான தேயிலை உற்பத்தி, உல்லாச பயணம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஆடைத் தொழில் என்பன பின்னடைவை சந்தித்துள்ளன.**
- **கொவிட் தொற்றின் பின்னர் சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாகக் குறைந்துவிட்டது.**
- **இரசாயன உரம் பாவனை நிறுத்தப்பட்டதால் பெருந்தோட்டக் கைத் தொழில் பெரும் வீழ்ச்சியை கண்டுள்ளது.**
- **டொலர் பெறுமதி அதிகரிப்பைத் தடுத்து நிறுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது. கடன் சுமை தொடர்ந்ததால் அரசு பெரிதும் பாதிப்பையடைந்துள்ளது.**
- **அரசு முன் கூட்டியே முறையான முடிவுகளை எடுக்காமையினால் மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பின்னர் எரிவாயு சிலிண்டர்களில் சிக்கல் ஏற்பட்டது. பின்னர் சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு. பின்னர் டொலர் பிரச்சினை. அடுத்ததாக மின் வெட்டு.**

தீர்வுகாணப்படாத போராட்டங்கள் வன்முறை வெடிக்கும். இதன் எதிரொலியாகவே சமூக வளைத்தளங்கள் முடக்கப்பட்டு பின்னர் செயல்படத் தொடங்கின. இது ஜனநாயக நாடு. இச் செயலை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது.

படங்கள்: துஷ்மந்த மாயாதுன்ன

நேர்கண்டவர்: கே.பி.பி. புஷ்பராஜா...

நாட்டில் உருவாகியுள்ள அசாதாரண நிலைமையை முடிவுக்குக் கொண்டு வந்து அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவது மற்றும் மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பொருட்கள், சேவைகளின் விநியோகத்தை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவது ஆகிய இரட்டை சவால்களுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் தற்போது முகங்கொடுத்துள்ளது.

எதிரணியின் தேவைக்கேற்றபடி நாட்டின் அரசியலமைப்பை மீறி செயற்படுவது சாத்தியமில்லை!

இந்தச் சவால்களுக்கு மத்தியில் பொருளாதாரம் மேலும் வீழ்ச்சியடைவதைத் தடுத்து நாட்டில் மீண்டும் இயல்புநிலையை கொண்டு வருவது மிகவும் அவசியமாகும். நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம், ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் தொடர்பில் அரசியலமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதால் அதன் அடிப்படையிலேயே பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்.

எதிரணியின் தூண்டுதல்களின் பேரில் நாட்டில் ஆர்ப்பாட்டங்களை தீவிரப்படுத்துவதாலோ, வன்முறைகளை நிகழ்த்துவதாலோ இன்றைய பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது.

முதலாவதாக, இலங்கை அரசியலமைப்பில் இடைக்கால ஜனாதிபதித் தேர்தலுக்கான எந்த ஏற்பாடும் இல்லை. மற்றைய விடயம், 2024 ஒக்டோபர்நவம்பர் மாதங்களிலேயே ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்லலாம். அதற்கிடையில் எதிரணி கூறுவதைப் போன்று ஜனாதிபதித் தேர்தலை நடத்த வழியில்லை. எதிரணியின் கூற்றுக்கேற்ப அரசியலமைப்பை மீறி செயற்பட முடியாது.

எவ்வாறாயினும், பாராளுமன்றம் கலைக்கப்படுவதற்கு சபை வாக்களித்தால் பொதுத் தேர்தல் நடத்தப்படலாம். இருந்தபோதும் பொருளாதார நெருக்கடி, எரிசக்தி பற்றாக்குறை என்பன காரணமாக தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதி பற்றாக்குறையாகக் காணப்படுகின்றது.

பாரிய நிதிப் பற்றாக்குறை காரணமாக நாட்டில் தற்போதைய சூழ்நிலை தேர்தலை நடத்துவதற்கு உகந்ததாக இல்லை என்று பாராளுமன்றத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் தெளிவாகக் கூறியுள்ளன. ஒரு தேசிய தேர்தலுக்கு பொதுவாக ரூபா 800 மில்லியன் செலவாகும்.டொலர் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் தேர்தலொன்றுக்குச் செல்வது பொருத்தமானதாகவும் இருக்காது.

பொருளாதார நெருக்கடியை தமது அரசியல் இலாபத்துக்கு பயன்படுத்திக் கொள்வதிலேயே எதிரணியினர் தீவிர அக்கறை!

“பாராளுமன்ற அமர்வின் போது இருதரப்பினரும் கடும் சொற்போர்! மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதில் பலரும் அலட்சியம்!”

இந்த வார ஆரம்பத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த 42 பாராளுமன்ற உறுப்பினர்கள் தாம் சுயேச்சையாக செயற்படப் போவதாக அறிவித்தனர். எவ்வாறாயினும் அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இழந்தாலும், தனிப்பெரும்பான்மையுடனேயே காணப்படுகிறது.

இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் தமக்குப் பலம் இருந்தால் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும். முன்னர் இருந்த அமைச்சரவை பதவி விலகி, எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் விரும்பினால் 113 பேரின் ஆதரவைக் காண்பித்தால் அவர்களுக்கு அரசாங்கத்தை அமைக்க வாய்ப்பளிப்பதாக ஜனாதிபதி அறிவித்திருந்தார். இந்தச் சவாலை ஏற்றுக் கொள்வதற்கு எதிர்க்கட்சியினர் எவரும் இதுவரை முன்வரவில்லை. எதிரணி இன்னும் தயங்குகின்றது. ஆர்ப்பாட்டத்துக்கு வந்துள்ள மக்களின் எண்ணிக்கையைப் பார்த்து அரசியல் ஆதரவு நிலையை மதிப்பிட இயலாது.

இவ்வாறான நிலையில், கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை பாராளுமன்ற அமர்வுகள் நடைபெற்றன. நாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்து ஆளும் கட்சி, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் கருத்துகளை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும், பாராளுமன்றத்தில் உரையாற்றிய உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் தற்போதைய பிரச்சினைக்கான தீர்வு பற்றிய கருத்துகளை முன்வைக்கவில்லை என்பது பொதுமக்களின் மனக்குறையாக உள்ளது. இது தொடர்பில் சபாநாயகர் சபையில் விடுத்த அறிவிப்பிலும் கவலையைத் தெரிவித்திருந்தார்.

சபாநாயகர் தனது அறிவிப்பில், 'பொருளாதார நெருக்கடி குறித்து நடத்திய விவாதத்தில் கருத்துகளைத் தெரிவித்த ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன். இருந்தபோதும் இந்த விவாதத்தில் தற்போதை நெருக்கடிக்கு வெற்றிகரமாக முகம்கொடுப்பது தொடர்பில் சாதகமான கருத்துகளோ அல்லது தீர்வுகளோ முன்வைக்கப்படாமை கவலைக்குரியதாகும். விவாதத்தை ஆரம்பிப்பதற்கு ஒழுங்குப் பத்திரத்துக்கு அமைய நடவடிக்கை எடுக்கும் போது அதனைக் குழப்பியமை, இரண்டு தடவைகள் சபையை ஒத்திவைக்க நேர்ந்தமை தற்போதைய சூழலில் இடம்பெறக் கூடாத நிகழ்வுகள் என நான் பார்க்கின்றேன்.

ஊடகங்களில் பிரசாரம் வழங்கப்படாவிட்டாலும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் முன்வைத்த கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை. சபை இது குறித்துக் கவனம் செலுத்த வேண்டும் என நான் கருதுகின்றேன். நாம் சகலரும் கட்சி பேதங்கள் இன்றி அரசியல்குறிக்கோள்களைப் பின்தள்ளி வைத்து விட்டு இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...✍

இலங்கையில் மாத்திரமன்றி, பாகிஸ்தான் நாட்டிலும் தற்போது பொருளாதார நெருக்கடி நிலவுகின்றது. இரு நாடுகளிலும் இவ்வாறான பொருளாதார நெருக்கடியொன்று தோன்றுவதற்கு சீனா கடைப்பிடித்து வருகின்ற கடுமையான பொருளாதார கொள்கைகளும் ஒருவிதத்தில் காரணமென்று சர்வதேச பொருளாதார நிபுணர்கள் விமர்சனம் வெளியிட்டுள்ளனர்.

இலங்கைக்குத் தோள் கொடுக்கும் இந்தியாவுக்கு குவியும் பாராட்டுகள்!

உலக நாடுகளைப் பொறுத்தவரை ஏனைய நாடுகளுக்கு அதிக வட்டிக்கு கடன் வழங்குகின்ற ஒரு நாடாக சீனா உள்ளது. சீனா கடைப்பிடிக்கின்ற 'அதிக வட்டி கொள்கை' காரணமாகவே அந்நாடு பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்து நிற்கின்றது. அது ஒருபுறமிருக்க சீனாவிடம் அதிக வட்டிக்கு கடன் வாங்கிய பல நாடுகள் கடனை மீளச் செலுத்தும் விடயத்தில் அதிக சிரமங்களை எதிர்கொள்கின்றன. கூடுதல் வட்டியை செலுத்த வேண்டியிருப்பதால் அந்நாடுகள் பாதிக்கப்படுகின்றன. ஆனால் சீனாவுக்குத் தேவை தனது பொருளாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதுதான்.

பாகிஸ்தான், இலங்கை உட்பட பல நாடுகளுக்கு சீனா அதிக வட்டியில் கடன் தொகையை வழங்கியுள்ளது. சீனாவிடம் கடன் வாங்கிய நாடுகளில் வறிய நாடுகளும் அடங்குகின்றன. அதிகளவு வட்டிக்கு கடன் வாங்கிய இந்நாடுகள் வட்டியும் முதலுமாக பெருந்தொகை நிதியை செலுத்த வேண்டியிருப்பதால், தமது நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்ற முடியாமல் திண்டாடுகின்றன. சீனாவிடம் கடன் வாங்கிய நாடுகள் எதிர்கொள்கின்ற முக்கியமான பிரச்சினையே இதுதான்.

இலங்கையில் தற்போது பொருளாதார நெருக்கடி நிலவுகின்றது. பாகிஸ்தானில் பொருளாதார நெருக்கடி மாத்திரமன்றி அரசியல் நிலைமையும் சரியானதாக இல்லை. பாகிஸ்தானை பொறுத்த வரை பிரதமர் இம்ரான் கானின் ஆட்சி கலைக்கப்பட்டுள்ளது. தற்காலிக பிரதமராக குல்சார் அகமது நியமிக்கப்பட்டுள்ளார்.இந்நிலையில் பாகிஸ்தானில் எவரது ஆட்சி வந்தாலும் சீனாவிடம் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தியே ஆக வேண்டும் என்பதே உண்மை.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, இலங்கை பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில், இலங்கைக்கு வழங்கிய கடனின் ஒரு பகுதியை சீனா மீளக் கோரியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. வழங்கிய கடனின் ஒரு பகுதியை ஒருநாடு திருப்பிக் கேட்கின்ற போது சிக்கல்களே உருவாகும்.

கடன் வழங்கும் கொள்கையில் நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிக்கும் பாரதம் இலங்கையின் உற்ற தோழன்

கடனுக்கு ஈடாக ஏதேனுமொன்றை அந்நாடு கேட்பதற்கு இடமிருக்கின்றது.

இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு மாத்திரமன்றி உலகின் பல நாடுகளுக்கு சீனா அதிக தொகை கடனை வழங்கியுள்ளது. முக்கியமாக தெற்காசிய நாடுகளுக்கே சீனா அதிகமாக கடன் கொடுக்கும் வழக்கத்தை வைத்துள்ளது.

'பெல்ட் அண்ட் ரோட்' திட்டம் மூலம் பல்வேறு நாடுகளில் சீனா முதலீடு செய்வதை வழக்கமாகக் கொண்டுள்ளது. இதற்கென கடனாக பல மில்லியன்களை சீனா அந்த நாடுகளுக்கு கடனாக கொடுப்பது வழக்கம். அந்த நாடுகள் கடனை திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில், அந்த நாடுகளின் பல்வேறு வளங்களை சீனா மறைமுகமாகக் கட்டுப்படுத்தும் என்பது தெரிந்த விடயம். சீனாவின் இந்தச் செயலை debt trap policy என்று கூறுவர்.

சீனாவின் இவ்வாறான பொருளாதாரக் கொள்கையை வைத்துப் பார்க்கின்ற போது இலங்கை, பாகிஸ்தான் நாடுகள் தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சீனாவும் ஒருவகையில் காரணமென சர்வதேச பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். பல நாடுகள் சீனாவிடம் கடன் வாங்கி, அதற்கு வட்டி மேல் வட்டி கட்டி தற்போது பொருளாதார ரீதியாக கடுமையான பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளன.

இலங்கை, பாகிஸ்தான் உட்பட பல நாடுகளில் தோன்றியுள்ள பொருளாதார நெருக்கடிக்கு சீனாவின் கடுமையான கடன் நடைமுறையும் ஒரு காரணமென சர்வதேச பொருளாதார நிபுணர்கள் கருத்து

இலங்கையைப் பொறுத்தவரை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்காக இந்தியாவிடம் உதவி கேட்டுள்ளது. கடந்த ஜனவரியில் இருந்து இலங்கைக்கு இந்தியா 2.4 பில்லியன் டொலர் கொடுத்து உதவி உள்ளது. அத்தோடு 400 மில்லியன் டொலர் பரிமாற்றத்தை மேற்கொண்டுள்ளது.மேலும் 500 மில்லியன் டொலர் கடனை பின்பு செலுத்தும்படி ஒத்திவைத்துள்ளது. அதாவது இலங்கைக்கு கொடுத்த கடனை இப்போது திருப்பிச் செலுத்த வேண்டாம் என்று இந்தியா பெருந்தன்மையாகக் கூறியுள்ளது. இன்னொரு பக்கம் 1 பில்லியன் டொலருக்கு மருந்து, உணவு உட்பட பல்வேறு உதவிகளை வழங்கவும் இந்தியா முன்வந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இலங்கைக்கு அதிக கடன் கொடுத்து வந்த சீனா தற்போது கடனை மீளக் கேட்பதாக தகவல் வந்துள்ளது. சீனாவிடம் இலங்கை வாங்கிய மொத்தக் கடன் 8 பில்லியன் டொலர். இலங்கையின் மொத்த கடனே 45 பில்லியன்தான். இதில் ஆறில் ஒரு பங்கு சீனாவிடம் வாங்கப்பட்ட கடன் ஆகும். இவையெல்லாம் டொலரில் வாங்கப்பட்ட கடன். இவற்றில் டொலராக மட்டும் 6 பில்லியன் டொலரை சீனாவிற்கு இலங்கை கொடுக்க வேண்டும். அத்தோடு தங்கநகை பத்திரமாக 1 பில்லியன் டொலரை கொடுக்க வேண்டும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

சாரங்கன்...✍

விலைவாசி அதிகரிப்பு மற்றும் தற்பொழுது எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தி மக்கள் ஆரம்பித்துள்ள ஆர்ப்பாட்டங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

ஆர்ப்பாட்டங்களை வன்முறையாக மாற்றுவதற்கு திட்டமிடும் குழுக்கள்!

ஆனால் மக்கள் ஆரம்பித்துள்ள இப்போராட்டங்களை வன்முறைப் போராட்டமாக மாற்றுவதற்கு சில தரப்பினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். அத்தரப்பினர் அரசுக்கு எதிரான தரப்பினரென்பது உறுதியாகியுள்ளது.

அரசியல் பின்னணியுடன் செயற்படும் சில சக்திகள் இன்றைய போராட்டங்களை வன்முறை வடிவத்துக்கு மாற்றும் வகையில் செயற்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. அதன் காரணமாக ஆர்ப்பாட்டங்களின் போது ஆங்காங்கே விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த மார்ச் 31ஆம் திகதி மிரிஹானவில் உள்ள ஜனாதிபதியின் இல்லத்துக்கு அருகில் இடம்பெற்ற போராட்டம் இறுதியில் வன்முறையாக உருவெடுத்திருந்தது. பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாருடன் முரண்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், பாதுகாப்புத் தடைகளையும் மீறிச் செல்ல முற்பட்டமையால் குழப்பநிலைமை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டு மற்றும் நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டிருந்தனர். இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் முறுகல் நிலைமை ஏற்பட்டு வன்முறை உருவெடுத்தது. பாதுகாப்புத் தரப்பினருக்குச் சொந்தமான பஸ், பொலிஸாரின் வாகனங்கள் என பொதுச் சொத்துக்கள் பலவற்றுக்கு சேதம் ஏற்படுத்தப்பட்டது.

இந்த வன்முறைகளினால் பொதுச் சொத்துகளுக்கு ஏற்பட்ட சேதம் 39 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. சொத்துச் சேதங்களுக்கு அப்பால் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பொலிஸார் நடத்திய பதில் நடவடிக்கைகளில் பலரும் காயமடைந்தனர். ஆர்ப்பாட்டத்தினுள் காணப்பட்ட வன்முறையாளர்களின் தாக்குதல்களில் பொலிசாரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

வன்முறைகளில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 30 இற்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். இந்த ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வன்முறைகளின் பின்னணியில் சில அடிப்படைவாத சக்திகள் காணப்படுவதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்த ஊடக அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வது இயல்பானது. ஆனால் அத்தகைய ஆர்ப்பாட்டங்கள் சாத்விகமான முறையிலேயெ அமைந்திருக்க வேண்டுமே தவிர வன்முறையாகவோ தேசிய சொத்துக்களுக்கு சேதங்கள் ஏற்படும் வகையிலோ அமைந்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது என முன்னாள் அமைச்சரான பிரசன்ன ரணதுங்க கூறியிருந்தார்.

'குறுகிய அரசியல் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக சில அடிப்படைவாத சக்திகளாலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மக்களை பகடைக் காய்களாக பயன்படுத்தி அடிப்படை அரசியல்வாதிகள் தமது நோக்கங்களை இதன் மூலம் நிறைவேற்றிக் கொள்ள முடிந்ததையே காண முடிந்தது. நாட்டு மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளன என்பதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

நாட்டில் எரிபொருள், சமையல் எரிவாயு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்கான நெருக்கடி நிலைமை காணப்படுகிறது. எனினும் இவ்வாறான மோசமான செயற்பாடுகள் மூலம் அதனைப் பெற்றுக் கொள்ள முடியாது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கன்றி அவர்களது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளவே சில தரப்பினர் செயற்பட்டனர் என்பதை உறுதியாகக் கூற முடியும்' என பிரசன்ன ரணதுங்க சுட்டிக் காட்டியிருந்தார்.

அது மாத்திரமன்றி, முன்னாள் அமைச்சர்கள் சிலருடைய வீடுகளை முற்றுகையிடுவதற்கும் அவர்களின் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்துவதற்கும் சில தரப்பினர் தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகே அவர்களின் வீட்டுக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த விளம்பரப் பதாகை ஆர்ப்பாட்டக்காரர்களால் தீயிடப்பட்டிருந்தது. முன்னாள் இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்கவின் பொலனறுவை இல்லத்துக்குள் புகுந்த விஷமிகள், சொத்துக்களுக்குச் சேதமேற்படுத்தியிருந்தனர். இதுபோன்று பல சம்பவங்கள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

அரசாங்கத்தின் மீது மக்களுக்கு வெறுப்பு இருக்குமானால் மக்கள் அதனை அமைதியான முறையில் வெளிப்படுத்துவதில் எந்தவிதமான தவறும் கிடையாது. இருந்தபோதும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணுமாறு கோரி மக்கள் மேற்கொண்டுள்ள ஆர்ப்பாட்டங்களைப் பயன்படுத்தி, சில சக்திகள் அரசு மீதான தமது காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்துவதற்கு முயற்சிக்கின்றன.

பொதுச்சொத்துகளை அழித்தொழிப்பதையோ, எந்தவொரு நபரின் இல்லத்தினுள் நுழைந்து உடைமைகளுக்குச் சேதம் விளைவிப்பதையோ அனுமதிக்க முடியாது. நாட்டினதும் மக்களினதும் பாதுகாப்பு கருதி படையினர் தமது கடமையை ஆற்றுவரென்பதை மறந்து விடலாகாது!

குறுகிய வழியில் அரசியல் இலாபங்களை அடைவதற்கு முற்படும் அரசவிரோத சக்திகள்! ஒரு தரப்பினர் அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுகையில், வன்முறைக் கும்பல்கள் பிரவேசித்து கலவரத்தைத் தூண்டுவதற்கு சதித்திட்டம்!

தமது வீடுகளை இலக்கு வைத்து முற்றுகையிட்டவர்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கண்டனங்களை வெளியிட்டிருந்தனர். அந்த ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், தமது வீடுகளை இலக்கு வைத்து முற்றுகையிட்ட நபர்களில் தமக்கு எதிரான அரசியல் நிலைப்பாட்டைக் கொண்ட சிலர் இருக்கின்றனர் என்பதைத் தெளிவாகக் கூறியிருந்தனர்.

குறிப்பாக எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சில நபர்கள் இவற்றுக்குத் தலைமை வகித்ததாகவும், அவ்வாறான நபர்களை அடையாளம் காண முடிந்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அரசியல் ரீதியான வேறுபாடுகள் இருந்தால் அவற்றைத் தீர்த்துக் கொள்வதற்கு இது சரியான தருணம் இல்லையென்பதை சம்பந்தப்பட்டவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கான உரிமை அரசியலமைப்பின் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இருந்த போதும் இந்த உரிமையை தவறாகப் பயன்படுத்தி சில அரசியல் சக்திகள் செயற்படுகின்றமை மிகவும் கவலைக்குரிய விடயம் என பலரும் தெரிவித்துள்ளனர்.

'அமைதியான போராட்டம்' என்ற தொனிப்பொருளின் கீழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக இந்தப் போராட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுகின்ற போதிலும், இவ்விடயத்தில் இரண்டு குழுக்கள் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

"ஒரு பிரிவினர் அமைதியான முறையில் போராட்டம் நடத்தி அமைதியாகக் கலைந்து செல்கின்ற அதேவேளை, மற்றையகுழுவினரோ பொதுச்சொத்துகள் மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்து வன்முறையில் ஈடுபடுகின்றனர். முக்கிய வீதிகள் மற்றும் பொது இடங்களில் மக்களின் அன்றாட வாழ்க்கையை சீர்குலைக்கும் வகையில் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் வன்முறைப் போராட்டங்களை வேண்டுமென்றே நடத்துவதாகத் தெரிகிறது" என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமல் குணரட்ன தெரிவித்துள்ளார்.

"அவசரகால நிலை நடைமுறையிலிருக்கும் நிலையில், மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அமைதியான போராட்டங்கள் நடத்தப்படுவதை ஏற்றுக் கொள்ளலாம். என்றாலும், அமைதிப் போராட்டங்களை நடத்துவது என்ற போர்வையில் செயல்பட்டு, அமைதியை நிலைநாட்டுவதில் உறுதி பூண்டிருக்கும் பாதுகாப்புப் படையினரை ஒரு சங்கடமான நிலைக்கு உட்படுத்தி தனியார் சொத்துக்களை சேதப்படுத்தும் அதேவேளையில், இந்த பிரசாரம் வன்முறைத் தன்மையின் காரணமாக ஜனநாயகத்தின் கட்டமைப்புக்கு அப்பால் சென்றுள்ளது. சில பகுதிகளில், போராட்டக்காரர்கள் மோட்டார் சைக்கிள்களில் சென்று வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது கற்கள் மற்றும் பெட்ரோல் குண்டுகளை வீசி தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். மேலும், பல குழுக்கள் திட்டமிடப்பட்ட வகையில் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்" என ஜெனரல் கமல் குணரட்ன விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

"பொதுமக்களைப் பாதுகாப்பதில் எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் செயற்படும் பாதுகாப்பு அமைச்சு, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள் மற்றும் பொலிஸார், இந்த போராட்டங்களை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். ஜனநாயக ரீதியில் நடைபெறும் அமைதியான போராட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், வன்முறைச் செயல்களைத் தடுக்க நடவடிக்கை எடுப்போம். மேலும், அமைதியை நிலைநாட்ட பாதுகாப்புப் படையினர் செயல்படும் அதேவேளை, வன்முறையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த படையினர் தயங்க மாட்டார்கள் என்றும் நான் மேலும் வலியுறுத்துகிறேன். நாட்டு மக்கள் தேவைப்பட்டால் தங்கள் ஜனநாயக உரிமைக்காக அமைதியான முறையில் போராட்டங்களை நடத்த இடமுண்டு. பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல், தீவைத்தல் போன்ற செயல்களில் ஈடுபடாமல் இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்" என அவர் அந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை வன்முறைகளைக் கையில் எடுக்காது, அமைதியான போராட்டங்களை முன்னெடுக்குமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட பல அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துள்ளன. தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்களைக் குறுகிய அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தி அவற்றை வன்முறையாக மாற்றும் முயற்சிகள் கைவிடப்பட வேண்டும் என்பதுதான் பொதுவான கோரிக்கையாக உள்ளது.

எரிபொருள் நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வுக்குத் தீர்வு காணுமாறு கோரி அரசாங்க தரப்பினரின் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அரசாங்க முக்கியஸ்தர்களின் வீடுகளுக்குள் பலாத்காரமாகப் பிரவேசிக்க முற்படுவதும் சட்டவிரோதமான குற்றச்செயலாகும் என்பதை அமைதியை விரும்புகின்ற அனைவரும் ஒப்புக் கொள்ள வேண்டும்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டமென்பதன் பேரில் அரசவிரோத சக்திகள் வன்முறையைத் தூண்டி நாட்டில் பதற்ற நிலைமையை ஏற்படுத்த முயற்சிப்பதை எந்தவொரு அரசாங்கமும் ஏற்றுக் கொள்ளப் போவதுமில்லை.

மக்கள் போராட்டமென்பதன் பேரில் பொதுச்சொத்துகளுக்கும் அரசாங்க தரப்பினரின் உடைமைகளுக்கும் சேதம் விளைவித்து, கலவரத்தை உருவாக்குவதற்கு சதிமுயற்சி!

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் ஆவணம்: தேவை பொருத்தமான அரசியல் காய்நகர்த்தல்கள்

‘ இதுவரை ஆட்சிக்கு வந்த ஒட்டு மொத்த கட்சிகளும் பகுதி பகுதியாக செய்து வருகின்றன. இற்றைவரை ஆயிரக் கணக்கான ஹெக்டயர் காணிகள் பெரும்பான்மையினத்தவரை இலக்காக கொண்ட அபிவிருத்திப் பணிகளுக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இக்காணிகளை வளப்படுத்துவதற்காக நாலைந்து தலைமுறைகளைத் தியாகம் செய்துள்ள மலையக மக்களுக்கு இம்மியளவு காணி தானும் சொந்தமாக்கப்படவில்லை ’

இந்திய வம்சாவளி மலையக மக்களது தார்மீக ரீதியிலான வாழ்வியல் உரிமைகள் சம்பந்தமான ஆவணம் ஒன்று இலங்கை, இந்தியா, பிரித்தானியா, ஜப்பான், கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் கவனத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக தமிழ் முற்போக்குக் கூட்டணி கூறியுள்ளது. அந்நிய நாடுகளுக்கு அனுப்பி வைப்பதால் ஆகப்போவது ஏதுமில்லை. இந்தியா கூட இந்த ஆவணம் குறித்து எதனையும் செய்யுமென்று எதிர்பார்ப்பதற்கு இல்லை. இந்தியா தமது பிராந்திய நலன் சார்ந்த செயற்பாடுகளிலேயே கவனம் செலுத்தும்.

ஆனால் இவற்றுள் அடங்கியுள்ள அம்சங்கள் முக்கியமானவை. குறிப்பாக தோட்டக் குடியிருப்புப் பிரதேசங்களை அரசு பொது நிர்வாக கட்டமைப்பின் கீழ் கொண்டுவந்து தோட்ட நிர்வாகங்களின் பிடியிலிருந்து முற்றாக விடுவிக்கப்பட வேண்டியது அவசியமானதே. இதன் மூலம் அரசு நிறுவனங்களின் நிர்வாக மற்றும் நிலவுரிமை சேவைகளைப் பெற வழிபிறக்கும் இதே நேரம் இதற்கான முன்னகர்வுகளுக்கு முட்டுக் கட்டைப் போடும் இனவாத போக்கு பற்றி இங்கு பேசாமல் இருக்க முடியாது.

சிங்களப் பேரினவாதம் என்பது அரசியல் சார்ந்த அடைவுகளின் இலக்கினை மட்டும் உள்வாங்கிக் கொண்டதல்ல. அடிப்படையிலேயே அதற்கான முன்னூட்டல்கள் நுழைக்கப்பட்டு விடுகின்றன. குறிப்பாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலைபெற்றிருந்த தமிழர்களுக்கான தாயக உரிமைப் பதிவுகள் திட்டமிடப்பட்டே பாடசாலை வரலாற்று புத்தகங்களில் மறைக்கப்பட்டு புனைவுகள் புகுத்தப்பட்டுள்ளன. ஆங்காங்கே உண்மை விடயங்களை சரித்திர சான்றுகளாக முன்வைத்துள்ள மகாவம்சத்தினைக் கூட பிழையான தகவல்களை தருவதாக விமர்சிக்கும் நிலை இன்று ஏற்பட்டுள்ளது.

ஆனால் ஒட்டுமொத்த பெரும்பான்மை மக்களின் ஏகோபித்த கருதுகோளாக இந்த இனவாதம் இருக்கவில்லை. ஒருசில வங்குரோத்து அரசியல்வாதிகளின் சந்தர்ப்பவாத குரலாகவே இனவாதம் ஒலிக்கின்றது. ஆயினும் பெரும்பான்மையின மக்களிடையே சில தவறான உள்வாங்கல்கள் இல்லாமல் இல்லை. அதைக் களையவேண்டிய தமிழ் அரசியல் தரப்பு தமது பொறுப்பை சரியாக ஆற்றுவதாக இல்லை.

இன்று மலையகத்தில் வாழ்வுரிமையை வரித்துக் கொண்டுள்ள இந்திய வம்சாவளி தமிழர்களை ஆங்கிலேய ஆக்கிரமிப்பாளர்களின் கைக்கூலிகளாக உருவகிக்கும் ஒரு மனோபாவம் பெரும்பான்மையின மக்களிடம் நிலைபெற்றிருப்பது இதன் பின்னணியில் தான். இந்தியாவை அண்டை நாடு என்ற அந்நியோன்யத்துடன் அணுகாது இலங்கையின் வளங்களை கபளீகரம் செய்ய வரும் ஊடுருவல்காரர்களைப் போல பார்ப்பதன் பின்புலத்தில் மறைந்திருப்பது என்னவோ வக்கிரம்தான். இந்தியாவிலிருந்து வந்தேறு குடிகள் என்ற கணிப்பில் அவர்களின் வாழ்வாதாரத்துக்கும் வாழ்விட வசதிக்கும் வழிவகுக்கும் முன் மொழிவுகளை தேசிய பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல் என்ற ரீதியில் கருத்துக்களை முன்வைக்கும் பிற்போக்குவாதிகளின் முனைப்புகளை அலட்சியமாக ஒதுக்கிவிடமுடியாது.

அரசப் பெருந்தோட்டக் காணிகளை தோட்டத் தொழிலாளர்களுக்குப் பகிர்ந்தளிப்பதில் பயனில்லை. தோட்டங்களை சூழவுள்ள பொதுமக்களுக்கு வழங்க வேண்டும். அல்லது தனியார் கம்பனிகளுக்கு வழங்கினால் பெருந்தோட்டத் துறையை பாதுகாக்க முடியும். தோட்டத் தொழிலாளர்களுக்கு நிறைய பிரச்சினைகள் உள்ளன. அவை கட்டாயம் தீர்க்கப்பட வேண்டும். முக்கியமாக அவர்களின் லயன் தொகுதிகள் மாற்றப்பட வேண்டும். அதற்குப் பதிலாக பெருந்தோட்டக் காணிகளை துண்டாடி அவர்களுக்குப் பிரித்துக் கொடுப்பதால் நிலைமை மேலும் மோசமாகலாம்.

இன்னொரு மலையக ஈழத்துக்கு அதுவழி கோலும். கடந்தகால கசப்பனுவங்கள் போன்று புதிய பரிமாணங்கள் உருவாகலாம். தனியாருக்கு தோட்டங்களை வழங்குவதை விட துண்டாடுவது பயங்கரமானது. மலைநாட்டிலிருந்து தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் காணிகளை இழந்தமை மறந்திருக்கும். இப்படியான நிலைமைகளில் உடரட்ட கெரல்ல எனப்படும் மலைநாட்டுப் புரட்சி ஒரு காலத்தில் வெடித்தது. 200 வருடங்களுக்கு முன் தென் இந்தியாவிலிருந்து தொழிலாளர்களாக இங்கு வந்தவர்கள் பல தலைமுறைகளாக வாழ்ந்தனர்.

எனினும் இவர்களுக்கு தோட்டக் காணிகளைப் பிரித்து வழங்கினால் சரித்திரத்தில் மற்றொரு பயங்கரம் எழுதப்படும் நிலை உருவாகும் என சில இனவாதிகள் கடந்த காலங்களில் அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் தனியார் என்று குறிப்பிடுவது பெரும்பான்மையின கிராமத்தவர்களையே என்பதில் ஐயமில்லை. இதைத்தான் இதுவரை ஆட்சிக்கு வந்த ஒட்டு மொத்த கட்சிகளும் பகுதி பகுதியாக செய்து வருகின்றன. இற்றைவரை ஆயிரக் கணக்கான ஹெக்டயர் காணிகள் பெரும்பான்மையினத்தவரை இலக்காக கொண்ட அபிவிருத்திப் பணிகளுக்காக சுவீகரிக்கப்பட்டுள்ளன. ஆனால் இக்காணிகளை வளப்படுத்துவதற்காக நாலைந்து தலைமுறைகளைத் தியாகம் செய்துள்ள மலையக மக்களுக்கு இம்மியளவு காணி தானும் சொந்தமாக்கப்படவில்லை.

இதுவரை காலமும் மலையகத்தில் இடம்பெற்ற போராட்டங்கள் எல்லாமே வாழ்வாதாரத்தை மையமாக கொண்டவையே! அதுவும் அவ்வாறான போராட்டங்கள் யாவும் அரச எதிர்ப்புப் போராட்டங்களாக இருக்கவில்லை. அநேகமானவை பெருந்தோட்டங்களை அந்தந்தக் காலகட்டங்களில் நிர்வாகம் செய்த முகாமைத்துவங்களுக்கு எதிரான போராட்டங்களாகவே இருந்தன.

தோட்டக் காணிகள் அபகரிக்கப்படுவதை எதிர்த்து மலையக மக்கள் நடத்திய போராட்டங்களின் தொனி சிங்கள மக்களுக்கு எதிரானதாக எப்பொழுதுமே இருந்ததில்லை. அது வாழ்வாதாரம் பறிபோகும் என்ற அச்சத்தினால் நடத்தப்பட்டவை. இன்று வாழ்க்கையை நடத்திச்செல்ல சம்பளம் போதாத காரணத்தினால் அல்லலுறும் அவர்கள் சம்பளத்துக்காக போராட்டங்கள் நடாத்தி களைத்துப் போய் நிற்கின்றார்கள்.

எந்தவொரு காலக்கட்டத்திலும் மலைநாட்டுக் கிராமத்தவர்களின் நிலங்களைப் பறிக்க மலையக மக்கள் காரணமாக இருந்ததில்லை. ஏனெனில் நிலங்களின் தேவை அவர்களுக்கு இருக்கவில்லை. தவிர இம்மக்களின் செறிவுக்காக எந்தவொரு நிலமும் கையகப்படுத்தப்படவில்லை. மாறாக வருமான மீட்டலை அதிகரிக்க ஆங்கிலேய ஆட்சி பயிர்ச்செய்கையை விரிவுபடுத்தியது.

இதனால் ஏற்பட்ட ஆளணித் தேவையை ஈடுசெய்யவே இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்தது. ஒப்பந்த அடிப்படையில் இங்கு வந்த இந்திய வம்சாவளியினர் ஒப்பந்தக்காலம் முடிந்தும் இந்நாட்டை நேசித்ததன் காரணமாக தமது தாய்நாடு திரும்பாது இங்கேயே தரித்ததுதான் இச்சமூகம் செய்த பெரிய தவறு.

மலைநாட்டு புரட்சியின் இலக்கு அந்நியர் ஆட்சிக்கு எதிரான அணுகு முறையே அன்றி இந்தியா வம்சாவளி மக்கள் எதிர்ப்பு அல்ல. ஆனால் தமது நிலங்கள் பறிபோக இந்திய வம்சாவளி மக்களே காரணமென பரப்புரை செய்யப்பட்டதை அப்பாவி கிராம மக்கள் அப்படியே நம்பினர். ஆனால் அவ்வாறான முறுகல் நிலைமைக்கான ஏதுக்கள் சிங்கள கிராமத்தவர் மத்தியில் காணப்படவில்லை என்பதே யதார்த்தம். இன்று ஸ்திரத் தன்மையற்றதும் சொத்துரிமையற்றதுமான வாழ்வியல் சுழற்சிக்கு ஆட்பட்டிருக்கின்றது மலையக சமூகம். அத்துடன் சமூக அந்தஸ்துக்கான கோரல் வாழ்வாதார வீழ்ச்சி என்பன மீண்டுமொரு புலம் பெயர்தலுக்கான தூண்டுகையை உற்பத்தி செய்யும் நிலை உருவாக்கம் பெற்று வருகின்றது. இந்நாட்டின் அரசாலும் தேசிய இனங்களாலும் மலையக மக்கள் அந்நியராகவே கணிக்கப்பட்டு வருவது அபத்தம்.

பொருளாதார தேவைக்காக பெருந்தோட்ட மக்களின் இடப் பெயர்வு உருவாக்கும் வெற்றிடம் அவர்களின் இருப்பு குறித்ததான அச்சுறுத்தலை ஏற்படுத்தவே செய்யும். எதிர்கால இருப்பு இப்படி கேள்விக்குறியாகும் பட்சத்தில் வாழ்வியல் ரீதியிலான வரப்பிரசாதங்களுக்கு அரசியல் ரீதியிலான தீர்வு பலவீனமடைந்து போகவே செய்யும்.

ஏனெனில் 200 வருடங்களாக இருட்டடிப்புச் செய்யப்பட்டுவரும் மலையக மக்களின் அபிலாஷைகள் சரியான முறையில் அடையாளப்படுத்தப்பட்டு சட்ட ரீதியாக உள்வாங்கப்படாமலேயே விடப்பட்டுள்ளது. இது திட்டமிடப்பட்டு செய்யப்பட்டு வரும் புறக்கணிப்பு.

வெளிநாடுகளின் தலையீடு கோரிக்கைகளாக மட்டுமே அமையும். அதனால் ஆகப்போவது ஏதுமில்லை. இந்தியா அதன் தார்மீக பொறுப்பை இதுவரை சரியாக ஆற்றவில்லை. மலையக மக்களுக்கான இந்தியாவுடனான ஒப்பந்தங்கள் சில மனிதாபிமானம் அற்றவை. த.மு கூட்டணியின் நிலவரம்பற்ற சமூக சபையோசனை வரவேற்கக்கூடியது. தமது ஆவணத்தில் அடங்கியுள்ள அம்சங்களுக்கு இங்கேயே தீர்வுகாணக்கூடிய வகையில் அரசியல் காய்நகர்த்தலை தமிழ் முற்போக்குக் கூட்டணி மேற்கொள்வதே உருப்படியான காரியமாக இருக்க முடியும்..

பன். பாலா ...✍

புசல்லாவ நோனாத் தோட்ட வைத்தியசாலை மீண்டும் திறக்கப்பட வேண்டும்

கொத்மலை பிரதேசத்தின் புசல்லாவ நோனாத் தோட்டம் புஸ்சலாவ நகரில் இருந்து நுவரெலியா செல்லும் வழியில் சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இத்தோட்டத்தில் சுமார் 200க்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிக்கின்றன.

இவர்கள் தோட்டத் தொழிலை மட்டும் நம்பி சீவனம் நடத்துபவர்கள். ஒருசிலர் மட்டுமே மாடு வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அடிப்படையில் வருமானம் குறைந்த மக்கள்.

தற்போது அதிகரித்துச் செல்லும் விலைவாசிக்கு ஈடு கொடுக்க முடியாமல் பெரும் சிரமத்துக்கு மத்தியில் வாழ்கின்றனர். பிரதான பாதையில் இருந்து தோட்டத்துக்கு செல்லும் உள்வீதி சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் குண்டும் குழியுமாக உள்ளது

இத்தோட்டத்தில் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட வைத்தியசாலை கடந்த 15 வருடங்களாக மூடப்பட்டு கிடக்கிறது.

இந்த வைத்தியசாலையில் தாய் சேய் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு மருத்துவம் பார்க்கப்பட்டது. இன்று இவ்வைத்தியசாலை மூடப்பட்டுள்ளதால் தடிமன் காச்சலுக்குக் கூட 9 கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பாலுள்ள வகுகப்பிட்டியில் அமைந்துள்ள புசல்லாவ வைத்தியசாலைக்கு 1000 ரூபா செலவு செய்து செல்லவேண்டியுள்ளது

பெறுமதிமிக்க கட்டிடத் தொகுதி பயனற்று கிடக்கின்றது. தோட்ட நிர்வாகம் இதில் கவனம் எடுக்காது என்பதால் தோட்ட மருத்துவத்துக்குப் பொறுப்பான டிரஸ்ட் நிறுவனம் இந்த ஆஸ்பத்திரியைத் திறந்து முதல் கட்டமாக டிஸ்பென்சரி ஒன்றையாவது இங்கே ஆரம்பிக்க முன்வர வேண்டும். இலங்கையில் மருந்து தட்டுப்பாடு தற்காலிகமானது. அதைக் காரணமாகக் கூறக்கூடாது. இத்தகைய விவகாரங்களில் பிரதேச சபை தலையிட முடியும் என்பதால் இத்தோட்ட மக்கள் பிரதேச சபை ஊடாகவும் முயற்சி செய்யலாம்.

நோனா தோட்ட மக்கள் கடந்த 15 வருட காலமாக இந்த வைத்தியசாலையை மீளத்திறக்க தோட்ட நிர்வாகத்திடம் போராடி வந்துள்ளனர். ஆனால் எந்த முயற்சியும் பயன்தரவில்லை. தோட்ட மக்கள் தாம் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் பிரமுகர்களிடம் விடுத்த வேண்டுகோள்களுக்கு எந்தப் பலனும் கிட்டவில்லை. அவர்கள் வழங்கிய வாக்குறுதியும் காற்றில் கலந்துவிட்டன.

தற்போது இவர்கள் இந்த வைத்தியசாலையை மறந்தே விட்டனர் என்றுதான் சொல்ல வேண்டும். திடீரென நோய்வாய்ப்பட்ட நிலையில் பணம் செலவு செய்து தூர இடங்களுக்கு மருத்துவத்துக்காக செல்லும் போதுதான் தோட்ட வைத்தியசாலை பற்றிய நினைவு இவர்களுக்கு வருகிறது. அருகில் இருக்கும் இந்த வைத்தியசாலை இயங்குமாக இருந்தால் இவ்வளவு பணத்தை செலவழித்து நேரத்தை வீணடித்திருக்க வேண்டிய அவசியமிருந்திருக்காதே என எண்ணுகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தில் தமிழ் அரசியல் வாழ இந்த தோட்ட மக்களின் பங்களிப்பும் உள்ளது என்பதை அரசியல் பிரமுகர்கள் வசதியாக மறந்து விடுகின்றனர்.

நாட்டில் நாளுக்குநாள் புதிய வைத்தியசாலைகள் திறக்கப்பட்டு மக்களுக்கான சுகாதார சேவைகள் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை ஆங்கிலேய நிர்வாகம் தொழிலாளர் சமூகத்துக்கு செய்து கொடுத்த சுகாதார வசதிகளை இப்போதைய தலைவர்கள் இல்லாது செய்து விட்டனர்.

இந்த வைத்தியசாலைக்கு நிரந்தர சேவை வைத்தியர் ஒருவரை நியமித்து அவரை நிரந்தர சேவையில் இணைத்து வைத்தியசாலையை திறக்க வேண்டும் என்பது இவர்களின் கோரிக்கை. இப்பகுதி மக்கள் பயன்படும் மருத்துவமனை புனரமைக்கப்பட வேண்டும் என்பது நோனா தோட்ட மக்களின் வேண்டுகோள்.

ஆர். நவராஜா ...✍

படங்கள் : புசல்லாவ தினகரன் நிருபர்

தவற வேண்டாம் இந்த வாய்ப்பை!

தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு இந்திய புலமைப்பரிசில்

கண்டியிலுள்ள இந்திய உதவி உயர் ஸ்தானிகலாலயம் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளிடமிருந்து புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இலங்கை தோட்டத் தொழிலாளர் கல்வி அறக்கட்டளையின் (CEWET) புலமைப் பரிசில் வழங்குவதற்காக தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. இந்த புலமைப்பரிசில்கள் க.பொ.த. உயர் தரம், இளங்கலைப் படிப்புகள் மற்றும் இலங்கையில் உள்ள வேறு எந்த அரச தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் தொழிற்கல்வி/தொழில்நுட்பக் கல்வி பெறும் மாணவர்களுக்கானவை.

2. க.பொ.த சாதாரண தரம் (குறைந்தபட்சம் 6 சிறப்பு சித்திகளுடன்) அல்லது உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மற்றும் 25 வயதுக்கு குறைவானவர்கள் இந்த உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களுடன் பிறப்புச் சான்றிதழின் நகல், க.பொ.த. சாதாரண தரம் அல்லது க.பொ.த உயர்தர பெறுபேற்று சான்றிதழின் நகல், பெற்றோரின் சமீபத்திய சம்பளச் சீட்டு மற்றும் பெற்றோரின் தொழில் தொடர்பான தோட்ட முகாமையாளரின் சான்றிதழ் என்பவற்றை இணைக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களை கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயத்தின் இணையத்தளமான www.ahcikandy.gov.in மற்றும் கொழும்பு இந்திய உயர்ஸ்தானிகலாலயத்தின் இணையத்தளமான www.hcicolombo.gov.in ஆகியவற்றிலிருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

3. விண்ணப்பப் படிவங்களை இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம், இல. 01A, மஹமாய மாவத்தை, கண்டி மற்றும் இந்திய உயர்ஸ்தானிகலாலயம் 3638, காலி வீதி, கொழும்பு ஆகிய இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் ICE பிரிவு, இந்திய உதவி உயர்ஸ்தானிகராலயம், இல. 01A, மஹமாய மாவத்தை, த.பெ. இல. 47, கண்டி அல்லது கௌரவ செயலாளர், சிவெட் C/O இந்திய உயர் ஸ்தானிகராலயம், த.பெ.இல. 882, கொழும்பு 03. என்ற முகவரிக்கு ஏப்ரல் 30, 2022 அன்று அல்லது அதற்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

5. மேலதிக தகவல்/தெளிவுகளுக்கு தயவுசெய்து 0812222652/2223786 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் அல்லது ice.kandy@mea.gov.in என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யலாம்.

மெய்யான பிரச்சினையை உணரத் தயாராவது எப்போது?

அரசியற் கொந்தளிப்பு, பொருளாதார நெருக்கடி என நாடு பெரும் பிரச்சினைச் சூழலுக்குள் சிக்குண்டிருக்கிறது. பலரும் கருதுவதைப் போல இது இப்பொழுது – இந்த ஆட்சியில் – ஏற்பட்ட திடீர் நெருக்கடியல்ல. அல்லது இந்த நெருக்கடிக்கு ராஜபக்ஸவினர் மட்டும் காரணமும் அல்ல. ஆனால் இந்தத் தரப்புக்குக் கூடுதல் பொறுப்புண்டு. இவர்கள் முன்னரும் அதிகாரத்தில் இருந்தனர் என்பதோடு இப்பொழுதும் ஆட்சியில் இருக்கும் தரப்பாக உள்ளனர் என்பதால் இந்தப் பொறுப்புக் கூடுதலாகச் சேருகிறது. இப்பொழுது ஆட்சியில் இருக்கும் தரப்பு என்பதே இங்கே கவனத்திற்குரியது. ஏனென்றால் நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டியவர்கள் ஆட்சியில் இருப்பவர்களே. ஆகவே அவர்கள் மீதே கவனம் குவிகிறது. அதுவே நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

கடந்த காலத் தவறுகள் என்பதைப் பட்டியலிட்டால் அதில் பல காரணங்கள் வந்து சேரும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமை, அதன் விளைவான 30 ஆண்டுகாலப் போர், போரினால் ஏற்பட்ட மனித வள இழப்பு, பொருளாதார இழப்பு, இயற்கை வள இழப்பு போன்றவை, நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி ஆட்சி முறையில் ஏற்பட்ட தவறுகள், திறந்த பொருளாதாரக் கொள்கை, வரவு செலவுத்திட்டங்களில் தொடர்ந்த துண்டு விழும் தொகை, அதற்கு மேற்கொள்ளப்பட்ட தொடர் வெளிநாட்டுக் கடன்கள், ஊழல், அரசியல் நியமனங்கள், அளவுக்கதிகமான நிவாரணமளித்தல்களும் வரிச்சலுகைகளும் என பெரியதொரு பட்டியல் நீள்கிறது.

இந்தத் தவறுகளில் கடந்த 40 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த ஐ.தே.க, சுதந்திரக் கட்சி ஆகியவற்றுக்குக் கூடுதல் பங்குண்டு. அதேயளவுக்கு மக்களுக்கும் இதில் பொறுப்புண்டு. தெரிந்து கொண்டே தவறிழைக்கும் தரப்புகளாகிய இவற்றை மக்கள் ஆதரித்து ஆட்சியில் அமர்த்தியிருக்கின்றனர். இதேயளவுக்கு அல்லது அதற்கும் கூடுதல் பொறுப்பு, இந்த நாட்டின் படித்த உயர் பதவிகளில் இருந்த – இருக்கின்ற புத்திஜீவகளுக்கும் உண்டு.

ஒரு நாட்டின் நிகழ்காலம், எதிர்காலம் இரண்டையும் பற்றிச் சிந்திக்க வேண்டியவர்கள் அறிஞர்களே. அதற்காகத்தான் அவர்களுக்கு உயர் கல்விக்கான வாய்ப்புகளும் சலுகைகளும் சிறப்பு ஏற்பாடுகளும் அளிக்கப்படுகின்றன. மேற்படிப்பு, வெளிநாட்டுக் கற்கை, வாகன இறக்குமதிக்கான வரிச்சலுகை எனப் பலவும் வழங்கப்படுவது இவர்கள் நாட்டுக்கு புத்திபூர்வமாக ஆற்றக்கூடிய பங்களிப்புகளுக்காகவே.

இப்படி உயர் வாய்ப்புகளையும் சலுகைகளையும் பெற்ற – பெற்றுக் கொண்டிருக்கின்ற அறிவுத்துறையினரும் அறிவுசார் அமைப்புகளும் இந்த நாட்டின் அரசியல் நெருக்கும் (இனப்பிரச்சினை உள்பட) பொருளாதார நெருக்கடிக்கும் ஆற்றிய – வழங்கிய – பங்களிப்பு என்ன) இப்பொழுது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைப் பற்றி விழுந்தடித்துக் கொண்டு வந்து பல்வேறு அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் முன் வைக்கிறார்கள். பதிலாக பெறுமதியான ஆலோசனைகளை வைப்பதற்கு இன்னும் தயாரில்லை. அப்படி எதையாவது சொல்வதாக இருந்தாலும் ஐ.எம். எவ்வுக்குச் செல்லுங்கள், வெளிநாட்டுக் கடனைப் பெறுவதற்கான இலகு வழிகாட்டுதல்கள் என்ற மாதிரி பிழையான திசைகளைக் காட்டுவதாகவே இருக்கிறது.

ஆனால், இவை எல்லாவற்றுக்கும் அப்பால் இலங்கையில் நிலையான, உறுதிப்பாடுடைய அரசாங்கம் அமையக் கூடாது என்பதில் "அயலவர்கள்" மிகுந்த கரிசனையாக உள்ளனர். அவர்களுடைய மெகா திட்டத்தின்படியே இன,மத முரண்களும் உள்நாட்டுப் போரும் தீவிரமடைந்தன. இனக்கலவரங்களை உருவாக்குவதிலும் இனமுரண்பாட்டை வளர்ப்பதிலும் போருக்குத் தூண்டுவதிலும் போரை நடத்தியதிலும் இந்த அயலவர்களுக்கிருந்த பங்கு பெரியது.

இப்பொழுது இன்னொரு வடிவத்தில் இதை வெற்றிகரமாகச் செய்து வருகின்றனர். கடந்த "நல்லாட்சி" அரசாங்கத்தை நான்கு ஆண்டுகளுக்குள் குலைத்தனர். இந்த அரசாங்கத்தை இரண்டாண்டுகளுக்குள் தடுமாற வைத்துள்ளனர்.

ஆக மொத்தத்தில் அவர்களுடைய நிகழ்ச்சி நிரலின்படி ஸ்திரமற்ற இலங்கை ஒன்றே இருக்க வேண்டும். அந்தப் பலவீனமான இலங்கையில்தான் அவர்களால் நினைத்த எதனையும் செய்து கொள்ள முடியும். அதற்கமையவே காய்களை மிக நுட்பமாக நகர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

இந்த ராஜதந்திரப் பொறிக்குள் நீண்டகாலமாக இலங்கையர்கள் மடத்தனமாகச் சிக்கி விட்டனர். இதைக்குறித்து நம்முடைய தலைவர்களோ புத்திஜீவிகளோ அறிவுசார் அமைப்புகளோ அரசியல் ஆய்வாளர்களோ முன்னுணர்ந்து சொன்னதில்லை. அப்படி ஒருசில குரல்கள் அங்கங்கே எழுந்திருந்தாலும் அதை எவரும் செவிகொடுத்துக் கேட்டதில்லை.

கேட்கும் நிலையில் யாரும் இருந்ததும் இல்லை. ஏன் இப்பொழுது கூட எந்தச் சிறிய அறிவுரையிலிருந்து பெரிய விசயங்கள் வரையில் சொன்னாலும் அதைக் காதுகொடுத்துக் கேட்பதற்கு யாருமே – எந்தத் தரப்புமே இல்லை.

எல்லாமே மூடத்தனத்திலும் அதிகார மமதையிலும்தான் உள்ளன. அதிகார மமதை என்பதே மூடத்தனத்தின் முதல் அடையாளம் தானே!

ஆக மொத்தத்தில் பிற சக்திகள் விரித்த கண்ணிகளில் – பொறிகளில் இலகுவாக இலங்கையர்கள் அனைவரும் சிக்கி விட்டனர்.

இப்பொழுது நாடே தெருவில் நிற்கிறது. இருளில் மூழ்குகிறது. எதை நோக்கி இலங்கையை வெளிச்சக்திகள் வழிநடத்தினவோ அதை அவை அடைந்து விட்டன. இப்பொழுது அந்த வெளிச்சக்திகளின் சந்தையாகவும் கடனாளியாகவும் இலங்கை மாறியுள்ளது.

இந்தப்பொறியில் முட்டாள்தனமாக நமது தலைமைகளும் மக்களும் விழுந்திருக்கின்றனர் என்பதே மிகப் பெரிய துயரம்.

இப்பொழுது நாடே தெருவில் நிற்கிறது. இருளில் மூழ்குகிறது.

எதை நோக்கி இலங்கையை வெளிச்சக்திகள் வழிநடத்தினவோ அதை அவை அடைந்து விட்டன. இப்பொழுது அந்த வெளிச்சக்திகளின் சந்தையாகவும் கடனாளியாகவும் இலங்கை மாறியுள்ளது.

ஏறக்குறைய இது நாமே நமக்கான புதைகுழியைத் தோண்டியதற்குச் சமம்.

இவ்வளவும் நடந்த இப்படியொரு நிலை வந்த பிறகும் கூட நடந்த கடந்த காலத் தவறுகளுக்கோ நடந்து கொண்டிருக்கும் நிகழ் காலத் தவறுகளுக்கோ யாரும் பொறுப்புக் கூறவும் தயாரில்லை. பொறுப்பெடுக்கவும் தயாரில்லை.

பதிலாக பிறரை நோக்கி கையைக் காட்டித் தம்மைச் சுத்தப்படுத்திக் கொள்ள (தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவே) விரும்புகின்றனர்.

2009 இல் யுத்தம் முடிந்த போது, இனிப் பிரச்சினையில்லை. நாடு மெல்ல மெல்ல புதிய வளர்ச்சியைப் பெற்று விடும் என்று பலராலும் நம்பப்பட்டது. அந்த நம்பிக்கையை வலுப்படுத்தக் கூடியமாதிரியே "அபிவிருத்

கருணாகரன் ...✍

தித்திட்டங்கள்" என்ற பேரில் பல்வேறு புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

வீதிகள் மேம்படுத்தப்பட்டன. துறைமுகங்கள் விருத்திசெய்யப்பட்டன. பாடசாலைகள், மருத்துவமனைகள் விரிவாக்கம் செய்யப்பட்டன. நாடு முழுவதும் எல்லோருக்கும் மின்சாரம் வழங்கப்படும் என்ற அறிவிப்போடு அனைவருக்கும் மின்விநியோகம் செய்யப்பட்டது.

வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன. இப்படி எல்லாமே முன்னேற்றகரமாக இருந்தன. இந்த மகிழ்ச்சியில் பலரும் சுற்றுலாவில் நாடுலாவினர்.

ஆனால், இந்த மகிழ்ச்சிக் காலத்துக்கு ஆயுள் நீடிக்கவில்லை. ஒரு பத்துப் பன்னிரண்டு ஆண்டுக்குள் கண்பட்டதைப்போல எல்லாமே நாசமாகி விட்டன. இப்பொழுது நாளில் பெரும்பகுதியும் மின் வெட்டாகியுள்ளது.

எரிபொருள் தொடக்கம் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு மக்கள் க்யூவில் நிற்க வேண்டியுள்ளது. சனங்களின் நம்பிக்கையும் எதிர்பார்ப்புகளும் பொய்த்து விட்டன. அதனால்தான் மக்கள் தெருவில் இறங்கி தமது எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள்.

சிறு நெருக்கடி ஏற்பட்டாலும் அதையிட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவது எதிர்க்கட்சிகளின் வழமை. மக்களின் இயல்பு. இப்பொழுது ஏற்பட்டிருப்பது பெரியதொரு பொருளாதார நெருக்கடி. ஆகவே மக்களின் கொதிப்புணர்வும் அதற்கு ஏற்றமாதிரி உச்சமாகவே இருக்கும்.

இதுதான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது.

இந்தச் சூழலில் மக்களுடைய உணர்வுகளின் பின்னால் நின்று தமது அரசியல் லாபத்தை அடைவதற்கே எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. ஏற்பட்டிருக்கும் தேசிய நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கோ மாற்று உபாயங்களை முன்வைப்பதற்கோ தயாரில்லை.

மட்டுமல்ல, இவ்வளவு நெருக்கடிச் சூழலில் நிற்கின்றபோது கூட மக்களும் சரி அரசியற் தரப்பினரும் சரி இனமுரணை எப்படித்தீர்த்துக் கொள்வது? நாட்டிலுள்ள அனைவரும் சேர்ந்து எப்படி இந்த நெருக்கடியைக் கடப்பதற்காக செயற்படுவது, அதற்குரிய பன்மைத்துவச் சூழலை உருவாக்குவது எப்படி, ஜனநாயக அடிப்படைகளை வலுவாக்கம் செய்து பேணுவது எவ்வாறு என்று சிந்திக்கவும் இல்லை.

இதெல்லாம் எதைக் காட்டுகின்றன?

இன்னும் மெய்யான பிரச்சினையை உணரத் தயாரில்லை என்பதைத்தானே!

இனியும் நெருக்கடிகளிலிருந்து மீளத் தயாரில்லை என்பதைத்தானே!

அப்படியென்றால் வெளியாரின் பொறிகளில் வீழத் தயார். உள்ளே நமக்குள் உடன்பாடு காணவும் ஒன்று படவும் நெருக்கடிகளிலிருந்து மீளவும் தயாரில்லை என்பதுதானே!

அப்படியென்றால் நாம் இன்னும் நீண்ட காலத்துக்கு தெருவில் நிற்கத்தான் போகிறோம். இருளில் மூழ்கத்தான் போகிறோம். கடனில் சாகத்தான் போகிறோம்.

வாழ்க இலங்கை மணித் திருநாடே!

கடன்பொறியை கைவிட கையாள்வது எதை ?

குடும்பமொன்று பயணிக்கும் தோணியில் ஓட்டைவிழுந்து, மூழ்கும் ஆபத்து ஏற்பட்டால் தோணியை கரை சேர்ப்பதுதான் குடும்பப்பொறுப்பாகஇருக்கும். அப்படியிருப்பதுதான், உறவுக்கும் இரத்தப் பிணைப்புக்கும் அழகு. ஓட்டை எப்படி ஏற்பட்டது என்ற ஆராய்ச்சியோ? அல்லது சர்ச்சையோ? இச்சந்தர்ப்பத்தில் உயிர்களைப் பாதுகாக்காது. இப்படியொரு சிக்கலிலே எமது நாடும் நட்டாற்றில் நிற்கிறது. எனவே, கரையேறுவதில்தான் கவனங்கள் இருக்க வேண்டும். நாமெல்லோரும் மூழப்போகும் ஆபத்தாக இதை நாம் மாற்றிவிடக்கூடாது. இந்த ஆபத்து ஏற்பட்ட காரணம் இனி ஏற்படக் கூடாது என்பதில் செலுத்தப்படும் கவனங்கள்தான், தேசப்பற்றைத் தோற்றுவிக்கும். பொருளாதார காரணிகளுக்கு வேறு

சாயம்பூசும் முயற்சிகள் எல்லாம், நாட்டுப்பற்றுக்கு எதிரான நகர்வுகளாகத்தான் மக்களால் நோக்கப்படும்.

வெளிநாட்டு நன்கொடைகள், அந்நியச் செலாவணி வருமானம், கடன் பெறுகை, தங்கத்தின் இருப்பு இன்னும் ஏற்றுமதி வருமானங்களுக்கு என்ன நடந்தது?நாணயப் பெறுமதி ஏன் தேய்ந்து போகிறது? இவைகள்தான் ஆராயப்பட வேண்டியவைகள். இந்த ஆராய்ச்சிகளில் எந்த ஆதாயங்களும் இருத்தலாகாது.

எல்லோருமே இறக்குமதி பொருளாதாரத்துக்கு பழகிப்போயுள்ள இந்த நாட்டில், உள்நாட்டு உற்பத்தியை சிந்திக்க எவரும் தயாராக இல்லை.

எரிபொருள் இல்லை, எரிவாயு இல்லை ஏன்? மின்சாரமும் குறைவு இவற்றையா இவர் உற்பத்தி செய்யச் சொல்கிறார். என்று

கேட்காதீர்கள். நமக்குத் தேவையான டொலரை அல்லது பொருளைப் பெறுவதற்கு நமது தேவைகளை சர்வதேசத்தில் ஏற்படுத்துவோம். தெம்பிலி, தேன், கருவாடு, தயிர், தீன்பண்டங்கள் மாம்பழம், மலர் வகைகளை உற்பத்தி செய்யலாம். இவற்றை ஏற்றுமதி செய்யாவிடினும் இவற்றுக்காகவே வெளிநாட்டினரை இங்கு வர வழைக்கலாமே. இங்கு வருவோர் இப்

சர்வதேச நாடுகளுக்குள்ள நமது நாட்டின் மீதான நாட்டங்களும் நமது பொருளாதாரத்தை நலிவடையச் செய்திருக்கிறது. மின் உற்பத்திக்கும், எண்ணெய்க்கு ஏற்பாட்டுக்கும் செய்யப்படும் வர்த்தக ஒப்பந்தங்கள் பல, நமது நாட்டின் பாதி பொருளாதாரத்தை வெளியில் பாய்ச்சச் செய்கிறது. இந்த நாடுகள் இதற்கான தொழினுட்பத்தை வழங்கி, எமது நாட்டுக்கே உற்பத்தி உரிமைகளைத் தருவது பற்றிச் சிந்திக்கவில்லையே!

பொருட்களை கொள்வனவு செய்யும் கொள்ளை அழகுகளை நாம் கண்டதில்லையா? மத்தளை விமான நிலையத்தால் வரும் வெளிநாட்டினர் நாளாந்தம் பத்தாயிரம் "யோகட்" களை வாங்குவது பற்றியும் நமக்குத் தெரியுமே!கண்டி, கடுகண்ணாவை பிரதேசப் பழங்கள், கைப்பணிப் பொருட்களையும் இவர்கள் வாங்குகிறார்களே! வட பகுதியில், பனை உற்பத்தி பொருட்களின் கிராக்கி உயர்வதும் வெளிநாட்டுக் கேள்விகளால்தான். இவற்றை உற்பத்தி செய்யவே இன்று நிலமில்லை. அபிவிருத்தியென்ற போர்வையில் நிலங்கள் அழிக்கப்படுவதும், அகழப்படுவதும்தான், நமது ஏற்றுமதிகளை இல்லாமல் செய்துள்ளன.

இது போதாதென்று, சர்வதேச நாடுகளுக்குள்ள நமது நாட்டின் மீதான நாட்டங்களும் நமது பொருளாதாரத்தை நலிவடையச் செய்திருக்கிறது. மின் உற்பத்திக்கும், எண்ணெய்க்குத ஏற்பாட்டுக்கும் செய்யப்படும் வர்த்தக ஒப்பந்தங்கள் பல, நமது நாட்டின் பாதி பொருளாதாரத்தை வெளியில் பாய்ச்சச் செய்கிறது. இந்த நாடுகள் இதற்கான தொழினுட்பத்தை வழங்கி, எமது நாட்டுக்கே உற்பத்தி உரிமைகளைத் தருவது பற்றிச் சிந்திக்கவில்லையே!

சவூதியில் சுப்பர் பெற்றோல் இருக்கிறது, ஆனால் அணுகுண்டை உற்பத்தி செய்யும் ஆற்றலில்லை. இதனால், சில சக்திகளுக்கு முன்னால் இயலாமலாகிவிடுகிறதே இந்நாடு. இப்படித்தான் இங்கும். இதுவும் போதாதென்று இங்கு படித்துத் தேர்ந்த மூளைசாலிகளும் டொலர் தேசங்களில்தானே தொழில்புரியச் செல்கின்றனர். இதனால், இலங்கையின் மூளை வெளியேறுகிறது. ஆனால், வரவேண்டிய டொலர் அங்கேயே சுழல்கிறது. இதற்காகத்தான் இயற்கை காணிகள் மற்றும் வயல்காணிகளை பாதுகாக்குமாறு கோரப்படுகிறது. விவசாய காணிகளை மண்ணிட்டு நிரப்புவதை தடுக்க சட்டம் இயற்றப்பட்டதும் இதற்காகத்தானே! இரண்டு வருடங்கள் கொரோனாவால் நாம் முடங்கியிருந்த காலத்தில், சுகாதாரத் துறைக்கு நாம் வழங்கிய ஒத்துழைப்புக்களின் அவசியம்தான் இப்போதும் ஏற்பட்டிருக்கிறது. வீட்டிலிருந்தோம் உணவு தரப்பட்டது. வேலைக்குச் செல்லாது சம்பளம் வழங்கப்பட்டது. பயந்திருந்தோம் மருந்துகள் தரப்பட்டன. அப்போது அரசாங்கம் தந்ததைப் போன்று இப்போது மக்கள் வழங்க வேண்டி ஏற்பட்டிருக்கிறது.

எதை? ஒத்துழைப்புக்களைத்தான். பதுக்கல், பற்றாக்குறை ஏற்படுத்தலை தவிர்த்தல், இன்னும் யதார்த்தங்களை உணர்தல்களே! மக்களால் வழங்கக் கூடிய ஒத்துழைப்பு. குளிர் நீர் தேவையா? முட்டித் தண்ணீரை அருந்துவோம், ஒவ்வொரு மின்விசிறியில் தூங்காது ஒரே மின்விசிறியில் தூங்குவோம், அங்கர் தட்டுப்பாடா? ஒரு வேளை டீ குடிப்போம். எரிவாயு குறைபாடா ஒற்றைச் சமையலில் நிறைவு காண்போம். நிலைமைகள் நீங்கும் வரை.

சுஜப் எம். காசிம் ...✍

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிகரித்திருக்கும் சிறுவர் துஷ்பிரயோகம்!

வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஒன்றாக காணப்பட்டாலும் கல்வியிலும் பொருளாதாரத்திலும் வளர்சிகண்டு வரும் மாவட்டமாக முல்லைத்தீவு காணப்படுகின்றது.

இதேவேளை இலங்கையின் வறுமையின் இரண்டாவது இடத்தில் உள்ள மாவட்டமாக முல்லைத்தீவு காணப்படுகின்றது.

இவ்வாறான மாவட்டத்தில் போரின் பின்னரான பின் விளைவுகள் கலாசார சீரழிவுகளுக்கு வழிவகுத்துள்ளன.

மாவட்ட செயலக புள்ளிவிபரத்தின் படி (அண்ணளவாக) ஆறாயிரத்திற்கு மேற்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களும், ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட பிரிந்துவாழும் குடும்பங்களும், இரண்டாயிரத்து ஐநூறுக்கும் மேற்பட்ட அங்கவீனர்களும் இங்கு வாழ்ந்து வருகின்றார்கள்.

இந்த மக்கள் 2009ஆம் ஆண்டு போரின் பின்னர் 2012 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்ட பின்னரோ நவீன தொலைபேசிகள்,தொலைக்காட்சிகள் உள்ளிட்ட இலத்திரனியல் பாவனைக்குள் சென்றார்கள் என்பது உண்மை.

இவ்வாறான நிலையில் தற்போது பதின்ம பருவத்தில் வாழ்கின்ற சிறுவர்கள், சிறுமிகள் பாலியல் ரீதியாக மற்றும் துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகி வருகின்றார்கள் என்பது அண்மைய நாட்களில் கிடைக்கப் பெற்ற சம்பவங்கள் ஊடாக அறிய முடிகிறது.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண கொரோனா நிலையினால் வீடுகளில் இருந்து மாணவர்கள் இணையவழி கல்வியினை மேற்கொண்டு சிறந்த பெறுபேற்றினையும் எடுத்துள்ளார்கள். அவ்வாறு இணைய வழியினை தவறாக பயன்படுத்திய சிலர் பாதை மாறி சென்ற சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அண்மைக் காலமாக பாடசாலை சிறுவர்களைக் காணவில்லை என்றும் சிறுமிகள் துஷ்பிரயோகம் என்றும் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவாகி வருகின்றமை கவலையளிக்கிறது.

இவ்வாறுதான் முல்லைத்தீவு புதுமாத்தளன் பகுதியில் வசித்துவரும் இரண்டு பதின்ம வயது சிறுமிகள் கடந்த 16.03.2022 மாலை கல்வி கற்பதற்காக சென்ற நிலையில் இதுவரை வீடு திரும்பவில்லை என பெற்றோர்களால் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. புதுமாத்தளன் பகுதியினை சேர்ந்த 14 மற்றும் 15 வயதான இருவரும் காணாமல் போன நிலையில் 19.03.2022 அன்று மீட்கப்பட்டுள்ளார்கள்.

இவ்விரு சிறுமிகளும் தந்தையினை இழந்து தாயின் அரவணைப்பில் வாழ்ந்து வந்தவர்கள்.

கல்விக்காக வாங்கிக்கொடுத்த தொலைபேசியினை பயன்படுத்தி தவறான தொடர்புகளை வளர்த்துள்ள இவர்கள், மட்டக்களப்பு செங்கலடிப்பகுதி இளைஞன் ஒருவருடன் தொடர்பில் இருந்திருக்கிறார்கள். வீட்டில் இவர்களுக்கு இருந்த முரண்பாடான நிலையினால் வீட்டினை விட்டு வெளியேறத் தூண்டிய மனம் மட்டக்களப்பு நண்பனை நோக்கி அழைத்துச் சென்றது.

நண்பன் தொலைபேசியில் அழைத்து வாங்கள் என்று சொன்னதும் இரண்டு சிறுமிகளும் எவருக்கும் சொல்லாமல் மாலைநேர கல்விக்காகச் செல்வதாகக் சொல்லிவிட்டு மிதிவண்டியினை பற்றைக் காடு ஒன்றில் போட்டுவிட்டு மட்டக்களப்பு நோக்கி பேருந்தில் ஏறி சென்றுள்ளார்கள்.

அங்கு சிறுமிகள் இருவரையும் கார் ஒன்றில் இரண்டு இளைஞர்கள் அழைத்துச் சென்று ஒரு வீட்டில் விட்டிருக்கிறார்கள். அந்த வீட்டில் பெண் ஒருவர் வசித்துவந்துள்ளார். இருவரையும் அங்கு பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய இளைஞர்கள் பின்னர் இரவு வேளையில் அவர்களை முல்லைத்தீவு செல்வதற்காக யாழ்ப்பாணம் பேருந்தில் ஏற்றிவிட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் அதிகாலையில் வந்திறங்கிய சிறுமியர் கடை ஒன்றில் பொருட்களை வாங்கியவேளை அங்கு நின்ற இளைஞர்கள் சிறுமிகளிடம் இந்த நேரத்தில் எங்கு போறீர்கள் என்று கேட்டிருக்கிறார்கள். வீடு போக விரும்பம் இல்லை எங்காவது போகப் போகின்றோம் தங்குவதற்கு இடம் இருந்தால் சொல்லுங்கள் என சிறுமிகள் பதில் சொன்னதும் இளைஞர்களும் தங்களுக்கு தெரிந்த வீடொன்றுக்கு அவர்களை அழைத்து சென்றுள்ளார்கள். அந்த வீடு யாழ் நகரப்பகுதியில் பெண் ஒருவர் வசித்துவந்த வீடு. அந்த வீட்டின் ஆண் போதைப்பொருள் வியாபாரத்தில் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டிருப்பவர்.

இந்நிலையில் அந்த வீட்டில் வைத்து இரண்டு சிறுமிகளும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். மறுநாள் காலை முல்லைத்தீவு பேருந்தில் அவர்கள் ஏற்றிவிடப்பட்டுள்ளார்கள்.

இந்த இரண்டு சிறுமிகளும் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் 7 பேர் முல்லைத்தீவு பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு கடந்த 27.03.2022 அன்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறான சம்பவங்களுக்கு யார் காரணம் என சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். பெற்றோர்களின் சரியான அரவணைப்பு கண்காணிப்பு இல்லாத சிறுமியர் தவறான பாதைக்கு வலிந்து இழுக்கப்படுகின்றார்கள் என்பதை இச்சம்பவம் உணர்த்துகிறது.

சில பெற்றோர்களுக்கு தொலைபேசி தொடர்பில் சரியான புரிதல் கிடையாது. தொலைபேசியில் தங்கள் பிள்ளைகள் என்ன செய்கின்றார்கள் என்பதை கண்காணிப்பதில்லை. இணையவழி கற்றலுக்காக அதிக விலைகொடுத்து தொலைபேசிகளை வாங்கிக் கொடுக்கும் பெற்றோர் தமது பிள்ளைகள் அவற்றை தவறாகவும் பயன்படுத்த முடியும் என்பதை அறிந்திருப்பதில்லை. இவ்வாறு பல சம்பவங்கள் பதிவாகிவருகின்றன.

இதனை விட மாணவர்கள் மத்தியில் போதைப் பாவனையும் அதிகரித்துவருகிறது. குறிப்பாக தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் கஞ்சா, ஐஸ், போன்ற போதைப் பொருள் பாவனைக்கு ஆளாகி உள்ளனர். இவர்களின் பெற்றோர் நன்கு படித்த அரச உத்தியோகத்தில் இருப்பவர்களாகவும் காணப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணவர்கள் பெற்றோர்கள் மத்தியில் சரியான புரிந்துணர்வு, கவனிப்பு, கண்காணிப்பு என்பன இல்லாத நிலையே இவற்றுக்கெல்லாம் காரணமாக அமைகின்றது சில பெற்றோர்கள் தனது மகன் என்ன செய்கின்றான் என்பதை அறியாதுள்ளனர்.

மொத்தத்தில் பெற்றோர்கள் மத்தியில் போதிய விழிப்புணர்வு இல்லாத நிலை தொடர்கின்றது.

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு உட்பட்ட பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது அக்கறையுடனும் கண்காணிப்புடனும் செயற்படவேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.டி.ஆர். ஹேரத் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி வருகின்றமை பல்வேறு சந்தர்ப்பங்களில் கண்டறியப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் போதைப்பொருள் பாவனையில் இருந்து விடுபடும் வகையில் அது தொடர்பான விழிப்புணர்வினை பாடசாலைகள் தோறும் பொலிசார் எடுத்து வருகின்றனர். அதேவேளை வணிக நிலையங்களில் 18 வயதுக்குக் குறைவானவர்களுக்கு புகைத்தல் மற்றும் போதைப்பொருளுடன் தொடர்புடைய எந்த பொருட்களையும் விற்பனை செய்யவேண்டாம் என ஒலிபொருக்கி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு மாணவர்கள் பெற்றோருக்கு பொய்சொல்லிவிட்டு புதுமாத்தளன் கடற்கரைக்கு சென்று அங்கு போதைபொருள் பாவனையில் ஈடுபட்டு வந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்களை தவறாக வழிநடத்துபவர்கள் தொடர்பில் பொலிசார் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதேசமயம் பெற்றோர்கள் தமது பிள்ளைகள் தொடர்பில் அக்கறையுடனும், கண்காணிப்புடனும் செயற்படவேண்டும் பாடசாலை நேரம், அதன் பின்னர் மாலைநேர வகுப்பு, பின்னர் வீடு என மாணவர்கள் காணப்படுகின்றார்கள் பெற்றோர்களின் மெத்தனத்தால் இறுதியில் பொலிஸ் நிலையம், வைத்தியசாலை, நீதிமன்றமும் என்று அவர்கள் அலைய வேண்டியதாகிறது. செல்லவேண்டி நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் பிள்ளைகளை சரியாக கண்காணித்து வளர்த்தெடுக்கவேண்டும். பெற்றோர்களும் தமது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளையும் வைத்திருக்க வேண்டும். தொழில்நுட்ப கருவி பயன்பாட்டு செயற்பாடுகளையும் அறிந்து உங்கள் பிள்ளைகளுடன் நல்ல நண்பராக பழகுங்கள். நல்லது எதுகெட்டது எது என்பதை வெளிப்படையாக பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்கவேண்டும்.

முல்லைக் கீதன்...

அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் கானகமும் காட்டுயிர்களும்

எழுபதுகளில் இந்தியாவின் பெருமைக்குரிய சின்னமாக விளங்கும் வங்காள வரிப்புலிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவடைந்திருப்பதாவும் இப்படியே விட்டால் அவை மறைந்து விடலாம் எனவும் சூழலியலாளர்கள் அரசுக்கு அறிவித்தபோது அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அதில் தனிக்கவனம் எடுத்தார். அவர் இயல்பிலேயே ஒரு இயற்கை ஆர்வலர். எனவே புலிகளைக் காத்து எண்ணிக்கையை அதிகரிக்கும் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. Project tiger என அதற்கு பெயர் சூட்டப்பட்டது. பாரதப் பிரதமரின் நேரடி கண்காணிப்பில் திட்டம் செயல்படத் தொடங்கியது.

58 வருடங்களின் பின்னர் இன்று இந்தியாவில் தேவைக்கு அதிகமாகவே புலிகள் காடுகளில் உலவித் திரிகின்றன. 1400ஆகக் காணப்பட்ட எண்ணிக்கை இன்று ஐயாயிரத்தை தாண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல, இப் புலிளைப் பார்ப்பதற்காக இந்தியாவெங்குமிருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமானோர் இந்தியக் காடுகளை நோக்கி வருகின்றனர். அதன் மூலம் இந்தியா கோடிக்கணக்கில் வெளி நாட்டு பணத்தை சம்பாதிக்கிறது.

காடுகளையும் மிருகங்களையும் பாதுகாப்பதால் சுற்றுச் சூழல் மேம்படும் என்பது ஒரு புறம் இருக்க, அதன் மூலம் வெளிநாட்டு செலாவணியையும் பெருமளவில் சம்பாதிக்கலாம் என்பது ஊக்கமளிக்கும் ஒரு செய்தி. எனவே அரசு மட்டுமன்றி தனியார் நிறுவனங்களும் இதில் ஈடுபடலாம். நாட்டின் பெறுநிறுவனங்கள் பல சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் கண்டிருக்கிறோம். அந் நிறுவனங்கள் காடு வளர்ப்பிலும் மிருக பாதுகாப்பிலும் கட்டாயம் ஈடுபட வேண்டும். ஏனெனில் சுற்றுச் சூழல் மேம்பாட்டுக்கும் வர்த்தக செழிப்புக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம் என்பது போன்ற தொடர்பு இது.

இவ்வாறான திட்டமொன்றை இலங்கை சினமன் ஹோட்டல்கள் நிறுவனம் தற்போது ஆரம்பித்துள்ளது. சினமன் மழைக்காடுகள் அமைக்கும் திட்டம் என இதற்கு பெயரிடப்பட்டுள்ளது. இலங்கை மரங்களைக் காப்போர் சங்கம் (ருக்ரெக்கன்னோ) என்ற அமைப்புடன் இணைந்து இத்திட்டத்தை ஜோன்கீல்ஸ் பவுண்டேஷன் இலங்கை வனத்துறையுடன் கூட்டிணைந்து செயல்படுத்துகிறது.

இரத்தினபுரி மாவட்டத்தின் சுது வெலிபொத்த என்ற பகுதியில் சரியாகச் சொன்னால் சிங்கராஜ வனப் பகுதியில் உள்ள ஒரு சீரழிக்கப்பட்ட வனப்பகுதியை ஜோன்கீல்ஸ்சின் சினமன் கானக மறுசீரமைப்பு திட்டக் குழுவினர் தத்தெடுத்துள்ளனர். இப் பகுதியில் காணப்படும் அவசிய மற்ற புதர்கள் அகற்றப்பட்டு மரக் கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. இது ஒரு ஐந்து வருடகால திட்டம். இக்காலப்பகுதியில் பல்வகையான மரகன்றுகள் நடப்பட்டு போஷிக்கப்படும். அவசியமான பசளைகள் இடப்படும். ஊக்கமற்ற கன்றுகள் களையப்பட்டு புதிய கன்றுகள் நடப்படும். ஒரு மரக்கன்று வேர் பிடித்து ஊக்கமாக வளர்வதற்கு ஐந்து வருடங்கள் பிடிக்கும். அதன் பின்னர் தானாகவே அவை வளரத் தொடங்கி விடும். அதாவது ஐந்து வருடங்களின் பின்னர் மனிதனிடமிருந்து அம் மரக் கன்றுகளை இயற்கை பொறுப்பெடுத்துக் கொள்ளும். அந்த வகையில் தான் இந்தத் திட்டத்தை ஐந்து வருட காலமாக வரையறுத்துள்ளார்கள்.

மரங்கள், பழமரங்கள் வளரத் தொடங்கியதும் அப் பகுதிக்கு பறவைகள் வரத் தொடங்கும். வெவ்வேறு திசைகளில் இருந்து வரும் பறவைகள் தமது வாயோடு கொண்டுவரும் கொட்டைகள் பல்வகையான புதிய மரங்களையும் செடிகளையும் உருவாக்கும். உண்மையில் காடுகளை உருவாக்குவது பறவைகளே. அவை மரங்களையும் நிலத்தையும் போஷிக்கின்றன. இந்த முதல் ஐந்து வருட காலத்தில் ஜோன் கீல்ஸ் குழுமத்தைச் சேர்ந்த ஊழியர்கள் சுய விருப்பின்பேரில் இவ்வனப்பகுதியில் தொண்டு அடிபடையில் சேவையாற்ற முன்வந்துள்ளார்கள். அவர்களுக்கு விசேட பயிற்சியும் வழங்கப்படுகிறது. விரும்பும் வெளியாரும் இத்திட்டத்தில் இணைந்து கானக சேவையாற்ற முடியும். இத் திட்டத்தில் ஆர்வம் கொண்ட விருந்தினர்கள் தாம் விரும்பும் மரக்கன்றுகளை விலை கொடுத்துவாங்கி இவ்வனத்தில் நடுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த மறுசீரமைப்பு பணிகள் 2024ம் ஆண்டளவில் முடிவுக்கு வந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. சீரழிக்கப்பட்ட வனப்பகுதியை மீளவும் கானகமாகும் இத் திட்டம் தொடர்பான விளம்பரங்கள் ஏனைய வர்த்தக மற்றும் சமூக நிறுவனங்களும் இந்தகைய காடு வளர்ப்புத் திட்டங்களை மேற்கொள்ள ஒரு ஊக்குவிப்பதாக அமையும்.

கொங்கோவிலும் ருவாண்டாவிலும் மிருகங்களுக்கு பாதுகாப்பற்ற நிலை காணப்பட்ட போது சிலர் மேற்கொண்ட விழிப்புணர்வு காரணமாக அந் நிலையில் மாற்றம் ஏற்பட்டது. ஐம்பது வருடங்களின் பின்னர் மிருகங்கள் நிறைந்த நாடாக அவை மாறின. கொங்கோ, ருவாண்டா, உகண்டா நாடுகளுக்கு வெளிநாட்டினர் மிருகங்களை அவற்றின் வாழ்விடங்களிலேயே பார்த்து ரசிப்பதற்காக படையெடுக்கின்றனர். கானக சவாரி செய்து மிருகங்களை ஒரு மணித்தியாலயம் பார்வையிடுவதற்கு 500 டொலர் அறவிடப்படுகிறது. அதுவும், பட்டியலில் பெயர் பதிந்து காத்திருக்க வேண்டுமாம்!

அவுஸ்திரேலியா humpback எனப்படும் திமிலங்களை வர்த்தக ரீதியாக ஏக்கச் சக்கமாக வேட்டையாடியதில் அவை பெருமளவில் மடிந்தன. பின்னர் திமிங்கில வேட்டைக்கு 1986இல் தடை விதிக்கப்பட்டதால் அத் திமிலங்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது. அத்திமிங்கிலங்களைப் பார்ப்பதற்காக ஏராளமானோர் அவுஸ்திரேலியா செல்கின்றனர்.

50 ஏக்கர் காணியில் காடு வளர்க்கும் சினமன் ஹோட்டல் நிறுவனம்

இலங்கையில் இந் நாட்டுக்குரிய மரங்கள், மிருகங்கள், பறவைகள், வண்டினங்கள் உள்ளன. சிலவற்றை வேறெங்கும் காணமுடியாது. யானைகள் மிகவும் சிறப்பான மிருகம், உலகின் 36 உயிரியல் பன்முகத்தன்மை உயிர்ப்புடன் இயங்கும் இடங்களில் இலங்கையும் ஒன்று. இலங்கையின் தென்மேற்கு பிரதேசம் இயற்கை செழிப்புடன் காணப்படுகிறது. நாட்டின் 90சதவீதமான பிரதேசத்துக்குரிய உயிர்களும் மரங்களும் இங்கே காணப்படுகின்றன. ஈரலிப்பு, வலய காடுகளில் மரமேறும் நண்டுகள் மரத்தவளைகள் போன்ற அரிய உயிரினங்கள் காணப்படுகின்றன. இவை வாழவும், வளரவும் மற்றும் இயல்பான இனப் பெருக்கம் செய்யவும் கானகச் சூழல் அவசியம்.

சில விஷயங்களை தர்க்க ரீதியாகவோ அல்லது அவற்றின் இன்றியமையாத் தன்மைகளையோ விலாவரியாக விளக்கினாலும் பலரும் அவற்றை புரிந்துகொள்ள மாட்டார்கள். ஆனால் அந்த விஷயமங்களை பயன்படுத்துவதன் அல்லது கையாள்வதன்மூலம் வருமானம் பெற முடியும் என்று கூறப்படுமானால் அவற்றை பலரும் புரிந்து கொள்வார்கள். கானக வளர்ப்பு, பாதுகாப்பு என்பதன் அவசியம், ஒக்சிசனின் அவசியம் என்பதைப் பற்றிச் சொன்னால் அலட்சியமாக இருந்து விடுவார்கள். கானகமும் அங்கு வாழும் காட்டுயிர்களும் எமக்கு வருமானம் தரும் என்றால் பலரும் புரிந்து கொள்வார்கள்.

இலங்கையில் யானைகள் அட்டூழியம் செய்யும், வருமான மற்றும் சொத்துக்களுக்கு சேதம் இழைக்கும் மிருகம் என்றே பலரும் பார்கிறார்கள். ஒருபுறம் தெய்வீக அந்தஸ்தைக் கொண்டிருந்தாலும் மறுபக்கம் 'அக்கபட்டாஸ்' வைத்து வாயைக் கிழிக்கவும் செய்கிறார்கள். உண்மையில் யானை சுற்றுலா பயணிகளுக்கு ஒரு விருந்து. எமக்கு அந்நிய செவாணி. காடுகளை ஒழுங்காகப் பராமரிப்பதன் மூலமும் காட்டுயிர்களுக்கு போதிய பாதுகாப்பையும் சுதந்திரவாழ்க்கையையும் அளிப்போமானால் அதன் மூலம் பெறுமளவு சுற்றுலாப் பயணிகளையும் டொலர் வருமானத்தையும் பெறமுடியும் என்பதற்கு இந்தியாவின் புலிகள் பாதுகாப்புத் திட்டமும் கொஸ்கோ ருவாண்டா அனுபவங்களுக்கும் நமக்கு கற்றுத் தருகின்றன.

சினமன் மழைக்காடு மறுசீரமைப் புதிட்டமும் இச் சிந்தனைக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் ஒரு திட்டமாகவே பார்க்கப்பட வேண்டும்.

அருள்...

முடிவின்றித் தொடரும் எதிர்ப்பு போராட்டங்கள்

நுவரெலியா கிரகெரி குளத்திற்கு அருகில் இடம்பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வசந்த கால கொண்டாட்ட ஆரம்ப நிகழ்வில் பிரதேச மக்கள் பலவந்தமாக நுழைந்து பிரச்சினைகளை ஏற்படுத்தினர். குறித்த நிகழ்வு இடம்பெற்ற இடத்திற்கு அருகில் பாலர் பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற புதுவருட கொண்டாட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த எதிர்ப்பு உருவானதோடு, ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு பொலிஸ் கலகம் அடக்கும் பொலிஸாரின் உதவியும் பெறப்பட்டது.

இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களிலும் மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இளைஞர் குழுக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டன. வட்ஸப் ஊடாக நாடு முழுவதிலும் ஒரே சமயத்தில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுப்பதற்கு இளைஞர் குழுக்கள் திட்டங்களைத் தீட்டிய போது அதற்குத் தலைமைத்துவத்தை வழங்குவதற்கு எதிர்க்கட்சி அரசியல் குழுக்களும் சில சில முயற்சிகளை எடுத்திருந்தன. ஏப்ரல் மாதம் 02ம் திகதி மாலை 6.00 மணியிலிருந்து 04ம் திகதி திங்கட்கிழமை காலை 6.00 மணி வரைக்கும் நாடு முழுவதிலும் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டது இதன் பிண்ணனியிலாகும். ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த போதும் மத்திய மாகாணத்தின் பாரிய நிகழ்வு இடம்பெற்றது பேராதெனிய பல்கலைக்கழகத்தை மையப்படுத்தியாகும். மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆயிரத்தை தாண்டிய பல்கலைக்கழக மாணவ மாணவிகள் கண்டியை நோக்கி ஊர்வலமாகச் செல்வதற்கு முயன்றனர். அந்நேரத்தில் பிறப்பிக்கப்பட்டிருந்த நாடு தழுவிய ஊரடங்குச் சட்டத்தையும் பொருட்படுத்தாமல் அவர்கள் அவ்வாறு செய்தனர். கலஹா சந்தியில் வீதித் தடைகளை ஏற்படுத்தி புலனாய்வுத் துறையினரால் ஏற்கனவே வழங்கப்பட்ட தகவலின் ஊடாக இந்த ஊர்வலத்தைத் தடுப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர். தேவைப்பட்டால் கண்ணீர் புகைப் பிரயோகம் மற்றும் தண்ணீர் பிரயோகம் போன்றவற்றை மேற்கொள்வதற்கு பொலிஸார் ஆயத்தமாக இருந்தனர். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் வீதித் தடைக்கு அருகில் வந்து அத்தடைகளை உடைத்துக் கொண்டு கண்டியை நோக்கிப் பயணிப்பதற்கு பல தடவைகள் முயற்சித்த போதிலும் அது அவர்களால் முடியாது போனது. பகல் 1.00 மணியளவில் சுமார் 200 மாணவர்கள் ஒரே அணியாக வந்து வீதித் தடையினை உடைப்பதற்கு முயற்சித்த போது அவர்களைக் கலைப்பதற்காக பொலிஸார் தண்ணீர் மற்றும் கண்ணீர் புகைப் பிரயோகங்களை மேற்கொண்டனர். அந்த தாக்குதலில் மாணவர்கள் மாத்திரமின்றி பொலிஸ் அதிகாரிகள் பெண் பொலிஸ் அதிகாரிகளும் பாதிக்கப்பட்டனர்.

மறுநாள் கண்டி நகரில் தலதா வீதியும் யட்டிநுவர வீதியும் இணையும் சந்தியில் ஒன்று கூடிய ஆயிரக்கணக்கான பொது மக்கள் காலை 9.00 மணியிலிருந்து மாலை வரையிலும் அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்பை வெளிக்காட்டி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். வீதிப் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படாதவாறும், சாதாரண பொது மக்களுக்கு எவ்வித தொந்தரவுகள் ஏற்படாதவாறும் இடம்பெற்ற இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட ஒரு இளைஞர் குழு வீதிப் போக்குவரத்திற்கு இடையூறுகளை ஏற்படுத்தி அனைத்தையும் குழப்பியடித்தது. இதனால் நகரில் பெரும் வாகன நெருக்கடி ஏற்பட்டதோடு, அதனைச் சீர் செய்வதற்கு பொலிஸார் பெரும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியேற்பட்டது. எவ்வாறாயினும் பாதிக்கப்பட்டுள்ள மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினால் மக்களை மென்மேலும் கஷ்டங்களுக்கு உள்ளாக்கக் கூடாது எனத் தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த தரப்பினர் சில அரசியல் நோக்கங்களுக்காகச் செயற்பட்ட இளைஞர் குழுவுக்கு தமது எதிர்ப்பினைத் தெரிவித்தனர். அன்றைய தினம் இரவாகும் வரைக்கும் அவர்கள் நகரிலிருந்து கலைந்து செல்லாததால் பொலிஸாரும் தொடர்ச்சியாக அவர்கள் தொடர்பில் அவதானத்துடன் இருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தடைகளை உடைத்துக் கொண்டு கண்டியை நோக்கிப் பயணிப்பதற்கு பல தடவைகள் முயற்சித்த போதிலும் அது அவர்களால் முடியாது போனது. பகல் 1.00 மணியளவில் சுமார் 200 மாணவர்கள் ஒரே அணியாக வந்து வீதித் தடையினை உடைப்பதற்கு முயற்சித்தபோது அவர்களைக் கலைப்பதற்காக பொலிஸார் தண்ணீர் மற்றும் கண்ணீர் புகைப் பிரயோகங்களை மேற்கொண்டனர். அந்த தாக்குதலில் மாணவர்கள் மாத்திரமின்றி பொலிஸ் அதிகாரிகள் பெண் பொலிஸ் அதிகாரிகளும் பாதிக்கப்பட்டனர்.

நகரில் ஒன்று கூடிய இளைஞர் குழுவினரிடையே இருந்த தரப்பினர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவின் வீட்டிற்குச் சென்றது இதனிடையேயாகும். மாலை 7.00 மணியளவில் இக்குழுவினர் அங்கு செல்லும் போது மின் துண்டிப்பு நடைமுறைப் படுத்தப்பட்டிருந்ததன் காரணமாக அப்பிரதேசம் முழுவதும் இருளில் மூழ்கிப் போயிருந்தது. இருளிலேயே அவர்கள் அமைச்சரின் வீட்டை நோக்கி கற்களை வீசி தாக்குதல் மேற்கொண்டதால் பொலிஸாருக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரை அழைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்நேரத்தில் கெஹெலிய ரம்புக்வெல்லவின் தனிப்பட்ட பணியாளர்கள் சிலர் வீட்டில் இருந்துள்ளதோடு, ஆர்ப்பாட்டக்காரர்களைக் கலைப்பதற்காக பொலிஸாரால் கண்ணீர் புகைப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. மின்சாரத் துண்டிப்பால் அப்பிரதேசமே இருளில் இருந்த போது மேற்கொள்ளப்பட்ட கல் வீச்சுத் தாக்குதலில் சிக்குண்ட ஐந்து பொலிஸார் காயங்களுக்கு உள்ளாகி கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுள் ஒருவர் சத்திர சிகிச்சைக்கும் உள்ளாக்கப்பட்டார்.

அன்றைய தினம் தம்புள்ளயை மையப்படுத்தியும் பெரும் எண்ணிக்கையானோரின் பங்கு பற்றலுடன் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றதோடு, ஆர்ப்பாட்டக்காரர்கள் சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்திற்கு ஊர்வலமாக அமைச்சர் ஜனக பண்டார தென்னகோனின் வீட்டிற்கு அருகில் சென்று, அமைச்சருக்கும் அவரது மகன் பாராளுமன்ற உறுப்பினர் பிரமித்த பண்டார தென்னகோனுக்கு எதிர்ப்பைக் காட்டினார்கள். அவர்கள் அமைச்சரின் வீட்டினுள் பிரவேசிப்பதற்கு மேற்கொண்ட முயற்சி பொலிஸாரினால் தடுக்கப்பட்டது. மாத்தளை நகர மத்தியிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றதோடு, அதிலும் ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மின்சாரம் மற்றும் எரிபொருள் இல்லாமல் தேயிலை தொழிற்சாலைகளின் இயந்திரங்களை இயக்க முடியாதுள்ளதாகத் தெரிவித்து தோட்ட நிர்வாகங்களைச் சேர்ந்த வர்களும் தொழிலாளர்களும் இணைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதேவேளை தவறான பொருளாதார முகாமைத்துவத்தின் காரணமாக தம்மால் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட முடியாதுள்ளதாகத் தெரிவித்து கண்டி சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் வர்த்தக முன்னணியும் ஒன்றிணைந்து அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டன. மல்வத்து அஸ்கிரி மகா விகாரையின் மகாநாயக தேரர்கள் இருவரின் ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டு நாட்டின் தற்போதைய நிலை தொடர்பில் அவர்களுக்குத் தெளிவுபடுத்தியதன் பின்னர் கண்டி வர்த்தகர்கள் 05ம் திகதி காலை 10.00 மணியளவில் அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடி தமது பணியாளர்களுடன் கண்டி ஜோர்ஜ் ஈ டி சில்வா பூங்காவின் முன்னால் ஒன்று கூடி எதிர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுத்தனர். சுமார் இரண்டு மணி நேரம் ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்ட அவர்கள் முகங்கொடுத்த பிரச்சினையாக இருந்தது அவர்களது எதிர்ப்பு நடவடிக்கையில் வெளித் தரப்பினர் கலந்து கொண்டு வீதிப் போக்குவரத்திற்கு இடையூறுகளை ஏற்படுத்தியதாகும். வர்த்தகர்களும் அவர்களது பணியாளர்களும் குறித்த இடத்திலிருந்து அகன்று சென்றன் பின்னர் ஆசிரியர்கள், கண்டி தேசிய வைத்தியசாலையின் பணியாளர்கள், சட்டத்தரணிகள் உள்ளிட்ட தரப்பினர் அவ்வப்போது கடிகாரத் தூணுக்கு அருகிலும், பூங்காவுக்கு முன்னாலும் வந்து அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஹட்டன் கொட்டகல நகரின் வர்த்தக சங்கம் 06ம் திகதி அனைத்து வர்த்தக நிலையங்களையும் மூடிவிட்டு கறுப்புக் கொடிகளை ஏந்தியவாறு கொட்டகலை நகரில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டதோடு, பின்னர் அவர்கள் கொட்டகலை நகரில் அமைந்துள்ள ஸ்ரீமுத்து விநாயகர் கோவிலுக்குச் சென்று அரசாங்கத்திற்கு எதிராக தேங்காய் உடைத்து வழிபாடுகளில் ஈடுபட்டனர். இதேவேளை மகாநாயக தேரர்கள் ஒரு வாரத்தில் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டமை முக்கிய அம்சமாகும். நாட்டில் ஆங்காங்கே இடம்பெறும் அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக நாடு ஸ்திரத் தன்மையினை இழக்கும் நிலையினைத் தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைளை முன்மொழிந்து மல்வத்து, அஸ்கிரிய, அமரபுர மற்றும் ராமஞ்ச நிகாயாக்களைச் சேர்ந்த மகாநாயக தேரர்களின் கையொப்பத்துடன் இந்த அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

மாத்திரமின்றி பொலிஸ் அதிகாரிகள் பெண் பொலிஸ் அதிகாரிகளும் பாதிக்கப்பட்டனர்.

அசேல குருளுவங்ச...✍
தமிழில்: **எம்.எஸ். முஸப்பிர்**
(புத்தளம் விசேட நிருபர்)

ரஷ்ய- உக்ரைன் போரில்

புச்சா படுகொலையும் மரியப்போ முற்றுகையும்

பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

உக்ரைன் ரஷ்யப் போர் மாறுபட்ட உத்திகளுடன் நகர்வதாகவே தெரிகிறது. இரண்டாவது மாதத்தை நோக்கிய ரஷ்யப் படையெடுப்பானது உக்ரையினின் இருப்பை முழுமையாகப் பாதிக்கும் சூழலை ஏற்படுத்தியுள்ளது. உக்ரைன் ஜனாதிபதியின் கடும் பிரயத்தனத்தையும் கடந்து அழிவுகளை தடுத்து நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உக்ரைனின் பிரதான நகரங்கள் அழிவடைந்த நிலையில் ரஷ்யப் படைகள் பின்வாங்கியுள்ள நிலையானது ஒருபக்கம் அமைந்தாலும் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளை மையப்படுத்தி ரஷ்யாவின் தாக்குதல் நிகழப் போவதாக உக்ரையின் ஜனாதிபதி எச்சரித்து வருகிறார். இக்கட்டுரையும் உக்ரையின் புச்சாப் பகுதியில் நிகழ்ந்த மனிதப் படுகொலை தொடர்பில் அதிகம் முதன்மைப்படுத்தப்படும் விடயத்தை தேடுவதாக அமையவுள்ளது.

உக்ரையினின் சிறப்புப் படையணியான அசோ பிரிவினரையும் அவர்களுக்கு பயிற்சி வழங்குவதற்காக வருகைதந்த வெளிநாட்டுப் படைகளையும் உள்ளடங்கிய மீட்புப் பணி தோல்வியில் முடிந்ததாக தெரியவருகிறது. குறிப்பாக மரியப்போல் நகரை பாதுகாக்கும் இவ்விசேட படையணியானது ரஷ்யப் படைகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. அதனை மீட்பதற்காக உக்ரைன் விமானப் படையணியை நகர்த்தியது. அத்தகைய பணிக்கு முயன்ற உலங்குவானூர்திகள் ரஷ்யப் படைகளால் சுட்டுவீழ்த்தப்பட்ட பின்னர் அத்தகைய மீட்புப் பணியை கைவிட்டதுடன் உக்ரைனுக்கு பாரிய நெருக்கடியாக மாறியுள்ளது. அதனை அடுத்தே பாதுகாப்புச் சபையில் காணொளிமூலம் தோன்றிய உக்ரைன் ஜனாதிபதி பாதுகாப்புச் சபையை கலைக்குமாறும் ரஷ்யாவை ஐக்கிய நாடுகள் அமைப்பிலிருந்து விலக்குமாறும் உக்ரைன் மக்களை தப்பிக் கொள்ளுமாறும் அறைகூவல் விடுத்துள்ளார். அதிகம் உணர்ச்சி வசத்தை வெளிப்படுத்தும் உக்ரையின் ஜனாதிபதி ரஷ்யா மீதான குற்றச்சாட்டுக்களை ஐரோப்பிய யூனியனிலும் ஐ.நா. சபையிலும் வெளிப்படுத்தி வருகிறார். தற்போது புச்சாப் படுகொலை தொடர்பில் போர் குற்றத்தை ரஷ்யா மீது பிரகடனப்படுத்தி வருகிறார். அத்தகைய படுகொலை தொடர்பில் முழுமையான அவதானிப்பு அவசியமானது.

முதலாவது புச்சா நகரைவிட்டு ரஷ்யப் படைகள் வெளியேறிய பின்னர் நடாத்தப்பட்ட தேடுதலில் 415 மேற்பட்ட உடலங்களை உக்ரைன் இராணுவம் மீட்டுள்ளதாக ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அறிவித்துள்ளார். அத்தகைய உடலங்கள் கை கால் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டதாகவும் தலைமீது துப்பாக்கியால் சுடப்பட்டு கொல்லப்பட்டதாகவும் பலர் உயிருடன் நிலத்தில் புதைக்கப்பட்டு கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் தெரியவருகிறது. இதனை ரஷ்ய இராணுவம் மேற்கொண்டதாக உக்ரைன் ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார். மிக மோசமான படுகொலை எனவும் ரஷ்ய இராணுவம் அப்பாவி பொது மக்களை கொன்றெழித்துள்ளதாகவும் இது இனப்படுகொலை எனவும் அவர் ஐ.நா. சபையில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.

இரண்டாவது அத்தகைய படுகொலையை நிராகரித்துள்ள ரஷ்யா தனது வெளியேற்றத்திற்கு பின்பே அத்தகைய சம்பவம் நடைபெற்றதாகவும் தெரிவித்துள்ளது. அதே நேரம் புச்சா பகுதியில் இருந்து இந்திய ரூடே செய்தியாளரது காட்சிகளிலும் செய்திகளிலும் ரஷ்யப் படைகள் வெளியேறும் போது இரு தரப்புக்கும் இடையில் நிகழ்ந்த ஏவுகணைத் தாக்குதல்களால் அதிக சேதம் ஏற்பட்டதாகவும் ரஷ்யப் படைகள் மீது உக்ரைன் இராணுவம் தாக்குதலை அப்பிரதேசத்தில் நிகழ்த்தியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. அது மட்டுமன்றி உடலங்கள் அழுகிய நிலையில் இல்லாதுள்ளன என்பதையும் இந்திய ரூடே செய்தியாளர்களது காட்சிப்படங்கள் காட்டுகின்றன. இதன் மூலம் ரஷ்யப் படைகள் வெளியேறும் போது கொல்லப்பட்டிருக்க வாய்ப்புள்ளது. அதே நேரம் இவர்கள் பொதுமக்களா அல்லது பயிற்சி பெற்ற உக்ரைனிய படையினரா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

இருதரப்பும் கூறுகின்ற செய்திகளை பக்கச்சார்பற்ற விதத்தில் உறுதிப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதனையே இந்தியாவும் ஐக்கிய நாடுகள் சபையில் தெரிவித்துள்ளது. பக்கச்சார்பற்ற விசாரணை வேண்டும் என்பதை பல நாடுகள் கோரிவருகின்றன.

மூன்றாவது இனப்படுகொலையை அடுத்து பெரும் பிரசாரப் பணியை உக்ரைன் ஆரம்பித்துள்ளது. குறிப்பாக உக்ரைன் ஜனாதிபதி ஐக்கிய நாடுகள் சபையிலும் ஐரோப்பிய யூனியனிலும் இதர மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாராளுமன்றங்களிலும் காணொளி மூலம் உரையாற்றி வருகின்றார். அது மட்டுமன்றி அவரது கோரிக்கைகள் அதிதீவிரமாகவும் ஐரோப்பிய நிறுவனக்

கட்டமைப்புகளை விமர்சிப்பதாகவும் அமைந்துள்ளது. ரஷ்யா மீதான போர்க் குற்றச்சாட்டை முதன்மைப்படுத்தும் உக்ரைன் அத்தகைய குற்றச்சாட்டை மேற்கு நாடுகளின் சர்வதேச நிறுவனங்களின் உதவியுடன் ரஷ்யாவையும் அதன் ஜனாதிபதியையும் நெருக்கடிக்குள்ளாக்க முனைகின்றது. இதன் மூலம் ரஷ்யாவின் இருப்பை முற்றாகவே தகர்க்கும் நடவடிக்கையில் மேற்குடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஜெலன்ஸ்கி நடைமுறையில் பிராந்திய அரசியலையோ அதனால் உக்ரைனியர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பினையோ கருத்தில் கொள்ள தயாரில்லாத தலைவராக உள்ளார். மக்களுடன் களத்தில் நிற்கும் தலைவராக இருந்தாலும் யாதார்த்தத்தை உணரும் தலைவராக இல்லாத நிலையை வெளிப்படுத்துகிறார். அவர் ஒரு சினிமா நடிகர் என்பதை மட்டுமே வெளிப்படுத்தும் தலைவராக உள்ளமை கவனத்திற்குரியதாகும்.

உக்ரைனின் அழிவுக்கு பின்னால் ஜெலன்ஸ்கியின் அணுகுமுறையிலுள்ள தவறே பிரதான காரணமாகக் கொள்ளப்படுகிறது. மேற்கையும் ரஷ்யாவையும் சமதூரத்தில் கையாண்டிருப்பதற்கு ஜெலன்ஸ்கி முனைந்திருந்தால் உக்ரைனை பாதுகாத்திருக்க முடியும். ஏறக்குறைய பின்லாந்து மாதிரியில் உக்ரைன் பயணித்திருக்க வாய்ப்பிருந்தது.

நான்காவது உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தொடர்ந்தும் ரஷ்யாவுக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக நேட்டோவிடம் ஆயுதங்களை கோரி வருகிறதைக் காணமுடிகிறது. குறிப்பாக அண்மையில் பெல்ஜியம் தலைநகர் பிரேசில்ஸில் நடைபெற்ற நேட்டோ அமைப்புக்களின் தலைவர்களின் மாநாட்டில் கலந்து கொண்ட உக்ரைன் வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலிபா கலந்து கொண்டிருந்தார். அவர் நேட்டோ நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தினார். அவர் உரையாடும் போது, 'எனது நோக்கம் மிக எளிமையானது. அது என்னவென்றால், ஆயுதங்கள்' மூன்று தடவை குறிப்பிட்டார். 'எவ்வாறு சண்டையிடுவது எவ்வாறு வெற்றி பெறுவதென்று எங்களுக்கு தெரியும். ஆனால் உக்ரைன் கேட்டுக்கொண்ட நிலையான மற்றும் போதுமான ஆயுதங்கள் வழங்கப்படவில்லையென்றால் அந்தவெற்றியை மிகப்பெரிய தியாகத்துடனேயே எட்ட முடியும். அதிக ஆயுதங்கள் கிடைத்தால் புச்சா நகரில் நடந்த அநீதி போன்று நிகழாமல் தடுக்கவும் மனித உயிர்களை பாதுகாக்கவும் முடியும்' என்றார். இதிலிருந்து உக்ரைன் நேட்டோவில் சேராத நிலையில் நேட்டோ அங்கத்துவ நாடாகவே நேட்டோ விவகாரங்களில் பங்கெடுத்து கொள்கிறது.

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி நேட்டோவில் இணையவில்லை எனக் குறிப்பிட்டாலும் நடைமுறையில் நேட்டோவின் ஆயுதங்களும், படைகளும், ஆலோசனைகளும் உக்ரைனின் போருக்கான அடிப்படை என்பதை மறுக்க முடியாது.

ஐந்தாவது, உக்ரைனின் மரியப்போ நகரில் முற்றுகையிட்டுள்ள ரஷ்யப்படைகள் நேட்டோவின் படைகள் மீதான தாக்குதலை மேற்கொள்வதாகவும், அவ்வாறு மரியப்போ முற்றுகைக்குள் அகப்பட்டுள்ள அந்நியப்படைகளை மீட்டெடுக்க உக்ரைன் போராடுவதாகவும் தெரிய வருகின்றது. அத்தகைய படைகளின் உணவு மற்றும் அடிப்படை தேவைகளை முதன்மைப்படுத்திக் கொள்ளும் உக்ரைன் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினூடாக அங்கிருக்கும் உக்ரைனியர்களுக்கும் அந்நிய படைகளுக்கும் உணவு மற்றும் அடிப்படை தேவைகளை விநியோகிக்க முயற்சிக்கிறது.

ஏறக்குறைய மரியப்போ சுற்றி வளைப்பு என்பது உக்ரேனில் உள்ள நேட்டோ இராணுவத்தின் மீதான தாக்குதலுக்கான நடைமுறையாகவே காணப்படுகின்றது. இதுவே மரியப்போ நகரம் மீதான முக்கியத்துவம் அதிகரிக்க காரணமாகிறது.

எனவே, உக்ரைன் ரஷ்யப்போர் நீடிப்பதற்கான சூழலை ஏற்படுத்தியிருக்கின்ற அதேவேளை நேட்டோ நாடுகள் ரஷ்யாவிற்கு எதிரான பொருளாதார தடையை தீவிரப்படுத்துவதன் மூலம் ரஷ்யாவை தோற்கடிக்க முயலுகிறது. புச்சா படுகொலை பற்றிய பிரசாரம் ரஷ்யா மீதான பாரிய பொருளாதார தடைக்கு வழிவகுத்துள்ளது. இதன்மூலம் உலக நாடுகள் மத்தியில் ரஷ்யா தலைமையிலான அணியொன்றின் உருவாக்கமும் அவற்றுக்கான பொருளாதார ஒத்துழைப்பும் அதிகரிக்க வழிவகுத்துள்ளது.

உக்ரைன் ரஷ்ய போருக்கு பின்னர் ரஷ்யாவின் உற்பத்திகள் இந்தியாவையும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளை நோக்கியும் அதிகரிக்க வழிவகுத்துள்ளது. எனவே புச்சா நகரில் ஏற்பட்ட படுகொலை சார்ந்த அரசியல் ரஷ்யாவிற்கு நெருக்கடியாக அமைந்தாலும் அதுசார்ந்து பக்கசார்பற்ற விசாரணைக்கான அழைப்பை இந்தியா முன்வைத்ததன் மூலம் நேட்டோ நாடுகளின் உபாயம் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது.

அதுமட்டுமன்றி அமெரிக்காவின் இராஜதந்திரிகள் குழு இந்தியாவுக்கு வருகை தந்த போதும் அதற்கு பின்பான அணுகுமுறைகளும் இந்திய, ரஷ்ய பெற்றோலிய இறக்குமதிகளை டொலர் நாணயத்தில் மேற்கொள்வதற்கான வழிமுறைகளை தெரிவித்ததோடு ருஷ்ய ரூபிள் நாணயத்தில் பரிமாற்றத்தை மேற்கொள்ளக்கூடாது என்றவற்புறுத்தலை அமெரிக்கா இந்தியாவிற்கு விதித்துள்ளது. ஆனால் ரஷ்யாவோ தனது பெற்றோலிய ஏற்றுமதி ரூபிள் நாணயத்திலேயே மேற்கொள்ளப்படுமெனவும், ஜேர்மனி ரஷ்யாவின் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளுமென்ற செய்திகளும் ரஷ்ய உக்ரைன் போரின் மாற்றங்களாக கொள்ளப்படுகிறது.

உயிரைப் பறித்த கடன்

மயூரப்பிரியன்

குடும்பம் ஒன்றுக்கு கொடுத்த கடன் காசை பெற சென்ற பெண்ணை, அக்குடும்பத்தினர் படுகொலை செய்து, சடலத்தையும் அவரது மோட்டார் சைக்கிளையும் தமது வீட்டு வளவுக்குள் புதைத்து வைத்த நிலையில் 40 நாட்களின் பின்னர் பெண்ணின் சடலமும் மோட்டார் சைக்கிளும் மீட்கப்பட்டுள்ளன.

இச் சம்பவம் யாழ்ப்பாணத்தையே பெரும் அச்சத்திற்கு உள்ளாகியுள்ளது. ஒரு பெண்ணை கொலை செய்து, மோட்டார் சைக்கிளுடன் புதைத்து விட்டு, சர்வ சாதாரணமாக அயலவர்களுடன் 40 நாட்கள் பழகிய அந்த குடும்பத்தினரை நினைத்து அயலவர்கள் உறைந்து போய் உள்ளனர்.

யாழ். நகர் பகுதியில் இருந்து சுமார் 7 கிலோ மீற்றர் தூரத்தில் அரியாலை எனும் பெரிய கிராமத்தினை ஒட்டிய ஓர் சிறிய கிராமமே மணியந்தோட்டம்.

அக்கிராமத்தின், உதயபுரம் எனும் பகுதியை சேர்ந்த பிரதீபன் ஜெசிந்தா (வயது 42) எனும் பெண் அயலவர்கள் மற்றும் அயலூரில் உள்ளவர்களுக்கு வட்டிக்கு பணம் வழங்குவதை தொழிலாக செய்து வந்துள்ளார். இவர் கணவன் மற்றும் மகனுடனும் தனது பெற்றோருடனும் வாழ்ந்து வந்தார்.

அந்நிலையில் கடந்த மார்ச் மாதம் 1ஆம் திகதி தனக்கு பணம் தர வேண்டியவர்கள் வீட்டுக்கு சென்று பணத்தினை வாங்கி வருவதாக வீட்டில் கூறி, தனது மோட்டார் சைக்கிளில் சென்றவர் வீடு திரும்பவில்லை.

பணம் வாங்கி வருவதாக கூறி சென்ற பெண்ணை காணவில்லை என தேடிய குடும்பத்தினர் முதலில், அவருக்கு பணம் கொடுக்க வேண்டியவர்களிடம் அவர் தொடர்பில் விசாரித்துள்ளனர்.

தமக்கு எதுவும் தெரியாது என்றே அவர்கள் பதில் அளித்துள்ளனர். அதனால் அன்றைய தினம் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் அவரை காணவில்லை என முறைப்படு செய்ய சென்ற போது, பொலிஸார் "அவர் ஒன்றும் சின்ன பிள்ளை இல்லைத்தானே... எங்காவது சென்றிருப்பார் வந்து விடுவார்" என கூறி முறைப்பாட்டைப் பதிய தயக்கம் காட்டியுள்ளனர்.

அதற்கு குடும்பத்தினர் அவரது தொலைபேசியும் இயங்கவில்லை. அவர் எங்காவது சொல்வதாயின் வீட்டிற்கு அறிவித்து விட்டே செல்வார். இன்னும் வீட்டாருடன் தொடர்பு கொள்ளவில்லை என்பதனால், அவருக்கு ஏதேனும் ஆபத்து நிகழ்ந்து அவர் காணாமல் போயிருக்கலாம் என வலுவான சந்தேகம் தெரிவித்த பின்னரே பொலிஸார் முறைப்பாட்டினை பதிவு செய்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

அதேவேளை குடும்பத்தினரும், அப்பெண்ணிடம் பணம் வாங்கிய நபர்களை தொடர்பு கொண்டு அவரை பற்றிய தகவல் தெரிந்தால் தெரிவிக்குமாறு கோரி வந்துள்ளனர்.

பெண் காணாமல் போய் 40 நாட்கள் கடந்த நிலையில், கடந்த 7ஆம் திகதி வியாழக்கிழமை, மணியந்தோட்டம் 11ஆம் குறுக்கு தெருவில் உள்ள வீட்டில் வசிப்போர் அப்பெண்ணை கொலை செய்து வீட்டு வளவுக்குள் புதைத்துள்ளதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைக்கப்பெற்றுள்ளது.

அது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்த வேளை, குறித்த வீட்டினர், தமது வீட்டு குப்பைகளை புதைக்க வேண்டும் என கோரி கடந்த பெப்ரவரி மாதமளவில் பெரியதொரு கிடங்கினை தன்னைக் கொண்டு வெட்டினார்கள் என ஒருவர் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளார்.

அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில், குறித்த வீட்டினை வியாழக்கிழமை மாலை சுற்றிவளைத்த பொலிஸார், வீட்டு வளவினுள் சோதனைகளை முன்னெடுத்தனர்.

அதன்போது , வீட்டின் பின் பகுதியிலும், முன் பகுதியிலும் கிடங்கு வெட்டப்பட்டு மூடப்பட்டுள்ள மைக்கான தடயங்களை கண்டறிந்தனர்.

கிடங்கினை மீண்டும் அகழ்வதற்கு நீதிமன்ற அனுமதியினை பெறுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்த பொலிஸார் , வீட்டில் இருந்த கணவன் மற்றும் மனைவி ஆகியோரை கைது செய்ததுடன் , அவர்களுக்கு உதவிய குற்றச்சாட்டில் மனைவியின் சகோதரனையும் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதேவேளை வீட்டினை ச்சுற்றி அன்றைய தினம் இரவு பாதுகாப்பையும் பலப்படுத்தியிருந்தனர்.

மறுநாள் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் அடையாளம் காணப்பட்ட இடத்தில் நிலத்தினை அகழ்வதற்கான அனுமதியினை பெற்ற பொலிஸார், யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ. ஆனந்தராஜா மற்றும் யாழ்.போதனா வைத்திய சாலை சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ். பிரணவன் முன்னிலையில் அகழ்வு பணிகளை முன்னெடுத்தனர்.

வீட்டின் பின்புறமாக மலசலகூடத்திற்கு அருகில் சுமார் ஆறடி ஆழத்திற்கு மேலாக தோண்டப்பட்ட கிடங்கில் சடலம் புதைக்கப்பட்டு , சடலத்தின் மேலே கற்கள் போடப்பட்டு கிடங்கு மூடப்பட்டிருந்த நிலையில் கடுமையான முயற்சியினால் சடலம் கிடங்கில் இருந்து மீட்கப்பட்டது.

அதேவேளை வீட்டின் முன் பகுதியில் தோண்டப்பட்ட பாரிய கிடங்கில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் மோட்டார் சைக்கிள் புதைக்கப்பட்டிருந்தது.

குறித்த வீட்டாருக்கு அப்பெண் 5 இலட்ச ரூபாய் பணத்தினை வட்டிக்கு வழங்கியுள்ளதாக அப்பெண்ணின் குடும்பத்தினர் பொலிஸாருக்கு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

அதேவேளை குப்பைகளை புதைக்க என குறித்த வீட்டார் கூலிக்கு ஒருவரை பிடித்து பெப்ரவரி மாதமளவில் கிடங்கொன்றினை தோண்டியுள்ளனர். ஆனால் அப்பெண் மார்ச் மாதம் 1ஆம் திகதியே வீட்டில் இருந்து புறப்பட்ட நிலையில் காணாமல் போயுள்ளார். அவ்வாறெனில் அப்பெண்ணை கொலை செய்து புதைப்பது என முன்னரே அக்குடும்பத்தினர் திட்டமிட்டுள்ளனரா? எனும் வலுவான சந்தேகம் பொலிஸாருக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் அப்பெண்ணின் சில நகைகள், தொலைபேசி மற்றும் ஆவணங்கள் என்பவை மீட்கப்படாத நிலையில் அவற்றையும் மீட்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர்.

"கடன் அன்பை முறிக்கும்" என்பார்கள். ஆனால் யாழ்ப்பாணம் மணியந்தோட்டத்தில் கடன் உயிரையே பறித்துள்ளது. அதிகளவிலான கடன்கள் அதற்கான அதிகளவிலான வட்டி என்பவற்றால் தற்கொலைகள் கொலைகள் சமூகத்தில் அங்கங்கே இடம்பெற்ற வண்ணமே உள்ளன. அவை நிறுத்தபட வேண்டும். ஆனால் எவ்வாறு நிறுத்துவது என்பதே அனைவருக்கும் முன்பாக உள்ள பெரிய கேள்விக்குறி ஆகும்.

சித்திரைப் புத்தாண்டு
சிறப்பு மலர்

தமிழ் - சிங்கள மக்களால் கொண்டாடப்படும் சித்திரைப் புதுவருடம்

இவ்வாரம் உதயமாகவிருக்கும் சித்திரைப் புதுவருடத்தை வரவேற்பதற்கு இலங்கைவாழ் தமிழ் சிங்கள மக்கள் தயாராகி வருகிறார்கள். மக்கள் மனங்களில் சமுதாய உணர்வையும், ஆன்மீகப் பற்றையும் தூண்டும் வகையில் ஒவ்வொரு இனத்திற்கும், மதத்திற்கும் தொடர்புள்ள விழாக்கள், வைபவங்கள், பண்டிகைகள் என்பன ஒவ்வொரு மாதமும் வந்து போகின்றன. ஆனால், இரு இனத்தினருக்கும், வெள;வேறு இரு மதத்தினருக்கும் உரித்தான ஒரு திருநாளாக முக்கியத்துவம் பெறும் வகையில் அமைந்திருக்கிறது சித்திரைப் புதுவருடம்.

இலங்கையிலுள்ள பிரதான இரு இனத்தவர்களான தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் உரிய பண்டிகையாதலால் இதனை தமிழ் சிங்கள புதுவருடம் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. எனினும் இந்து சமயத்தைச் சேர்ந்த தமிழ் மக்களும் பௌத்த சமயத்தைச் சேர்ந்த சிங்கள மக்களும் இந்த புதுவருடத் திருநாளை கொண்டாடி வருகிறார்கள். தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையிலான பாரம்பரிய கலாசார தொடர்புகளுக்கு சித்திரைப் புதுவருடம் சான்றாக அமைந்திருப்பதை குறிப்பிடலாம்.

சித்திரைப் புதுவருடமானது ஒரு மங்கள கரமான திருநாளாகும். பழையன கழிதலும், புதியன புகுதலும் என்ற மரபிற்கமைய புதிய எதிர்பார்ப்புகளையும் பலவித நம்பிக்கைகளையும் வைத்து வரவேற்கப்படுகிறது. மக்களின் வாழ்க்கையை நல்வழியில் நெறிப்படுத்துவதுடன், இளைய தலைமுறையினர் தமது முன்னோர்களின் பாரம்பரியங்களை அறிந்துகொள்ளவும், இறைவழிபாடு, தானதருமம், ஆசிபெறுதல் என்பவைகளினால் மன நிறைவு கொள்ளவும் உதவும் வகையில் சித்திரைப் புதுவருடத் திருநாள் கொண்டாடப்படுகிறது.

இம்முறை 'சுபகிருது' என்ற பெயரில் உதயமாகும் சித்திரைப் புதுவருடம், அறுபது தமிழ் வருடங்களின் சுற்று வட்டத் தொடரில் 36ஆவது வருடமாகும். இந்தப் புதுவருடம் பெயருக்கு ஏற்றவகையில் நன்மையானதாகவும், மங்களகரமானதாகவும் அமைவதுடன், இதுவரை காலமும் பலவித இன்னல்களையும் துன்பங்களையும் சந்தித்த அனைத்து மக்களுக்கும் விமோசனம் தருவதாகவும் விளங்கவேண்டும் என்பதே பலரது எதிர்பார்ப்பாகும்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7 மணி 50 நிமிடத்தில் பூர்வபட்ச திரயோதசி திதியில், பூரம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில், சிங்க இராசியில், மேட லக்னத்தில் புதுவருடம் பிறக்கிறது. 13ஆம் திகதி புதன்கிழமை பின்னிரவு மணி 3.50 முதல் 14ஆம் திகதி பகல் மணி 11.50 வரை விஷு புண்ணியகாலமாகும். இந்த புண்ணிய காலத்தில் சகலரும் தலையில் கடம்பம் இலையையும், காலில் கொன்றை இலையையும் வைத்து மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும். இதன் பின்னர் சிவப்பு அல்லது மஞ்சள் நிற பட்டாடை, அல்லது சிவப்புக்கரை அமைந்த புதிய பட்டாடை தரித்து, பவளம், புஷ்பராகம் பதித்த ஆபரணத்தையும் அணிந்து கொண்டு ஆலயத்திற்குச் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும் என வாக்கிய பஞ்சாங்கம் சொல்கிறது.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி எதிர்வரும் 14ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி 41 நிமிடத்தில் பூர்வபட்ச திரயோதசி திதியில், பூரம் நட்சத்திரம் 4ஆம் பாதத்தில், சிங்க இராசியில், இடப லக்னத்தில் புதுவருடம் பிறக்கிறது. 14ஆம் திகதி அதிகாலை மணி 4.41 முதல் பகல் மணி 12.41 வரை மேட சங்கிரமண அல்லது விஷு புண்ணிய காலமாகும். இந்த புண்ணிய காலத்தில் சகலரும் தலையில் கொன்றை இலையையும், காலில் புங்கம் இலையையும் வைத்து மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டும். இதன் பின்னர் மஞ்சள் நிறப்பட்டு அல்லது மஞ்சள் கரை அமைந்த வெள்ளை புதுவஸ்திரம் தரித்து, புஷ்பராகம் இழைத்த ஆபரணம் அணிந்து கொண்டு ஆலயத்திற்குச் சென்று இறைவழிபாடு செய்தல் வேண்டும் என திருக்கணித பஞ்சாங்கம் சொல்கிறது.

மலரவிருக்கும் சித்திரைப் புதுவருடப்பிறப்பு பரணி, மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம், பூராடம், உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதங்கள் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கு தோஷமாகும். எனவே, இவர்கள் அனைவரும் தவறாது மருத்துநீர் தேய்த்து ஸ்நானம் செய்வது அவசியம் என பஞ்சாங்கக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுவருடம் பிறந்தால் கைவிசேடம் பரிமாறிக்கொள்வது பாரம்பரிய வழக்கமாகும். ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தங்கள் குடும்பத் தலைவரிடமிருந்தும், வயதில் மூத்தவர்களிடமிருந்தும், அலுவலகங்கள், தொழிலகங்கள், விற்பனை நிலையங்கள் என்பனவற்றில் பணியாற்றுவோர் தங்கள் வேலை கொள்வோரிடமிருந்தும் கைவிசேடம் பெற்றுக்கொள்வார்கள். இலங்கையிலுள்ள பல வர்த்தக வங்கிகள் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டிருக்கும் தங்கள் வாடிக்கையாளர்களுக்கு புதுவருடநாளில் கைவிசேடம் வழங்குவது கடந்த பலவருடங்களாக நிகழ்ந்துவரும் ஒரு சிறப்பான வைபவமாகும்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி 14ஆம் திகதி வியாழக்கிழமை காலை மணி 7.57 முதல் 8.47 வரையும், மறுநாள் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை மணி 7.52 முதல் 9.51 வரையும், அதே தினம் இரவு மணி 6.12 முதல் 8.12 வரையும், 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மணி 7.45 முதல் 9.44 வரையும், அதேதினம் இரவு மணி 6.05 முதல் 8.05 வரையும் கைவிசேடத்துக்குரிய சுபநேரங்களாகும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 14ஆம் திகதி வியாழக்கிழமை காலை மணி 8.50 முதல் 9.42 வரையும், மறுநாள் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை மணி 8.35 முதல் 9.50 வரையும், 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மணி 8.30 முதல் 9.40 வரையும் கைவிசேடத்துக்குரிய சுபநேரங்களாகும்.

உழைப்பையே தங்கள் வாழ்வின் ஜீவநாடியாகக் கொண்டிருப்பவர்கள் புதுவருடத்தின் பின் சுபநேரம் பார்த்து தங்கள் தொழிற் கருமங்களை ஆரம்பிப்பதும், மக்கள் ஒவ்வொருவரும் நல்லநாள் பார்த்து உறவினர்களினதும் நண்பர்களினதும் வீடுகளுக்குச் சென்று வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொண்டு விருந்து பசாரங்களில் கலந்து கொள்வதும், குரு மற்றும் பெரியோர்களை தரிசனம் செய்து ஆசிபெற்றுக் கொள்வதும் பாரம்பரிய நடைமுறையாக நீண்டகாலமாகவே இருந்து வருகிறது. இதற்குரிய சுபநேரங்களாக திருக்கணித பஞ்சாங்கத்தில் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை மணி 8.35 முதல் 9.50 வரையும், 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை மணி 8.30 முதல் 9.40 வரையும் குறிப்பிடப்பட்டுள்ளது. புதுவருடத்தில் வித்தியாரம்பம் மற்றும் கல்வி சார்ந்த புதுக்கருமங்களை தொடக்குவதற்கான சுபநேரமாக திருக்கணித பஞ்சாங்கத்தில் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை மணி 8.35 முதல் 9.50 வரையாகும் என சொல்லப்பட்டுள்ளது.

உதயமாகும் இந்த சித்திரைப் புதுவருடத்தில் வரவுசெலவு விடயமாக மிதுனம், கன்னி, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் பிறந்தவர்களுக்கு இலாபம் என்றும், மேடம், இடபம், கடகம், துலாம், விருச்சிகம் ஆகிய இராசிகளில் பிறந்தவர்களுக்கு சமநிலை என்றும் சிங்கம், தனுசு, மீனம் ஆகிய இராசிகளில் பிறந்தவர்களுக்கு நஷ்டம் என்றும் பஞ்சாங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த சுபகிருது வருடத்தில் யாவற்றையும் சீர்தூக்கி கண்ட நற்பலன் இரண்டு பங்கும், தீயபலன் மூன்று பங்குமாம் என வாக்கிய பஞ்சாங்கக் குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது.

நாட்டு மக்கள் பலவிதமான நோய்களின் தொற்றுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் இன்றைய நிலை மலரும் புதுவருடத்தில் முற்றாகவே நீங்கி, அனைவரும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழ்வதற்கு இறையருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக!

அ. கனகசூரியர் ...✍

தமிழ் - சிங்கள சித்திரை புத்தாண்டு
சுபகிருது வருஷம் - 2022

வாக்கிய பஞ்சாங்க கணிப்பின்படி சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை காலை 7.50 மணியளவில் சுபகிருது வருஷம் பிறக்கிறது.

திருக்கணித பஞ்சாங்க கணிப்பின்படி சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை காலை 8.41 மணியளவில் சுபகிருது வருஷம் பிறக்கிறது.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி புத்தாடை நிறம்

நல்ல சிவப்பு அல்லது மஞ்சள் நிற பட்டாடை அல்லது சிவப்பு கரை அமைந்த புதிய பட்டாடை அணிவது நல்லது.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புத்தாடை நிறம்

மஞ்சள் நிற பட்டு அல்லது மஞ்சள் கரை கொண்ட வெள்ளை வஸ்திரம்.
வாக்கிய பஞ்சாங்கத்தின்படி ஆபரணம் பவளம்,புஸ்பராகம் கொண்ட ஆபரணம்.
திருக்கணித பஞ்சாங்கத்தின்படி ஆபரணம் புஸ்பராகம் கொண்ட ஆபரணம்.

தோஷ நட்சத்திரம்

பரணி, மகம், பூரம் ,உத்தரம் 1ஆம் பாதம், பூராடம், உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம்,திருவோணம், அவிட்டம் 1ஆம்2ஆம்பாதம்

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி கைவிஷேட சுப நேரம்

சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை பகல் 7.57 முதல் 8.47 வரை
சித்திரை 2 ஆம் திகதி (15 .04.2022) வெள்ளிக்கிழமை பகல் 7.52 முதல் 9.51 வரை
சித்திரை 2 ஆம் திகதி (15.04.2022) வெள்ளிக்கிழமை இரவு 6.12 முதல் 8.12 வரை

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி கைவிஷேட சுப நேரம்

சித்திரை 1ஆம் திகதி (14.04.2022) வியாழகிழமை பகல் 8.50 முதல் 9.42 வரை
சித்திரை 2 ஆம் திகதி (15.04.2022) வெள்ளிக்கிழமை பகல் 8.35 முதல் 9.50 வரை

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி விஷ புண்ணிய காலம்

14.04.2022 அதிகாலை 3.50 மணி முதல் முற்பகல் 11.50 மணி வரை

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷ புண்ணிய காலம்

14.04.2022 அதிகாலை 4.41 இல் இருந்து பகல் 12.41 வரை

மருத்து நீர்

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கடப்பம் இலையும் காலில் கொன்றை இலையும் வைத்து ஸ்நானஞ் செய்ய வேண்டும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி விஷு புண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கொன்றை இலையும் காலில் புங்கம் இலையும் வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும்.

மருத்து நீர் தயாரித்தல்

தாழம்பூ, தாமரைபூ,மாதுளம்பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதேவியார், செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம, கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு இவைகளை சுத்த ஜலத்திலிட்டு காச்சிக்கொள்க.

சுபகிருது வருட புத்தாண்டின் இராசிகளுக்கான வரவு மற்றும் செலவு

இராசி ஆதாயம் விரயம் பலன்
மேஷம் 14 14 சமசுகம்
ரிஷபம் 8 8 சமசுகம்
மிதுனம் 11 5 லாபம்
கடகம் 11 11 சமசுகம்
சிம்மம் 8 14 நஷ்டம்
கன்னி 11 5 லாபம்
துலாம் 8 8 சமசுகம்
விருச்சிகம் 14 14 சமசுகம்
தனுசு 2 8 நஷ்டம்
மகரம் 5 2 லாபம்
கும்பம் 5 2 லாபம்
மீனம் 2 8 நஷ்டம்

சுபகிருது வருஷ பலன்

சுபகிருது தன்னிலே சோழதே சம்பாழ்
அபமாம் விலைகுறையு மான்சாம் சுபமாகு
நாடெங்கு மாரிமிகு நல்வினை வுண்டாகுங்
கேடெங்கு மில்லையிதிற் கேள்

இந்த சுபகிருது எனும் வருஷத்தில் பூமியானது பல்வேறு விதமான விழாக்களால் பிரகாசிக்கும் அரசர்களும் கள்வர்களிடமிருந்து (மக்களுக்கு) அபயமளிப்பவர்களாகவும் சண்டையில் உற்சாகமுடையவர்களாகவும் இருப்பார்கள்.

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி புதுக்கணக்கு ஆரம்பித்தல்

சித்திரை 28 ஆம் திகதி (11.05.2022) புதன்கிழமை காலை 6.10 முதல் 7.20 வரையிலான நேரம். அல்லது சித்திரை 30 ஆம் திகதி (13.05.2022) வெள்ளிக்கிழமை காலை 6.03 முதல் காலை 8.03 வரையிலான நேரம்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி புதுக்கணக்கு ஆரம்பித்தல்

சித்திரை 08 ஆம் திகதி (21.04.2022) வியாழக்கிழமை பகல் 10.00 முதல் 11.35 வரையிலான நேரம்.

அல்லது சித்திரை 21 ஆம் திகதி (04.05.2022) புதன்கிழமை காலை 7.35 முதல் காலை 8.30 வரையிலான நேரம். அல்லது சித்திரை 30 ஆம் திகதி 13.05.2022 வெள்ளிக்கிழமை காலை 8.16 முதல் காலை 10.04 வரையிலான இடைப்பட்ட நேரம்.

கலாநிதி சிவஸ்ரீ
இராமச்சந்திரகுருக்கள் பாபு சர்மா...✍
சர்வதேச இந்து மத பீட செயலாளர்

கவிதை மஞ்சரி

கிருஷா

முத்தமிழ் வளர்த்த வித்தகர்

தேவந்தி (சயூரன்), காரைதீவு

விபுலானந்தனை நினைத்திடுவோம்எங்கள்
வித்தகன் புகழை பறை சாற்றிடுவோம்
அறிவால் உயர்ந்த பெருந்தகையை
ஆண்டவன் என்றே போற்றிடுவோம்

மயில் வாகனனாய் தான் பிறந்து
மனித குலத்தை நேசித்தாய்
துயிலைக் கூட தூரம் வைத்து
தூய்மைத் தொண்டுகள் பல செய்தாய்

வில்லில் நாணேற்றும் வேளை தன்னில்
விருந்தாய் எழுவதும் யாழிசையே என
சொல்லில் வந்த நம் தமிழிசையை பல
சோதனைகள் தாண்டி நிரூபித்தாய்

துறவிக் கோலம் நீ கொண்டு ஏழைக்
குழந்தைகள் துயர்தனை நீ துடைத்தாய்
உன் பிறவிக் கருமம் தீர்ப்பதற்கு
பிணியுடன் நீயும் காத்திருந்தாய்

புத்தாண்டு

இரா. சிவராஜா, தெகியோவிற்ற

முதல் காலாண்டை அடுத்து வருவது புத்தாண்டாம்
மூவின மக்களும் இணைவது அந்நாளாம்
நான்மறை மக்களும் நாட்டம் கொள்ளும் அது
தமிழ் சிங்கள் சித்திரைப் புத்தாண்டாம்

மருத்து நீர் கொடுத்து மருத்துவம் காட்டியதும்
எண்ணெய் தேய்த்து எழும்புக்கு ஊக்கம் கொடுப்பதும்
பழைமை கழிந்து புதுமை மலர அடுப்பு மூட்டி
பாற்சோறும் ஆக்கி பலகாரமும் செய்து

புத்தாண்டு அன்று புத்தாடை அணிந்து
புத்துணர்வோடு புனிதத் தலம் சென்று
பெற்றோரை, பெரியோரை விழுந்து வணங்கி
உற்றார் உறவினரோடு உல்லாசமாய் இருப்பதும்

கிராமத்து கலையோடு கொஞ்சி மகிழ்வதும்
வான வேடிக்கை வண்ணங்களாய் காட்டுவதும்
வாஞ்சையோடு எல்லாம் வங்கியில் வைப்பு செய்வதும்
வளமான நன் நாளாம் சித்திரைப் புத்தாண்டு

வாஞ்சையோடு வரவேற்க சித்திரைப் புத்தாண்டை
வழியனுப்பும் நேரமும் வெகு தூரம் இல்லை என்று
வழமையான வாழ்வுக்கு வழித்தேடும் எல்லோரும்
வாழ்த்தி வணங்கி விடைபெற்று கொள்கின்றனர்

சித்திரை மகளே வாராய்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

கச்சிதமாக வா
கனிவினை அள்ளித்தா
சுத்தமாய் சுகிர்தமாய்
சுற்றத்திற்கு அமிர்தமாய்
நித்தமும் நிறைவுமாய்
நீங்காத செல்வமாய்
பத்தியாய் பாசமாய்
படர்ந்திடும் நன்மையால்
சித்திகள் நிறையவே
சிறப்புகள் ஓங்கவே
எத்திக்கும் வேதனை
சூழாமல் காக்கவே
அகிலமே தேடும்
சித்திரை மகளே
அருமையும் பெருமையும்
சேர்ந்திட வாராய்!

விதியா!

மொழிவரதன்

மகளிர்தின நாளில்
மகனே!மனதை
உலுக்கியதே உன்கொலை
ஆலி எல உடுவரதோட்டமதில்
அன்றாடம் நடந்த உன்
செம் பாதங்கள் அடங்கியதோ
பட்டப்பகலில் ஓர் முரடன்
வடிவில் வந்தானோ காலன்
பெண் பிள்ளையைப் பெற்ற
அப்பாவி
முன்னரும் அதன் பின்னரும்
சம்பவங்கள் தொடர்ந்து
வண்ணமிருக்கையில்
விழிப்பில்லாது இருந்தீர்களோ?
காலம் செய்யும் கோலம் பல
கண்களால் கண்டும்
காதுகளால் கேட்டும்
காலன் அம்முரடன்
கைகளுக்கு இரையாக
நாமும் காரணமானமோ?
யாரை நொந்தென்ன இனி
ஆகப் போகிறது?
காதல் எனும் பெயரில்
காம வெறி கொண்ட
முரடன்கள்
எமது சமூகத்தின் கரங்களால்
ஒழிக்கப்படப்போவது என்று
என்றொரு ஏக்கமே
இறுதியில் எஞ்சுகிறது
மனவுறுதி கொள்வோம்
நாமெல்லாம் ஓரணியில்

இல்லை.. இல்லை... இல்லை..!

மொழி

ஓடுகின்ற நதிகள் எல்லாம்
பின்நோக்கிப் பாய்வதில்லை
பாடுகின்ற பறவைகள் எல்லாம்
வாத்தியாரைவைத்து
கற்றுக்கொள்வதில்லை
தேடுகின்ற விழிகள் எல்லாம்
தேவதைகளை காண்பதில்லை
கூடுகின்ற கூட்டமெல்லாம்
இறுதி வரை நிற்பதில்லை...

இணைந்தே இருப்பேன்!

கலாபூஷணம் கீழ்கரவை கி. குலசேகரன்

சாதி போதங்களைப்
பார்த்தே என்னைச்
சமுதாயம் ஒதுக்கி
வைக்கும் வேளையிலே
மேதினியில் சமத்துவத்தை
விரும்பும் உன்னை
மெச்சுகின்றேன்! மணம்
முடிக்க விரும்புகின்றேன்!

பொன் பொருளில்
ஆசை கொண்டே
பூவையரை மணம் முடிக்கும்
பொல்லா உலகினிலே,
அன்பை மதிக்கின்ற
ஆடவாய் உனைக்கண்டு
ஆனந்தம் கொள்கின்றேன்!
அடைய நினைக்கின்றேன்!

பொய்யும் புரட்டும்
நிறைந்த உலகினிலே,
புரிந்து என்னோடு
பழகி, மேலும்
உய்ய வைப்பாய்
என்ற நம்பிக்கையில்,
உயிராகவே உன்னை
நான் நேசிக்கின்றேன்!
நின்னை சாண் என்று
நினைத்து வந்தேன்!
நீயே என் தலைவன் என்றும்
நினைத்து வந்தேன்!
என்னவளே! உன்னோடு
நான் களிப்பேன்!
என்றுமே அன்றிலாய்
இணைந்தே இருப்போன்!

அழகு

ஷப்ரா இல்முத்தீன் அட்டாளைச்சேனை

வாழ்தல் அழகு
வாழும் கணங்கள் அழகு
கூடவே கைப்பற்றி நடக்கும்
மனிதக் குணங்கள் அழகு

போட்டி போட்டு
முன் மொழியப் படும்
பிறரது பொக்கிஷ வார்த்தைகள்
அழகு

பிடித்ததை செய்து தரும்
உறவுகள் அழகு
அடிக்கடி அல்லல் பட வைக்கும்
நட்புகளின் அன்புச் சண்டைகள் அழகு

ஆங்காங்கே தூசு தட்டிக் கொள்ளும்
அனுபவங்கள் அழகு
அடிக்கொரு முறை அழைக்கப்படும்
தொலைபேசி அழைப்புகள் அழகு

அணுதினமும் தொடரப் படும்
இறை நினைவுகள் அழகு
ஆக்ரோஷமாய் சண்டை செய்திடும்
குழந்தைகளின் முத்தங்கள் அழகு

மொத்தத்தில்
ஒன்றுக்குள் ஒன்றாகி
எனக்கு என்னையே
புரிய வைக்கும்
இந்த நிமிடங்கள் அழகு...

நட்புறவு

பாண்டியூர் பொன். நவநீதன்

நட்பு என்றால் அது
நம்மைப் பிய்த்துத்
தின்னவராது அது
தன்னைப்பிய்த்தே
தந்திருக்க வரும் அந்தத்
தங்க மனங்களின்
தாராளமான அன்பே
நட்புறவு!

கவிதைகள் மஞ்சரியாகும்...

நல்லை அமிழ்தன்

குடிசையை மறந்தால்
உணவு
நோயாகும்

குங்கும் சூடினால்
நாளும்
மழையாகும்

விடைகள் எழுதினால்
கேள்விகள்
வெற்றியாகும்

விடியலை அழைத்தால்
கவிதைகள்
மஞ்சரியாகும்

ஏழையானவனின் கண்ணீர் மடல்

பொத்துவில் அஜ்மல்கான்

வறுமையினால் ஈர்க்கப்பட்டு
கண்ணீரால் கதை
எழுதி வாழ்க்கையினை
களவு கொடுத்தவர்கள்
நாங்கள்

வரண்ட வயிறு,
சுருண்ட தொப்பை,
பிதுங்கிய கண்கள்,
வெடித்துப் போன
கால்கள், சிதைந்து
போன விரல்கள்,
என்பன எங்கள்
வலிகளைக் கூறும்.

மனிதம் மறைந்த
உலகம் என்பதால்
எளிதாய் ஒன்றும்
கிடைத்துப் போகவில்லை
எங்களுக்கு

வழிகளில் ஓடும்
கறுப்பான நீர்
கூறும் இந்த
அழுக்கானவனின் கதறல்களைப்
பற்றி

இருண்ட நேரத்தில்
ஒதுங்க இடமில்லை
என்பதால் தூக்கம்
மறந்து போய்
தவிக்கிறேன் இன்று
வரை

புதிமையான உலகம்
என்பதால் பழமையான
நினைவுகளை மீட்டி
கடந்து செல்கிறது
உடைந்து போன
வாழ்க்கை

கையேந்த மனமில்லை
இங்கு! கை
இரங்கி தானம்
கொடுக்க குணமில்லை
என்பதால்

பசித்தும் ருசித்தும்
உண்ண உணவில்லை
இருந்தும் இன்பத்தினை
இரசித்தபடி இருகின்றேன்
இன்று வரை

சுயநலம் உலகம்!

சி. மௌநேஷ், மட்டக்களப்பு

இயற்கையின் படைப்பில்
எல்லாமேத பொது நலம்...!
மனிதன் மட்டுமே சுயநலம் மனிதர்
தம் இருப்புக்காக மட்டும் வாழும்
சுயநலமாய்ப் போய்விட்டது
தனிமனித குழுவாழ்க்கை...
பிறப்பு முதல் இறப்புவரை
மூலதனமே தேவை என்ற
முதலாளித்துவ சித்தாந்தத்திற்குள்
சிக்கிக் கொண்டது முழு உலகும்...
மனிதரை மனிதர் நேசிக்காத
சுயநல விளைவாய் இன்று
எமக்கு கிடைத்ததுதான்
கொரோனா என்னும்
பண்பற்ற மாபெரும் பரிசு!..

ஏழைகளின் தோழமை நீ!!

கவியரசி எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா பஸ்யால

நல்ல நண்பன் நீ
நட்பின் அடையாளம் நீ
நேர்மையின் வெளிச்சம் நீ!
வாண்மையின் ஒளிவிளக்கு நீ!

நான் மதிப்பவன் நீ
உணர்வுகளை புதுப்பித்து
உறவை மெய்ப்பித்து
உயிரை உயிர்ப்பிக்கும்
உந்து சக்தி நீ!

நினைவுகளைச் சேமித்து
இதயத்தில் குவித்தாய்!
செய்யும் தொழிலை
நேசம் செய்தாய்!

வீம்பெனும் குணம் நீக்கி
தீங்கெனும் இருளகற்றி
மக்களின் மனங்களில்
வெளிச்சம் ஏற்றினாய்!

தேசத்தின் நற்பிரஜை நீ
பல பிரஜைகளுக்கு
உறவோடு உயிர் வாழ
பாதுகாவல் நீ செய்தாய்!!

பரிசாய் நட்சத்திரங்கள்
தோள்பட்டையில் குவிந்தன!
இத்தனை இள வயதில்
எத்தனை பெரிய பதவி!

தோழமையே தோள் கொடுப்பவனே
உந்தன் வாழ்வில் என்றும்
மகிழ்ச்சிப் பூக்கள் பூப்பதாக!
ஏகனவன் உனைப் பாதுகாப்பதாக!

நம்பிக்கையின் நாணயம் நீ
நல்லவர்களை வாழவைப்பவன் நீ
தீயவர்களை சீர் செய்பவன் நீ!
ஏழைகளின் தோழமை நீ!!

நீ தேடும் நாடும் அனைத்தும்
உனக்கு என்றும் கிடைப்பதாக!
அழகிய வாழ்வின் பாதையில்
சகலதும் உனக்கு அமைவதாக!!

ஒன்றிய சந்திப்பு

இர்ஷாத், வாழைச்சேனை

ஒருநாள்
திருநாள்
உனைச் சந்தித்த
பெருநாள்

எனையே
மறந்து நின்றேன்
உனையே
நினைவாய்
கொண்டேன்

அழகே!
உன்கூந்தல்
எழிலில்
விடியல்கள்
கண்டேன்

உணர்வாக வந்தாய்
உயிராக நின்றாய்
எதிர்காலத்தை
கனவாகச் செய்தாய்

விபுலானந்தரும் யாழ்நூலும்...

(19ஆம் பக்கத் தொடர்)

தலைநகரான கொழும்பில் தமிழ் பாடசாலை இல்லாததைக் கண்டு பல்வேறு முயற்சிகளின் பின் கொழும்பில் விவேகானந்த வித்தியாலயத்தை ஆரம்பித்து தமிழ் கூறும் நல்லுலகிற்கு முன்னோடியானார். முதல் தமிழ் பேராசிரியர் 1921 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத்தின் அழைப்பை ஏற்று சென்று இராமநாதபுரத்து அரசர் முன்னிலையில் சிதம்பரத்தில் பல்கலைக்கழகம் கட்டாயம் தேவையானது என தக்க சான்றுகளுடன் எடுத்துக் கூறினார். இவ் விசாரணைக் குழுவில் முதன்முதலில் தக்க சான்றுகளுடன் எடுத்துக் கூறிய பெருமை சுவாமி விபுலானந்தரையே சாரும். இந்த விசாரணைகளின் பின்னர் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அதன் விளைவாக சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தோற்றம் பெற இன்றியமையாதவராக இருந்த செட்டிநாட்டு அரசர் அண்ணாமலை செட்டியார் பல்கலைக்கழகத்தில்

முதல் தமிழ் பேராசிரியர் பதவியை ஏற்கும்படி சுவாமி அவர்களை கேட்டுக்கொண்டதற்கு இணங்க 1931 ஆம் ஆண்டு சுவாமி அவர்கள் தமிழ்ப் பேராசிரியர் பணியை ஏற்று கொண்டார் .

தமிழ் பிறந்த தமிழ்நாட்டில் சென்னை பல்கலைகழகத்தில் கூட அக்காலத்தில் தமிழ்த் துறைப் பேராசிரியர் பதவி இருக்கவில்லை. எனவே தமிழ்நாட்டின் முதல் தமிழ்ப் பேராசிரியர் என்ற பெருமையும் புகழும் நம் நாட்டை சேர்ந்த சுவாமி விபுலாநந்தரிற்கே உரியதாகும்.

யாழ் நூல் தோற்றம் இவ்வாறு தன்னுடைய வாழ்க்கையை வாழ்ந்து வந்த சுவாமி அவர்களுடைய நாற்பத்தி ஐந்து வருட கனவு யாழ்நூல். அவருடைய 45 வருட கனவும் 15 வருட முயற்சியுமே இன்று நூலாக உருமாறியுள்ளது. தமிழ் பக்தி இலக்கிய மரபில் முக்கியமான ஒன்றாகும்.

அத்தோடு தமிழில் தமிழர்களிடையே தோன்றிய முதல் இசைக்கருவி யாழ் ஆகும். இந்த யாழ் வகைகளை கூறும் யாழ் நூல் உருவாக்கத்திற்கு விபுலானந்தரினது ஆரம்ப சூழல் மிகவும் முக்கியமானது . குறிப்பாக அவரது ஆரம்ப ஆசிரியர்களிடமிருந்து கற்றுக்கொண்ட தமிழ் அறிவும் அதனோடு நாகரீக பண்பாட்டு விழுமியச் சிந்தனை மிகவும் அடிப்படையாக இருந்தது. குடும்ப பின்னணியில் உள்ள விடயங்கள் இசையில் ஆர்வத்தை இணைத்தது என்றால் மிகையாகாது. சிறு வயதிலே பாரதம், திருக்குறள், சூடாமணி நிகண்டு ஆகியவற்றுடன் ஆங்கிலம் வடமொழி ஆகியவற்றை வீட்டிலேயே கற்கும் சூழ்நிலையும் ஏற்பட்டது. அடுத்து அவரது தாய் தந்தையரின் குல தெய்வமான கண்ணகி வழிபாடு அங்கு காணப்பட்ட பக்தி நெறிமுறைகள், அத்தோடு அங்கு வருடா வருடம் பாடப்படும் சிலப்பதிகார விளக்க உரைகள், அதன் மூலம் தமிழிசை பற்றிய ஞானம் தோற்றம் பெறுவதோடு இச் சிலப்பதிகாரம் மிக முக்கியமானது என்பதை இளமையிலே உணர்வதற்கான சந்தர்ப்பமும், சூழலும் ஏற்பட்டது. இவற்றுடன் தன்னிடம் உள்ள அறிவையும், விஞ்ஞான அறிவையும், இரசாயனவியல் உணர்வையும் அடிப்படையாகக் கொண்டு இயல், இசையை அறிவதற்கு முக்கியத்துவம் கொடுத்தது ஏனெனில் எமது நாகரிகத்தையும் பண்பாட்டையும் இயல், இசை மூலம் அவர் வெளிப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் காணப்பட்டமையே ஆகும்.

அடுத்து சுவாமி அவர்கள் சிவானந்தா வித்தியாலயத்தில் கற்பிக்கும் போது அப்போது இருந்த சூழல் மிக முக்கியமான ஒன்றாக காணப்படுகின்றது. அன்று மட்டக்களப்பு புளியந்தீவு என அழைக்கப்பட்டது புளியந்தீவிலிருந்து அவர் கற்பிக்கும் பாடசாலைக்கு கல்லடி செல்வதற்காக கல்லடி ஆற்றை கடக்க வேண்டும். அவ்வாறு அவர் ஆற்றை கடக்க படகில் போகும் போதும் ,

வரும் போதும் அந்த நீர் நிலைகளில் ஓசைகள் ஒலித்தன. அவை எங்கிருந்து வருகின்றன என்பதை பற்றிய தேடல் அடிகளாருக்கு எழுந்தது. அதுதான் பின்னர் மீன் பாடும் தேன் நாடு மட்டக்களப்பு என்று வர்ணிக்கப்பட்டது. இதுவும் யாழ்நூல் தோற்றம் காரணமாக இருந்தது.

ஒரு இசைத்துறை பேராசிரியராக நியமனம் பெற்ற போது சென்னை பல்கலைக்கழக மேற்பார்வை செய்யுமாறு அன்னாருக்கு கூறப்பட்டது. அத்துடன் அழிந்து போன தமிழ் நூல்களைப் பற்றிய தேடலில் நாட்டம் ஏற்பட்டது. அதிலும் சிலப்பதிகாரத்தில் கிடைக்கப்பெறாத சிந்தனைகளைப் பற்றிய தேடலின் போது யாழின் வகைகள் அதன் முக்கியத்துவம் பற்றி அறிய சந்தர்ப்பம் கிடைத்தது. இவ்வாறான பின்னணியே அவருடைய இசை ஆர்வம் தோற்றம் பெற காரணமாக அமைந்தது. சுவாமி விபுலாநந்தர் காலமும் கருத்தும் என்ற நூலின் ஆசிரியரான கலாநிதி சி.மௌனகுரு அவர்கள் " யாழ் நூல் பற்றி பல அறிஞர்கள் போற்றிப் புகழ்ந்துள்ளனர் .

எனினும் முறையான மதிப்பீடு ஒன்றினை யாரும் இதுவரை செய்ய முயன்றதில்லை" என்று குறிப்பிடுகின்றார். சுவாமிகள் இயற்றிய யாழ்நூல் என்னும் இசைத்தமிழ்நூல் செந்தமிழ்ப் பேரன்பர் நச்சாதுப்பட்டி பெ.ராம சிதம்பரம் செட்டியார் அவர்களின் பொருளுதவி கொண்டு 1947 கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்டது.

சுமார் 45 வருட கனவினால் 15 ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து பல இன்னல்களின் பின் இசைத்தமிழ் நூல் தோற்றம் பெற்றது .

யாழ் நூலார் கடந்த பாதைகள்

யாழ் நூல் தோற்றம் பெறுவதற்கு அவருடைய ஆரம்ப சூழல் ஒரு காரணமாக காணப்பட்டதோடு அதற்கு அவர் பல துயரங்களை சந்தித்தார், 1937 இல் இமயமலையை காண வேண்டும் என்ற ஆவலால் அதனை காணச் சென்று ராமகிருஷ்ண மிஷன் நடத்தும் மயாவதி என்ற ஆசிரமத்தில் தங்கினார். அங்கு இருந்தபொழுது ஒரு ஆங்கில சஞ்சிகை எடுத்து நடாத்தும் பொறுப்பும் அவருக்கு ஏற்பட்டது. இயற்கை எழில் கொஞ்சும் அமைதியான சூழ்நிலையில் யாழ் நூல் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். இந்த ஆராய்ச்சிக்காக ஆசிரியப் பணியை இழக்கும் நிலையும் ஏற்பட்டது. தன் ஆராய்ச்சிக்காக தமிழ் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று அதன் ஆய்வை அவர் மேற்கொண்டார். இவ்வாறு பல இன்னல்களை கடந்து பதினைந்து ஆண்டு காலம் ஆராய்ந்து கண்டுணர்ந்த யாழினை கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவுடன் திருக்கொள்ளம்பூதூர் திருக்கோயிலில் நாளும் செந்தமிழ் இசை பரப்பிய ஞானசம்பந்தனின் சந்நிதானத்தில் 1947 ஆம் ஆண்டு ஆனித் திங்களில் அரங்கேற்றினார். யாழ் நூல் அரங்கேற்றத்திற்கு முன்பே உடல்நிலை பாதிப்புற்றார். வைத்தியர் நீண்ட தூரம் சுவாமி அவ்களை பயணிக்க வேண்டாம் என்ற கோரிக்கை விடுத்தார். 45 வருட கனவு நிறைவேறப் போகிறது என்ற அவாவினால் வைத்திய ஆலோசனையை மீறி அன்னார் திருக்கொள்ளம்புதூர் யாழ்நூல் அரங்கேற்றத்துக்கு கலந்து கொண்டார். அதன்பின் உடல் நிலை மிக மோசமாக பாதிக்கப்பட்டு தன் நாடு திரும்பினார். தமிழ் மொழிக்கும். தமிழர்களுக்கும் விடிவை தேடி தொலைதூரம் பயணித்த அன்னார் ஈழத்தின் சுதந்திர விழாவிற்கு முன்பு 1947 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19 சனிக்கிழமை தன் தொலை தூர பயணத்தில் மீளா துயில் கொண்டார். அன்னாரின் பூதவுடல் மட்டக்களப்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டு சுவாமி அவர்கள் உருவாக்கிய சிவானந்த வித்தியாலயத்தின் முன்றலிலுள்ள மரத்தின் கீழ் அடக்கம் செய்யப்பட்டது. அவர் அடக்கம் பெற்ற கல்லறை சமாதி மேல் அவர் எழுதிய உயிர்த்துடிப்பு மிக்க கவி வரிகள் பொறிக்கப்பட்டுள்ளன. " வெள்ளை நிற மல்லிகையோ ? வேறெந்த மாமலரோ ? வள்ளல் அடியினைக்கு வாய்த்த மலரெதுவோ? வெள்ளைநிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது இவ்வாறு அவருடைய கவிவரிகள் அவருடைய கவித் திறனிற்கும்.

அவருடைய தமிழ்ப் புலமைக்கும் , அவருடைய பக்திக்கும் மிக முக்கிய ஓர் எடுத்துக் காட்டாக காணப்படுகின்றது. அவருடைய 130 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு அவருடைய வரலாற்றை மீட்டிப்பார்ப்பதில் தென்கிழக்கு பல்கலைக்கழக நூலகம் பெருமிதம் கொள்கின்றது .

தவக்கால சிந்தனை

திருப்பாடுகளின் குருத்தோலை ஞாயிறு

"ஆண்டவர் பெயரால் வருபவர் ஆசி பெற்றவர் உன்னதங்களிலே ஓசான்னா" தவக் காலத்தின் இறுதி வாரத்தில் பாதம் பதிக்கின்றோம். குருத்தோலை ஞாயிறான இன்றைய தினம் பரிசுத்த வாரத்தின் ஆரம்பமாகவும் இந்த வாரம் முக்கிய தினங்களை கொண்டதாகவும் அமைகின்றது.

இயேசு வெற்றி வீரராய் எருசலேமில் பிரவேசித்த போது மக்கள் அவரைச் சூழ்ந்து தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என புகழ்பாடினர். குருத்தோலைகளை கையில் ஏந்தி ஓசான்னா பாடினர்.

இந்த ஓசன்னா பவனி இயேசு சிலுவைப் பாதையில் பயணிப்பதற்கு புதிய எழுச்சியாக அமைந்ததுடன் அதற்கான துணிவையும் அவருக்கு வழங்கியது.

இன்றைய இரண்டாம் வாசகம், "கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாய் இருக்கும் நிலையை வலிந்து பற்றிக் கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதவில்லை.ஆனால் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்.மனித உருவில் தோன்றி சாவை ஏற்கும் அளவுக்கு அதுவும் சிலுவைச் சாவையே ஏற்கும் அளவுக்குக் கீழ்ப்படிந்து தம்மையே தாழ்த்திக் கொண்டார்."எனத் தொடர்கிறது.பரிசுத்த வாரத்தில் அடியெடுத்து வைக்கும் நாம் இயேசுவிடம் காணப்பட்ட இலட்சிய வேட்கையைக் கொண்டிருக்க வேண்டும். இயேசுவின் போதனைகளுக்கு கீழ்ப்படியவும் உண்மை மற்றும் நீதிக்கு சான்று பகிரவும் நாம் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.நமக்காக தன்னை பலியாக்கும் அளவுக்கு இயேசு நம் மீது அன்பு கூர்ந்தார். இருளை வெற்றிகொள்ளும் ஒளியைப் போல தீமையை வெற்றி கொள்ள நாம் நன்மை செய்ய வேண்டும்.அதையே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்க்கின்றார்.

எல்லாக் காலத்திலும் இயேசுவின் துணையோடு சோதனைகளையும் துன்பங்களையும் வெற்றிகொள்ள விசுவாசத்துடன் ஓசன்னா பவனியில் பங்கெடுப்போம்.

எல்.செல்வா...

திகதி 07.04.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB
மஹஜன சம்பத் சீட்டிழுப்பு இலக்கம்: 4730 ரூ.11,157,180.00
C 0 8 9 7 7 9 ரூ.20,933,839.00
தன நிதானய சீட்டிழுப்பு இலக்கம் : 760 ரூ. 3,674,260.00
V 06 57 59 79 வெற்றி இலக்கங்கள் அடுத்த சீட்டிழுப்பின் ஜக்பொட் பரிசு ரூ. 106,759,856.80
ராசி சுப பலன் சீட்டிழுப்பு இலக்கம்: 0039 ரூ.4,469,280.00
கடகம் 39 42 46 55 அடுத்த சீட்டிழுப்பின் ஜக்பொட் பரிசு ரூ.2,651,205.00
எஸ் 23+ Mega POWER மெகா பவர் சீட்டிழுப்பு இலக்கம் 1076 ரூ.5,058,960.00
ரூ.246,497,162.00
Q 11 01 65 72 79 ரூ.10,000,000.00 ரூ.10,000,000.00
National Lotteries Board Web : www.nlb.lk

எதிரணியின் தேவைக்கேற்றபடி...

(06ஆம் பக்கத் தொடர்)

அத்துடன், சகல உறுப்பினர்களும் சபையில் வழமை போன்று அரசியல் குறித்த பிரச்சினையை முன்வைத்தமை கவலையளிக்கிறது என்பதை மீண்டும் நினைவுபடுத்தி, இன்றையதினம் இதனை அனைவரும் மனத்தில் கொண்டு விவாதத்தின் இறுதியில் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வேலைத்திட்டமொன்றை முன்வைக்கும் வகையில் செயற்படுமாறு நான் உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றேன்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

இதுஒருபுறமிருக்க, இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பதற்கு முன்வருமாறு விடுத்த அழைப்பையோ அல்லது அரசாங்கத்தைப் பொறுப்பெடுக்குமாறு விடுத்த அழைப்பையோ ஏற்றுக் கொள்வதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி போன்ற எந்தவொரு கட்சியும் முன்வரவில்லை.

அது மாத்திரமன்றி தற்போதைய நிலையிலிருந்து மீள்வதற்கு ஆக்கபூர்வமான யோசனைகளையும் அவர்கள் முன்வைத்திருக்கவில்லை. இந்த விடயம் அரசியல்வாதிகள் மத்தியில் மாத்திரமன்றி பொதுமக்கள் மத்தியிலும் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதைக் காண முடியும்.

இதேவேளை, பொதுமக்கள் தமது பிரச்சினைகளை முன்வைத்து போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து வரும் நிலையில், அவற்றைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் முயற்சிக்கின்றன. குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி எதிர்க்கட்சித் தலைவரின் தலைமையில் தலவாக்கலை பகுதியில் அரசியல் கூட்டத்தை நடத்தியிருந்தது.

பொதுமக்கள் தமது பிரச்சினைகளையும் அதிருப்தியையும் வெளிப்படுத்துவதற்கு தாமாக முன்வந்த நிலையில், இதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அதனை அரசியல் கூட்டமாக அவர்கள் மாற்றியிருந்தனர். ஆர்ப்பாட்டம் என்பது வீதியில் அல்லது பொதுவான இடத்தில் நடத்தபடுவதே வழமையாக இருக்கும் நிலையில், மைதானமொன்றில் இதனை நடத்தியமை குறித்து 'ஒரு நாள் சம்பளத்தைக் கைவிட்டு உண்மையான நோக்கத்தில் போராட்டத்துக்கு வந்தவர்கள்' அதிருப்தியுடன் தெரிவித்தனர். அரசியல்வாதிகள் தம்மைத் தொடர்ந்தும் ஏமாற்றி வருவதாக அவர்கள் விமர்சித்து வருகின்றனர். இவ்வாறான நிலைமை நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்படுகிறது.

இலங்கைக்குத் தோள் கொடுக்கும்...

(06ஆம் பக்கத் தொடர்)

இந்தியாவைப் போல சீனா "இந்தக் கடனை பின்பு செலுத்துங்கள்" என்று பெருந்தன்மை காட்டும் என்று எதிர்பார்க்கவே முடியாது. இந்த நிலையில் இந்தியாவின் பெருந்தன்மையை இலங்கை மக்களே தற்போது பாராட்டி வருகின்றனர்.

சீனாவிடம் இருந்து இலங்கை, பாகிஸ்தான் அதிகளவில் கடன் வாங்கியதும், சீனாவில் இருந்து பரவத் தொடங்கிய கொரோனா வைரசினால் உருவான ஊரடங்கும் இந்த 2 நாடுகளையும் பொருளாதாரத்தில் வீழ்த்தி விட்டதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

பாகிஸ்தானும் சீனாவிடம் இருந்து அதிகளவில் கடன்கள் பெற்றுள்ளது. பாகிஸ்தானுக்கு சீன EXIM வங்கி, உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு 1.6 சதவீத வட்டி வீதத்தில் 11 பில்லியன் அமெரிக்க டொலரையும், சீனா பாகிஸ்தானின் 'மின்கொரிடோர்' திட்டங்களுக்கு 56 சதவீத வட்டி வீதத்தில் 15.5 பில்லியன் டொலரையும் பாகிஸ்தானுக்கு கடனாக வழங்கியுள்ளன. இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட அனைத்துக் கடன்களும் அமெரிக்க டொலர் மதிப்பீட்டில் குறிப்பிடப்படுகின்றன. இது கடன் வாங்கும் நாடுகளுக்கு சிரமத்தை ஏற்படுத்தலாமென பொருளாதார வல்லுநர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். தங்களது நாட்டு கரன்சிகளின் மதிப்பு குறையும்போது டொலருக்கு நிகரான மதிப்பு அதிகரிக்கும். இது சிக்கலை ஏற்படுத்தும்.

பாகிஸ்தானில் ஆண்டுக்கு சராசரியாக ஆறு சதவீதம் என்ற அளவில் அந்தநாட்டின் நாணயத்தின் மதிப்பு குறைந்து வருகிறது. இதேபோல் இலங்கை கரன்சியின் மதிப்பும் குறைந்துள்ளது. இதனால் இருநாடுகளுக்கும் சீனா வழங்கிய கடன் மதிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால்தான் இருநாடுகளும் தற்போது பொருளாதார நெருக்கடியில் சிக்கி உள்ளன என ஒரு தரப்பு நிபுணர்கள் கூறுகின்றனர்.

இவை ஒருபுறமிருக்க, இலங்கைக்கு இந்தியா தொடர்ச்சியாக உதவிகள் செய்து வருகிறது. இந்நிலையில் மூத்த சகோதரராக இருந்து இலங்கைக்கு உதவும் இந்தியாவுக்கும், பிரதமர் நரேந்திர மோடிக்கும் நன்றி என இலங்கையின் முன்னாள் கிரிக்கெட் வீரர் சனத் ஜெயசூர்யா கூறியுள்ளார்.

24 மணி நேரத்தில் 36,000 மெட்ரிக் தொன் பெட்ரோல், 40,000 மெட்ரிக் தொன் டீசல் ஆகியவற்றை இலங்கைக்கு இந்தியா வழங்கி உள்ளது என இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவும் வகையில் இந்தியா இலங்கைக்கு வழங்கிய 500 மில்லியன் அமெரிக்க டொலர் எண்ணெய்க் கடனின் ஒரு பகுதியாக இது வழங்கப்பட்டுள்ளது. மார்ச் மாதம் 5 ஆம் திகதி முதல் இந்தியா சார்பில் இலங்கைக்கு 5வது முறையாக எரிபொருள் உதவி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியாவின் உதவிக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் வீரர்கள் இந்தியாவுக்கும், பிரதமர் நரேந்திர மோடிக்கும் நன்றி தெரிவித்து வருகின்றனர். அதன்படி இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனும், முன்னாள் அமைச்சருமான அர்ஜுன ரணதுங்க, அதிரடி தொடக்க ஆட்டக்காரரான சனத் ஜெயசூரியா ஆகியோர் நன்றி தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சனத் ஜெயசூர்யா குறிப்பிடுகையில் "மூத்த சகோதரராக இந்தியா அண்டை நாடாக உள்ள நமது நாட்டுக்கு உதவி வருகிறது. இந்திய அரசு மற்றும் பிரதமர் நரேந்திர மோடிக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். நாங்கள் மீண்டு வருவோம் என்று நம்புகிறோம். இந்தியா மற்றும் பிற நாடுகளின் உதவியுடன் இந்தப் பிரச்சினையில் இருந்து வெளியேற வேண்டும்" எனக் கூறியுள்ளார்.

இலங்கைக்கு நெருக்கடி வேளையில் கைகொடுத்து உதவுகின்ற இந்தியாவின் நட்புறவுக்கு இலங்கையில் பலதரப்பட்ட மக்களும் தற்போது பாராட்டுத் தெரிவித்து வருகின்றனர்.

AUTOWHEEL
FAMILY RESTAURANT IS NOW OPEN
AA CEYLON
SRI LANKAN LUNCH NOW AVAILABLE
TAKEAWAY RS. 250/- PER PACK
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha, Colombo 03
Contact : 0772702523 - Mr. Harim

கொழும்பில் இருக்கும் வீடு ஒன்றின் சாதாரண பாரமான வேலை செய்யக் கூடியவர்கள் தேவை

வயது 25 - 35 நாள் ஒன்றுக்கு ரூபாய் 2100/- வழங்கப்படும்.

தங்கி வேலை செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும். மதுபான பழக்கம் இல்லாதவராக இருக்க வேண்டும். தேசிய அடயாள அட்டை கிராமசேவகர் கடிதம் மற்றும் பொலிஸ் உறுதி கடிதம் இருப்பின் விரும்பத்தக்கது, வேறு சான்றிதழ்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு கொள்ள வேண்டிய
இல. லலித்
076-5743935

2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

2022ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

2021ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொருமுறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரை அல்லது மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

தேர்தல் ஆணைக்குழு
011-2868441 / www.elections.gov.lk

THE WORLD BANK
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture
Funded by The European Union

கமத்தொழில் அமைச்சு

பெறுகை அறிவித்தல்

சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியிடப்பட்டது

கடன் இலக்கம்: CR5873 LK Project ID No. P156019

விஷேட செயற்றிட்டங்களுக்காக விவசாய நவீன மயமாக்கல் கருத்திட்டத்தை ஆரம்பித்து ஒரு வருட காலத்திற்கு நடைமுறைப்படுத்துவதற்காக பண்ணையாளர்கள் கம்பனிகளை வாடகைக்கு அமர்த்துதல் பெறுகை இலக்கம்: டுமு-ஆழுயீஆரு-277937-ஊே-சுகுடீ

மேற்படி பெறுகைக்கான மூடும் திகதியை தவிர்க்க இயலாத காரணங்களினால் நீடிப்புச் செய்வதற்கு கருத்திட்ட பெறுகைக் குழுத்தலைவர் தீர்மானித்துள்ளார் திருத்தப்பட்ட மூடும் திகதி 2022.04.19 அன்று பி.ப. 2.00 ஆகும். விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாகவே அவைகள் திறக்கப்படும்.

தலைவர்,
கருத்திட்டப் பெறுகைக்குழு,
விவசாயத்துறை நவீனமயமாக்கல் கருத்திட்டம்,
கமத்தொழில் அமைச்சு,
இல. 123/2, பன்னிபிட்டிய வீதி,
பத்தரமுல்ல.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடு சென்ற புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் வழங்கல் - 2022

தகைமைகள்

★ 2020 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்திபெற்று அரச பல்கலைக்கழகமொன்றில் முழுநேர உள்வாரி பட்டப்படிப்பு பாடநெறியின் முதல் வருடத்தில் கற்பவராக இருத்தல் வேண்டும்.

★ 2020 ஆம் ஆண்டுக்கான க.பொ.த (சா.த) பரீட்சையில் குறைந்தபட்சம் கணிதம் உள்ளிட்ட 06 பாடங்களில் சித்தி பெற்று அதில் 03 பாடங்களில் திறமைச் சித்தியுடன் சித்தியடைந்து க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்பவராக இருத்தல் வேண்டும்.

★ 2021 ஆம் ஆண்டிற்கான 5ம் ஆண்டு புலமைப் பரீட்சையில் மாவட்ட வெட்டுப்புள்ளியில் சித்தியடைந்திருத்தல்.

விண்ணப்பங்கள் பணியக இணையத்தளத்தினூடாக (online) 08.04.2022 ஆம் திகதியிலிருந்து 31.05.2022 ஆம் திகதி வரையில் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

விண்ணப்பிப்பதற்கு
www.slbfe.lk இணையத்தளத்திற்கு உட்செல்லவும்.

தவத்திரு சிவயோக சுவாமிகளின் பங்குனி ஆயிலிய ஆண்டுக் குருபூஜை 2022

தவத்திரு யோகர் சுவாமிகள் 29.05.1872 ஆம் ஆண்டு மாவிட்டபுரத்தில் திரு அவதாரம் செய்தார். அவருடைய தந்தையார் கொழும்புத்துறையை சேர்ந்த அம்பலவாணர் அவருடைய தாயார் மாவிட்டபுரத்தை சேர்ந்த சின்னாச்சிப்பிள்ளை சுவாமிகளின் இளமைப்பெயர் சதாசிவன்.

சுவாமிகளின் நற்சிந்தனைப் பாடல்களிலிருந்து அவருடைய பெயர் யோகநாதன் என்று அறியமுடிகின்றது. சுவாமிகளின் சிறு வயதிலே தாயார் இறக்க தந்தையாரின் சகோதரி முத்துப்பிள்ளை என்பவரால் வளர்க்கப்பட்டார். தனது கல்வியை யாழ்ப்பாணம் செம்பத்திரிசியார் கல்லூரியில் கற்றார். கல்வியை முடித்துக் கொண்டு தந்தையாருடன் மஸ்கொலியாவில் உள்ள கடைக்குச் சென்றார். ஆனால் அவருக்கு ஆன்மீக நாட்டம் அதிகரிக்க அதிகரிக்க மஸ்கெலியாவில் இருந்து வந்து கிளிநொச்சி இரணைமடுவில் களஞ்சியப் பொறுப்பாளராக கடமையாற்றினார். இருந்தும் அவருக்கு ஆன்மீக நாட்டம் நல்லூர் தேரடியில் ஞான உபதேசம் புரிந்த செல்லப்பா சுவாமிகளின் மீது ஏற்பட்ட குரு சீட பந்தம் காரணமாக சுவாமி 46 மைல் நடந்து கிளிநொச்சியில் இருந்து ஒரு நாள் நல்லூர் தேரடிக்கு வந்து தனது குருவிடம் சரணடைந்தார்.

முதல் சந்திப்பில் 'யாரடா நீ' என்று சிங்கம் கர்ச்சிப்பது போல் செல்லப்பா மூர்த்தம் .... சுவாமி தனது குருவை நல்லூர் தேரடியில் கண்ட பெற்ற அனுபவத்தை

'ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரில்
பேசாதனவெல்லாம் பேசினான் கூசாமல் நின்றேன்
நீ யாரடா வென்றே அதட்டினான்
அன்றேயான் பெற்றேன் அருள்'

சுவாமிகளை செல்லப்பா குரு பல சோதனைகளுக்கு உட்படுத்தி ஆட்கொண்டார்.

ஒரு பொல்லாப்பும் இல்லை
எப்பவோ முடிந்த காரியம்
நாம் அறியோம்
முழுவதும் உண்மை

என்ற மகா வாக்கியத்தை உபதேசித்து நாற்பது நாட்கள் தேரடியில் நிட்டையில்; இருந்து பின்னர் கால் நடையாக கதிர்காமம் சென்று கிழக்கிலங்கை வாயிலாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

அச்சந்தர்ப்பத்தில் தேரடியில் இருந்த யோகநாதனைக் காணாத அடியவர்கள் செல்லப்பா சுவாமியிடம் யோகர் சுவாமி எங்கே என்று கேட்டனர். அதற்கு அவர் 'அவன் செத்துப் போய் விட்டான்' என்று பதில் அளித்தார்.

சுவாமிகள் பாத யாத்திரையை முடித்துக் கொண்டு 1911 ஆம் ஆண்டு கொழும்புத்துறை இலுப்பை மரத்தடியில் தனது துறவை 1914 ஆம் ஆண்டு வரை மேற்கொண்டார். பின்னர் சுவாமிகளுக்கு கொழும்புத்துறையைச் சேர்ந்த திரு திருமதி சம்பந்தன் குடும்பத்தினர் தமது காணியில் சிறு குடில் அமைத்து அங்கே வந்து அமருமாறு வேண்ட சுவாமிகளும் அவர்களுடைய வேண்டுதலை ஏற்று அங்கே சென்று அவ்விடத்தை ஒரு தெய்வீக இருப்பிடமாக மாற்றினார்.

அங்கே கந்தபுராணப் படிப்பு, பெரிய புராணப்படிப்பு தேவார திருவாசம் ஓதுதல் என்பன நடைபெறும் சுவாமி திருமுறைகளில் மிகவும் குறிப்பிடத்தக்க கோளறு பதிகம், இடர்களைப் பதிகம், திருத்தாண்டகப் பாடல்களை அடியார்களுடன் சேர்த்து பாடுவார்.

தமது குடும்பப்பிரச்சினைகளை கூறி வரும் அடியவர்களுக்கு தான் சாத்திரம் பார்க்கும் சாத்திரக்காரனல்ல நீங்கள் கோளறு பதிகம், இடர்களைப் பதிகங்களை பாடுள் என்று கூறுவார்.

கொழும்புத் துறை ஆச்சிரமத்திற்கு அன்றைய நாட்களில் சாதி, இன, மத, பேதங்களுக்கு அப்பால் சுவாமியிடம் ஆன்மீக வழிகாட்டல்களைப் பெற பெரும்திரள் மக்கள் கூடுவர். சுவாமிகள் யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் சிவதொண்டன் நிலையத்தையம், செங்கலடியில் ஒரு நிலையத்தையும் நிறுவி. புராண படிப்பு, தியானம், போன்றவை அங்கே நடைபெறச் செய்தார். சிவத்தொண்டர் பத்திரை 1935 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டது. இப்பத்திரிகை உயர் அன்மீக பண்புகளைக் வெளிக்கொணர்வதாக அமைந்தது.

மேலும் சுவாமிகளின் நற்சிந்தனை என்னும் பாடல்கள் அடங்கிய நூல் மிகவும் பயன்உள்ள பாடல்களையும் திருமுகங்களையும் கொண்டுள்ளது. கந்தபுராண கலாச்சாரம் என்று போற்றப்படும் வடபகுதியில் உள்ள மாணவர்கள் இந்த நற்சிந்தனைப் பாடல்களை தினம் தோறும் பாடசாலைகள் வீடுகளில் பாடி வர வேண்டும். இதனைக் கருத்திற் கொண்டு யாழ் மாவட்ட பாடசாலை சைவசமய ஆசிரியர்களுக்கும், பாடசாலை நூல் நிலையங்களுக்கும் நற்சிந்தனை நூல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதை மாணவர்களும், பாடசாலை நிர்வாகங்களும் நல்ல முறையில் பயன்படுத்தி ஒழுக்கம் மிகுந்த நல்ல மாண சமுதாயம் ஒன்றை கட்டி எழுப்புவதோடு சுவாமிகளின் நல்ல சிந்தனைகளை தினந்தோறும் செவிமடுப்போம்.

ஈழத்து சித்தர் பரம்பரை ஒன்று உண்டு என்பதையும் அதை நாம் நம் எதிர்காலச் சந்ததியினருக்கு அறிவிக்க வேண்டிய தார்மீகக் கடமை எமக்குண்டு. அன்று சுவாமிகளிடம் சோல்பரி ஆளுனர் மகன் சாந்த சுவாமி அமெரிக்க சைவ அதீன பீட சிவாய நம சுப்பிரமுனி, மார்;கண்டு சுவாமி செல்லத்துரை சுவாமி போன்றொர்கள் சுவாமிகள் மேல் அளவற்ற பக்தி உள்ளவர்களாக காணப்பட்டனர்.

சாந்த சுவாமிகள் சுவாமியின் நற்சிந்தனைப் பாடல்களை எனது குருவின் வாசகம் என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து எழுதியுள்ளார்.

எனது நண்பர் ஒருவர் ஒரு கருத்தை அண்மையில் கூறினார். தாங்கள் சிலர் சேர்ந்து வட இந்திய ரிஷிகேஷ் யாத்திரை போய் இருந்தோம். அங்கு ஒரு மடாலயத்தில் தங்க வைக்கப்பட்டு எங்களுக்கு சற்சங்க வகுப்புகள் நடைபெற்றது. எங்களோடு வந்த அன்பர் ஒருவர் வகுப்பு நடாத்தியவரைக் கேட்டார்.

எங்களுடைய நாட்டில் ஏற்பட்ட பிரச்சினைக்கு ஒரு தீர்வு கிடைக்காதா என்று அப்போது அவர் கூறினார் உங்கள்நாட்டில் உள்ள யோகர் சுவாமிகள் கூறிய படி வாழ்ந்தால் உங்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்று எனவே நாம் நம் குருநாதர் சிவயோகநாதர் கூறிய வழியில் நடந்து ஒழுக்கம் உள்ள ஒரு சமுதாயத்தை உருவாக்குவோம்.

சுவாமிகள் பல அற்புதங்களை நிகழ்த்தினார். முன்னால் அரசாங்க அதிபர் திரு சிறீகாந்தா எழுதிய 'நான் கண்ட பெரியார்' என்ற நூலில் அற்புதமாக எழுதியுள்ளார்.

சுவாமிகள் தேவாரம் திருவாசகம் என்பவற்றை தானும் ஓதி அன்பர்களுடனும் சேர்ந்து ஓதுவார். அன்பார்ந்த சைவப் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளுக்கு சிறுவயதிலிருந்தே தேவார திரவாசங்களை ஓதுவதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுங்கள். சுவாமி கோளறு திருப்பதிகம், இடர்களைத் திருப்பதிகம் போன்றவற்றை தினம் தோறும் பாராயணம் செய்யும்படி கூறி உள்ளார்.

ஒருமுறை சுவாமிகள் காசியிலிருந்து எழுதிய கடிதத்தில் நான் 'யாழ்ப்பாணத்துக்கு கறுமாதி செய்துவிட்டேன்'; என்று எழுதியுள்ளார்.

நல்லைக் கந்தப் பெருமான் மீது கொண்ட அளவற்ற பக்தி காரணமாக தனது நற்சிந்தனை என்னும் தெவிட்டாத அமுதத்தில் பல பாடங்களை நல்லூர் கந்தப்பெருமான் மீது பாடியுள்ளார்.

சுவாமிகள் வாழ்ந்த யாழ்ப்பாணத்தில் சைவ அன்பர்கள் ஒவ்வருவரினதும் இல்லத்தில் நற்சிந்தனை என்ற சுவாமிகள் கைப்பட எழுதிய நூல் கட்டாயம் இருக்க வேண்டும். சுவாமிகளின் ஆன்மா 1964ம் ஆண்டு பங்குனிமாத ஆயிலிய நட்சத்திரத்தில் இவ்வெற்றுடலை விட்டு நீங்கினாலும் எம்மத்தியில் இன்றும் நின்று, உலாவி எம்மையெல்லாம் வழ நடத்துகின்றார் என்பது உண்மை. சுவாமி யோகநாதர் என்ற நாமம் இவ்வையகம் இருக்கு மட்டும் ஓங்கி ஒலித்துக் கொண்டே இருக்கும்.

லோகேஸ்வரன் ...✍

பிரத்தியேக சலுகைகளை அறிமுகப்படுத்துகிறது விசா

இலங்கையில் தனது அட்டைதாரர்களுக்காக பிரத்தியேக விசா சலுகைகளை காட்சிப்படுத்தும் புதிய தளத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக விசா இன்று அறிவித்துள்ளது. சிங்களம் மற்றும் தமிழ் புத்தாண்டைக் கொண்டாடுவதற்கான பண்டிகைக் காலம் ஆரம்பித்துள்ள நிலையில் , பொதுவாக நுகர்வோர் தங்கள் அட்டைகளில் பணத்திற்கான சிறந்த மதிப்பு மற்றும் சிறப்புச் சலுகைகளை எதிர்பார்க்கிறார்கள்; எனவே, இந்த புதிய தளம் கொள்வனவாளர்களுக்கு ஊக்கமளிக்கிறது.

விசா Debit மற்றும் credit அட்டை வைத்திருப்பவர்களுக்கான சிறப்புச் சலுகைகள், விசா எஸ்எல் ஒப் பர்கள் எனப்படும் பிரத்யேக தளத்தில் கிடைக்கின்றன. இந்தச் சலுகைகள் நுகர்வோர் (சில்லறை விற்பனை) மற்றும் வணிக (வணிகம்) விசா அட்டை வைத்திருப்பவர்களுக்கும் செல்லுபடியாகும். மேலும், உள்நாட்டு மற்றும் சர்வதேச வணிகர்களுக்கு ஆண்டு முழுவதும் பல்வேறு சலுகைகள் வழங்கப்படவுள்ளன. அத்தகைய விசா அட்டை வைத்திருப்பவர்கள் இணையத்தளத்தில் அல்லதுவிற்பனை நிலையங்களில் இவற்றைப்.பயன்படுத்தலாம்.

இலங்கை மற்றும் மாலத்தீவுகளுக்கான வதிவிட முகாமையாளர் அவந்தி கொலம்பகே, சலுகைகள் தளத்தின் அறிமுகம் குறித்து கருத்து தெரிவிக்கையில், "ஏப்ரல் மாதம் இலங்கை மக்களின் புத்தாண்டு காலத்தைக் குறிக்கிறது, நுகர்வோர் சிறந்த ஷொப்பிங் சலுகைகளை எதிர்பார்க்கிறார்கள். எங்கள் வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேக சலுகைகளை வழங்குவதன் மூலம் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், எனவே உங்கள் விசா அட்டைகள் மூலம் பணம் செலுத்தும்போதுஅல்லது செலவழிக்கும் போது சேமிக்கலாம். தளம் வழி செலுத்துவதற்கு எளிதானது, விசா அட்டை வைத்திருப்பவர்கள் பல்வேறு வணிகர்களில் சலுகைகளைத் தேடவும், தேர்ந்தெடுக்கவும் மற்றும் மீட்டெடுக்கவும் அனுமதிக்கிறது. இந்த தளத்தின் மூலம் வழங்கப்படும் சேமிப்புகள் மற்றும் தள்ளுபடிகள் மூலம் எங்கள் அட்டைதாரர்களுக்கு இந்த புத்தாண்டு பண்டிகை காலத்தை மிகவும் மகிழ்ச்சிகரமானதாக மாற்ற முடியும் என நம்புகிறோம்.

சில்லறை விற்பனை, ஆரோக்கியம், ஹோட்டல்கள், பயணம், தொலைத்தொடர்பு நிறுவனங்கள், பயன்பாடுகள், உடல்நலம், காப்புறுதி போன்ற துறைகளில் உள்ள சலுகைகளை நுகர்வோர் அனுபவிக்கலாம். மற்றும் ஒன்லைன் மற்றும் ஒப்லைன் விற்பனை நிலையங்களில் தள்ளுபடிகளைப் பெறலாம்.

சோ.சந்திரசேகரம்: ஓர் ஆலமரம் சாய்ந்தது

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான உறவு. பதுளுஓயா நதிக்கரை தீரத்தில், பேராதனையில், கண்டியில், கொழும்பில், யாழ்ப்பாணத்தில், மதுரையில், சென்னையில் என்று மணிக்கணக்கில், சூரியனுக்குக்கீழ் அனைத்தையும் பேசித் தீர்த்த பெருமகன் சொந்தமாய், சகோதரனாய், ஆசானாய், அரிய நண்பனாய், கல்விமானாய், எழுத்தாளனாய், வசீகரப் பேச்சாளனாய் இப்படி ஓர் அதிர்ச்சியைத் தந்துவிட்டுப்போன கோலம் என்ன? விக்கிரமசிங்க காலையில் அனுப்பி வைத்த செய்தி கேட்டு நிலைகுலைந்து போனேன். கண் கலங்கினேன். அவரின் என்றும் புன்னகை சிந்தும் முகம் மனத்திரையில் வந்து போகிறது. தை.தனராஜும் மா.கருணாநிதியும் இன்னும் நேசர்களும் ஒருங்கிணைந்து இறுதிக் கிரியைகளை சீராக ஒழுங்கு செய்த காட்சிகளை ஒளித்தளத்தில் பார்த்தபோது நெஞ்சம் பதறியது.

நடப்பது உண்மைதானா? நடந்ததெல்லாம் மெய்தானா? அப்பெருமகன் இருந்த இடமெல்லாம் அயோத்திதான். அவர் எங்கிருந்தாலும் அந்த இடம் பூ மணக்கும்; சிரிப்பு மலரும்; சாந்தமென தென்றல் வீசும்; அமைதி பரிமளிக்கும்; சிந்தனை சிறகடிக்கும்; விமர்சனங்கள் சரவெடியாய்; அன்பான விசாரணைகள்; ஆறுதல் தரும் பேச்சு; எதையும் எளிதாய், மிக எளிதாய் கடந்து போகும் சித்தனின் போக்கு; யார் என்ன சொன்னாலும் உற்றுக்கேட்கும் நேசம்; எதையும் தன் சுயபரிசீலனையில் உரைத்துப்பார்க்கும் செம்மை; எளிமை இயல்பு; பாராட்டு வழங்குவதில் அவர் வள்ளல்; தட்டிக்கொடுப்பதில் அவர் தந்தை; மத பேதம் அறியான்; இன வேற்றுமை பாரான்; அவன் சந்நிதானம் சமத்துவத்தின் பேரரரசு; வாசிப்பு அவன் மூச்சு;எழுத்து அவனுக்கு இயல்பாய் வந்தது. காற்றாய், இசையாய், ஓசையாய் இந்த பிரபஞ்சத்தில் அப்பேருயிர் கரைந்தது என்ன? எல்லாம் தோற்ற மயக்கங்களோ? நெருநல் உளனொருவன் இன்றில்லை. மனம் என்னும் ஆழியில் துள்ளித்துள்ளி எழும் நினைவுகள்.

உலக நடப்புகள் அவன் சிந்தனை முரசில் மோதி எதிரொலிப்பதை இனிக் கேட்க மாட்டோமா? நம் சின்னப்பெருமை எல்லாம் சொல்லி மகிழும் வேப்ப மர நிழல் அது. யாதும் ஊரே, யாவரும் கேளிர் என வாழ்ந்தவன்.

எந்த அவைக்கும் அழகு சேர்த்தவன். சாந்தாவின் இனிய நேசன். அப்பொன்மகளை நினைத்தும் அழுதேன். வாழ்வு துயரின் அவிழ்க்கமுடியாத முடிச்சா?

இலங்கையில் கல்வி எனும் வானில் என்றும் அவர் ஒளிவீசும் தாரகை. லட்சக்கணக்கான ஆசிரியர்களின் உள்ளக்கமலத்தில் அவன் என்றுமுறைவான். அவர் ஒரு பல்கலைப் பேராசிரியர். அவருக்காக இன்று கண்ணீர் உகுப்போர் பல்கலைக் கழக வளாக மதில்களுக்கு வெளியில் உறைவோர்.

இந்த வசீகரத்தை அவர் பெற்ற வரம் என்ன? எப்போதும் அவரின் இல்லம் இனிய பண்பாளர்களால் நிறைந்து வழிந்தது. ஒரு மாற்றுக்குறையாத மன்னவன் அவர்.

நம் கல்விப்புலத்தில் ஆழமாய் வேரோடி நின்ற ஓர் ஆலமரம் சாய்ந்து விட்டது. நீங்கள் சென்று விட்ட திசை நோக்கித் தொழுகின்றேன். சந்திரி! சென்று வாருங்கள்!

மு.நித்தியானந்தன் ...✍
லண்டன்

கலா விஸ்வநாதன் எனும் கலைஞன்

கவிப்பேரரசு கண்ணதாசன் மன்றத்தை 1980களில் கொழும்பில் ஆரம்பித்து பல கவியரங்குக ளை நடாத்தி கொழும்பு கலைஞர்களுடன் இணைந்து,கலையார்வத்தை ஏற்படுத்தினார். அத்தோடு மலையக கவிஞர் சங்கம் ஆரம்பித்து ஒன்றுகூடலை ஏற்படுத்த முனைந்தவர்.

'கவின்' 'ஜனநேசன்', 'மட்டக்குளியான்' ஆகிய புனைப்பெயர்களில் பத்திரிகைகளுக்கு கவிதைகளை எழுதியுள்ளதோடு, 2003ஆம் ஆண்டில் வீரகேசரியில் தொடராக எழுதிய 'மனித ஏணிகள்' எனும் மலையக காவியத்தையும் மேலும் சில கவிதைளையும் தொகுத்து 'மனித ஏணிகள்' என்னும் கவிதை நூலை மட்டக்குளி காக்கைத்தீவு வரவேற்பு மண்டபத்தில் வெளியிட்டவர்.

மட்டக்குளியில் எழுந்தருளி அருள்பாலித்துவரும் அருள்மிகு ஸ்ரீ சாமுண்டீஸ்வரி தேவியை போற்றித் துதித்து ஸ்ரீ சாமுண்டீஸ்வரி கவசம் எழுதிய கவிஞரை மட்டக்குளி அறநெறி மன்றம் 'கவிமாமணி' எனும் சிறப்புப் பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது.

மேலும் பல சமூக கை லை இலக்கிய அமைப்புக்கள் 'கவிவ ள்ளல்', 'கவிச்சுடர் ', 'கலாசோதி' ஆகிய சிறப்பு கௌரவங்ளை வழங்கியுள்ளன.

தலைநகரில் இயங்கிவந்த கவிதை இயக்கமான 'வலம்புரி கவிதா'(வகவம்) வட்டத்தில் இணைந்து இன்று வரை பல பணிகள் புரிந்துவரும் கலா விஸ்வநாதன் வலம்புரி கவிதா வட்டத்தின் பிரசார செயலாளர், பொதுச் செயலாளர், தலைவர், தேசிய அமைப்பாளர் எனப் பல பதவிகளை அலங்கரித்து இன்றும் வலம்புரி கவிதா வட்டத்தின் வளர்ச்சிக்கு தனது பங்களிப்பினை வழங்கிவருகின்றார்.

2013ல் மீண்டும் பனரமைக்கப்பட்ட வலம்புரி கவிதா வட்டம் தனது ஆண்டு விழாவை 2015ல் கொழும்பு தமிழ்ச்சங்கத்தில் நடாத்தியபோது கவிஞர் கலா விஸ்வநாதன் வகவத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகளுக்காக விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கொழும்பு இலக்கிய வட்டம் எனும் ஓர் அமைப்பை அமைத்து கலை இலக்கிய சந்திப்புகள் ஏற்பாடு செய்ததுடன் விமர்சன கருத்தரங்குளை, அஞ்சலி நிகழ்வுகள் நடாத்தியதுடன் மேல்மாகாண சாகித்திய விழா நடைபெறுவதற்கும் உந்து சக்தியாக விளங்கியவர்.

மூன்று ஆண்டுகளாக 'கவின்' எனும் சஞ்சிகையை இது ஒரு சமூகத்தின் சஞ்சிகை என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக வெளியிட்டு கலை இலக்கிய சமூக பிரமுகர்கள் பலரையும் கவின் சஞ்சிகையில் பதிவு செய்து வந்த கலா விஸ்வநாதன் காலத்தின் கண்ணாடியாக விளங்கக் கூடிய வீச்சுள்ள பல கவிதைகளையும் படைத்துவருகின்றார். இவரது ஆயிரக்கணக்கான கவிதைகள் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்துள்ளன.

'குன்றம்' எனும் சஞ்சிகையின் ஆசிரியராகவும் 'முகம்'இ 'மலைக் கண்ணாடி' ஆகிய சஞ்சிகையின் பொறுப்பாசிரியராகவும் இருந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பத்து ஆண்டு காலமாக சித்தர் வழிபாட்டில் ஈடுபட்டுவரும் பிறவிக் கவிஞர் கலா விஸ்வநாதன் எழுதிய 'சித்தர்அமிர்தம்' என்னும் காவியம் தற்போது தமிழகத்தில் நல்வழிப்பதிப்பகத்தில் அச்சில் உள்ளது.

வலம்புரி கவிதா வட்டம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் ஏற்பாடு செய்த ஆண்டு விழாவில் கவிமாமணி கலா விஸ்வநாதன் கௌரவிக்கப்பட்ட போது கவிஞருக்கு அஸீஸ் மன்ற தலைவர் அஸ்ரப் அஸீஸ் மலர் மாலை அணிவிப்பதையும், 'நாவலர் மன்ற' வண்ணை ஆனந்தன்', இலக்கியப் புலவர் ஹாசிம் உமர், முன்னாள் கலாசார அமைச்சின் பணிப்பாளர் அனுஷா கோகில பர்னாந்து, வகவம் தலைவர் கவிமணி என்.நஜ்முல் உசைன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

சமூக ஊடகங்கள் உங்களை அடுத்த நிலைக்கு கொண்டு செல்கிறதா?

அறிவை விரிவு செய்யவும், உலக நடப்புகளை தெரிந்து கொள்ளவும், புதிய தொடர்புகளை உருவாக்கவும், கருத்துகளை தெரிவிக்கவும், பிரச்சினைகளுக்கு குரல் கொடுக்கவும் என சமூக வலைத்தளங்களின் நன்மைகள் ஏராளம். வயது வித்தியாசம் இல்லாமல் அனைத்து தலைமுறையை சேர்ந்தவர்களும், இன்று சமூக வலைத்தளங்களை பயன்படுத்துகிறார்கள்.

வேலை, குடும்பம், உறவுகள் போன்றவற்றை தவிர்த்து சமூக வலைத்தளங்களே கதி எனும் நிலைக்கு மாறி விடுபவர்களும் உண்டு.

இதில் நிறைய பேர் ஒரு கட்டத்துக்கு மேல் சமூக வலைத்தளங்களை கட்டுப்பாடோடு பயன்படுத்தாமல் அளவுக்கு அதிகமாக அதில் மூழ்கும் நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். வேலை, குடும்பம், உறவுகள் போன்றவற்றை தவிர்த்து சமூக வலைத்தளங்களே கதி எனும் நிலைக்கு மாறி விடுபவர்களும் உண்டு. இதில் இருந்து எவ்வாறு தற்காத்து கொள்ளலாம் என்று பார்ப்போம்.

கவன ஈர்ப்பு என்பதே பலரையும் சமூக வலைத்தளங்களுக்கு அடிமையாக மாற்றுகிறது. எனவே அவற்றில் எவ்வளவு நேரம் செலவிடுகிறீர்கள்? எதற்காக உபயோகப்படுத்துகிறீர்கள் இதனால் உங்களது மற்ற வேலைகள் பாதிக்கப்படாமல் இருக்கிறதா? என்பதை கவனித்து பாருங்கள். அதை பொறுத்து முடிவு எடுங்கள்.

சமூக வலைத்தளங்களை அதிகம் பயன்படுத்துவதை தவிர்க்க முடியவில்லை எனநினைத்தால் ஒரு நாளில் நீங்கள் அவசியம் முடிக்க வேண்டிய செயல்களை உங்களுக்கு நினைவுபடுத்துவதற்கான செயலியை பதிவிறக்கம் செய்யுங்கள். இந்த செயலி சரியான நேரத்தில் உங்கள் அலுவல்களை குறித்து நினைவுப்படுத்தும். இதன் மூலம் நீங்கள் சமூக வரைத்தளங்களை உபயோகிக்கும் நேரத்தை குறைத்து உங்கள் பணிகளை செய்ய முடியும்.

தற்போது சமூக வலைத்தளங்கள் பொழுது போக்கிற்கான இடம் என்பதையும் தாண்டி சுயதொழில் செய்யும் நவீன தளமாகவும் மாறி வருகிறது. குறிப்பாக கொரோனா காலத்தில் பெண்களுக்கு ஏற்ற எளிதான வியாபாரத்தளமாக பல சமூக வலைத்தளங்கள் இருந்தன என்பதை மறுக்க முடியாது. எனவே நீங்கள் எதற்காக சமூக வலைத்தளங்களை பயன்படுத்துகிறீர்கள் எவ்வாறு அதை கையாளுகிறீர்கள் என்பதை கவனித்து அதற்கு ஏற்றாற்போல் பயன்படுத்த வேண்டும்.

உங்களது தனிப்பட்ட தகவல்களை சமூக வலைத்தள கணக்குகள் ஆரம்பிக்கும்போது பகிர்ந்தால் அதை பாதுகாப்பான பகுதியில் வைத்திருக்கிறீர்களா? என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

முன்பே சொன்னது போல சமூக வலைத்தளம் என்பது பொழுதுபோக்கு என்பதையும் தாண்டி, கவன ஈர்ப்பு களமாக மாறும் போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக அதற்கு அடிமையாகிறோம். எனவே வலைத்தளங்களில் உங்களுக்கு வரும் கவன ஈர்ப்புகள் நிஜமாகவே உங்களை மேம்படுத்திக்கொள்வதற்கான அடுத்த நிலைக்கு கொண்டு செல்கிறதா? என்பதை உணர்ந்து கவனத்துடன் கையாளுங்கள்.

மங்கையர் முற்றம்

இரவு நேர சரும பராமரிப்பு

இரவு நேர சரும பராமரிப்பைப் பற்றிய விழிப்புணர்வு பலருக்கு இருப்பது இல்லை. இரவு நேர சரும பராமரிப்பு, சருமத்தில் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்தும்.

மாய்ஸ்சுரைசர், சன்ஸ்க்ரீன் என பகல் நேரத்தில் சருமத்தைப் பாதுகாப்பதற்காக, பல்வேறு வழிகளைக் கையாளுகிறோம். அதேசமயத்தில், இரவு நேர சரும பராமரிப்பைப் பற்றிய விழிப்புணர்வு பலருக்கு இல்லை. மாசு, வெப்பம் போன்ற சுற்றுச்சூழல் சார்ந்த பாதிப்புகள் இரவில் இருக்காது. எனவே இரவு நேர

சரும பராமரிப்பு, சருமத்தில் நேர்மறையான மாற்றங்களை ஏற்படுத்தும்.

சரும ஆரோக்கியத்தை அதிகரிக்கும். மேலும், தூங்கி எழும்போது சருமம் புத்துணர்ச்சியோடு இருக்கும் என்பதால், இரவு நேரத்தில் சரும பராமரிப்பை அவசியம் பின்பற்ற வேண்டும். எத்தகைய சரும பராமரிப்பு முறைகளை மேற்கொள்ளலாம் என இங்கு பார்க்கலாம்.

இரவு நேர சரும பராமரிப்பின் முதல் படி, முகத்தில் போட்டிருக்கும் மேக்கப்பை நீக்குவதுதான். எந்தவிதமான மேக்கப் போட்டிருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து, தண்ணீர் அல்லது மேக்கப் ரிமூவரைக் கொண்டு முகத்தை முழுவதுமாக துடைக்க வேண்டும்.

முகம் கழுவிய பின்பு, டோனர் பயன்படுத்துங்கள். பிறகு உங்கள் சரும மருத்துவரின் பரிந்துரையோடு முகத்திற்கு இரவு நேரத்திற்கான கிரீமை பயன்படுத்துங்கள். 25 வயதை நெருங்குபவர்கள், ஆண்டிஏஜிங் உள்ள இரவு நேர கிரீமை உபயோகிக்கலாம். இது இரவு நேரத்தில் சருமத்திற்கு தேவையான ஊட்டத்தைக் கொடுக்கும். கிரீம் பயன்படுத்த விருப்பமில்லாதவர்கள், இங்கே குறிப்பிடப்பட்டுள்ள இயற்கையான பொருட்களைப் பயன்படுத்தலாம்.

வறண்ட சருமம் கொண்டவர்கள், இரவில் தூங்கச்செல்லும் முன்பு, சில துளிகள் பாதாம் எண்ணெய்யை முகத்தில் தடவி மசாஜ் செய்யலாம். இது முகத்தின் இளமையை தக்க வைப்பதோடு, சருமத்தின் பொலிவை அதிகரிக்கும். பாதாம் எண்ணெய்யில் உள்ள வைட்டமின் 'ஈ' சருமத்துக்குத் தேவையான ஊட்டத்தையும் கொடுக்கும்.

எண்ணெய் பசை அதிகம் உள்ள சருமம் கொண்டவர்கள், இரவு தடவிய பாதாம் எண்ணெய்யை நீக்குவதற்கு பச்சைப்பயறு மாவு அல்லது கடலை மாவு கொண்டு கழுவலாம். இதைத்தவிர இரவில் பன்னீர் அல்லது ரோஸ் டோனர் பயன்படுத்தலாம்.

முகத்திற்கு மட்டுமில்லாமல், உதட்டுக்கும் சிறந்த மாய்ஸ்சுரைசர் பயன்படுத்த வேண்டும். வெண்ணெய் உதட்டுக்குப் போதிய ஈரப்பதத்தைக் கொடுக்கக்கூடியது.

தலை முடியில் தடவி இருக்கும் எண்ணெய்யோ அல்லது பொடுகோ தலையணையில் படிந்திருக்கும். இது முகத்தில்படும்போது, கிருமிகளின் தொற்று காரணமாக முகப்பரு உண்டாகும். எனவே தலையணையின் உறையை, வாரத்திற்கு ஒரு முறை மாற்ற வேண்டும்.

நடைப்பயிற்சியை இலகுவாக்கும் வழிகள்

இன்றைய காலகட்டத்தில் உடலுழைப்பு இல்லாத வாழ்க்கை முறையால் ஏராளமான ஆரோக்கிய பிரச்சினைகளை தினமும் சந்தித்துக் கொண்டுதான் இருக்கின்றோம். அதுவும் குறிப்பாக இன்று எந்நேரமும் கம்ப்யூட்டர், மொபைல் போன்றவற்றின் முன் தான் பலரும் இருக்கிறோம். இதன் விளைவாக நோய்களை பரிசாக பெறுகிறோம்.

தற்போது உடலுக்கு உழைப்பு என்பது உடற்பயிற்சியின் மூலம் தான் கிடைக்கிறது. எனவே உடலின் அனைத்து உறுப்புகளுக்கும் பயிற்சி கொடுக்கும்படியான ஓர் சிறப்பான உடற்பயிற்சி தான் நடைப்பயிற்சி. இதை நாம் சம தளமான பாதையில் நடைப்பயிற்சி மேற்கொள்ளாமல் கரடு முரடான, மேடு, பள்ளமான வழியை தேர்வு செய்யலாம். அது நடைப்பயணத்தை சுவாரசியமானதாகவும், சவாலானதாகவும் மாற்றும்.

★ ஜிம்முக்கு சென்று உடற்பயிற்சி செய்ய முடியாதவர்கள் நடைப் பயிற்சி மேற்கொள்ளும்போது அதிக எடை கொண்ட பொருட் களையோ அல்லது 'டம்ப்பெல்ஸ்' எனப்படும் உடற்பயிற்சி கருவியையோ கைகளில் தூக்கியவாறு நடைப்பயிற்சி செய்யலாம். இது ஒரே நேரத்தில் கார்டியோ மற்றும் உடல் வலிமைக்கான பயிற்சியை செய்வதற்கு வழிவகுக்கும். நடைப்பயிற்சி செய்யும்போது அதிக ஆற்றலை உற்பத்தி செய்வதற்கும் வித்திடும்.

அமெரிக்க விளையாட்டு மற்றும் மருத்துவக்கல்லூரியின் ஆய்வின்படி, இதயத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்கு இந்த வகை எடை பயிற்சி சிறந்தது. மேலும் வளர்சிதை மாற்றக் கோளாறு களின் அபாயத்தையும் 17 சதவீதம் குறைக்கும். அதிக கொழுப்பு, உயர் ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய் பாதிப்புக்கு ஆளானவர்கள் நடைப்பயிற்சி மேற்கொள்வது சிறந்தது.

★ வெறுமனே நடந்தபடி பயிற்சி மேற்கொள்ளாமல் இடையிடையே வேறு சில எளிய பயிற்சிகளையும் மேற்கொள்ளலாம். தடை தாண்டும் போட்டிக்கான கட்டமைப்பு போல் சில அடி உயரத்திற்கு வரிசையாக தடுப்பு பலகைகளை அமைத்து கால்களால் தாண்டி பயிற்சி பெறலாம்.

அதனை செய்ய முடியாத பட்சத்தில் ஸ்கிப்பிங் செய்யலாம். நடைப்பயிற்சி செய்துவிட்டு 50 முறை ஸ்கிப்பிங் பயிற்சி மேற்கொள்வது சிறப்பானது. அதன்பிறகு சிறிது ஓய்வு எடுத்துவிட்டு நடைப்பயிற்சியை தொடரலாம். இந்த பயிற்சிகளை செய்யும்போது கணுக்காலுக்கு அதிக அழுத்தம் கொடுக்கக் கூடாது.

★ உடலில் உள்ள கலோரிகளை எரிப்பதற்கு வலிமையான பயிற்சிகளைதான் செய்ய வேண்டும் என்றில்லை. சம தளமான பாதையில் நடைப்பயிற்சி மேற்கொள்ளாமல் கரடு முரடான, மேடு, பள்ளமான வழியை தேர்வு செய்யலாம். அது நடைப்பயணத்தை சுவாரசியமானதாகவும், சவாலானதாகவும் மாற்றும்.

அத்துடன் நடைப் பயிற்சிக்கு இடையே 'புஷ் அப்' எனப்படும் தண்டால் பயிற்சியும் மேற்கொள்ளலாம். இத்தகைய பயிற்சி முறைகள் வழக்கமாக எரிக்கக் கூடிய கலோரிகளை இருமடங் காக உயர்த்துவதற்கு உதவும்.

சீஸ் பூரி

உங்களுக்கு சீஸ் பூரி எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? கீழே சீஸ் பூரி ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

தேவையான பொருட்கள்:

பூரி மாவிற்கு...
கோதுமை மாவு 1 கப்
★ ரவை 2 டேபிள் ஸ்பூன்
★ உப்பு சுவைக்கேற்ப
★ எண்ணெய் 1 டேபிள் ஸ்பூன்
★ தண்ணீர் தேவையான அளவு
★ எண்ணெய் பொரிப்பதற்கு தேவையான அளவு
★ சீஸ் 1 கப் (துருவியது)
★ வெங்காயம் 1 (பொடியாக நறுக்கியது)
★ பச்சை மிளகாய் 1 (பொடியாக நறுக்கியது)

செய்முறை:

★ ஒரு பௌலில் கோதுமை மாவு, ரவை, உப்பு, 1 டேபிள் ஸ்பூன் எண்ணெய் ஊற்றி, சிறிது நீர் ஊற்றி நன்கு மென்மையாக பிசைந்து கொள்ள வேண்டும்.

★ பின் அந்த மாவை ஈரத் துணியால் மூடி 30 நிமிடம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும்.

★ பின்பு உள்ளே வைப்பதற்கு கொடுத்துள்ள பொருட்கள் ஒரு பௌலில் போட்டு நன்கு கலந்து கொள்ள வேண்டும்.

★ பிறகு சிறிது மாவை எடுத்து உருட்டி, அதை சப்பாத்தி போன்று தேய்த்து, அதன் நடுவே சிறிது சீஸ் கலவையை வைத்து மூட வேண்டும்.

★ பின் அதை மீண்டும் தட்டையாக பூரி அளவிற்கு தேய்த்து ஒரு தட்டில் வைத்துக் கொள்ள வேண்டும். இதேப் போன்று அனைத்து மாவையும் தேய்த்துக் கொள்ள வேண்டும்.

★ பின்னர் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் பொரிப்பதற்கு தேவையான அளவு எண்ணெய் ஊற்றி சூடானதும், தேய்த்து வைத்துள்ள பூரிகளை ஒவ்வொன்றாக சேர்த்து பொன்னிறமாக பொரித்து எடுத்தால், சீஸ் பூரி தயார்.

உதட்டின் மேல் உள்ள முடியை நீக்க

இன்றைய பொதுநலம் பதிவில் பெண்களுக்கு உதட்டின் மேல் வளரும் தேவையில்லாத முடிகளை 7 நாளில் அகற்ற சூப்பர் ரெமிடி தான் இந்த பதிவில் பார்க்கப்போகிறோம். இந்த ரெமிடி நம் முன்னோர்கள் பயன்படுத்தி வந்த அருமையான குறிப்புத்தான். ஆனால் இப்போது உள்ள இளம் தலைமுறையினர் இந்த டிப்ஸை பயன்படுத்துவதற்கு மிகவும் யோசிக்கிறார்கள். செயற்கையான முறையில் பயன்படுத்துவதையே பெரும்பாலான பெண்கள் பெரிதும் விரும்புகிறார்கள். உதட்டின் மேல் உள்ள தேவையற்ற முடி நீங்க வேண்டும் என்று நினைப்பவர்கள் கண்டிப்பாக இந்த டிப்ஸை பாலோ செய்தால் ஒரே வாரத்தில் உதட்டின் மேல் வளரும் தேவையற்ற முடி நீங்கி முகம் பார்ப்பதற்கு மிகவும் அழகாக தோன்றும். சரி வாங்க இப்போது உதட்டின் மேல் முடி நீங்க எப்படி இந்த டிப்ஸை செய்யலாம் என்று படித்து தெரிந்துக்கொள்ளலாம்..!

தேவையான பொருள்:
கிழங்கு மஞ்சள்
சுரசுரப்பான இழைக்கும் கல்
உப்பு
தண்ணீர்

அவற்றில் அனைத்து நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கக்கூடிய கிழங்கு மஞ்சள்(பூசும் மஞ்சள்) எடுத்து கொள்ளவும். இந்த கிழங்கு மஞ்சளை நாம் அரைத்து தான் உபயோகிக்க முடியும்.

பாதம் தேய்க்கும் கல்லை எடுத்துக்கொள்ளவும். அந்த கல்லில் தான் மஞ்சளை இழைத்து பயன்படுத்த முடியும்.

சுரசுரப்பு கல்லில் சிறிதளவு உப்பை எடுத்துக்கொள்ளவும். அந்த உப்பில் ஒன்று அல்லது 2 சொட்டு அளவிற்கு தண்ணீர் சேர்த்துக்கொள்ளவும்.

உப்பு மற்றும் தண்ணீர் சேர்த்த கல்லில் கிழங்கு மஞ்சளை இழைக்கவும். இப்போது கல்லில் மஞ்சள் நன்கு வெளிப்பட ஆரம்பிக்கும். நன்றாக கல்லில் அரைத்த பிறகு உதட்டின் மேல் வளர்ந்து இருக்கும் தேவையில்லாத முடிகளின் மீது அரைத்த உப்பு மஞ்சளை தடவி வர வேண்டும்.

உதட்டின் மேல் அப்ளை செய்தால் இரவு முழுவதும் அப்படியே வைத்திருந்து காலையில் எழுந்தவுடன் முகத்தை வாஷ் செய்துக்கொள்ளலாம். இல்லையென்றால் 30 நிமிடம் கழித்து எதிர்பக்கமாக வைத்து தேய்த்த பிறகு அந்த முடிகள் உதிர செய்யும்.

செயல்படுத்தும் முறை:

இந்த டிப்ஸை தொடர்ந்து 7 நாட்கள் பாலோ செய்து வந்தால் நிரந்தரமாக உதட்டின் மேல் உள்ள முடிகள் உதிர்ந்து விடும்.

மேற்கொண்டும் உதட்டின் மேல் முடி வளராமல் இருக்க வேண்டும் என்றால் 20 முதல் 25 நாட்கள் வரை தொடர்ந்து அப்ளை செய்து வர வேண்டும்.

7 நாட்கள் கழித்து 8ஆம் நாள் தொடர்ந்து செய்கிறீர்கள் என்றால் உப்பை சேர்க்காமல் செய்யலாம்.

கஸ்தூரி மஞ்சள், விரலி மஞ்சளில் அதிகளவு சக்தி இருக்கிறது. பெண்களுக்கு உதட்டின் மேல் வேகமாக வளரும் தேவையில்லாத முடியினை நீக்கும் சக்தி மற்றும் மீண்டும் வளரவிடாமல் தடுக்க பெரிதும் உதவியாக உள்ளது.

நம் முன்னோர்கள் அனைவரும் இந்த மஞ்சளை முகத்தில் பயன்படுத்தி வந்ததால் தான் இது போன்ற சரும பிரச்சனைகள் வராமல் சருமத்தை பாதுகாப்பாக வைத்திருந்தனர். இப்போது உள்ள அனைத்து இளம் தலைமுறையினருக்கும் அனைத்து சரும பிரச்சனைகளும் வருகிறது.

இயற்கையான முறையில் சருமத்தை பாதுகாப்பாக வைத்திருக்க இந்த டிப்ஸை பாலோ செய்து வரலாம். சருமத்திற்கு நல்ல மாற்றம் கிடைக்கும்.

உணவுகளை பச்சையாக சாப்பிடாதீர்கள்

நாம் சாப்பிடும் உணவு நமது உடல் ஆரோக்கியத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆரோக்கியமான காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்ற உணவுகளை சாப்பிடுவது நமக்கு பல ஆரோக்கிய நன்மைகளை தருகிறது. அதேநேரத்தில், நாம் பச்சையாக சாப்பிடும் சில உணவுகள் நமக்கு பல உடல் நல பிரச்சினைகளை ஏற்படுத்தும்.பீன்ஸ், காய்கறிகள், வேர் காய்கறிகள் போன்ற சில பொதுவான உணவுகளை நாம் அன்றாடம் பச்சையாக சாப்பிடுகிறோம். ஆனால் இந்த பொதுவான உணவுகளை பச்சையாக சாப்பிடுவது நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்பதை அறிந்தால் நீங்கள் அதிர்ச்சியடைவீர்கள். உங்கள் செரிமானம் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கியமும் இதனால் பாதிக்கப்படலாம்.

★ காலை உணவாக சுவையான ஹொட் டோக் சாப்பிடுவதை பலர் விரும்புகிறார்கள். ஆனால் மாமிச சத்துள்ள குளிர்ச்சியான பச்சையாக சாப்பிடுவது செரிமானம் மற்றும் குடல் ஆரோக்கியத்தில் கடுமையான விளைவுளை ஏற்படுத்தும் என்று ஆராய்ச்சி காட்டுகிறது. பச்சையாக மற்றும் அடைக்கப்பட்ட ஹொட் டோக் சாப்பிடுவதால் லிஸ்டீரியா என்ற பக்டீரியா உருவாகலம். இந்த இறைச்சி சொசேஜ்கள், வறுக்க அல்லது சூடாக்குவதன் மூலம் பக்டீரியா கொல்லப்படலாம்.

★ ஆப்பிள் மிகவும் எளிதான மற்றும் சுவையான பழமாகும். உண்மையில், இது பெரும்பாலும் பச்சையாக உண்ணப்படுகிறது. ஆனால் நீங்கள் எப்போதாவது தவறுதலாக ஆப்பிள் விதைகளை விழுங்கியிருக்கிறீர்களா? இது உங்களுக்கு பிரச்சினையை ஏற்படுத்தும். ஏனெனில், ஆப்பிள் விதைகளில் இரசாயனங்கள் உள்ளன. அவை பெரும்பாலும் சயனைடாக மாறும், செரிமான செயல்பாட்டின் போது தீங்கு விளைவிக்கும். எனவே, சாப்பிடுவதற்கு முன் விதைகளை அகற்றுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

சினி மஞ்சரி

பிரபல நடிகை மீது சமூக வலைதளங்களில் விமர்சனம்

ரீமா கல்லிங்கல் கேரளா மாநிலம் கொச்சியில் பிராந்திய சர்வதேச திரைப்பட விழா (RIFFK) நடைபெற்று வருகிறது. இதன் ஒரு பகுதியாக நடைபெற்ற திறந்தவெளி அரங்கில் கலந்து கொண்ட நடிகை ரீமா கல்லிங்கல் குட்டை பாவடை (மினி ஸ்கர்ட்) அணிந்து வந்து கலந்து கொண்டார். இது குறித்து சமூக வலைதளங்களில் பல்வேறு தரப்பினர் விமர்சங்களை எழுப்பினர்.

விழாவில் அவர் பேசும் போது சினிமா துறையில் நிலவும் பாலியல் துன்புறுத்தல் குறித்து பேசினார். கேரளா போன்ற ஒரு மாநிலத்தில் திரைத்துறையில் பணியாற்றுபவர்களின் புகார்களுக்கு தீர்வு காணும் அமைப்பு இல்லை என்பது நம்ப முடியாதது என்று அவர் கூறினார்.

ரீமா கல்லிங்கலுக்கு எதிர்ப்புகள் இருந்தாலும் பல மலையாள நடிகைகள் சமூக ஊடக செல்வாக்கு செலுத்துபவர்கள் மற்றும் பிற பிரபலங்கள் நடிகைக்கு தங்களது ஆதரவை தெரிவித்து வருகின்றனர். தமிழில் 'யுவன் யுவதி' படத்தில் கதாநாயகியாக நடித்து மலையாளத்தில் முன்னணி கதாநாயகியாக ரீமா கல்லிங்கல் உள்ளார். கேரளாவில் நடிகை மீதான பாலியல் தொல்லை சம்பவத்தையடுத்து நடிகைகள் ரீமா கல்லிங்கல், மஞ்சுவாரியர், பூ பார்வதி, ரம்யா நம்பீஸன் உள்ளிட்ட பல நடிகைகள் இணைந்து பெண்கள் பாதுகாப்பு அமைப்பு ஒன்றை உருவாக்கி செயல்பட்டு வருகின்றனர்.

"குட்டைபாவடை விவகாரம்"

பிரபல நடிகையுடன் இணைந்து நடிக்கும் லொஸ்லியா

கமல் தொகுத்து வழங்கிய பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் மிகவும் பிரபலமான நடிகை லாஸ்லியா, தற்போது பல படங்களில் ஒப்பந்தம் ஆகி வருகிறார்.

லாஸ்லியா பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் மிகவும் பிரபலமானவர் லாஸ்லியா. இவர் தற்போது 'அன்னபூர்ணி' என்ற படத்தில் நடிக்கிறார். இவருடன் ஜெய்பீம் படம் மூலம் பலருடைய கவனத்தை ஈர்த்த லிஜோமோல் ஜோஸ், நடிக்கிறார். மேலும் இவர்களுடன் மெட்ராஸ், ரைட்டர் படங்களில் நடித்த ஹரி கிருஷ்ணன் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

கே.எச்.பிக்சர்ஸ் சார்பாக தயாரிப்பாளர் ஹரி பாஸ்கர், ஓடிஓ பிக்சர்ஸ் சார்பாக தயாரிப்பாளர் நேதாஜி இணைந்து தயாரிக்க, லயோனல் ஜோசுவா இப்படத்தை இயக்குகிறார்.

திரில்லர் டிராமாவாக உருவாகும் அன்னபூர்ணி படத்திற்கு பிரபல இசையமைப்பாளர் கோவிந்த் வசந்தா இசையமைக்கிறார். பிரபல பாடலாசிரியர் யுகபாரதி இப்படத்திற்கு வசனங்களும் பாடல்களும் எழுதுகிறார். சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் இப்படத்தின் படப்பிடிப்பு நடைபெறுகிறது.

சிம்பு தொல்லையால் சினிமாவை விட்டு விலகினேன்..

இளம் நடிகர் சிம்பு எப்பொழுதும் சர்ச்சைகளுக்கு பெயர் போனவர். தனக்கென பெரிய ரசிகர் பட்டாளம் கொண்டிருந்தாலும், படங்களின் தொடர் தோல்வி, உடல் எடைக்கூடியது, நடிகைகளுடன் காதல் சர்ச்சை, ஷூட்டிங்கிற்கு சொன்ன நேரத்தில் வருவதில்லை என தயாரிப்பாளர்களுடன் உடன் பிரச்சினை என நடிப்பதற்கு ரெட் கார்டு பெரும் வரை பெரிய சிக்கல்களை எதிர்கொண்டார். இருப்பினும் தற்போது உடல் எடையை குறைத்து மாநாடு படத்தின் வெற்றிக்கு பிறகு சுறுசுறுப்பாக படங்களின் மீண்டும் நடித்து வருகிறார்.

அவர் சர்ச்சைகளை விட்டு விலகி இருக்க நினைத்தாலும் சர்ச்சைகள் அவரை விடுவதாக இல்லை. சிம்புவால் தான் நடிப்பதை ஒரு நடிகை விட்டு விலகியதாக செய்திகள் வெளியாகியுள்ளன. சிம்புவின் நடிப்பில் 2007ஆம் ஆண்டு உருவான திரைப்படம் கெட்டவன். ஆனால் இந்த படம் சில காரணங்களால் கைவிடப்பட்டது. ஆனால் இந்த படத்தில் தனக்கு ஏற்பட்ட கசப்பான சம்பவங்களையே தான் சினிமாவை விட்டு

வினய் பட தங்கச்சி பகீர் குற்றச்சாட்டு

விலகியதாக இதில் நடித்த லேகா வாஷிங்டன் கூறியுள்ளார்.

சில தமிழ் மற்றும் தெலுங்கு படங்களில் நடித்திருந்தாலும் நடிகை , வினய் நடிப்பில் வெளியான ஜெயம் கொண்டான் திரைப்படத்தில் அவருக்கு தங்கையாக நடித்தது மூலம் தமிழ் திரை ரசிகர்ளுக்கு பரிட்சயம் ஆனார். பின்னர் குறிப்பிடத்தக்க படங்களில் நடிக்கவில்லை என்றாலும் தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழி படங்களில் நடித்துள்ளார்.

நடித்துக்கொண்டிருந்த பொது திடீரென காணாமல் போன இவரை பேட்டி கண்டு வினாவியபொழுது, நடிப்பில் தனக்கு ஆர்வம் இருந்தாலும், தான் நடிப்பதை கைவிட்டு விட்டதாக கூறும் இவர் அதற்கு முக்கிய காரணமாக சிம்புவுடன் நடித்த கெட்டவன் படத்தை குறிப்பிட்டுள்ளார். ஆனால் என்ன சம்பவம் என்பதை அவர் கூற மறுத்து விட்டார்.

கடைசியாக பிரசன்னாவின் கல்யாண சமையல் சாதம் படத்தில் நடித்த இவர், தற்போது மும்பையில் சிற்பகலை கலைஞராக உள்ளார். 2017ஆம் ஆண்டு பாப்லோ சட்டர்ஜீ என்பவரை திருமண செய்துகொண்டு மீடியாக்களில் இருந்து விலகி வாழ்ந்து வருகிறார். இவ்வாறான சூழ்நிலைகளால் வெளிமாநிலத்து நடிகைகள் ஆக்கிரமிக்கும் தமிழ் சினிமாவை தமிழ் பெண் ஒருவர் விட்டு விலகியுள்ளது கேட்பதற்கு சங்கடமாக தான் உள்ளது.

தென்னிந்திய படங்களை பற்றி கேவலமாக பேசிய ராசி கண்ணா..

தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழிகளில் படு பிசியான நடிகை என்றால் அது ராசி கண்ணா. இவர் தமிழில் இமைக்கா நொடிகள், அடங்கமறு, துக்ளக் தர்பார், அரண்மனை 3 ஆகிய படங்களில் நடித்துள்ளார். இந்நிலையில் நடிகர் தனுஷ் நடிப்பில் உருவாகியுள்ள திருசிற்றம்பலம் படத்திலும் ராசி கண்ணா நடித்துள்ளார்.

தற்போது இவருக்கு தமிழ், தெலுங்கு படங்களை காட்டிலும் இந்தி பட வாய்ப்புகள் அதிகம் வருகிறது. இதனால் சமீபத்தில் பேட்டி ஒன்றில் ராசி கண்ணா தென்னிந்திய படங்களின் பற்றி தன்னுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். அதில் தென்னிந்திய படங்களில் பெண்களை மோசமாக காட்டுகிறார்கள்.

மில்க் பியூட்டி, லாஸ் என ஹீரோயின்களை அழைப்பார்கள். அப்படியென்றால் ஒன்று கிளாமராக இருக்க வேண்டும், இல்லையென்றால் நன்றாக நடிக்க வேண்டும். இது ரெண்டுமே ஒருவரிடம் இருக்க முடியாது என நினைப்பவர்கள். மேலும் நான் அழகாக இருப்பதாக கூறி பல பட வாய்ப்புகளை நிராகரித்து உள்ளனர் எனவும் கூறினார்.

இந்த செய்தி இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. மேலும் தென்னிந்திய சினிமாவில் உள்ள பலரும் இதற்கு கண்டனம் தெரிவித்து வந்தனர். இதைப்பார்த்த ராசி கண்ணா தென்னிந்திய பட வாய்ப்புகள் பறிபோய்விடுமோ என்ற பயத்தில் தற்போது ரூட்டை மாத்தியுள்ளார்.

அதாவது நான் சொன்னதை தவறாக புரிந்து கொண்ட பலரும் பல விதமாக பேசிவருகிறார்கள். இப்படி தவறான செய்திகளைப் பரப்புவது முதலில் நிறுத்துங்கள். நான் பல மொழிப் படங்களில் நடித்துள்ளேன், எனக்கு படங்கள் மீது மரியாதை இருக்கிறது என ராசி கண்ணா கூறினார்.

மேலும் இந்த செய்தியை தவறாக புரிந்து கொண்ட அல்லது சிலர் வேண்டுமென்றே பொய்யான தகவலை பரப்பி வருகிறார்கள் என ராசிகன்னா குற்றம் சாட்டியுள்ளார். ஆனால், ஒரு சிலர் ராசிக்கான பாலிவுட்டிற்கு சென்றதால் தென்னிந்திய சினிமாவைப் பற்றி இப்படி தரக்குறைவாக பேசியுள்ளார் என கூறிவருகின்றனர்.

நடிகை சன்னி லியோனின் போஸ்டரை வெளியிட்ட விஜய் சேதுபதி

விஜய் சேதுபதி கவர்ச்சி நடிகை சன்னி லியோன், தமிழில் தயாராகும் வரலாற்று பின்னணியிலான பேய் படத்தில் நடிக்கிறார். இதில் அவர் நகைச்சுவை பேய் வேடத்தில் வருகிறார். இந்த படத்துக்கு, 'ஓ மை கோஸ்ட்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த திரைப்படத்தை இயக்குனர் யுவன் இயக்கியுள்ளார். இந்த படத்தில் சன்னி லியோனுடன் நகைச்சுவை நடிகர் சதீஷ், 'குக் வித் கோமாளி' புகழ் தர்ஷா குப்தா, சஞ்சனா, யோகி பாபு, தங்கதுரை, திலக் ரமேஷ், ஜி.பி.முத்து உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

இந்த படத்தை வாவ் மீடியா என்டர்டெயின்மென்ட் மற்றும் ஒயிட் ஹார்ஸ் ஸ்டுடியோஸ் சார்பில் வீர சக்தி மற்றும் கே சசி குமார் இணைந்து தயாரித்துள்ளனர். இந்த திரைப்படம் குடும்ப பொழுதுபோக்கு படமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த படத்துக்கு ஜாவேத் ரியாஸ் இசையமைத்துள்ளார். தீபக் டி.மேனன் ஒளிப்பதிவு செய்துள் ளார்.

இந்த நிலையில் படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது. பர்ஸ்ட்லுக் போஸ்டரை நடிகர் விஜய் சேதுபதி மற்றும் இயக்குனர் வெங்கட் பிரபு தங்களுடைய சமூக வலைதளங்களில் வெளியிட்டனர். இந்த பர்ஸ்ட்லுக் போஸ்டர் தற்போது வைரலாகி வருகிறது.

ஹொலிவுட்டில் களம் இறங்கும் பிரபாஸ்

இந்திய அளவில் முன்னணி நடிகராக உயர்ந்துள்ள பிரபாஸ் அடுத்து ஹாலிவுட் படமொன்றில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.பிரபாஸ்பாகுபலி படத்தில் நடித்த பிறகு இந்திய அளவில் முன்னணி நடிகராக உயர்ந்துள்ள பிரபாஸ் நடிக்கும் படங்களை தெலுங்கில் மட்டுமன்றி தமிழ், இந்தி, கன்னடம், மலையாளம் உள்ளிட்ட மொழிகளிலும் வெளியிட்டு வசூல் பார்க்கிறார்கள். பிரபாஸ் சம்பளத்தையும் ரூ.100 கோடியாக உயர்த்தி இருப்பதாக கூறப்படுகிறது.

பிரபாஸ், பூஜா ஹெக்டே ஜோடியாக நடித்த ராதே ஷியாம் சமீபத்தில் திரைக்கு வந்தது. தற்போது சலார், ஆதிபுருஷ் ஆகிய படங்களில் நடித்து வருகிறார். சலார் படத்தில் பிரபாஸ் ஜோடியாக சுருதிஹாசன் நடிக்கிறார். ஆதிபுருஷ் ராமாயண கதையை மையமாக வைத்து தயாராகிறது. இதில் பிரபாஸ் ராமராகவும், சயீப் அலிகான் ராவணனாகவும் நடிக்கின்றனர். கிருத்தி சனோன் சீதையாக வருகிறார்.

இந்நிலையில் ஹாலிவுட் படமொன்றில் நடிக்க பிரபாஸ் ஒப்பந்தம் செய்யப்பட இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இதற்கான இறுதிக்கட்ட பேச்சுவார்த்தை முடிந்து விட்டதாகவும், விரைவில் ஒப்பந்தத்தில் பிரபாஸ் கையெழுத்து போடுவார் என்றும் கூறப்படுகிறது. பிரபாஸ் ஹாலிவுட் படத்தில் நடிப்பது அவரது ரசிகர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

டவர் ஹோல் நிதியத்தின் ஏற்பாட்டில் 50 கலைஞர்களுக்கு 6000 ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவி அடங்கிய பற்றுசீட்டை பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தலைமையில் (வெள்ளிக்கிழமை (8) காலை) வழங்கி வைக்கும் நிகழ்வில் அமைச்சின் செயலாளர் திருமதி நிசாந்தி ஜயசிங்க மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி திசாநாயக்க பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். ராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க வாழ்வாதார பற்றுச்சீட்டுகளை வழங்கி வைப்பதை படங்களில் காணலாம்.

சுவாமி விவேகானந்தா கலாசார மையம், கொழும்பு, மற்றும் இந்திய உயர் ஸ்தானிகராலயம், என்பன இணைந்து "ஸ்ரீராம நவமி" தினமான இன்று டாக்டர். சுபாஷினி பத்மநாதனின் முகநூல் ஊடான சொற்பொழிவினை ஏற்பாடு செய்துள்ளன. இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு "இலங்கையில் ஸ்ரீ ராம வழிபாடு" என்ற தலைப்பில் அவர் சொற்பொழிவு நிகழ்த்துகிறார். Facebook நேரலையில். சுவாமி விவேகானந்தா கலாசார நிலையத்தின் கொழும்பு முகநூலில் வாயிலாக பார்வையாளர்கள் இந்த நிகழ்ச்சியைப் பார்க்கலாம். WWW.facebook.com/ICCRSriLanka. இந்திய சுதந்திரத்தின் 75 வது ஆண்டு கொண்டாட்டங்களைக் குறிக்கும் வகையில், இந்தியாவின் @75 நிகழ்வுகளின் தொடர் நிகழ்வுகளில் இதுவுமொன்றாகும்.

வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலயத்தின் மாணவிகள் தலைவிகளினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாணவத் தலைவிகள் தினம் ' hope' கல்லூரி மண்டபத்தில் மாணவத் தலைவி நீலாதக்சி பிரியாதக்ஸன் தலைமையில் (05)செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக இலங்கை கிரிக்கெட் சபையின் முன்னாள் தலைவர் அரவிந்த டி சில்வா கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக சிறைச்சாலைகள் , புனர்நிர்மாண அமைச்சின் மேலதிகச் செயலாளர் ரஞ்சனி நடராஜா பிள்ளை கலந்துகொண்டார். கல்லூரி அதிபர் அருந்ததி ராஜவிஜயன், கல்லூரியின் முகாமைத்துவ பணிப்பாளர் மாலா சபாரத்திணம் மற்றும் ஆசிரியைகள் ஆகியோரும் ஏனைய பாடசாலைகளின் மாணவத் தலைவிகளும் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் மாணவிகளது சமூக நல உதவித் திட்டங்கள், ஹோப் எனும் ஆங்கில சஞ்சிகை வெளியீடு, புகைப்படப் போட்டிகள். பரதநாட்டியம், இசை ,பாடல்கள் , ஏனைய பாடசாலைகளுக்கிடையே நடாத்திய சமூக நாடகங்கள், குறுந்திரைப்படம் ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவத் தலைவிகளுக்கு அதிதிகளினால் பரிசும் வழங்கப்பட்டது.

அஷ்ரப் ஏ சமத்

விபுலானந்தரும் யாழ்நூலும்

இனமொன்று உருவாகி நிலைத்து வாழ்வதற்கும், அந்த இனம் அழிந்து போவதற்கும், அவர்கள் பேசும் மொழியும், கலாசாரமும் காரணமாகும். இதனை அடிப்படையாக வைத்து உலகத் தமிழ் மக்களுக்காக முத்தமிழில் முழு மூச்சாக பணிபுரிந்து தமிழ் மொழி அழியாமல் இருக்க தனிமனிதனாய் சாதனை புரிந்தவர் சுவாமி விபுலாநந்த அடிகள். தமிழ் கூறும் நல்லுலகத்திற்குப் பொதுவான தமிழறிஞராக விபுலானந்தர் மாறியமைக்கு அவரது பன்முகப்படுத்தப்பட்ட பணிகள் மட்டுமன்றி அவரது மனுக்குல நேசிப்பும் காரணமாகும். அவர் முத்தமிழ் வித்தகர் மாத்திரமன்றி பல்துறைப் பேரறிஞராக ஆசிரியராக, பண்டிதராக. விஞ்ஞானப் பட்டதாரியாக, பாடசாலைகளின் முகாமையாளராக, பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறைப் பேராசிரியராக, அறிஞராக, ஆராய்ச்சியாளராக மொழிபெயர்ப்பாளராக, விளங்கிய விபுலானந்தர் துறவறம் பூண்டு துறவியாக வாழாமல் சமூகத் தொண்டனாகவும் வாழ்ந்து பல சேவைகள் செய்துள்ளார். 1892 மார்ச் 27 ஆம் திகதி இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்கைத் தீவில் மீன் பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பிலிருந்து தென் கிழக்கே அமைந்துள்ள காரைதீவில் சின்னத்தம்பி விதானையாருக்கும், ராசகோபாலப்பிள்ளை கண்ணம்மைக்கும் புதல்வனாக மயில்வாகனன் என்ற நாமத்தோடு பிறந்தார். சிறுவயது முதல் ஒழுக்கம் , வாய்மை, நேர்மை, தெய்வ வழிபாடு , அதிசயத்தக்க ஞாபக சக்தி போன்ற குணங்களுடன் திகழ்ந்த மயில்வாகனனின் மரபுவழிக் கல்வி காரைதீவில் ஆரம்பிக்கின்றது. தந்தையாரின் வழிகாட்டலின் கீழ் அவர் கல்வி பயில ஆரம்பித்தாலும் காரைதீவு வைத்தியலிங்க தேசிகர், தென்கோவை கந்தையா பண்டிதர், தமிழ் கற்றார். கைலாயப்பிள்ளை முதலியோரிடம் பின்பு லீஸ் பாதிரியாரின் மெதடிஸ்த பாடசாலையில் ஆங்கிலக் கல்வியை கற்ற சுவாமி அவர்கள் 1904 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மெதடிஸ்த ஆங்கிலகு கல்லூரியிலும் பின்பு 1906 ல் புனித மைக்கேல் கல்லூரியிலும் ஆங்கிலம் பயின்றார் .

1916 இல் விஞ்ஞான கல்வி கற்று விஞ்ஞான டிப்ளோமா சான்றிதழை தனதாக்கிய அதே ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்ததன் மூலம் இலங்கையில் முதற் பண்டிதர் என்னும் பெருமைக்கு உரியவரானார். 1920 ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழக விஞ்ஞான (B.sc) பட்டத்தையும் இவர் தனதாக்கிக்கொண்டார்.

கல்விச் சேவைகள்

1908 இல் கேம்பிரிஜ் சீனியர் பரீட்சையில் சித்திபெற்றதை தொடர்ந்து அவருடைய கல்வி சேவைகள் ஆரம்பமாகின்றது. 1910 ஆண்டில்



தான் கல்வி கற்ற புனித மைக்கல் கல்லூரியிலேயே ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1911 இல் கல்முனை கத்தோலிக்க மிஷன் பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றிய அவர்கள் கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் 1912 இல் பயிற்சியை முடித்துக்கொண்டு மீண்டும் மட்டக்களப்பு புனித மைக்கல் கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிந்தார். 1917 இல் அரசினர் பொறியியற் கல்லூரியில் உதவி ஆசிரியராகி, 1920 இல் புனித பத்திரிசியார் கல்லூரியில் வேதி நூல் ஆசிரியராக சேவையாற்றினார். " துறவு வாழ்க்கை " 1922 ஆம் ஆண்டில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் அதிபராக கடமையாற்றிய அடிகளார் உடைய புனிதமான துறவற வாழ்வு 1922 இல் மயிலாப்பூர் ராமகிருஷ்ண மடத்தில் "பிரபோதசைதன்யர்" என்னும் துறவறப்பெயரோடு ஆரம்பமாகின்றது. யாழ்ப்பாணம் யோகர் சுவாமிகளுடைய பழக்கம் துறவுள்ளம் படைத்த மயில்வாகனரை விபுலாநந்தராக மாற்றியது 1974 ஆம் ஆண்டில் சென்னை மயிலாப்பூர் ராமகிருஷ்ண மடத்தில் ஞானோபதேசம் பெற்று இராமகிருஷ்ணரின் நேர் சீடரான சுவாமி சிவானந்தரினால் விபுலாநந்தர் என்னும் நாமம் சூட்டப்பட்டு தமிழ் கூறும் நல்லுலகிற்கு விபுலானந்த அடிகளார் என்னும் புதுப்பொலிவோடு அறிமுகமானார். இவர் துறவு பூண்டு சமூகத்தை விட்டும் ஒதுங்கி வாழாமல் சாதி, மத, பேதமின்றி மக்களோடு ஒன்றி வாழ்ந்தார். 1975 ஆம் ஆண்டு நாடு திரும்பிய விபுலானந்தர் மட்டக்களப்பு விவேகானந்த சபையின் பாடசாலைகளின் மேற்பார்வை பொறுப்பை ஏற்று கிழக்கிலங்கையின் கல்வித்துறைக்கு கலங்கரை விளக்காக திகழ்ந்தார்

மொழி அறிவு

இவர் இந்துவாக பிறந்து, ஆங்கில பாடசாலையில் கல்வி பயின்று தமிழ், ஆங்கில மொழிகள் மாத்திரமன்றி லத்தீன், கிரேக்கம், வங்காளம், பாளி, சிங்களம், அரபு, சமஸ்கிருதம் (வடமொழி) போன்ற பன்மொழி அறிவு பெற்றவராக காணப்படுகின்றார். பௌத்த நாட்டில் பிறந்து, கண்ணகி அம்மன் கோயிலருகில் இந்து சமய பற்றுடன் வாழ்ந்து, தன் சிற்றூரை சூழவுள்ள முஸ்லிம் மக்களுடன் நல்லுறவு கொண்டு, வடமொழியையும் கற்றாலும் தாய்மொழியாம் தமிழை முழு மூச்சாக நேசித்தார். அவர் நிறுவிய கல்விக் கூடங்கள் "ஆங்கிலேயரின் ஆட்சியின் விளைவால் தமிழ் மறைந்து போவதை கண்டு தமிழ் பல நிறுவனங்களிற்கு வித்திட்டார். அந்த வகையில் இலங்கையில் தமிழ் மொழியை போற்றி வளர்க்க ஓர் அமைப்பு இல்லாததைக் கண்டு தனது அயராத முயற்சியினால் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் என்னும் கழகத்தை அமைத்து கிழக்கில் பிறந்து வடக்கில் தமிழ் வளர்த்தார். தான் பிறந்த காரைதீவில் சாரதா வித்தியாலயத்தை நிறுவி பிறந்த மண்ணிற்கு தன் கடமை தீர்த்தார். கல்லடி உப்போடையில் தனக்கு குருவாக நின்று அபிஷேகம் செய்த சிவானந்தரின் பெயரில் சிவானந்த வித்தியாலயத்தை நிறுவினார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

எம்.ஏ.எப் நஸீரா
மொழித்துறை
தென்கிழக்கு பல்கலைக்கழகம்

தினகரன் வாரமஞ்சரி

BUDGET

adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

GLOBAL MOTOR TRADING

எமது அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் வளமுள்ள சிங்கள மற்றும் இந்து புதிய வருடத்திற்கு வாழ்த்துக் கூறுகின்றோம்.

TOYOTA LANDCRUISER VX V8

Diesel, Parliament model, Double spare wheel, Year of manufacture- 2012, Mileage - 123,000(records available), Leather electric seats, Sunroof, Cool box, Cruise control

LAND ROVER DISCOVERY 4S

Year of manufacture - 2010, Diesel, Height control, 7 seater, Very Econimical

RANGE ROVER SPORT AUTOBIOGRAPHY UNREGISTERED

Year of manufacture -2016, 3 litre diesel hybrid, Mileage 2800km, 7 seater, Leather electric memory seats, massage seats, 3rd row electric seats, 2 tone interior, Ambient lighting, cool box

RANGE ROVER VOGUE LONG WHEEL BASE AUTOBIOGRAPHY

Year of manufacture - 2018, Long wheel base, White with tan interior, Company registered, Mileage -26,000 miles, Fixed panaromic sunroof, Power boot, Rear entertainment

BMW X5 DIESEL

YEAR OF MANUFACTURE- 2015, Mileage - 60,000, Leather electric memory seats, M sport body kit, 4 zone climate control, Winker mirrors, Auto braking, Lane assit, Reverse camera with guidance

TOYOTA LANDCRUISER V8 2013

Mileage - 65,000km, Double spare wheel, Leather seats, 4 way cam, Sound system

NISSAN NAVARA OUTLAW

Unregistered, Mileage 43,000km, Diesel, Year of manufacture 2008, Leather electric seats, Sunroof, Manual, Highest spec

MAZDA RX8 SERIES 1

Year of manufacture - 2007, Year of registration - 2020, 1 owner, 68,000kms, Bose sound system, Alloy wheels, Android setup with digital gauges, Bucket seats, Company maintained

TOYOTA HARRIER GS

Only petrol, 2 owners, 82,000kms, Bucket seats, Electric seats, LED beams, 4 way camera, Sound system, In brand new condition

14, Galle Road, Mount Lavinia | 077 77 32 832 / 077 77 01 779

Ball Bearings

Ball Bearing for all Metal Crushers

250x400, 250x1000, 150x750, 600x900 with UCP Bearings, etc...

Exstock available

Wijesuriya Marketing (Pvt) Ltd

0112 710 699, 0112 732 962, 0112 150 669

Victorian Guest - Bandarawela

පළමු මහල - යුගල කාමර 4 - අමුත්තන් 8 - රු.10,000/-

බිම් මහල - ෆැමිලි රූම් 4 - අමුත්තන් 12 - රු.12,000/-

සම්පූර්ණ නිකේතනයම රු. 20,000/-

මුළුතැන්ගෙය සමඟ කුක්

බණ්ඩාරවෙල නගරයට සහ දුම්රියපලට කි. මී. 2

සතියේ දිනවල

යුගල කාමර - රු. 1,500/-

ෆැමිලි කාමර - රු. 2,200/-

ළමුන් සඳහාම වූ නවීන නාන තටාකය

victorianbungalow.lk

077 3 711 196
070 2 536 896

Succulent and Juicy dates!

Ramazan Special

Imported handpicked Dates in assorted varieties / packs

AVAILABLE AT

Lanka Commodity Holdings (Pvt)Ltd,
No. 11A, Mile Post Avenue, Colombo 03.

0773 228 990, 0112 573 290

Advertise Here

தினகரன் வாரமஞ்சரி

BUDGET adz

11.8cm (Height) x 8cm (Width)
Rs. 3,000/- +VAT

Contacts :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

இலங்கையை கட்டியெழுப்பும் தனது பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்கும் UTE

தேசத்துக்கு தொடர்ச்சியாக உயர் தரம் வாய்ந்த பொறியியல் தீர்வுகளை வழங்குவதிலும், ஒப்பற்ற சேவை ஆதரவைப் பெற்றுக் கொடுப்பதிலும் 75 வருட கால துறைசார் சிறப்பை யுனைட்டட் டிராக்டர் அன்ட் இக்யுப்மன்ட் (பிரைவட்) லிமிடெட் (UTE) 2022, மார்ச் 22ஆம் திகதி கொண்டாடியது. தேசத்தின் வளர்ச்சியின் பங்காளர் எனும் தொனிப்பொருளுக்கமைய, சுதந்திர தேசமாக இலங்கை பல ஏற்றத் தாழ்வுகளை சந்தித்திருந்த சகல சந்தர்ப்பங்களிலும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் நம்பிக்கையை வென்ற பங்காளராக UTE விளங்குகின்றது.

UTE இந்த முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல் சாதனையை எய்துவதற்கு காரணகர்த்தாவாக திகழ்ந்த தமது பூட்டனார் டபிள்யு.டி. பெர்னான்டோவை நினைவு கூர்ந்து, இந்த மைல்கல் சாதனை தொடர்பாக யுனைட்டட் டிராக்டர் அன்ட் இக்யுப்மன்ட் (பிரைவட்) லிமிடெட் தவிசாளர் பிரசான் பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், "75 வருட கால வரலாற்றைக் கொண்ட நிறுவனம் எனும் வகையில், இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் எதிர்கொண்டிருந்த பல்வேறு ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த சந்தர்ப்பங்களின் போதும் தேசத்தின் மீட்சிக்காக கைகொடுத்திருந்ததில் UTE தனது பங்களிப்பை வழங்கியிருந்தது.

நாம் சேவையாற்றும் பல்வேறு துறைகளுக்கு சந்தை தலைமைத்துவத்தை நாம் பெற்றுக் கொடுத்துள்ளோம். மிக முக்கியமாக, உலகின் இதர பல முன்னணி வர்த்தக நாமங்களுடன் பங்காண்மைகளை நாம் ஏற்படுத்தியுள்ளதுடன், தற்போது சர்வதேச சந்தையில் முன்னோடிகளாகத் திகழும் பல அம்சங்களை எம்வசம் கொண்டுள்ளோம். எமது வாடிக்கையாளர்களின் பக்கம் நாம் தொடர்ந்தும் சார்ந்திருப்பதுடன், அவர்களுடன் நெருக்கமான உறவுகளை பேணுகின்றோம். 'The Journey Continues...Long After the Sale"எனும் எமது தன்னேற்புத்திட்டத்துக்கமைவாக எமது செயற்பாடுகளை நாம் முன்னெடுக்கின்றோம்." என்றார்.

1947 ஆம் ஆண்டு டபிள்யு.டி.பெர்னான்டோவினால் ஸ்தாபிக்கப்பட்ட UTE, கட்டர்பில்லர் (CAT) டிராக்டர் கம்பனி சிலோனின் விற்பனைகள் மற்றும் விற்பனைக்கு பின்னரான சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்தியிருந்தது. தனது கூட்டாண்மை கலாசாரத்தினுள் உறவுகளுக்கு தொடர்ந்தும் முன்னுரிமையளிப்பதில் வலுச் சேர்க்கும் intergenerational powerhouse ஆக UTE திகழ்கின்றது. தொழில்முயற்சியாண்மை உத்வேகத்துடன் இயங்கும் UTE, குடும்ப உரிமையாண்மையில் இயங்குவதுடன், தனது வியாபார கலாசாரத்தில் முக்கிய ஸ்தானத்தில் உறவை பேணுகின்றது. நிறுவனத்தின் பெருமளவான வாடிக்கையாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் நீண்ட காலமாக நிறுவனத்துடன் வியாபார உறவுகளைப் பேணுவதுடன், உலகத்தரம் வாய்ந்த வாடிக்கையாளர் அனுபவத்தை ஏற்படுத்தும் நிறுவனத்தின் இலக்கை எய்துவதற்கு அவர்கள் தொடர்ச்சியாக பங்களிப்பு வழங்கியுள்ளனர்.

NEM கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் தவிசாளரும் முகாமைத்துவ பணிப்பாளருமான ராஜா நானயக்கார கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் காணப்படும் முன்னணி நிர்மாண நிறுவனம் எனும் வகையில், பரிபூரண தீர்வுகளையும் சிறந்த விற்பனைக்கு பின்னரான சேவைகளையும் வழங்கும் சிறந்த நிறுவனத்திடமிருந்து உயர்ந்த பொறியியல் தீர்வுகளைப் பெற்றுக் கொள்வது மிகவும் முக்கியமானதாக அமைந்துள்ளது. இதுவரையில், UTE உடனான எமது அனுபவம் மிகவும் சிறப்பானதாக அமைந்துள்ளது. எதிர்பார்ப்புகளை விஞ்சும் வகையிலான சேவைகளை நாம் பெற்றுள்ளோம். பணிகளின் போதும் அவசர நிலைகளின் போதும் பணியாற்றுவதற்கு மிகவும் சுலபமான அணியாக அமைந்துள்ளது. துறையில் UTE CAT இன் 75 வருட கால அனுபவம் மற்றும் நாம் கொண்டிருக்கும் இயந்திரங்களுக்கு அவர்கள் வழங்கும் சிறந்த விற்பனைக்கு பிந்திய சேவை காரணமாகவும் NEM ஐச் சேர்ந்த நாம் அவர்களை தெரிவு செய்துள்ளோம். UTE இன் வருட பூர்த்தி சாதனைக்காக எமது நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்வதுடன், எமது உறவை தொடர்ந்தும் சிறப்பாக பேண எதிர்பார்க்கின்றோம்." என்றார். கட்டர்பில்லர் உடன் UTE நீண்ட கால கைகோர்ப்பைக் கொண்டுள்ளதுடன், தெற்காசிய பிராந்தியத்தில் தற்போது காணப்படும் மிகவும் பழமை வாய்ந்த CATவிநியோகத்தர்களில் ஒன்றாகவும் கருதப்படுகின்றது.

அத்துடன் கடினமான நிர்மாண இயந்திரங்களை இறக்குமதி செய்த இலங்கையின் முதலாவது நிறுவனமாகவும் இது திகழ்கின்றது. செயற்பாட்டு சிறப்பில் கவனம் செலுத்துவதுடன், அதன் சிறந்த வாடிக்கையாளர் சேவை தொடர்பான நோக்கத்துக்கமைய இயங்கும் நிறுவனம், 'General Machinery' பிரிவில் Superbrandsக்கான ஒரே இலங்கையின் விண்ணப்பதாரியாக அமைந்திருப்பதுடன், ஏழு தசாப்த காலப்பகுதிக்கு மேலாக உயர் தரம் வாய்ந்த பொறியியல் தீர்வுகள் மற்றும் ஒப்பற்ற சேவை ஆதரவையும் வழங்குகின்றது. அதனூடாக, ஒற்றை வர்த்தக நாம இயந்திரங்கள் பலதை விநியோகிக்கக்கூடிய ஒரே நிறுவனமாகவும் திகழ்கின்றது.

அ. கனகசூரியர் ...✍

சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு முதல் முறையாக 4 தனியார் பயணிகளை ஏற்றிச்செல்லும் ரொக்கெட்

சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு முதல் முறையாக முற்றிலும் வணிக ரீதியான பயணம் ஒன்று தொடங்கியுள்ளது. இதில் செல்லும் 4 பயணிகளும் 8 நாள்களுக்கு சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கியிருப்பார்கள்.

இந்த நான்கு பேரும் Axiom1 பணியாளர்கள் என்று அழைக்கப்படுவர். ஆக்சியம் என்பது வணிக ரீதியான விண்வெளி பயண நிறுவனம். அடுத்த சில ஆண்டுகளில் தனக்கென தனியாக ஒரு விண்வெளி நிலையத்தை கட்ட இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இந்த நான்கு பேரையும் சுமந்துகொண்டு ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஃபால்கன் ராக்கெட் அமெரிக்காவின் கென்னடி விண்வெளி நிலையத்தில் இருந்து உள்ளூர் நேரப்படி 11.17க்கு கிளம்பியது. ராக்கெட்டில் இந்த 4 பயணிகள் இருக்கும் எண்டவர் என்ற குமிழ் சனிக்கிழமை அன்று சர்வதேச விண்வெளி நிலையத்தோடு இணையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாசாவின் முன்னாள் விண்வெளி வீரரான மைக்கேல் லோபஸ்அலெக்ரியா தலைமையில் இந்த பயணக்குழு செல்கிறது.

இவர் தவிர மற்ற மூவரும் பெரும் பணக்காரர்கள். அவர்கள் தொழில்முறை விண்வெளி வீரர்கள் அல்ல. அமெரிக்க ரியல் எஸ்டேட் தொழில் அதிபரும் ஏரோபேடிக் பைலட்டுமான லேரி கன்னோர், இஸ்ரேல் முதலீட்டாளரும் கொடையாளருமான எய்டன் ஸ்டிப்பே, கரீபியன் பகுதியை சேர்ந்த தொழில் முனைவோர், முதலீட்டாளர், கொடையாளர் மார்க் பதி ஆகியோர்தான் மைக்கேல் தலைமையில் சென்றுள்ள மூன்று பணக்காரர்கள்.

இவர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்தில் 8 நாட்கள் தங்கியிருந்து அறிவியல் ஆய்வுகளை மேற்கொள்வார்கள்.

விண்வெளியில் தனியார் பயணக் குழு

இந்த ஆக்சியம் நிறுவனம் 2016ல் உருவாக்கப்பட்டது. தாழ் புவிவட்டப் பாதையில் வணிகரீதியான நடவடிக்கைக்கு வாய்ப்பு ஏற்பட்டிருப்பதை கணித்து இந்த நிறுவனம் தொடங்கப்பட்டது. சுற்றுலா முதல் தயாரிப்பு வரையில் பல்வேறுவிதமான வாய்ப்புகள் இதில் அடக்கம்.

சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அடுத்தடுத்து இது போன்ற பல பயணங்களை இந்த நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இதன் அடுத்த பயணத்துக்கு ஆக்சியம் 2 என்று பெயர். இந்த இரண்டாவது பயணம் இந்த ஆண்டு இறுதியிலோ அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்திலோ நடக்கும். ஒரு தொலைக்காட்சி ரியாலிட்டி ஷோ மூலம் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் இந்தப் பயணத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு செல்வார்கள்.

சர்வதேச விண்வெளி நிலையத்தின் அமெரிக்கப் பிரிவுடன் தனது விண் குமிழ் ஒன்றை இணைக்க நாசாவுடன் இந்த நிறுவனம் ஒப்பந்தம் போட்டுள்ளது. சர்வதேச விண்வெளி நிலையம் கைவிடப்படுவதற்கு முன்பாக இந்த விண் குமிழியை அடிப்படையாக கொண்டு இந்த நிறுவனம் ஒரு தனியார் விண்வெளி நிலையத்தைக் கட்டமைக்கும்.

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

வேலைவாய்ப்பு

309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி
Audit Trainee with A/L Commerce O/L Maths B Apply Agape Accounting Services, 89-1/ 2, Bankshall Street, Colombo-11. email: agapeaccservices@gmail.com whatsapp: 0755030954, Tel: 0777239397. 021522

318 வெற்றிடங்கள் டிரைவர்கள்
நிட்டம்புவ முதலீட்டு சபையின் அனுமதிபெற்ற தொழிற்சாலையில் கனரக வாகன சாரதி வெற்றிடங்கள் உண்டு. அடிப்படை சம்பளம். ரூ. 40,000/ முதல் மேலதிக கொடுப்பனவுகள் உண்டு. 0771531121 025453

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்
வேலைக்கு ஆள் தேவை. கண்டி கட்டுகஸ்தோட்டையில் வீட்டுத் தோட்டம் ஒன்றில் வசித்து வேலை செய்வதற்கு வயது 45 55 உட்பட்ட ஆண் ஒருவர் தேவை. ★ மாதச் சம்பளம்: 25,000/= ரூபாய் ★ உணவுத் தேவைக்காக 7,000/= ரூபாய் வழங்கப்படும். தேசிய அடையாள அட்டை மற்றும் கொவிட் அட்டை அத்தியாவசியம் கொண்டு வரப்பட வேண்டும். (விடுமுறை இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை). தொடர்பு இல. 0777459182. 024501

320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்
Mr. Burger உணவகத்தில் kitchen மற்றும் Restaurant இல் பணிபுரிய வேலையாட்கள் உடனடியாகத் தேவை. தங்குமிடவசதி உண்டு. உடனே தொடர்பு கொள்ளவும். 077 1232227. 025603

323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்
கட்டிட நிர்மாணிப்பு நிறுவனமொன்றிற்கு அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. தங்குமிடவசதி உண்டு தினசரி செலவுக்குப் பணம் சம்பளம் ரூபா 2000/ அழைக்கவும். 0112 793398, 0702678611 125, புத்கமுவ வீதி, ராஜகிரிய 18.04.2022 நேரில் வரவும் 025252

325 தொழில்துறை பொது
0718653781 பாதுகாப்பு வெற்றிடங்கள். களுத்துறை, பாணந்துறை, காலி, ஹொரண, கோணபொல, பொல்கஸ் ஓவிட்ட, பிலியந்தலை, பெப்பிலியான, பொரல ஸ்கமுவ, நுகேகொடை, கல்கிசை, தெஹிவளை, மொரட்டுவ, கொழும்பு, கடவத்த, வத்தளை, தொட்டலங்க, பேலியகொட, ஒருகொடவத்த, கட்டுநாயக்க, நீர்கொழும்பு, ரனால, கடுவளை, வெதுரண்முல்ல, ராஜகிரிய, தொம்பே, அம்பேபுஸ்ஸ, தேவாலேகம, களுத்துறை, 0704545051 ஹொரண 0702513418, ரத்மலானை, 0718374981, கொழும்பு 0118653780 நீர்கொழும்பு0718653779 தொம்பே 0712125238, அலுவலகம். 070 6655331. 025533

சொந்த விடயம்

528 தங்குமிட வசதிகள்
கட்டுநாயக்க தளவத்துகொட, கொட்டாவ ஹொரணவில் அமைந்துள்ள சீனியர் சிட்டிசன்ஸ் விலா முதியோர் இல்லத்திற்கு சிரேஷ்ட பிரசைகளான உங்களை அழைக்கின்றோம். 077 4298325. 025574
கொழும்பு 6 வெள்ளவத்த பெண்களுக்கான தளபாடங்களுடனான அறைகள், இணைந்த குளியலறை, உணவு அறை, சமையலறை குக்கர், வொசர், குளிர்சாதனத்துடன். 75/1, W.A. சில்வா மாவத்த, தொ.பே. 2591169, 075 5091379. 022269

காணி/தோட்டம்

602 சொகுசு வசிப்பிடங்கள்/ வீடுகள் தொடர் வீடுகள் வாடகைக்கு/ குத்தகை
வெள்ளவத்தை பீட்டர்சன் லேன் பெரிய படுக்கையறை, இணைந்த குளியலறை, ஓய்வறை, பென்றியுடன் வாடகைக்கு. மெரிகோல்ட் அப்பாட்மென்ட். 0742153655. 025667

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு
ஹோமாகமையில் கலவிள வத்தயில், 19 Perches காணியில், 5 Bed Rooms உள்ள அழகான வீடு விற்பனைக்கு உண்டு ஹோமாகம town க்கும் High way road க்கும் 14m தூரத்திலும் Hospital, Main R.d என்பவற்றுக்கு 10 நிமிட நடை தூரத்திலும் Colombo Cityக்கு 23k.m. தூரத்திலும் அமைந்துள்ளது. தேவையானவர்கள் call பண்ணவும் 1 Perches. 18½ லச்சம் எதிர்பார்க்கப்படுகிறது. Te.No. 0763869319, 0773844482 025455

641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு
24/ 18/ 1/ 1 வெள்ளவத்த, மெனிங் பிளேஸ் முகவரியில் 2 படுக்கையறைகளுடன் வீடு வாடகைக்கு தொ.பே. 076 1263828 025410

670 வீடு சொத்து விற்பனைக்கு/குத்தகைக்கு
தெஹிவளை தரைமாடி அப்பாட்மென்ட் விற்பனைக்கு/ வாடகைக்கு 3 படுக்கை அறை ரெயில் நிலையத்திற்கு அருகில் புலம் பெயர்வதால் உடன் தொடர்பு கொள்க. 077 6051441 023370

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

JOB

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343

‘வேலைவாய்ப்பு’

ஏற்றுமதி நிறுவனத்துக்கு வேலைக்காக ஆண் மற்றும் பெண் ஊழியர்கள் தேவை.

அனுபவம் வாய்ந்த பொதியாளர்கள்

- 18 - 35 வயதுடைய ஆண்களும் பெண்களும்.
- மரக்கறி மற்றும் பழம் வகைகள் தெரிவு செய்தல், அளவு, மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் வரிசைப்படுத்துதல் மற்றும் தேர்ந்தெடுப்பதில் அனுபவம் உடையவர்கள்.
- மலையகத்தை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது

ஓட்டுனர்கள்

- ஓட்டுநர்கள் - ஆண்கள் 35 வயதுக்கு உட்பட்டவர்களாக இருக்க வேண்டும்
- கனரக வாகன (D Class) ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் வேண்டும்.

மாதாந்த சம்பளம், EPF / ETF, சம்பள உயர்வுகள், காப்பீடு மற்றும் ஊக்கத்தொகை, பகல்/ இரவு பகுதி வேலை, தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.

மேலதிக தகவலுக்கு

Shifan - 0777 555 257 (Call / WhatsApp)

வெல்டர்களிற்கான வேலை வாய்ப்புக்கள்

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் வெல்டர்களிற்கான வேலை வாய்ப்புக்கள் உண்டு.

அழையுங்கள்

077 7809449.
077 7668183.
077 7809442,
077 7762198.
077 7809448

Replies to Classifieds & Casual Advertisements published C/o the **Daily News** should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்புகள்

SMIB, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, வங்கியின் செயல்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, இது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திருப்திகரமான மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அதுபோல, பின்வரும் தலைமைத்துவப் பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் வணிக இலக்குகளை அடைவதற்கு ஆற்றல் மிக்க தலைமைப் பாத்திரங்களை வெளிப்படுத்தி முழு அர்ப்பணிப்புடன் செயல்படும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாங்கள் அழைக்கிறோம்.

பிரதான உள்ளக கணக்காய்வாளர் (CHIEF INTERNAL AUDITOR)

வேலையின் ஒட்டுமொத்த நோக்கம், தொழில்நுட்ப, செயல்பாட்டு, நிதி மற்றும் இணக்க கணக்காய்வுகளைத் திட்டமிடுதல் மற்றும் நடாத்துதல், தேர்ந்தெடுக்கப்பட்ட கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுடன் நல்ல நிறுவன நிர்வாகத்தை மேம்படுத்துவதற்காக வங்கியின் செயற்பாடுகள் மற்றும் நோக்கத்தை அடைவதற்காக உள்ளக கணக்காய்வு கட்டுப்பாட்டு அமைப்புகளின் செயல்திறன் மற்றும் / அல்லது செயல்திறனை மேம்படுத்துதல்.

முக்கிய பொறுப்புகள்

- வரலாற்று பரிவர்த்தனைகளை மதிப்பீடு செய்தல், போக்குகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் வங்கியின் பரிவர்த்தனை செலவுகளைக் குறைப்பதற்கான செயல்முறைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை வழங்குதல்.
- கொள்கை மற்றும் செயல்பாட்டு முடிவுகள் சரியாக செயல்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக அமைப்புகள் மற்றும் கட்டுப்பாடுகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.
- நிறுவன அமைப்புகளின் அனைத்து அம்சங்களையும் உள்ளடக்கிய பயனுள்ள மற்றும் திறமையான தகவல் அமைப்பு அடிப்படையிலான கணக்காய்வுகளை நிறுவுவதை உறுதி செய்தல்.
- தணிக்கை எல்லைக்குள் வருடாந்த/மாதாந்த கணக்காய்வுகளை திட்டத்தின்படி வங்கி செயல்பாடுகளில் வழக்கமான கணக்காய்வை மேற்பார்வையிடல்.
- கொள்கைகள், நடைமுறைகள், அங்கீகரிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டம், முக்கிய முகாமைத்துவ முடிவுகள், உள்ளக சுற்றறிக்கைகள் மற்றும் பிற அனைத்து ஒழுங்குமுறைத் தேவைகள் தொடர்பாக வங்கியின் வணிகப் பரிவர்த்தனைகளின் இணக்கத்தை சரிபார்த்து அறிக்கைகளைத் தயாரிக்கவும்.
- மோசடிகள் மற்றும் நிதியை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுக்க உள்ளக கணக்க-ாய்வு கட்டுப்பாட்டு அமைப்புகளை உருவாக்குதல்.
- வங்கி நடவடிக்கைகளில் கணக்கியல் மற்றும் கணக்காய்வு தரநிலைகளை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்.
- வங்கிக்குள் உருவாக்கப்பட்ட கணக்கியல் மற்றும் பிற தரவுகளின் நம்பகத்தன்மை-யக் கண்டறிதல்.
- கணக்கியல் பயன்பாடுகள், நிதி மற்றும் செயல்பாட்டுக் கட்டுப்பாடுகளின் பெறுவேறு மற்றும் போதுமான தன்மையை மதிப்பாய்வு செய்தல் மற்றும் மதிப்பிடுதல்.

தகைமைகள் மற்றும் அனுபவம்

இலங்கை பட்டய கணக்கியல் நிறுவனத்தின் இணை அங்கத்துவம் மற்றும் கணக்காய்வில் 10 வருட கால அனுபவம் இதில் குறைந்தபட்சம் மூன்று (03) வருட காலம் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும். வங்கி / நிதி நிறுவனமொன்றின் கணக்காய்வு அனுபவம் மேலதிகத் தகைமையாகும்.

சம்பளம்

சம்பள அளவு : ரூபா 203,930 - 6,120 x 12 - 277,370 ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம். (10% கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் வாடகைக் கொடுப்பனவு)

வயது - 45 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே ஒரு அரசு துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

பொது நிபந்தனைகள்

தேர்வு முறை : வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப விண்ணப்பங்கள் அழைக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

பிற நன்மைகள்

- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 15% தொழில் வழங்குநரால் பங்களிப்புச் செய்யப்படும் மற்றும் பணியாளரால் 10% பங்களிப்புச் செய்தல் வேண்டும். வங்கி ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) பங்களிப்புச் செய்யும்.
- வருடாந்த போனஸாக இரண்டு மாத சம்பளம்.
- சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட பிறகு சலுகை விகிதத்தில் வீடமைப்புக் கடன்கள்
- வங்கியின் மருத்துவத் திட்டத்தின் கீழ் நன்மைகள்
- பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைக்கான கொடுப்பனவுகள்

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் - 25/04/2022

விண்ணப்பிக்கும் முறை

ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் தங்கள் கல்வி/தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரண்டு தொழில்சார் உறவினரல்லாத சான்றுபகர்வோரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு எண்களை அனுப்ப வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் மிகவும் இரகசியமாகப் பேணப்படும் என்பதுடன் எந்த விதமான ஆதரவு பெற முயல்தல் தகுதியற்றதாக கருதப்படும். ஆட்சேர்ப்பு தெரிவை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த நடவடிக்கையும் மற்றும்/அல்லது இந்த ஆட்சேர்ப்புக்கான தேர்வு தகவுத்திறன்களை மாற்றும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானம் இறுதியானதாகவும் மற்றும் உறுதியானதாகவும் இருக்கும்.

விண்ணப்பங்களை Careers@smib.lk மூலமாக மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்.

BE BETTER INFORMED!



News you can trust now free on your mobile phone.

Dinamina Daily News Thinakaran

VISIT apps.lakehouse.lk

DOWNLOAD TODAY!

AVAILABLE AT

LAKE HOUSE

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்

2022 சிங்கள / தமிழ் புதுவருட விடுமுறைக் காலத்தினுள் எரிபொருள் விநியோக செயற்பாடுகள் பின்வரும் வகையில் மேற்கொள்ளப்படும்

திகதிகள்		கட்டளைகளை ஏற்றுக்கொள்ளல்	விநியோகித்தல்
		கொலன்னாவ நிறுவல், முத்துராஜவெல முனையம் மற்றும் மொத்த களஞ்சியசாலை	கொலன்னாவ நிறுவல், முத்துராஜவெல முனையம் மற்றும் மொத்த களஞ்சியசாலை
2022-04-11 (திங்கட்கிழமை)		12ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வழங்குவதற்குள்ள கட்டளைகள் பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.	சாதாரணமாக எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் இடம்பெறும்.
2022-04-12 (செவ்வாய்க்கிழமை)		13ஆம் திகதி புதன்கிழமை அத்தியாவசிய சேவைக்காக மட்டும் வழங்குவதற்குள்ள கட்டளைகள் பி.ப. 12.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.	சாதாரணமாக எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் இடம்பெறும்.
2022-04-13 (புதன்கிழமை)	சிங்கள/தமிழ் புதுவருட தினத்திற்கு முன் தினம்	15ஆம் திகதி வெள்ளிக்கிழமை வழங்குவதற்குள்ள கட்டளைகள் பி.ப. 12.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.	அத்தியாவசிய சேவைகளுக்கான மற்றும் எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் இடம்பெறும்
2022-04-14 (வியாழக்கிழமை)	சிங்கள/தமிழ் புதுவருட தினம்	மூடப்பட்டிருக்கும்	மூடப்பட்டிருக்கும்
2022-04-15 (வெள்ளிக்கிழமை)	பெரிய வெள்ளி தினம்	16ஆம் திகதி சனிக்கிழமை வழங்குவதற்குள்ள கட்டளைகள் பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.	சாதாரணமாக எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் இடம்பெறும்.
2022-04-16 (சனிக்கிழமை)	பக்மஹ போயா தினம்	17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழங்குவதற்குள்ள கட்டளைகள் பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.	சாதாரணமாக எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் இடம்பெறும்.
2022-04-17 (ஞாயிற்றுக்கிழமை)		மூடப்பட்டிருக்கும்	முன்தினம் மீதமான எரிபொருள் கட்டளைகளுக்கு வழங்கப்படும்.

	கொலன்னாவ		முத்துராஜவெல
விநியோக அலுவலக தொலைபேசி இலக்கம்: 0112572336, 0112572158 தொலைநகல் இலக்கம்: 0112572380	போக்குவரத்து அலுவலகம்: 0112531324	கட்டளைப் பிரிவு: 0112696542 0112532131 0115668472 0112531325	விநியோக அலுவலகம்: 0115668959 0113193926 0113193924 0115950136

விநியோக முகாமையாளர்
சிலோன் பெட்ரோலியம் ஸ்டோரேஜ் டேர்மினல்ஸ் லிமிடெட்.

விலைமனுக்களுக்கான அழைப்பு

சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை

கொழும்பு – 13, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் நீச்சல் தடாகம் நீர் சுத்திகரிப்பு அமைப்பிற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள மேம்படுத்தல்கள்

1. கொழும்பு-13, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் நீச்சல் தடாகம் நீர் சுத்திகரிப்பு அமைப்பிற்கான உத்தேசிக்கப்பட்டுள்ள மேம்படுத்தல்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வடிவமைப்பு மற்றும் நிர்மாண ஒப்பந்தத்திற்கான தொழில்நுட்ப மற்றும் நிதியிடல் முன்மொழிவுகளுக்காக சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் சார்பாக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அமைச்சின் கேள்விச் சபையானது அழைக்கின்றது.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவும் நிர்மாண கைத்தொழில் மற்றும் அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவு பெற்றவராகவுமிருத்தல் வேண்டும்.

அம்ச இல.	ஒப்பந்த இல.	செயற்றிட்டத்தின் பெயர்	நிர்மாணக் காலம் (நாட்கள்)	விலைமனு தாரர்களின் தகுதித்தன்மை	மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபாவில்)	விலைமனுப் பிணை (ரூபாவில்)	மதிப்பீடு செய்யப்பட்ட அண்ணளவான ஆகுசெலவு (ரூபாவில்)
1.	SNSCA/ PRO/371/ 2022	கொழும்பு-13, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் நீச்சல் தடாகம் நீர் சுத்திகரிப்பு அமைப்பிற்கான உத்தேசிக்கப் பட்டுள்ள மேம்படுத்தல்கள்	180 நாட்கள்	**CIDA** பதிவு செய்தல் கட்டிட நிர்மாணத்திற்காக சி-5 அல்லது மேற்பட்டது நீச்சல் தடாகத்திற்கான விஷேடத்துவமுள்ள நிர்மாண ஒப்பந்தக் காரர்களுக்காக **SP1** மற்றும் மின்னியல் மற்றும் பொறிமுறை சேவைகளில் **EM1** சேர்க்கப்பட்ட தகைமையாகும். கம்பனி பதிவு செய்தல்: இலங்கை கம்பனி பதிவு செய்தல் (ஆகக் குறைந்தது 6 வருடங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.	பெசேவ அடங்கலாக 16,000	810,000	பெசேவ நீங்கலாக 81.0 மில்லியன்.

4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைத் தேவைப்படுத்தல்கள் விலைமனுக்கோரல் ஆவணங்களில் அடக்கப்பட்டுள்ளன.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-13, ஆர்தர் த சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை, நிருவாக கட்டிடம், பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 0112384385. தொலைநகல: 0112445675) 2022.04.18 ஆம் திகதியிலிருந்து 2022.04.29 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. மேலேயுள்ள முகவரியில் 2022.04.18 ஆம் திகதியிலிருந்து 2022.04.29 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை (மேலேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டவாறானது) செலுத்திய பின்னர், சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை, நிருவாக கட்டிட பெறுகைப் பிரிவிற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. 2022.05.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் கொழும்பு-13, ஆர்தர் த சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதியின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை, த.பெட்டி 2211, ஆர்தர் த சில்வா மாவத்தை, கொழும்பு-13 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
8. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும் (2022.08.01 ஆம் திகதி வரையும்)
10. அனைத்து விலைமனுக்களும் விலைமனுக்கோரல் ஆவணத்தின் **V** ஆம் பிரிவில் வழங்கப்பட்டதாகவும் ஆர்தர் த சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை, தலைவரின் பெயரில் வழங்கப்பட்டதாகவும் எட்டு இலட்சத்து பத்தாயிரம் இலங்கை ரூபா தொகைக்கானதும் (810,000 இ.ரூபா) விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியானதாகவும் (2022.08.29 ஆம் திகதி வரையும்) இருத்தல் வேண்டும்.
11. கொழும்பு-13, ஆர்தர் த சில்வா மாவத்தை, த.பெட்டி 2211, சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபையின் நிருவாக கட்டிட அலுவலகத்தில் 2022.04.28 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறவுள்ளது. விலைமனு முன்னோடிக் கூட்டத்தின் பின்னர் தள விஜயம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தலைவர்,
சுகததாச தேசிய விளையாட்டு கட்டிடத்தொகுதி அதிகாரசபை,
த.பெட்டி 2211, ஆர்தர் த சில்வா மாவத்தை,
கொழும்பு-13.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 6

01	02	03	04	05	
06		07		08	09
10	11		12		13
14		15	16		17
18		19		20	
	21	22		23	24
25	26	27	28		29

பெயர் .....
வகுப்பு .....
தொலைபேசி இல .....
பாடசாலை பெயர் .....
வதிவிட முகவரி .....
.....
....
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

இடமிருந்து வலம்

(01) இருபத்தைந்து வருட நிறைவில் கொண்டாடப்படுகின்ற விழா.
(08) நீரின் பௌதிக வடிவங்களில் ஒன்று இது. நீர் இவ்வாறான பௌதிக வடிவமொன்றை அடைவதனாலேயே, அது மேலே சென்று மழையாகப் பெய்கின்றது. (தலைகீழான சொல்)
(10) தென்மாகாண மாவட்டங்களில் ஒன்று இது.
(15) சூரியன் உதயமானதும் வருகின்ற பொழுது இது.
(21) உயிரினங்கள் பலவற்றில் உடலின் பிரதான அங்கம் இது. உடல் இயக்கங்கள் அத்தனையையும் கட்டுப்படுத்துகின்ற உறுப்பு இதன் உள்ளேதான் அமைந்துள்ளது. (தலைகீழான சொல்)
(23) பணம், பொருள் இல்லாத வறியவர் ஒருவரை இவ்வாறு குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(25) கிழக்கு மாகாணத்தில், தென்பகுதி முனையில் அமைந்துள்ள மாவட்டம். (தலைகீழான சொல்)

மேலிருந்து கீழ்

(01) எமது உணவுப் பொருட்களில் அன்றாடம் சேர்க்கப்படுகின்ற இயற்கைச் சுவையூட்டி. இது இல்லாமல் கறி சமைக்க முடியாது.
(03) நீரை அள்ளுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற பாத்திரம். கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்கும் இது தேவை. (தலைகீழான சொல்)
(05) இதனை உற்சவம் என்றும் சொல்லலாம். ஆலய விசேடங்கள் மற்றும் எமது பண்டிகைகளையும் இச்சொல்லால் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(09) தமிழ் மாதங்களில் ஒன்று.
(12) தாவரமொன்றின் உறுப்புகளில் மிக அவசியமானது இதுவாகும். இந்த உறுப்பில் பச்சையம் உள்ளதால், தாவரமானது ஒளித்தொகுப்பு செய்து உணவைத் தயாரித்துக் கொள்கின்றது.
(15) இரும்பு, நிக்கல், குரோமியம் போன்ற உலகங்களைக் கவரக் கூடிய திரவியம்.
(20) முக்கனியில் ஒன்று.
(21) மணலும் மணல் சார்ந்த இடமும் இந்த பிரதேசத்தினுள் அடங்கும். (தலைகீழான சொல்)
(24) எங்காவது உயரத்தில் ஏறிக் கொண்டு ஏதேனும் வேலை செய்ய வேண்டுமானால் இந்த உபகரணம் தேவையாகும்

குறுக்கெழுத்துப் போட்டி இல. 05

விடைகள்

இடமிருந்து வலம்

01. பாவலன் 07. கணினி 10. அடக்கம் 18. மணம் 23. நாணல்

மேலிருந்து கீழ்

01. பாலம் 04. பாடகன் 05. பனி 08. அணி 11. கர்ணன் 17. நாகர்

குறுக்கெழுத்துப் போட்டி இல: 04

பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு
ந. தனீஸ்குமார்,
தரம் 12, ப/ பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரி,
இல. 14, கோணமுட்டாவ தோட்டம்,
ஹப்புத்தளை.

இரண்டாம் பரிசு
எம்.ஏ.எப். அஸ்மா,
தரம் 07B, க/பதிஉத்தீன் மகளிர் பாடசாலை,
கண்டி.

மூன்றாம் பரிசு
ஸபியுர் ரஸ்மான்,
தரம் 07, ACE சர்வதேச பாடசாலை,
10F/3, மகாபுத்கமுவ, கொட்டிகாவத்தை.

பாராட்டு பெறுவோர்

1. **கே. ரேபிக்கா,**
தரம் 07E, மட்/சென். சிசிலியா பாடசாலை,
மட்டக்களப்பு.
2. **தமீம் உஸ்மான் ஹாமித்,**
தரம் 06,
அக்/அல் முனவ்வறா கனிஷ்ட கல்லூரி,
அக்கரைப்பற்று 04.
3. **சுஷ்மிதன் ஆனந்தன்,**
தரம் 07,
நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,
நோர்வூட்.
4. **ஸைத் இப்திகார்,**
தரம் 4, கே/மா/சாஹிரா தேசியக்கல்லூரி,
மாவனல்ல.
5. **பிரணுகா பிரசாந்த்,**
தரம் 3G, மட்/வின்சன்ற் மகளிர் பாடசாலை,
மட்டக்களப்பு.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 06
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

குறளமுதம் :

இன்மையுள் இன்மை விருந்தொரால்; வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை.

தெளிவுரை :
வறுமையுள் வறுமை, விருந்தினரைப் போற்றாமல் நீக்குதல்; வல்லமையுள் வல்லமை என்பது அறிவிலார் தீங்கு செய்தலைப் பொறுத்தலாகும்.

நான் ஒரு பென்சில்

சிறுவர் முதல் முதியவர் வரை என்னை எழுதப் பயன்படுத்துகிறார்கள். என் பெயர் 2B. என்னைப் பொதுவாக பென்சில் என்று குறிப்பிட்டாலும் எனக்குச் சிறப்பாகப் பல பெயர்கள் இருக்கின்றன.

நான் ஜெர்மனி நாட்டுத் தொழிற்சாலை ஒன்றில் பிறந்தேன். என்னைப் போலவே ஆயிரக்கணக்கானவர்கள் அங்கே தயாராகி உலகெங்கிலும் வலம் வந்து கொண்டிருக்கிறார்கள். நானும் அங்கிருந்து கப்பல் வழியாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தேன்.

ஒரு வியாபாரி என்னையும் என் உடன் பிறப்புகளையும் வரவழைத்திருந்தார்.

எங்களை அவரது கடைக்கே கொண்டு வந்து வாடிக்கையாளார் களிடம் பேரம் பேசி விற்று விட்டார். கொழும்பு மெலிபன் வீதியிலுள்ள ஒரு கடையில் பல நண்பர்களுடன் சேர்த்து விற்பனைக்கு வைத்துவிட்டார். பல இனத்தவர்கள் அன்றாடம் எங்களைப் பார்த்துப் பூரிப்படைவர்.

ஒரு நாள் ஒருவர் என்னை வாங்கி படிக்கும் தன் மகனுக்கு பரிசாகக் கொடுத்தார். அச் சிறுவன் என்னை மிகவும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டான். ஒவ்வொரு நாளும் என்னைப் பயன்படுத்தி வந்தான்.

ஒரு நாள் அச்சிறுவன் கவனக் குறைவாக என்னைத் தன் மேசை மீது வைத்து விட்டு வெளியே சென்று விட்டான். அச்சமயம் தற்செயலாக அங்கு வந்த நபர் மேசை மீதிருந்த புத்தகத்தை எடுக்க முயன்றபோது நானும் அதோடு உருண்டு வந்து கீழே விழுந்தேன். கவனிப்பாரற்று கிடந்த என் உடம்பில் பல காயங்கள் ஏற்பட்டு நான் விகாரமாகக் காட்சியளித்தேன். சிறுவனோ என்னைப் பார்த்து முகம் சுழித்தான். பெருமூச்சு விட்டான். அருகிலிருந்த குப்பைக்கூடையில் என்னைத் தூக்கி போட்டுவிட்டான்.

சுஜானி திருஆலன்,
வவுனியா.

எனது பாடசாலை அழகானது

மறக்க முடியாத நண்பர்கள் அழியாத நினைவுகள் என அனைத்தையும் தந்தது எனது பாடசாலை தான். என்னுடைய பாடசாலை மிகவும் அழகானது. அதனுடைய சூழல் கல்வி கற்க செல்கின்ற எங்களை மேலும் மகிழ்ச்சியடைய செய்தது.

அங்கே அழகிய மரங்களின் நிழல் எம்மை மகிழ்விக்கின்றன. அதன் கீழ் நாங்கள் மகிழ்ச்சியாக விளையாடுவோம். நாங்கள் விளையாட அழகிய மைதானம் அமைந்திருக்கின்றது. அது பச்சை பசேலென்ற அழகான மைதானம் ஆகும்.

அழகான முறையில் கட்டங்கள் வடிவமைக்கப்பட்டு காணப்படுகின்றன. அங்கே தான் எமது வகுப்பறை காணப்படுகின்றது. எமது வகுப்பறைகள் தூய்மையாகவும் அழகாகவும் காட்சி தரும். காலையில் பாடசாலைக்கு சென்று அங்கே அமருகின்ற போது அந்த மகிழ்ச்சியை எம்மால் உணர முடியும்.

பின்பு நாங்கள் ஓய்வு நேரங்களில் சென்று பார்க்க அழகான பூங்கா ஒன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. நேரம் கிடைக்கின்ற போதெல்லாம் அங்கே சென்று நண்பர்களோடு உரையாடுவோம்.

மற்றும் காலை பிரார்த்தனை செய்வதற்கெனவே அழகான வழிபாட்டு மண்டபம் மற்றும் ஒரு ஆலயம் எமது பாடசாலை வளாகத்தினுள்ளேயே அமைக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் நாம் சென்று நல்ல புத்தகங்களை வாசிக்க வென அழகான ஒரு நூலகம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

விஞ்ஞான ஆய்வு கூடம், தகவல் தொழில்நுட்பகூடம் என எல்லா வசதிகளும் நிறைந்த ஒரு அழகான பாடசாலையாக எனது பாடசாலை விளங்குகிறது.

எனது பாடசாலைக்கு செல்லும் வீதியின் இருமருங்கிலும் அழகான மரங்கள் நேராக நடப்பட்டிருப்பதனை பார்க்க மிகவும் அழகாய் இருக்கும் இவ்வாறு எனது பாடசாலையினுடைய அழகை சொல்லி கொண்டே செல்லலாம் அது நீண்டு கொண்டே இருக்கும்.

ஆர். விஷாலினி,
கொட்டகலை.

உயர்தர மாணவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை அங்குரார்ப்பணம்

ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய தேசிய பாடசாலையின் உயர்தர மாணவர்களின் செயற்றிட்டத்திற்கு அமைய பாடசாலை வளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட திருவள்ளுவர் சிலை கடந்த 06ஆம் திகதியன்று பாடசாலையில் அதிபர் சித்தார்த்தன் ராஜன் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின்போது பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ஹட்டன் விசேட நிருபர்)

ஒத்த கருத்துச் சொற்கள்

அக்கம்பக்கம்	-	அண்டை, அயல்	அண்ணம்	-	மேல் வாய்
அக்கினி	-	நெருப்பு	அடவி	-	காடு
அங்கத்துவம்	-	உறுப்புரிமை			
அகம்பாவம்	-	தற்பெருமை			
அடர்த்தி	-	செறிவு			
அதிதி	-	விருந்தினர்			

நி. இலக்கியா,
தரம் 06, கொ/ சைவமங்கையர் மகளிர் பாடசாலை, கொழும்பு 06.

கழுதை

கழுதை என்றால் ஏளனம்
காணும் மனிதர் சொல்லுவர்
கழுதை காட்டும் பொறுமையை
கற்ற சிலரும் கொண்டிலர்

பிள்ளை செய்யும் குறும்பினை
பார்த்து நெஞ்சு குமுறியே
தொல்லை ஏதும் செய்திடா
வெள்ளை மூக்குக் குதிரைகள்

அழுக்கு நிறக் கழுதைகள்
வெளுக்கத் துணியைச் சுமந்திடும்
பழுப்புச் செய்தித் தாள்களை
சுவைத்துப் பசியும் ஆறிடும்

விதியை நொந்து மனிதர்கள்
சதிகள் சுமந்து வாழ்தல் போல்
பொதியைச் சுமந்து சென்றிடும்
பொறுமை மிக்க கழுதைகள்!

கல்லொளுவை பாரிஸ்,
மள்வானை.

உலக நாடுகளின் நாணயங்கள்

கனடா	-	டொலர்
இந்தியா	-	ரூபாய்
பிரேசில்	-	குருசிரோ
ஈரான்	-	ரியால்
கியூபா	-	பிசோ
இஸ்ரேல்	-	சிகெல்
இத்தாலி	-	லிரா
ஜப்பான்	-	யென்
கென்யா	-	ஷில்லின்
இலங்கை	-	ரூபாய்
மலேசியா	-	ரிங்கிட்
குவைத்	-	தினார்
அங்கோலா	-	நியூகுவான்சா
அமெரிக்கா	-	டொலர்
ஆப்கானிஸ்தான்	-	ஆப்காசி
ஈராக்	-	ஈராக்தினார்
நோர்வே	-	கிரோன்
தாய்வான்	-	புதியதாய்வான்டொலர்
ஓமான்	-	ஓமானியா ரியால்
இங்கிலாந்து	-	பவுண்

அ.ற. பாத்திமா அனா,
தரம் 05, மட்/மம/ஸாவியா மகளிர் வித்தியாலயம்,

இவ்வார மழலை

K. ஹம்சயான்
கேதீஸ்வரன் - சியாமளா
இரட்டைப்பாதை, புஸ்ஸல்லாவ.

வி. திவாகர்
தரம் 07, இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை.

எம்.எஸ். இம்ரா ஹானா,
தரம் 03, தி/கந்தளாய் ஆயிஷா மகளிர் கல்லூரி,
கந்தளாய்

அ. பவித்ரா,
தரம் 10, இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை.

தனுஷாலனி,
தரம் 11, இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம்,
ஹப்புத்தளை.

விளையாட்டு

மலிங்கவின் சாதனையை முறியடித்த பிராவோ!

கிரிக்கெட் உலகின் பிரபல்யமான பிரிமியர் லீக் ரி/20 கிரிக்கெட் தொடர்களில் முன்னிலை பெற்ற தொடராக கடந்த மாதம் ஆரம்பமான இந்தியன் பிரிமியர் லீக் தொடர் உள்ளது. அத்தொடரில் லசித் மலிங்க படைத்திருந்த அதிக விக்கெட் வீழ்த்திய (170) சாதனையை மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் டுவொன் பிராவோ முறியடித்துள்ளார்.

2022ம் ஆண்டுக்கான ஐ. பி. எல். தொடர் கடந்த மாதம் ஆரம்பமாகித் தொடர்ந்து கோலாகலமாக நடைபெற்று வருகிறது. இத்தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கொல்கொத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதிக்கொண்ட முதல் போட்டியிலே இரு அணிகளிலும் இடம்பெறும் இலங்கை வீரர்கள் விளையாடாவிட்டாலும் இதுவரை ஐ.பி.எல். தொடர்களில் பந்து வீச்சில் சாதனைபடைத்த இலங்கை வேகப்பந்து வீச்சாளரான லசித் மலிங்கவின் சாதனையை சமப்படுத்திய போட்டியாக அது அமைந்தது.

இதுவரை ஐ. பி. எல். வரலாற்றில் அதிக விக்கெட் வீழ்த்திய வீரராக இலங்கை வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க சாதனைபடைத்திருந்தார். கே.கே. ஆர். அணியுடனான போட்டியில் சென்னை அணிக்காக விளையாடும் மேற்கிந்தியத் தீவின் வீரர் டுவோன் பிராவோ அப்போட்டியில் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட் வீழ்த்தியதன் மூலம் லசித் மலிங்கவின் 170 விக்கெட்கெடுகளை என்ற மைல் கல்லை சமப்படுத்தினார்.

பிராவோ மலிங்க ஆகிய இரு பந்து வீச்சாளர்களையும் ஒப்பீட்டுப் பார்க்கும் போது பிராவோவை விட லசித் மலிங்க முன்னிலையில் உள்ளதை அவர்களது புள்ளி விபரங்களிலிருந்து அறிய முடிகிறது.

லசித் மலிங்க 2009ம் ஆண்டு முதல் 2019ம் ஆண்டு வரை 122 போட்டிகளில் கைப்பற்றிய 170 விக்கெட்டுகளையே பிராவோ 2008ம் ஆண்டிலிருந்து இதுவரை ஐ. பி. எல். தொடர்களில் 152 போட்டிகளில் 149 இன்னிங்ஸ்களில் விளையாடியதன் மூலமே மேற்படி சாதனையை பிராவோ சமப்படுத்தியுளளார். மலிங்க பிராவோவை விட 30 போட்டிகள் குறைவாக பங்குபற்றியே 170 விக்கெட்டு

களைக் கைப்பற்றியுள்ளார். மேலும் அவர் இந்த விக்கெட்டுகளை கைப்பற்றுவதற்கு 471.1 ஓவர்கள் வீசியுள்ளதுடன் பிராவோ 489.3 ஓவர்கள் விசியுள்ளார். ஓட்டங்கள் விட்டுக்கொடுக்காத ஓவர்களாக மலிங்க 8 ஓவர்கள் வீசியுள்ளதுடன் பிராவோ 2 ஓவர்களையே ஓட்டமற்ற ஓவர்களாக வீசியுள்ளார்.

எதிரணியினர்களுக்கு ஓட்டங்கள் விட்டுக்கொடுப்பதில் லசித் மலிங்க மொத்தமாக 3365 ஓட்டங்கள் கொடுத்துள்ளதுடன், பிராவோ 4081 ஓட்டங்களை விட்டுக்கொடுத்துள்ளார்.

லசித் மலிங்கவின் சிறந்த பந்துவீச்சாக 13 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்கள் பதிவாகியுள்ளதுடன், பிராவோ 22 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதே சிறந்த பந்துவீச்சாகும். பிராவோ இதுவரை நடைபெற்ற தொடர்ளில் 2017ம் ஆண்டு ஐ. பி. எல். பருவத்தில் முழுமையாக விளையாட முடியாமல் போயுள்ளதுடன் 2014ம் ஆண்டு காயம் காரணமாக ஒரு போட்டியில் மாத்திரம் பங்குகொண்டார். லசித் மலிங்க 2019ம் ஆண்டு வரை நடைபெற்ற தொடர்களில் 2016ம் ஆண்டு தொடரைத் தவிர மற்றைய எல்லாப் தொடர்களிலும் விளையாடியுள்ளார்.

லசித் மலிங்க 9 தொடர்களில் படைத்த சாதனையை நெருக்குவதற்கு பிராவோ 14 தொடர்களில் விளையாடியுள்ளார். தொடர்ந்து ஐ.பி.எல்இல் விளையாடி வரும் பிராவோ கடந்த வாரம் லக்னோ அணிக்கு எதிரான போட்டியில் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றியதன் மூலம் லசித் மலிங்கவின் சாதனையை முறியடித்துள்ளார். அவர் இத்தொடர் முழுவதும் விளையாடினால் மேலும் முன்னோக்கி செல்ல அதிக வாய்ப்பு பிராவோவுக்கு உள்ளது.

நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன் -ஆஷ்லி பார்டி

டென்னிஸ் சூப்பர் ஸ்டார் ஆஷ்லி பார்டி தனது அதிர்ச்சி ஓய்வு பற்றிய செய்தி வெளியான பின்னர் தனது முதல் பொது நிகழ்வு ஒன்றில் தனது உள்ளூர் கடைகளுக்கு ஒரு பயணத்திற்காக சுறுசுறுப்பான ஆடைகளை அணிந்துள்ளார்.

விம்பிள்டனில் பட்டம் வென்ற ஆறு மாதங்களுக்குப் பிறகு, ஒரு வாரத்திற்கு முன்புதான் 25 வயதான அவர் தனது ராக்கெட்டை 'மற்ற கனவுகளைத் துரத்த' கீழே போடப்போவதாக அறிவித்தார்.

'மற்ற கனவுகளைத் துரத்த' விரும்புவதாக அவர் வெளிப்படுத்தியதால் தடகள வீரர் வருத்தமடைந்ததாகத் தோன்றியது.

'நான் அதை சத்தமாகச் சொல்வது இதுவே முதல் முறை, எனவே சொல்வது கடினம், ஆனால் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன், நான் மிகவும் தயாராக இருக்கிறேன்', என்று அவர் வீடியோவில் விளக்கினார், அதில் முன்னாள் இரட்டையர் கூட்டாளியும் நல்ல நண்பருமான கேசி டெல்லாக்குவாவுடன் இணைந்தார்.

நான் இதற்கு முன் இதைச் செய்திருக்கிறேன் என்று எனக்குத் தெரியும், ஆனால் மிகவும் வித்தியாசமான உணர்வில், டென்னிஸ் எனக்கு அளித்ததற்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன், எனது கனவுகள் அனைத்தும் பிளஸ் மேலும், ஆனால் நான் விலகிச் செல்லவும், மோசடிகளை வீழ்த்தவும் இப்போது நேரம் வந்துவிட்டது என்று எனக்குத் தெரியும்.

ஜூன் 24, 2019 அன்று பார்டி உலகின் முதல் இடத்தைப் பிடித்தார், மேலும் அடுத்த இரண்டரை ஆண்டுகளுக்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் அதிக முடிவுகளுடன் அதை ஒருபோதும் கைவிடவில்லை.

25 வயதான அவர் சமீபத்தில் தனது சொந்த ஊரான இப்ஸ்விச்சுக்கு தனது வருங்கால கணவர் கொல்ஃப் வீரர் கேரி கிஸ்சிக்குடன் திரும்பினார், அவரை 2022 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் திருமணம் செய்து கொள்ள திட்டமிட்டுள்ளார்.

'நான் ஸ்பிரிங்ஃபீல்ட் பகுதியில் என் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்திருக்கிறேன், அம்மாவும் அப்பாவும் தங்கள் வாழ்நாள் முழுவதும் அங்கேயே வாழ்ந்திருக்கிறார்கள். என் சகோதரிகள் வெகுதொலைவில் இல்லை. நாங்கள் எங்கள் புதிய இடத்தில் இருக்கிறோம் என்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அது அழகாக இருக்கிறது,' என்று பார்டி சமீபத்தில் கூரியர் மெயிலிடம் கூறினார்.

பார்ட்டி 23.8 மில்லியன் அமெரிக்க டொலர்களை (அவுஸ். 37. 75 மில்லியன்) பரிசுத் தொகை

யாகவும், மில்லியன் கணக்கான அனுசரணைகளையும் சம்பாதித்து, வரலாற்றில் 14 வது சிறந்த சம்பளம் பெறும் பெண் வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.

அவர் கடந்த ஆண்டு 3 மில்லியன் அமெரிக்க டொலர்களை சம்பாதித்தார், மேலும் 2021 ஆம் ஆண்டில் எட்டாவது அதிக சம்பளம் பெறும் பெண் தடகள வீராங்கனையாக இருந்தார், இது 6.9 மில்லியன் அமெரிக்க டொலர்களை தன்வசம் வைத்திருந்தது என்று ஃபோர்ப்ஸ் தெரிவித்துள்ளது. அவரது மொத்த வருமானம் சுமார் 53 மில்லியன் அமெரிக்க டொலர்கள் (AU$70 மில்லியன்) என மதிப்பிடப்பட்டுள்ளது.

பார்டி தான் சிறிது காலம் ஓய்வு பெறுவதைப் பரிசீலிப்பதாகவும், கடந்த ஆண்டு விம்பிள்டன் வெற்றி பெற வேண்டும் என்ற தனது குழந்தை பருவ கனவை அடைய 'குடல் உணர்வு' கொண்டிருந்ததாகவும் கூறினார்.

'இது பற்றி நான் நீண்ட காலமாக யோசித்து வருகிறேன், என் வாழ்க்கையில் நம்பமுடியாத தருணங்கள் நிறைய இருந்தன, அவை முக்கியமான தருணங்களாக இருந்தன,' என்று அவர் கூறினார்.

'என் வாழ்க்கையில் நம்பமுடியாத பல தருணங்களை நான் அனுபவித்திருக்கிறேன், அவை முக்கியமான தருணங்களாக இருந்தன. கடந்த ஆண்டு விம்பிள்டன் ஒரு நபராகவும், ஒரு விளையாட்டு வீரராகவும் எனக்கு நிறைய மாற்றங்களை ஏற்படுத்தியது, நீங்கள் மிகவும் கடினமாக உழைக்கும் போது, ஒரு இலக்குக்காக உங்கள் வாழ்நாள் முழுவதும், நான் அதை பல நம்பமுடியாத நபர்களுடன் பகிர்ந்து கொள்ள முடிந்தது.

ஆனால் விம்பிள்டனில் வெற்றி பெற முடியும், இது என் கனவாக இருந்தது. டென்னிஸில் நான் விரும்பிய ஒரு, உண்மையான கனவு அது உண்மையில் என் கண்ணோட்டத்தை மாற்றியது. விம்பிள்டனுக்குப் பிறகு எனக்கு அந்த குடல் உணர்வு இருந்தது, அதைப்பற்றி என் அணியுடன் நிறைய பேசினேன்.

என் டென்னிஸ் வாழ்க்கை எவ்வளவு அற்புதமான பயணமாக இருந்தது என்பதைக் கொண்டாடுவதற்கான சரியான வழி எனது சரியான வழி எனக்கு இது போல் உணர்கிறேன்.'

குயின்ஸ்லேண்டர் வேறு சில வாழ்நாள் கனவுகளைத் துரத்த விரும்புவதாகவும், தனது வாழ்க்கையின் அடுத்த அத்தியாயத்தைப் பற்றி 'மிகவும் உற்சாகமாக' உணர்ந்ததாகவும் முடித்தார்.

2016 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் 18 மாத இடைவெளிக்குப் பிறகு, மன ஆரோக்கியத்துடனான அவரது போராட்டங்களால் தூண்டப்பட்ட பின்னர், 2016 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் விளையாட்டுக்கு திரும்பியதைத் தொடர்ந்து, பெண்கள் உலகின் முதனிலை வீராங்கனை ஆக தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தான் 'உடல் ரீதியாக செல விடப்பட்டதாக' பார்டி வெளிப்படுத்தினார்.

'என் வாழ்க்கையின் இரண்டாம் கட்டத்தில் என்னுள் ஒரு முன்னோக்கு மாற்றம் ஏற்பட்டது, எனது மகிழ்ச்சி முடிவுகளைச் சார்ந்திருக்கவில்லை,' என்று பார்டி கூறினார். டென்னிஸ் சூப்பர் ஸ்டார் தனக்கு உடல் உந்துதல் அல்லது உயர்மட்டத்தில் தன்னை சவால் செய்வதற்கான உணர்ச்சி விருப்பம் இல்லை என்று விளக்கினார்.

'மக்கள் அதை புரிந்து கொள்ள மாட்டார்கள் என்று எனக்குத் தெரியும். அது சரி, நான் அதை சரி என்று எனக்கு தெரியும், ஆஷ் பார்டி, நபர் அவள் துரத்த வேண்டும் என்று பல கனவுகள் வேண்டும் என்று அவசியம் இல்லை உலக பயணம் ஈடுபடுத்த வேண்டாம், என் வீட்டில் இருந்து விலகி இருப்பது, நான் எப்போதும் இருக்க வேண்டும் எங்கே இது.

இப்போது நான் ஆஷ்லி பார்டி என்ற நபராக என் வாழ்க்கையின் அடுத்த கட்டத்தை அனுபவிப்பது முக்கியம் என்று நினைக்கிறேன், ஆஷ்லி பார்டி என்ற தடகள வீரராக அல்ல.'

2014-16 ஆம் ஆண்டில் கிரிக்கெட் விளையாட விளையாட்டிலிருந்து நீண்ட இடைவெளி எடுத்த போதிலும், 2019 ஆம் ஆண்டில் பிரெஞ்சு பகிரங்கத்திலும், 12 பிற பட்டங்களிலும் 13 வயதில் சார்புநிலையாளராக மாறிய பார்ட்டி, 2019 ஆம் ஆண்டில் பிரெஞ்சு பகிரங்கம், 12 பிற பட்டங்களையும் வென்றார்.

ரோலண்ட்காரோஸில் தனது முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டிக்குப் பிறகு, பார்டி தனது வாழ்க்கையை அச்சுறுத்தும் மனநலப் போர் குறித்து மனம் திறந்தார், இது அவர் தற்காலிகமாக டென்னிஸில் இருந்து விலகியதைக் கண்டது.

விம்பிள்டன் ஜூனியர் கிரீடத்தை வெறும் 15 வயதில் வென்ற பின்னர் விளையாட்டின் அடுத்த பெரிய விஷயம் என்று கூறப்படுவதன் அழுத்தத்தை சமாளிக்க போராடுவதாக அவர் கூறினார்.

மனச்சோர்வடைந்து, வீட்டிலேயே முடங்கிய பார்டி, முதல் சுற்று அமெரிக்க பகிரங்க தோல்விக்குப் பிறகு அதை நிரப்பினார்.

ஜனவரி மாதம் மெல்போர்னில் வெற்றி பெற்ற பின்னர் இந்தியன் வெல்ஸ் மற்றும் மியாமி பகிரங்கத்தில் இருந்து விலகிய அவர், 'அவுஸ்திரேலிய பகிரங்கத்தை வென்ற பிறகு தொடர்ந்து மீண்டு வர வேண்டிய அவசியம் உள்ளது' என்று குறிப்பிட்டார். டென்னிஸ் சம்பியன் மூன்று வெவ்வேறு சந்தர்ப்பங்களில் பட்டத்தை வென்ற எட்டாவது பெண் ஆவார்.

பார்டி மற்றும் அவரது நம்பமுடியாத வாழ்க்கை பெண்கள் டென்னிஸ் சங்கத்தின் தலைமை நிர்வாகி ஸ்டீவ் சைமனால் அவரது அறிவிப்புக்கு சில நிமிடங்களுக்குப் பிறகு பாராட்டப்பட்டது.

'இறுதி போட்டியாளராக இருப்பதன் மூலம் தனது கையொப்பம் கொண்ட பேக்ஹேண்ட் ஸ்லைஸுடன் ஆஷ்லி பார்ட்டி, ஒவ்வொரு போட்டிக்கும் அவர் கொண்டு வந்த அசைக்க முடியாத தொழில்முறை மற்றும் விளையாட்டுத்திறன் ஆகியவற்றின் மூலம் எப்போதும் முன்னுதாரணமாக வழிநடத்துகிறார்' என்று அவர் கூறினார்.

WTA வின் மகத்தான சாம்பியன்களில் ஒருவராக அவர் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்.

'@ashbarty மகிழ்ச்சியாக இருக்கிறது, டென்னிஸுக்காக வெட்டப்பட்டது, என்ன ஒரு வீரர்' என்று ஆன்டி முர்ரே ட்வீட் செய்துள்ளார்.

சக அவுஸ்திரேலிய நட்சத்திரம் தானாசி கொக்கினாகிஸ், பார்டியின் அதிர்ச்சியான முடிவுக்கு பதிலளிக்கும் விதமாக 'அதை மதிக்கவும்' என்று ட்வீட் செய்தார்.

முன்னாள் உலகின் முதனிலை வீராங்கனை கரோலினா பிளிஸ்கோவா, பார்டிக்கு எதிரான சில காவியப் போர்களை அனுபவிப்பது பாக்கியம் என்று கூறினார். 'ஒரு நம்பமுடியாத டென்னிஸ் வீரர், ஆனால் மிக முக்கியமாக சுற்றுப்பயணத்தில் உள்ள மிகச்சிறந்த நபர்களில் ஒருவர்,' என்று அவர் கூறினார்.

ஆஷ் பார்டி: ஒரு குறுகிய ஆனால் பளபளப்பான டென்னிஸ் வாழ்க்கை

ஏப்ரல் 2010 ஆஷ் பார்டி தனது 14 வயதில் தொழில்முறை போட்டியாளராக மாறினார், தனது சொந்த ஊரான இப்ஸ்விச்சில் நடந்த ஐ.டி.எஃப் பெண்கள் சர்க்யூட் போட்டியில் விளையாடினார்

ஜூன் 2011 விம்பிள்டனில் பெண்கள் ஒற்றையர் பட்டத்தை வென்றார் அவரது முதல் ஜூனியர் கிராண்ட் ஸ்லாம்

ஜனவரி 2012 அவுஸ்திரேலிய பகிரங்த்தில் வைல்ட்கார்டாக வெறும் 16 வயதில் தனது முதல் தொழில்முறை கிராண்ட்ஸ்லாம் போட்டியில் அறிமுகமானார்.

ஜனவரி 2013 அவுஸ்திரேலிய பகிரங்கத்தில் மற்றொரு வைல்ட்கார்டை பெற்றார்

பெப்ரவரி 2013 மலேசிய பகிரங்கத்தில் முதல் டபிள்யு.டி.ஏ டூர் வெற்றி

மே 2013 பிரெஞ்சு பகிரங்கத்தில் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் வெற்றி

ஜூன் 2013 பர்மிங்ஹாம் பகிரங்கத்தில் கேசி டெலாக்குவாவுடன் இரட்டையர் பிரிவில் முதல் டபிள்யு.டி.ஏ பட்டத்தை வென்றார்

செப்டம்பர் 2014 தொழில்முறை டென்னிஸில் இருந்து ஓய்வு பெறுகிறார், ஏனெனில் அவர் ஒரு 'சாதாரண டீன் ஏஜ் பெண்ணாக இருக்க விரும்பினார் மற்றும் சில சாதாரண அனுபவங்களைக் கொண்டிருக்க வேண்டும்'

ஜூலை 2015 பிரிஸ்பேன் ஹீட் தொடக்க மகளிர் பிக் பாஷ் லீக்கில் விளையாடுவதற்கான அறிகுறிகள்

பெப்ரவரி 2016 WBBL பருவத்தின் போட்டியைத் தொடர்ந்து டென்னிஸுக்குத் திரும்புவதாக அறிவித்தார்.

பெப்ரவரி 2017 மலேசிய பகிரங்கத்தில் முதல் டபிள்யு.டி.ஏ பட்டத்தை வென்றது

ஜனவரி 2018 அவுஸ்திரேலிய பகிரங்கத்தில் முதல் 18 இடத்தைப் பிடித்த முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றார்

செப்டம்பர் 2018 அமெரிக்க பகிரங்கத்தில் கோகோ வந்தேவேகேவுடன் இரட்டையர் பிரிவில் முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றார்

ஜூன் 2019 பிரெஞ்சு பகிரங்கத்தில் முதல் கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டத்தை வென்றது

1973 இல் மார்கரெட் கோர்ட்டுக்குப் பிறகு ரோலண்ட் கரோஸில் வென்ற முதல் அவுஸ்திரேலியர்

ஜூன் 2019 எவோன் கூலாகாங்கிற்குப் பிறகு உலகின் முதல் இடத்தைப் பிடித்த முதல் அவுஸ்திரேலியப் பெண் ஆனார்.

ஜூலை 2021 முதல் விம்பிள்டன் பட்டத்தை வென்றார், 1980 ஆம் ஆண்டில் கூலாகாங்கிற்குப் பிறகு முதல் அவுஸ்திரேலிய பெண்

ஜூலை 2021 டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கலப்பு இரட்டையர் பிரிவில் ஜான் பீர்ஸுடன் வெண்கலப் பதக்கம் வென்றார்

ஆகஸ்ட் 2021 ஆஸி பகிரங்கத்தில் கவனம் செலுத்த மீதமுள்ள பருவத்திலிருந்து வெளியேறுகிறது.

ஜனவரி 2022 முதல் அவுஸ்திரேலிய பகிரங்க பட்டத்தை வென்று, மூன்று வெவ்வேறு தளங்களில் வென்ற எட்டாவது பெண்மணி ஆனார்

மார்ச் 2022 டென்னிஸில் இருந்து அதிர்ச்சியாக ஓய்வு பெறுவதாக அறிவித்தார்

நெஸ்லே–மைலோ இலங்கையில் Barcelona கால்பந்து அக்கடமியுடன் கைகோர்ப்பு

நெஸ்லே-மைலோ, இலங்கையிலுள்ள Barcelona கால்பந்து அக்கடமியின் 5 ஆவது ஆண்டு நிறைவு விழாவைக்கொண்டாடுவதற்காக அதனுடன் கைகோர்த்துள்ளது. குதிரை பந்தயதிடல் மைதானத் தில் மார்ச் 12 அன்று நடைபெற்ற இந்த கால்பந்து போட்டியில் பல்வேறு வயதுப் பிரிவுகளில் இருந்து 500 க்கும் மேற்பட்ட திறமையான சிறுவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். நெஸ்லே மைலோ விளையாட்டு மற்றும் உடல் ரீதியான செயல்பாடுகளுடன் நீண்டகாலமாக தொடர்புடைய ஒரு வர்த்தக நாமமாக இருப்பதால், சிறுவர்களை அவர்கள் நேசிக்கும் விளையாட்டுகளை தொடர்ந்து முன்னெடுக்க ஊக்குவிப்பது மற்றும் உடல்ரீதியான செயல்பாடுகள் நிறைந்த வாழ்க்கை முறையை மேம் படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள அதே நேரத்தில், இந்த ஒத்துழைப்பின் மூலம் வாழ்க்கையில் மேலும் முன்னேற அவர்களுக்கு ஊக்கமளிக்கிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

மஞ்சரி களஞ்சியம்

வாழ்வாதாரமா சேதாரமா 219

தமிழ்க் கவி பேசுகின்றார்

தரகு முறை ஒழிந்தால் தான் நுகர்வோருக்கும் உற்பத்தியாளருக்கும் விடிவு

'கையில வாங்கினேன் பையில போடலே காசு போன இடம் தெரியலே
காதலி பாப்பா காரணம் கேப்பா என்ன சொல்வதென்று தெரியலே'
' அஞ்சு ரூவா நோட்ட கொஞ்ச முன்னம் மாத்தி மிச்சமில்ல காசு மிச்சமில்ல'
' காசேதான் கடவுளடா...அந்த கடவுளுக்கும் இது தெரியுமப்பா.'

இப்படி எத்தனை எத்தனை பாடல்கள், எத்தனை எத்தனை போராட்டங்கள். எல்லாமே காலத்துக்கு காலம் தெறிக்க விட்டாலும், ஏறின பொருள் ஏறினதுதான். எனது பாட்டனார் ஒரு மூடை நெல்லை நாலு சதத்துக்கு வாங்கியதாக சொல்வார். என்தந்தை இருபது ரூபாவாக வாங்கினார் எனினும் அதன்பின் அவரும் ஒரு விவசாயி ஆகி அது முப்பத்தைந்து ரூபாவாகிவிட்டதாக அலுத்துக் கொள்வார். நான் எனது விவசாய முயற்சியில் முதல் அறுவடை நெல்லை மூடை ஒன்று முப்பத்தாறு ரூபாவுக்கு விற்றேன். அப்போது அளவுகள் புசல் கொத்து என இருந்தது. பின்னர் ஒரு பத்து வருடத்தில் ஐம்பத்தாறு ரூபாவுக்கு மூன்று புசல் நெல். அதாவது ஒரு மூடை நெல் வந்தது. அது சிறிமாவோ அம்மையாரின் அரைக்கொத்த ரிசி திட்டம் நடந்தபோது. இந்த ஒரு மூடை நெல்லானது அளவுக்கணக்கில் கிலோவாகி, ஒரு மூடை எழுபத்திரண்டு கிலோ என விற்கப்பட்டாலும் அதன் விலை எட்டாயிரத்தை எட்டியுள்ளது.

அதுசரி அதென்ன சிறிமா அம்மையாரின் அரைக் கொத்தரிசித் திட்டம். எங்கள் தலைமுறை கடந்த விடயம் அல்லவா. எமது நாட்டில் கூப்பன் அரிசித்திட்டம் இருந்தது. அதில் இரண்டு கொத்து அரிசி ஒரு நபருக்கு ஒரு வாரத்தில் கிடைத்தது. கட்டுப்பாட்டு விலையான இருபத்தைந்து சதம் ஒரு கொத்தரிசி. மற்ற ஒருகொத்தரிசி இலவசம். சிறிமாவோ அம்மையார் பதவியேற்ற போது சுய பொருளாதாரத்தை வளர்ப்பதாக கூறி அரைக்கொத்தரிசியே ஒரு நபருக்கு வழங்கினார். நம்புங்கள்.

அப்போது குடும்பக்கட்டுப்பாட்டு திட்டம் எதுவும் எமது மண்ணில் இல்லை. ஆக எந்த வீட்டிலும் பிள்ளைகள் அதிகமாகவே இருந்தார்கள். இந்த ஒரு கொத்தரிசி கிடைத்த போதே வார முதல்நாளான திங்கட்கிழமைகளில் எந்த ஏழை வீட்டிலும் இரண்டு வேளைக்கு சோறு சாப்பிட முடிந்தது. அது அரைக் கொத்தான போது மக்கள் பட்டினி கிடக்க வேண்டிய தாயிற்று. பாண் கோதுமைமா என்பனவும் செத்தல்மிளகாய், மல்லி, இன்னும் இறக்குமதியாகிக் கொண்டிருந்த பல பொருட்கள் இல்லாமல் போயிற்று. மக்கள் நள்ளிரவுக்காட்சி சினிமா பார்த்துவிட்டு அப்படியே ஓடிப்போய் பேக்கரி வாசல்களில் படுத்து உறங்கினார்கள் அதிகாலையில். பாண் போறணைகளில் ஒரு வருக்கு ஒரு றாத்தல் பாண் வழங்கினார்கள். அதற்காகவே அந்தப்படுக்கை. றாத்தல் எட்டுச்சதம் விற்ற மரவள்ளிக்கிழங்கு எண்பது சதமாக விலையேறியது. அதையும் அவித்து உண்ணப்போதாமல் மயங்கினர். சீனி கூப்பனுக்கு மட்டும், சக்கரை சிறிது பேரீச்சம்பழம், தேங்காய்ச்சொட்டு வாழைப்பழம் இவற்றுடன் தேநீர் அருந்தினோம். தேநீர்க்கடைகளில் 'காட்ட' என வெறும் கறுப்புத் தேநீர் கிடைக்கும். பத்துச்சதம். ஒரு இனிப்பு வாங்கி அதை வாயில் போட்டுக் கொண்டு குடிப்பர். பிள்ளைகள் பப்பாசிக்காய்களை அவித்து உண்டு விட்டு பாடசாலைக்குப் போனார்கள். மக்கள் பட்டினியால் இறக்கும் நிலைவரை வந்தது. சொல்லுங்க இப்ப வந்திருக்கிறது பஞ்சமா?

ஒரு வருடம் முடிகையில் விவசாயிகள் பெரும் செல்வந்தராக மாறக்கூடிய அளவு உள்ளூர் உற்பத்திகள் பெருகின. ஆனாலும் நிலமற்றோர் துயரப்பட்டனர்.

ஒவ்வொரு தடவை விலை ஏறும் போதும் விவசாயிகள் மகிழ, இடைத்தரகன் குளிர்ச்சியாகவும் மாற, நுகர்வோன் அயர்ச்சி அடைவதே வழக்கம். அந்த வகையில் மிளகாய் பயிரிட்டவர்கள், உழுந்து பயிரிட்டவர்கள் பெருகினர் வளமும் அதிகரித்தது. ஆனால் இன்றைய நிலை வேறு.

விவசாயிகள் குளிர முடியாவிட்டாலும் கொதிக்கின்ற வெய்யிலில் டீசலுக்காக காத்திருக்கிறார்கள். உழவு யந்திரங்கள் பதற்றத்துடன் நிற்கின்றன. நிலத்தின் ஈரம் காயுமுன் உழது விடத் துடிக்கிறான் விவசாயி. ஆம், உலகத்துக்கு படியளக்க வேண்டியது அவன்தான். என்ன கஸ்டமென்றாலும் அவன் நிலத்தில் ஏர் பாச்சியே ஆக வேண்டும். அதேசமயம் மணல், காட்டுமரம். கல் கட்டடப்பொருட்களை ஏற்றவும் டிப்பர் வாகனங்கள் ஒவ்வொரு எரிபொருள் நிரப்புநிலையங்களிலும் நீண்ட வரிசையில் காத்திருப்பதை காண முடிகிறது.

எந்தப்பொருளிலும் இடைத்தரகர்களே அபாரமாக சம்பாதிக்கிறார்கள். நுகர்வோர் என்னதான் திட்டினாலும். அவர்களது முகத்தில் எந்த சலனமும் இல்லாமல் கல்லாப் பெட்டியில் கவனமாக இருக்கிறார்கள். எது எதற்கு விலை ஏறியிருக்கிறது என்று சொல்ல முடியவில்லை. ஒவ்வொரு பொருட்களும் சேவைகளும் கூட ஒன்றரை இரண்டு மடங்கு விலை அதிகரித்துள்ளது. ஏதோ நானறிந்தவரையில் இன்னும் ஏறாத பொருட்கள் கசிப்பு கஞ்சா மதுபான வகைகள். செல்பேசிக்கான கட்டணங்கள் என்ற வகைக்குள் வருகிறது. அவை அதிகரித்தாலும் அட போப்பா என்று தட்டிவிட்டுப் போகும் துணிவும் குடிமக்களுக்கு உண்டு.

எவ்வளவுதான் தட்டுப்பாடானாலும் செல்பேசிகள் ஓயவில்லை. மேலும் மின்தடை காரணமாக. டேட்டா காட்டுகளின் விற்பனை அதிகரித்துள்ளதாக சொல்கிறார்கள். ஊகும் இதற்காகவெல்லாம் நாங்கள் சலித்துக் கொள்ளப் போவதில்லை. அதெப்படி கையில் போனில்லாமல் இருப்பது. சினிமா தொலைக்காட்சி நாடகங்கள் என எதை வேண்டுமானாலும் கவனியுங்கள் ஆலயத்தில் வழிபடும் கைகளுக்குள்ளும் செல்போன் இருக்கும். இவற்றின் பாவனைகளும் அவசியமான தேவைகளுக்காக என்பது போய் படம்பார்க்க, யூரியூப்பில் கேளிக்கைகளை ரசிக்க என பொழுது வேடிக்கையாகப் போகிறது.

அடுத்ததாக நாம் கவலைப்படாமல் செல வழிப்பது ஆடை அணிமணிகள். உள்ளூர் தயாரிப்பில் உருவான ஆடைகளை அணிவது கண்ணியமில்லை என்றாகிவிட்டது. திருவிழா சடங்கு சாங்கியங்கள் கோவில் விழாக்கள் என்பதெல்லாம் இதனால் பயப்படுவதில்லை. திருமணமா? ஒருதடவை ரெங்கநாதன் தெருவுக்குப் போய் தேவையானதெல்லாம் அங்கே வாங்கி வந்தால்தான் பெருமை என்றிருக்கிறது. இது தமிழர்களின் நற்பண்புகளில் ஒன்றாக உள்ளது. ஏனென்றால் லண்டன் அவுஸ்ரேலியா பிரான்ஸ் போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் அப்படித்தான் செய்கிறார்கள் பின்னே நாங்கள் குறைவா? நாம் எப்படி இங்கேயே பொருட்கள் வாங்குவது.

இன்றைய பொருளாதார நிலை அந்த நாடுகளையும் விட்டுவைக்கவில்லை. அங்கிருந்து வரும் செய்திகளும் அவ்வளவு திருப்தியாக இல்லை. கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் என்ற கதையாகிவிட்டது.

உழைப்பு ஒன்றுதான் இந்த நிலையை மாற்றும் என்று சொல்ல முடியவில்லை. ஏராளமான பணியாளர்கள் கொரோனா காலத்தில் நாடு திரும்பிவிட்டார்கள். மத்திய கிழக்கில் பணியாற்றிய ஏழைகளை நாம் எப்படிப் பார்த்தோம். அவர்களது பெறுமதி இப்போது தெரிகிறது.

ஒரு கோ வி லின் தேர் கட்டுமானம் என்பவற்றை நிர்மாணிக்க யாழ்ப்பாணத்தில் அற்புதமான கலைஞர்கள் இருக்க, இந்தியா விலிருந்து ரெண்டொரு ஆசா(மி)ரிகள் வரவேண்டி இருக்கிறது.. அதற்கான செலவும் அப்பாவி பக்தர்கள் செலுத்துவார்கள். அனால் அது தாம் கொடுத்த பணம் எனபதே அவர்களுக்கு தெரியாமல் அவர்களை அழைத்துவர இந்தியாவரை சென்றுவந்த யாரோ ஓர பிரமுகர் பெருமையை தட்டிச்செல்வார். ஆம் இங்கும் இடைத்தரகர்தான்.

இந்த தரகு முறை ஒழிந்தால் நுகர்வோனுக்கும் உற்பத்தியாளனுக்கும் நேரடி தொடர்பு வந்தால்... இது கனவுதான் நடந்தால் பார்க்கலாம்.

#NO ஒடி இரண்டாம் கட்டமாக சிறுவர் பாதுகாப்பு யாத்திரை

'#NO ஒடி சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை நிறைவுக்கு கொண்டு வரும் தேசிய திட்டம்" இரண்டாம் கட்டம் ஏப்ரல் 1 ஆம் திகதி காலியிலிருந்து கொழும்புக்கு யாத்திரையாக வருகை தந்தது. இலங்கையில் முதன் முறையாக "சிறுவர் பாதுகாப்பு யாத்திரை" எனும் நாமத்தில் இந்தத் திட்டம் அமையவுள்ளது. சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்தும் அமைப்பு (Stop Child Cruelty Trust) மற்றும் சிறுவர் பாதுகாப்பு ஒன்றியம் (CPA) ஆகியன இணைந்து ஏப்ரல் 2ஆம் திகதி அது கொழும்பு சுதந்திர சதுக்கத்தை வந்தடைந்தது.

கடந்த 18 மாத காலப்பகுதியில் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்த 12 சிறுவர்களின் நினைவாக, ஏப்ரல் 1ஆம் திகதி, பன்னிரண்டு சவப் பெட்டிகளும் காலியிருந்து பேருவளை முதல் களுத்துறை ஊடாக கொழும்பு கோட்டையை வந்தடைந்தன, இலங்கையின் முதலாவது சிறுவர் பாதுகாப்பு நலன்பேணல் தூதுவர்களான சாரங்க திசாசேகர, தினக்ஷி பிரியசாத், உமார சின்ஹவன்ச, ஹரித் விஜேரத்ன, ஆதித்யா வெலிவத்த, கலாநிதி. விசாகேச சந்திரசேகரம், கலாகீர்த்தி நிரஞ்சனி சண்முகராஜா, அபிஷேகா பெர்னான்டோ மற்றும் ஒடாரா குணவர்தன ஆகியோர் இந்த யாத்திரையில் பங்கேற்றனர். சிறுவர் பாதுகாப்பு ஒன்றியத்தின் இணை அழைப்பாளரும், சிறுவர்களுக்கு எதிரான வன்முறையை நிறுத்தும் அமைப்பின் ஸ்தாபக தலைமை செயற்பாட்டாளருமான வைத்தியர் துஷ் விக்ரமநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "சிறுவர் பாதுகாப்பு என்பது தேசிய மட்டத்தில் இடர்நிலையை எதிர்கொண்டுள்ளது. உங்கள் பிள்ளை வீட்டிலிருந்து வெளியே சென்று திரும்பி வரும் போது சவப் பெட்டியில் வருவதைப் போன்று மோசமான சம்பவம் இடம்பெற முடியாது. இந்த நிலை தொடர்பில் நம் நாட்டைச் சேர்ந்த அனைவரும் ஒன்றிணைந்து குரலெழுப்ப வேண்டும்.

அண்மையில் வெளியிடப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளின் பிரகாரம் வெட்டுப்புள்ளிகளுக்குமேல் புள்ளிகளைப்பெற்று தகுதியடைந்துள்ள மட் /மம/ காத்தான்குடி ஹிழுறிய்யா வித்தியாலய மாணவர்கள் எடுத்துக்கொண்ட குழுப்படத்தில் 1ஆம் வரிசையில் இடமிருந்து வலமாக எம்பிஎம். நதீர் (உறுப்பினர் பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு), எப்எம். முனீர் (உறுப்பினர் பா.அ.நி.குழு), எம்எம்எம். சப்றி (பொறியியலாளர்), எம்.ஏ.சீ.எம். நௌபல் (பொறியியலாளர்), எம்.ஐ.எம். ஜவ்பர் (செயலாளர் பா.அ.நி.குழு), எஸ்எச்எம். இனாமுல்லாஹ் (கிட்ஸ் இணைப்பாளர்), எஸ்ஜ. யஸீர் அறபாத் (பாடசாலை அதிபர்), டாக்டர் எஸ்.எம்.எம்.எஸ். செயித் உமர் மௌலானா (வலயக்கல்விப் பணிப்பாளர்மட்டக்களப்பு மத்தி), எம்எம். கலாவுதீன் (பிரதேச கல்விப் பணிப்பாளர்), எம்ஏ. ஜாபிர் கரீம் (உதவிக் கல்விப்பணிப்பாளர்), ஐஎம். மர்சூக் (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்), எஸ்ஏகே. பழீலுர் ரஹ்மான் (உறுப்பினர்பா.அ.நி.குழு), எம்ஜ. நஜிபுள்ளாஹ் (உறுப்பினர் பா.அ.நி.குழு), எம்எல். அலாவுதீன் (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆரம்ப நெறி). 2 ஆம் வரிசையில் இடமிருந்து வலமாக எம்ஐஎம். இஹ்ஸான் (ஆசிரியர்), திருமதி ஐஎச்ஏ. கரீம் (பகுதித்தலைவர்), திருமதி எம். சமீம் (பிரதி அதிபர்), திருமதி கேஎஸ். ஸானாஸ் பர்வின் (பகுதித் தலைவர்), திருமதி எஸ்என்எம். சாபி (பகுதித் தலைவர்), எம்என்எப். ஜனா (147), எம்என்எப். நிஸ்பா (157), எம்ஜே. தமீஸா மனால் (156), எம்எம். மர்யம் (153) எம்ரீஎப். பக்றா (170), எம்எஸ். ஷஹ்மா (187),ஏஎப். அஹ்னா (177), திருமதி எம்எம். ஜலால்தீன் (ஆசிரியை), திருமதி ஆர். தாஜுதீன் (ஆசிரியை), திருமதி ஆர். அலாவுதீன் (ஆசிரியை). 3 ஆம் வரிசையில் இடமிருந்து வலமாக எம்ஆர்எம். அமான் (167), எம்எம். மஷ்ரிக் அஹமட் (151), ரீஎம். உமர் ஹனீப் (153),எம்ஜேஎம். யூசுப் (157), எம்இஸட். ஸெய்த் முஹம்மத் (162), எம்பி. அப்துல்லாஹ் (160), எம்.எம்.எம். உஸ்மான் ஸ{ம்றி (151), எம்ஜேஏ. சமீஹ் (175)எப்எம். யூசுப்அலி (158), எம்ஆர். ஸைத் அஹமட் (164), கேஆர். உஸ்மான் (151), எம்ஜே. ஸெய்ட் ஹனி (165), ஏ.ஏ. அப்துல்லாஹ் ஆரிஸ் (175), ஜே. அப்துர் ரஹ்மான் (154), எம்எஸ். அப்துல்லாஹ் ஸம்ஹான் (148), ரீஜேஎம். ஷாமிக் (148), எம்வை. ஹாபி ஹ_ஸைன் (151), ஏ. அப்ஹீலத் அகமட் (161) ஆகியோரைக்காணலாம்.
(ஏறாவூர் நிருபர் நாஸர்)

2021 ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் மட்/ மம / காத்தான்குடி ஜாமியுழ்ழாபிரீன் வித்தியாலயத்தில் தகுதியடைந்த மாணவர் குழு எடுத்துக்கொண்ட படத்தின் முதலாம் வரிசையில் இடமிருந்து வலமாக எம்.எப். ஹதீஜா பர்ஹத்(147), திருமதி ஜேஎம். மஸ்ஊத்(ஆசிரியை), எஸ்ஏஎம். பதுர்தீன் (ஆசிரியை), திருமதி எம்எம். பிர்தவ்ஸீ (பிரதி அதிபர்),டாக்டர் செய்யித் உமர் மௌலானா (வலயக்கல்விப்பணிப்பாளர்). ஏஎல்எம். பாறூக் (அதிபர்), ஏ.ஜீ.எம். ஹக்கீம் (உதவிக் கல்விப்பணிப்பாளர்) மற்றும் எம்யூஎப். ஸைனப் (170). இரண்டாம் வரிசையில் இடமிருந்து வலமாக எம்.எச். உமர் (181), எம்ஆர். ஹாஷிக் அஹமட் (170), எம்எம். ஹாதிக் அலி (152), எம்எம்எம். சிறாஸ் அல் முஃயி (159), எம்.ஐ.ஐ. இஸ்ஸி (156), எம்என். இஸட். ஆயிஷா (157), எம்.ஆர்.எம். ஹசன் (164), எம்ஜே. ஷறப் றஹ்மான் (151), எம்.எப்.எப். ஹமீ (154) மற்றும் எம்என்ஏ. நுறாஸ் (154) ஆகியோர் காணப்படுகின்றனர்.
(ஏறாவூர் நிருபர் நாஸர்)

2021 ஆம் வருடத்திற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஏறாவூர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் வித்தியாலயத்தில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப்பெற்ற மாணவர்கள் எடுத்துக்கொண்ட குழு படத்தில் 1ஆம் வரிசையில் இடமிருந்து வலமாக எம்எல். சபூர் (சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்), எம்.எச்.எம். றமீஸ் (பிரதிக் கல்விப்பணிப்பாளர்), எம்எம். ஜலால்தீன் (பாடசாலை அதிபர்), எஸ். நஸீர் அஹமட் (ஆசிரியர்), மற்றும் திருமதி சித்தி றவூப் (ஆசிரியை) , 2 ஆம் வரிசையில் இடமிருந்து வலமாக எம்என். பாத்திமா மீபா (171), எம்என். பாத்திமா திக்றா (190), எம்கே. பாத்திமா சஹ்தியா (150), 3 ஆம் வரிசையில் இடமிருந்து வலமாக எம்எஸ். அஹமட் அபீப் (166), எம்ஆர்.எம். ரிஹ்மி (151), எம்.முஹமட் சுஜைத் (158), என். ஹன்பி (157), எம்.எஸ்.எம். சிமாஸ் (162), எம்எம். அப்ஹம் (158) மற்றும் எம்கேஎம். ஹாரீஸ் (148) ஆகியோர் காணப்படுகின்றனர்.
(படம்: ஏறாவூர் நிருபர் நாஸர்)

சுற்றுலாத் துறையின் வளர்ச்சி கருதி இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையே உடன்படிக்கை கைச்சாத்து

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் சேவைத் துறையில் புத்தாக்க அபிவிருத்தி மற்றும் களக் கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கான இரு தரப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றில் திறன்கள் அபிவிருத்தி,தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி தீபா லியனகேயும் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் டேவிட் ஹோலியும் அண்மையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இலங்கைக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையே உத்தியோகபூர்வ இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. திறன்கள் அபிவிருத்தி, தொழில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கல் இராஜாங்க அமைச்சுடன் இணைந்து அவுஸ்திரேலிய உதவித் திட்டம் இலங்கையில் சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையின் ஸ்திரதன்மைக்கும் அபிவிருத்திக்கும் தேவையான திறன்களை விருத்தி செய்யும் நோக்கத்துடன் 2020 2030 திறன் அபிவிருத்தி தசாப்தத்துக்கு இணையாக இத் திட்டத்தினை முன்னெடுக்கின்றது.

சுற்றுலாத்துறைக்கு ஏற்புடைய கொள்கையாக்கம், ஆண் பெண் சமத்துவம், ஆற்றல் அபிவிருத்தி, பொருளாதார வளர்ச்சி போன்ற விடயங்கள் தொடர்பாக துறைசார்ந்த சகலருடனும் பரந்துபட்ட ஒத்துழைப்புடன்

பணியாற்றுவதற்கு இத்திட்டம் பெரும் பங்காற்றுவதாக சிறப்பு மருத்துவ நிபுணர் சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

55வது கிளையை நுகேகொடவில் திறந்தது எசட்லைன் லீசிங்

எசட்லைன் லீசிங் கம்பனி லிமிடட் நிறுவனம் தனது 55வது கிளையை 2022 மார்ச் 28ஆம் திகதி நுகேகொடவில் திறந்துவைத்தது.

இல 189, ஸ்டான்லி திலகரத்ன மாவத்தை என்ற முகவரியில் புதிய கிளை அமைந்திருப்பதுடன், லீசிங் மற்றும் நிதி உற்பத்திகள் மற்றும் சேவைகள் அனைத்தையும் இது வழங்கும்.

இந்தக் கிளை தொடர்பில் கருத்துத் தெரிவித்த எசட்லைன் லீசிங் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு.அஷான் நிசங்க, 'நுகேகொட மிகவும் முக்கியமான வர்த்தக கேந்திர நிலையமாகக் காணப்படுவதுடன், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்குத் தாயகமாக விளங்குகிறது. நாடு முழுவதிலும் பாரிய கிளை வலையமப்புக் காணப்பட்டபோதும் துடிப்புள்ள சமூகத்தில் எமது பிரசன்னம் இருக்கவில்லை. இது தற்பொழுது தீர்க்கப்பட்டிருப்பதுடன், நுகோகொடவில் உள்ள மக்கள் ALCL ஊடாக தமக்கான தனிப்பயனாக்கப்பட்ட, நெகிழ்வான, நெறிமுறை மற்றும் தொழில்முறை சேவையை அனுபவிக்க முடியும்' என்றார்.

டேவிட் பீரிஸ் குழுமத்தின் நிதிச் சேவை கொத்தணியின் முதன்மை நிறுவனமாக இது விளங்குவதுடன், தனது உற்பத்திகளை விஸ்தரித்து தொடர்ந்தும் விரைவான வளரச்சிகண்டு வருகிறது. சில மாதங்களுக்கு முன்னர் பொரள்ளை கிளை திறந்துவைக்கப்பட்டுதடன், இலங்கையில் உள்ள பெண்களைப் பலப்படுத்தும், அவர்களுக்கான இயக்கத்தை வழங்கும் வகையில் லிய திரிய அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

Softlogicஇன் MAXMO வர்த்தகநாம குளிரூட்டிகள் இலங்கையில் அறிமுகம்



Softlogic Holdings PLC இன் கொழும்பு, இலங்கை, முழுமையான உரிமையாண்மையின் கீழான ஒரு துணை நிறுவனமான Softlogic Retail (Pvt) Ltd தனது MAXMO வர்த்தகநாமத்தின் கீழ், முற்றிலும் புதிய வகைப்பட்ட பார்ப்பதற்கு கவருகின்ற மற்றும் எரிசக்தி திறன் கொண்ட குளிரூட்டிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. குழுமத்தின் இணைய வழி சில்லறை விற்பனை நிலையமான mysoftlogic.lk வழியாக இணைய வழி உட்பட நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து Softlogic மற்றும் Softlogic Max காட்சியறைகளிலும் 2022 பெப்ரவரி 27 முதல் தற்போது கிடைக்கப்பெறுகின்றது.

Softlogic Retail (Pvt) Ltd இன் தலைமை நிர்வாக அதிகாரியான மொஹமட் ரிஸ்வி கருத்து வெளியிடுகையில்: "MAXMO வர்த்தகநாமத்தின் நிலையான வளர்ச்சி, வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் சாதனங்களுக்கு அபிமானம் பெற்ற தெரிவாக மாறியதற்கு, Softlogic மீதான வாடிக்கையாளரின் நம்பிக்கையை நேரடிக் காரணமாகக் கூறலாம். இலத்திரனியல் வர்த்தகத் துறையில் எங்களின் பரந்த அளவிலான வணிக தொழிற்பாடுகளுடன், வலுவான மற்றும் விசுவாசமான வாடிக்கையாளர் தளத்தை நாங்கள் கட்டியெழுப்பியுள்ளோம். MAXMO என்பது அத்தகைய ஒரு வர்த்தகநாமமாகும். இதன் மீது மகத்தான ஈர்ப்பை நாம் கண்டோம். நாங்கள் தற்போது MAXMO வர்த்தகநாமத்தின் கீழ் சலவை இயந்திரங்கள் முதல் சிறிய அளவிலான சாதனங்கள் வரை பல வீட்டு உபயோகப் பொருட்களின் விற்பனையை மேற்கொண்டு வருகிறோம். இன்று MAXMO குளிரூட்டிகளை MAXMO குடும்பத்தில் புதிய வரவாக அறிமுகப்படுத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்," என்று குறிப்பிட்டார்.

MAXMO இரண்டு வகையான குளிரூட்டிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. Inverter வகை குளிரூட்டிகள் (3 BTU திறன் தெரிவுகளுடன் 12000/18000/24000) மற்றும் Inverter அல்லாத வகை குளிரூட்டிகள் (4 BTU திறன் தெரிவுகளுடன் – 9000/12000/18000/24000). 12000 BTU தெரிவு ஒரு சிறிய வரவேற்பறை, வகுப்பறை அல்லது சாப்பாட்டு அறைக்கு (500600 சதுர அடி) உகந்தது.

தீவிர வளர்ச்சிக்கு தயாராகிறது UB Finance

UB FINANCE
A UNION BANK COMPANY

Union Bank PLC யின் துணை நிறுவனமான UB Finance Co Limited, தனது எதிர்கால வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்திற்கான தீவிரமான திட்டத்தை சமீபத்தில் அறிவித்தது.

இந்நிறுவனம்அதன்தாய்நிறுவனத்தினூடாக பெற்ற 1.98 பில்லியன் ரூபாய் உட்செலுத்துதல் மூலம் அதன் மூலதனத்தை வலுப்படுத்தியது. இதன் மூலம் UB Finance Co Ltd நிறுவனம் இலங்கையின் அதிக மூலதன உரிமம் பெற்ற நிதி நிறுவனங்களில் (LFCs) ஒன்றாக மாறியுள்ளது. UB Finance தனது வாடிக்கையாளர்களுக்கு தனித்துவமான வாடிக்கையாளர் அனுபவத்தை வழங்குகிறது. இந்நிறுவனமானது, இலங்கையின் முதன்மை வங்கிகளில் ஒன்றான Union Bank PLC யினால் பலப்படுத்தப்படும், பல்துறைத்திறனை மேம்படுத்தும் நிதி தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் விரிவான தொகுப்பால் ஆதரிக்கப்படுகிறமை குறிப்பிடத்தக்கது.

UB Finance இன் தீவிரமான வளர்ச்சி உத்தியைப் பற்றி DGM Credit & Operations, ஹிமாலி பெரேரா கருத்து தெரிவிக்கும் போது, "எங்கள் வளர்ச்சியின் குறிக்கோள்கள் மற்றும் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புகளுடன் ஒத்திசையும் விதமாக எங்கள் உள்ளக வளங்களை நாங்கள் முதன்மையாக சீரமைக்கிறோம். புதிய வாடிக்கையாளர் கையகப்படுத்தல் மற்றும் பொதுமக்களின் பங்கேற்பை அதிகரித்தல் ஆகியவை நமது எதிர்கால வளர்ச்சி உத்தியில் முக்கிய பங்கு வகிக்கும். எங்களது திட்டமிட்ட மூலோபாய சந்தைப்படுத்தல் முயற்சிகள், உயர்நிலை வாடிக்கையாளர் சேவை மற்றும் பிற திட்டங்கள் மூலம், UB Finance ஒரு வலுவான சக்தியாக வெளிவரும் என்று நம்புகிறோம். UB Finance இல் நாம் செய்யும் எல்லாவற்றையும் போலவே, எமது புதிய விரிவாக்கம் மற்றும் வளர்ச்சி மூலோபாயமும், அனைத்து இலங்கையர்களுக்கும் ஒரு தனித்துவமான பொருளாதார மற்றும் சமூக மதிப்பு முன்மொழிவை வழங்குவதற்கான எங்கள் அர்ப்பணிப்பால் வழிநடத்தப்படுகிறது."

அல்ஃபா அப்பரல்ஸ் தேசிய வியாபார சிறப்பு விருதுகள் 2021 வெற்றியாளராகத் தெரிவு

இலங்கையின் முன்னணி ஆடை உற்பத்தியாளர் எனும் வகையில், அல்ஃபா அப்பரல்ஸ், "ஆடை உற்பத்தி மற்றும் லெதர் தயாரிப்புகள் உற்பத்திப் பிரிவு" என்பதன் வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளது. இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தினால் (NCCSL) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வர்த்தக சிறப்பு விருதுகள் 2021 இல் இந்த கௌரவிப்பை அல்ஃபா அப்பரல்ஸ் பெற்றுக் கொண்டது.

நிறுவனத்தின் ஆடை உற்பத்தித் துறை மற்றும் பொருளாதாரத்தில் அல்ஃபா அப்பரல்ஸ் காண்பிக்கும் அர்ப்பணிப்பு மற்றும் எழுச்சி ஆகியவற்றை மீள உறுதி செய்யும் வகையில் இந்த சாதனை அமைந்துள்ளது. கடந்த ஆண்டின் இறுதியில், 24 ஆவது ஜனாதிபதி ஏற்றுமதி விருதுகள் வழங்கும் நிகழ்வில், 2019/20 ஆம் ஆண்டு காலப்பகுதியின் 'நடுத்தர" பிரிவில் "சிறந்த ஆடை உற்பத்தி ஏற்றுமதியாளர்" எனும் கௌரவிப்பையும் பெற்றுக் கொண்டது.

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி பொருளாதாரத்தில் பெருமளவு பங்களிப்பு வழங்குவதில் முன்னோடியாக ஒமெகா லைன் குழுமத்தின்,

அல்ஃபா அப்பரல்ஸ் திகழ்கின்றது. நிறுவனத்தின் சகல உள்நாட்டு இணை நிறுவனங்கள் மத்தியில் 13,000 க்கும் அதிகமான மொத்த பணியாளர்களைக் கொண்டுள்ளதுடன், பல சவால்களுக்கு மத்தியிலும் அதிகளவு மீண்டெழுந் தன்மையை வெளிப்படுத்துகின்றது.

2006 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது முதல், அல்ஃபா அப்பரல்ஸ் தொடர்ந்தும் 2400க்கும் அதிகமான இளைஞர்களுக்கு தமது திறன்களை வெளிப்படுத்தி தமது கனவுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான கட்டமைப்பை ஏற்படுத்திக் கொடுத்த வண்ணமுள்ளது. இதனூடாக 'உங்கள் கனவுகளை நனவாக்குவதற்கு சிறந்த இடம்" எனவும் அறியப்படுகின்றது.

அரசாங்கத்தின் இழுபறி நிலைக்கு உடனடி தீர்வைக் கோருகிறது JAAF

தேயிலை பொதியிடல் சார்ந்த உற்பத்தியில் முதன்மை நிறுவனமாக விளங்குகின்ற அனைத்து தரப்பினரும் கருத்து வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு நெருக்கடியை தீர்க்க ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்

சமீபத்திய அறிக்கையின்படி, மக்கள் மீது கடுமையான கஷ்டங்களைத் திணித்து, பொருளாதாரத்திற்கு இடையூறாக இருக்கும் தற்போதைய நெருக்கடியைத் தீர்க்க அனைத்து பங்குதாரர்களையும் வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு ஒன்றிணைந்து செயல்படுமாறு ஆடைத் தொழில்துறை வலியுறுத்தியுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடியை தீர்க்க அவசர நடவடிக்கை எடுக்காமல் நீண்ட காலம் நீடித்துக் கொண்டு சென்றால், இலங்கை மக்கள் மீது சுமத்தப்படும் சமூக மற்றும் பொருளாதார விளைவுகள் கணக்கிட முடியாததாக இருக்கும் என்று தொழில்துறை எச்சரிக்கை விடுக்கின்றது.

பல தசாப்தங்களில் வளர்ச்சியை அழித்த மோசமான தொற்றுநோயின் பாதகமான விளைவுகளிலிருந்து நாடு இன்னும் மீண்டு வந்துகொண்டிருக்கிறது.

தற்போதைய நெருக்கடிக்கு ஆக்கபூர்வமான தீர்வைக் கண்டறிந்து அமுல்படுத்துவதில் அரசாங்கத்தின் அசமந்தப் போக்கானது, நீண்டகாலமாக நாடு தொடர்ந்து செலுத்தக்கூடிய பாரிய செலவினங்களைத் திணிக்கும் அபாயத்தை ஏற்படுத்துவதாக இலங்கையின் ஆடைத் தொழில்துறையின் பாரிய அமைப்பான கூட்டு ஆடைகள் சங்கங்களின் மன்றம் (JAAF) சுட்டிக்காட்டியுள்ளதுடன், இதில் நீண்ட கால, உலகளாவிய சந்தைகளுக்கான அணுகல்களும் உட்பட்டுள்ளதாக மன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஆடை தொழிற்துறை இலங்கையின் மிகப்பெரிய வெளிநாட்டு வருமானம் ஈட்டும் துறையாகும், இது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6% பங்களிப்பை வழங்குகிறது. இத்துறை 350,000 பேருக்கு நேரடியாகவும் 700,000 பேருக்கு மறைமுகமாகவும் வேலை வாய்ப்புக்களை வழங்குகிறது.

"தற்போதைய நெருக்கடி நிலை பல மாதங்களாக உருவாகி வருகிறது, மேலும் அரசாங்கத்தின் தாமதம் பொது மக்களுக்கு கணிசமான கஷ்டங்களை உருவாக்கியுள்ளது" என்று JAAF பேச்சாளர் கூறினார். "மின்சாரம் மற்றும் எரிபொருள் செயலிழப்பு ஏற்கனவே பல சிறிய நிறுவனங்களை இழுத்து மூடுவதற்கு வழிவகுத்துள்ளது மற்றும் உற்பத்தி செலவையும் அதிகரித்துள்ளது." அமைதியான போராட்டங்களை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சிகள் ஒரு அரசியல் நெருக்கடியைத் ஏற்படுத்தி, நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது, என JAAF மேலும் தெரிவித்துள்ளது.

மீண்டும் வந்துவிட்டது பஜாஜ் CT100

வாகன உற்பத்தி, ஒருங்குசேர்த்தல் தொழில்துறை மற்றும் வாகன உதிரிப்பாக உற்பத்தித் தொழில்துறைக்கு கைத்தொழில் அமைச்சினால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையான செயற்பாட்டு நடைமுறையின் கீழ் உள்நாட்டில் பெறுமதி சேர்க்கப்பட்ட மோட்டார் சைக்கிளை அறிமுகப்படுத்திய முதலாவது நிறுவனமாக டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (லங்கா) லிமிடட் விளங்குகிறது.

20 வருடங்களுக்கும் மேலாக இலங்கையின் விருப்பமான மோட்டார் சைக்கிள்களாகத் திகழும் பஜாஜ் CT 100 இரண்டு வருட கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் புதிதாக சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. பஜாஜ் குடும்பத்தில் அதிகம் விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்களில் ஒன்றான பஜாஜ் CT 100, அதன் எரிபொருள் திறன், நீடித்துழைப்பு மற்றும் செயல்திறனுக்காக புகழ்பெற்றிருப்பதுடன், இது தற்போதைய பொருளாதார சூழலில் சிறந்த வாகனமாகவும் உள்ளது.

புதிய பஜாஜ் CT 100 தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்ட புதிய 102CC இயந்திரம் உள்ளிட்ட புதிய அம்சங்களுடன் கூடியதாக அமைந்திருப்பதால் எரிபொருள் சிக்கனம் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன், கவர்ச்சியான அலோவீல், எலக்ரிக்ஸ் ஸ்டார்ட் மற்றும்

யூஎஸ்பி சார்ஜர் உள்ளிட்ட விடயங்கள் இதில் உள்ளடங்கியுள்ளன.

இலங்கையின் பாரிய வாகன நிறுவனமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடட் நிறுவனம் பஜாஜ் தயாரிப்புக்களின் இலங்கைக்கான ஏக விநியோகஸ்தராகும்.

பஜாஜ் வாடிக்கையாளர்களுக்கு CT 100 மோட்டார் சைக்கிள்களுக்கு டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியிடமிருந்து ஒப்பிட முடியாதளவு விற்பனைக்குப் பின்னரான சேவை வழங்கப்படுகிறது. நாடு முழுவதிலும் உள்ள DPMC வேர்க்ஷொப், DPMC வேர்க்ஷொப் எக்பிரஸ் மற்றும் பஜாஜ் அசல் உதிரிப்பாகங்கள் மற்றும் சேவை முகவர் வலையமைப்புக்களின் ஊடாக இந்த சேவை வழங்கப்படுகிறது. இதன் ஊடாக வாடிக்கையாளர்கள் நாட்டின் எந்தப் பகுதியில் வசித்தாலும், எந்தப் பகுதிக்குப் பயணம் செய்தாலும் இலகுவான அணுகலை இது உறுதிசெய்கிறது.

போலித்தனமே அற்ற பெரிய மனிதர்

நண்பர் பேராசிரியர் சந்திரசேகரன் பற்றிய மௌனகுரு பல்கலைக்கழக ஞாபகங்கள்

நண்பர் பேராசிரியர் சந்திரசேகரனின் மறைவு மலையின் பாரம் போல மனதைத் அழுத்துகிறது. இன்று காலையில் குமரன் போன் பண்ணி இச் செய்தி கூறினார். மரணம் நிரந்தர உண்மை. அதிலும் முதுமை மரணத்தின் வாசற்படி என்பதும் நாம் அறிவோம். எனினும் மிக நெருக்க மானவர்களின் மரணம் மனதை ஒரு தடவை ஸ்தம்பிக்க வைத்துவிடுகிறதே ஏன்?

நானும் அவரும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முன் பின்னாகப் பயின்றவர்கள். 1960 களின் முற்பகுதி அது இற்றைக்கு 60 வருடங்களுக்கு முந்திய கதை அது நான் அவருக்கு இரண்டு வகுப்புகளுக்கு மூத்தவன். எனக்கு மலையகம் பற்றிய அறிமுகமும் மலையக மாணவருடனான அறிமுகம் கிடைத்தது பேராதனைப் பல்கலைக்கழகம் சென்ற பின்தான் 1961 இல் நான் அங்கு செல்கிறேன் என்னுடன் மலையக மாணவர்களான காலம் சென்ற சின்னத்தம்பி, தம்பையா, றாகல சந்திரன் ரங்கன், லலிதா ஹம்சவல்லி, முத்து லக்சுமி ஆகியோர் உடன் கற்றனர். இவர்கள் மலையக மாணவர்கள் அதன்பின்னர் வந்து க.பி முருகேசு, சண்முகம் போன்ற மலையக மாணவர் வருகின்றனர்.

மூன்றாவது தொகுதியாக அதன்பின் வந்த மலையக மாணவர்களுள் ஒருவர்தான் நமது இந்தச் சந்திரசேகரன்.

அவரும் சபா ஜெயராஜாவும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் ஒரு சாலை மாணாக்கர் இருவரும் ஒரு அறையில் வாழ்ந்த தோழர்கள் சந்திரசேகரனின் கலகலப்பும் அழகாக அவர் பாடும் சினிமாப்பாடல்களும் எவருடனும் உடன் நெருக்கமாக இணைந்து விடும் பாங்கும் அவரை மாணவர் மத்தியில் பிரபல்யமாக்கின.

சந்திரசேகரன் இருக்கும் இடத்தில் ஒரு மகிழ்ச்சியும் கலகலப்பும் நிறைந்திருக்கும்.

பெரிய பெரிய கூட்டங்களின் போது சபையிலிருந்து திடீரெனப் பீறிட்டு உரத்த தனிகுரலில் கேட்கும் அவர் கொமன்ட் சபை முழுவதும் சிரிப்பலையை ஏற்படுத்தும், ஆனால் அவர் கிண்டல்கள் நாகரீகமான புத்திசாலித்தனமான கிண்டல்கள். அவை யாரையும் மனம் நோகப் பண்ணாது , அது அவரது பாணி.

இருவரும் பேராதானைப் பல்கலைக்கழகத்தில் மாக்ஸிஸ சிந்தனைகளினால் கவரப்பட்டோம். இன்னும் பலரும் அந்தப் படிப்பு வட்டத்தில் இணைந்திருந்தனர் மாக்ஸிஸ நூல்களை வாசித்தல், வாசித்தவற்றைப் பகிர்ந்து கொள்ளல் கருத்துப் பரிமாறல் செயற்படுதல் என பல்கலைக்கழக மாணவ வாழ்வு கழிந்தது'. சபா ஜெயராஜா இடது சாரி நெறியின் பால் ஈர்க்கப்பட சந்திரசேகரன் எனும் அவரது இந்த அறைத் தோழர்களாயிருந்தார் என நினைக்கிறேன்.

அக்காலத்தில் மாணவரின் அதிகமான பொழுதுகள் நூல் நிலையத்திலும் விரிவுரை மண்டபங்களிலும் கழியும் அப்படி அமைக்கப்படிருந்தது பேராதனைப் பல்கலைக் கழக வளாகமும் சூழலும் , அன்றைய எமது விரிவுரையாளர்களும் நாம் கண்முன் கண்ட நம் முன் நடமாடிய அத்தனை விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் மிக மிக ஆழமானவர்கள் தத்தம் துறையில் துறைபோனவர்கள்.

அவர்கள் அதிகம் காட்சி தருவது விரிவுரை மண்டபங்களிலும் பல்கலைக்கழக நூல் நிலையத்திலும் தான் அவர்களைப் பார்த்தே அன்றைய தலைமுறை வளர்ந்தது சந்திரசேகரனும் இவ்வாறு அங்கு வளர்ந்தார்.

நூல் நிலையத்துள் அவரும் கிடந்தார் அவர் பதுளையில் படித்து பின்னர் யாழ்ப்பாணம் தெல்லிப்பளை மஹாஜனக் கல்லூரில் படித்து அங்கிருந்து பல்கலைக்கழகம் வந்தவர் இதனால் அவர் பல பிரதேசப் பண்பாடுகளுக்கும் பழக்கப்பட்டிருந்தார்

அன்றைய பல்கலைக்கழகக் கல்வி அவரைப் புடமிட்டது.

அப்போது நான் பேராசிரியர் வித்தியானந்தனின் நாடகங்களில் நடித்துக்கொண்டிருந்தேன் இராவணேசன் நாடகம் முக்கியமாகப் பேசப்பட்ட காலம் அது. நாடகம் பார்த்து விட்டு யூனியரான சந்திரசேகரம் தரும் உற்சாக வார்த்தைகள் எமக்கு மகிழ்ச்சிதரும் அவரது விமர்சனங்கள் சிந்திக்க வைக்கும்.

அவருள் ஒரு கலைஞன் இருந்தான் ஒரு பெரும் ரசிகன் இருந்தான்

சீனியர்ஸ் மீது மிகுந்த மதிப்புக் கொண்டவர் அவர், பழகுவதற்கு இனியர் பண்பாளர். அறச் சீற்றம் மிக்கவர். அன்று மாணவர் மத்தியில் இடதுசாரிச் சிந்தனைகள் பிரபல்யமாகியிருந்தன. மாக்ஸிசத்தில் ஆழ்ந்த புலமையுள்ள பல் விரிவுரையாளர்கள் அங்கு இருந்தனர் .

அன்றைய இளைஞரான சந்திரசேகரம் மாக்ஸிஸ சிந்தனைகளால் கவரப்பட்டிருந்த மையினால் தொழிலாளர் வர்க்கம் தொழிலாளர் வர்க்கம் என எப்போதும் அவர் பேசுவார்.

ஒரு நாள் இரவு நேரம் நூல் நிலையம் மூடியபின் நூல் நிலையத்திலிருந்து இன்னோர் சுப்பர் சீனியர் நண்பர் தனது விடுதிக்குத் திரும்பிக் கொன்டிருந்தார் அவர் சந்திரசேகரத்தை நன்கு அறிந்தவர்

அன்று சந்திரசேகரனின் Batch மாணவர் குழாம் ஒரு பார்ட்டி வைத்திருந்தது,பார்ட்டி என்றால் தெரியும்தானே

பார்ட்டி முடிய சிலர் நிலை தடுமாறும் நிலை வரை சென்று விட்டனர். இந்த நிலை தடுமாற்றம் அங்கு பெரிதாக எடுக்கப்படுவதில்லை காரணம் அது சகஜம் சீனியர் நண்பருக்கு பார்ட்டி நடந்தது எல்லாம் தெரியாது.

அந்த நண்பர் pillaring section னுக்கூடாக அதாவது தூண்கள் தொகுதிக்கூடாக வருகையில் சந்திரசேகரன் எனும் இம்மாணவன் ஒரு தூணில் முட்டிகொண்டு நின்றான் சந்திர சேகரத்திற்கு என்னவோ ஏதோ எனப் பதறிப்போன வந்த சீனியர் நண்பர் சந்திரசேகரன் அருகில் சென்று அவன் முதுகில் கைவைத்து சந்திரசேகரம் என்ன விடயம் என்ன நடந்தது என்றிருக்கிறார்.

தூணோடு முட்டிகொண்டு நின்ற சந்திரசேகரம் தலையை நிமிர்த்தாமல் தனக்குள் தொழிலாளி வர்க்கம் இப்போது நல்ல நிலையில் இல்லை என்றிருக்கிறார்.

அக்காலகட்டத்தில் இலங்கையில் தொழிலாள வர்க்கத்தின் வாழ்வு நிலையும் அதுதான் தன் நிலையையும் அன்றைய தொழிலாளி வர்க்கத்தையும் உள்ளடக்கி நானும் தொழிலாள வர்க்கமும் நல்ல நிலையில் இல்லை எனக் கூறிய இந்த வார்த்தை அவரின் அதி புத்திசாலித்தனத்திற்கு ஓர் உதாரணம் என அந்த நண்பர் அன்று சொன்னார்.

சந்தர்ப்பம் அறிந்து witty யாகபேசும் இந்த ஆற்றல் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை அந்த நண்பரும் இன்று வெளிநாட்டுப்பல்கலைக் கழகமொன்றின் ஓய்வு பெற்ற பேராசிரியர் சந்திரசேகரனின் இந்த அங்கத வார்த்தை அன்று தோழர்களிடையே வெகு பிரபல்யமாகிவிட்டது எப்போதும் நான் அவரைக் கண்டதும் அவரிடம் தொழிலாளவர்க்கம் என்ன நிலையிலுள்ளது? என்று இன்று வரை கேட்பதும் அவர் அட்டகாசமாகச் சிரிப்பதும் நான் கேட்க மறந்தாலும் அவரே அதனைச் சொல்லி தொழிலாள வர்க்கம் இப்போது நல்ல நிலையில் இருகிறது என்று கூறி அட்டகாசமாகச் சிரிப்பதும்

காதில் கேட்டபடி இருக்கிறது.

நான் பல்கலைக்கழகம் விட்டுப் புறப்பட்டதும் ஆசிரியராகிவிடுகிறேன் அவர் அங்கும் இங்கும் பல பணிகள் புரிந்து இறுதியில் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு கல்வித் துறை உதவி விரிவுரையாளரானார், கல்வி டிப்ளோமா செய்யும் பட்டதாரி ஆசிரியர்கள் அவரின் கீழ் பயிலும் சந்தர்ப்பம் வாய்க்கிறது

தொழில் நிமித்தம் நானும் டிப்ளோமா செய்ய வேண்டும், கொழும்புக்குத் தெரிபடுகிறேன். கொழும்புப் பல்கலைக் கழகத்தில் வகுப்புக்குப் போகிறேன் வகுப்பு எடுக்க ஆசிரியராக வருகிறார் இளைஞர் சந்திரசேகரர்,

எங்கள் வகுப்பில் இருந்தோரில் பலர் வயது போன ஆசிரியர்கள் இப்போது அவர்களில் மிக அதிகமானோர் இறந்தும் விட்டனர்.

வகுப்புக்கு வந்த சந்திரசேகரம் என்னைப் பார்க்கிறார் சடாரென வந்த வழியே சென்று வாசலில் நின்று என்னைக் காட்டி என் பெயரைக் குறிப்பிட்டு இவர் எமக்கெல்லாம் சீனியர் இவருக்கு நான் படிப்பிப்பதா என நாடகத் தன்மையுடன் கேட்கிறார்.

உடனே அவர் என்னைக்கண்டு ஓடியதும் ஓடி நின்று கூறியதும் அவரது நகைச்சுவைபாணி நினைக்க நினைக்க அவர் பகிடிகள் செயல்கள் ஒன்றன்பின் ஒன்றாக ஞாபகம் வருகின்றன. ஒரு நாள் சென்னை விமான நிலையத்திற்கு வந்து இறங்குகின்றார்.

டாகஸி கிடைக்கவில்லை ஒர் ஆட்டோ அமர்த்திக்கொள்கிறார் பேரம் பேசியதில் அவன் 350 ரூபா என்கிறான்.

தொகையைக் குறைக்க அவ்ர் ஆட்டோக்காரனிடம் உரையாடுகிறார்.

அவனோ தன் கட்டணத்தில் கறாராக இருக்கிறான், உரையாடுவதில் பலன் இல்லை எனக் கண்டு உரையாடலை நிறுத்திகொள்கிறார், வரும்போது வழமைபோல அவர் சத்தமிட்டுப் பாடிக்கொண்டே வருகிறார். அவ்ருக்குக் குசி என்றால் பாட ஆரம்பித்து விடுவார்.

அவர் சேர வேண்டிய இடம் வந்து விட்டது. ஆட்டோவிலிருந்து இறங்கியதும் அவனுக்கு 400 ரூபா கொடுக்கிறார், அவனோ 50 ரூபாவைத் திருப்பித் தருகிறான் அவர் மீதி உனக்குத் தான் என் பாட்டைக் கேட்டு கொண்டு வந்தமைக்கு எனக் கொடுக்கிறார் அவனோ இந்த விந்தை மனிதனைப் ஆச்சரியத்துடன் பார்க்கிறான் இந்நிகழ்வை என்னிடம் அவர் கூறி நமக்கு 50ரூபா மௌனகுரு. ஆனால் அவனுக்கோ அது பெரும் ஆச்சரிய மகிழ்ச்சி என்று கூறுகிறார். இதுதான் சந்திரசேகரம்

பகிடியான சிரிப்பு விழைவிக்கும் ஒன்றாக இந்நிகழ்வு தோன்றினும் இந்தப் பகிடிக்குப் பின்னாலுள்ள தத்துவம் அதன் பின்னாலுள்ள மனிதபிமானம் நினைந்து மகிழ்தற்குரியது.

ஒருவரின் வார்த்தைகளும்செயல்கலும்தானே அவரை எமக்கு காட்டுகின்றன.

அவர் பின்னால் பீடாதிபதியானதும் கல்விசார் நிலையங்களில் உயர் நிலையிலிருந்ததும் என அவர் உயர்ச்சிகள் அதிகம் அவற்றை எழுதப்பலர் உண்டு.

ஆனால் அவரது பட்டம் பதவி உயர்ச்சிகளுக்கும் அதற்கப்பால் அவர் வாழ்வும் அவர் வார்த்தைகளும்தானே அவரது உண்மையான உளத்தை எமக்குக் காட்டுகின்றன, போலித்தனம் சிறிதும் இல்லாதவர் அவர் எதனையும் புற நிலை நின்று பார்த்து ஒரு கிண்டல் அடிப்பது அதுவும் நோகாமல் கிண்டல் அடிப்பது அவரது பாணி இத்தகைய அனுபவங்கள் பலருக்குக் கிடைத்திருக்கக்கூடும்.

அவை எழுதப்படுகையில் அவரது முழுக் குணாம்சத்தையும் தரிசிக்கும் வாய்ப்பு எமக்குக் கிடைக்கும்.

நண்பரே

சென்று வாருங்கள்

வரிசையில் நிற்போர் ஒவ்வொருவராகப் போகிறார்கள்

நீங்களும் போய் விட்டீர்கள் அதுதானே நியதியும் கூட.

உங்கள் நண்பர் மௌனகுரு ...✍

நடுத்தர வயதினர் மத்தியில் அதிகரித்துள்ள சடுதியான மரணங்கள்

சாதாரண, மெலிதான குறைவான உடல் எடை கொண்ட 25 வீதமானவர்கள் உயர்குருதி அமுக்க, மாரடைப்பு நோய்களுக்கும் புற்றுநோயின் பாதிப்பிற்கும் உள்ளாவதுடன் பத்து வீதமானவர்கள் அதிக உடல் பருமனால் ஏற்படும் நீரிழிவு எனக் கருதப்படும் இரண்டாவது வகையான நீரிழிவு நோய்க்கும் ஆட்படுகின்றர் என அம்பாறை வைத்தியசாலையின் திட்மிடல் பொறுப்பதிகாரியும் பொது சுகாதார பிரிவு அதிகாரியும் சமூக மருத்துவருமான பாக்டர் லவப்பிரதன் (MBBS, M.Sc) வாரமஞ்சரிக்கு அளித்த நேர்காணலில் தெரிவித்தார்.

அவருடனான நேர்காணல் வருமாறு.

கேள்வி : இளவயது மரணங்கள் அதிகரிப்பதற்கான பிரதான பின்னணி ?

பதில் : முதற் காரணம் உடற்பருமன். இதய நோய்கள், பாரிசவாதம், புற்று நோய், நீரிழிவு போன்ற நோய்களுக்கு உடற்பருமன் காரணமாக இருந்து பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துகிற தென்பது ஆய்வுகளின் மூலம் உறுதிப் படுத்தப்பட்டுள்ளதனால் நோய்களுக்கு காரணமான ஒரு ஆரம்ப நிலையாக உடல்பருமன் கருதப்படுகிறது.

உடற்பருமன் பல்வேறு பாதிப்புகளை ஏற்படுத்துவதனால் உடல் பருமன் ஒரு நோயாக கருதப்படுகிறது. உலகளாவிய ரீதியில் சுமார் 40 இலட்சம் பேரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு முடிவுகளின்படி, 30 தொடக்கம் 70 வயதான ஆண்களின் உயிரிழப்புக்கு 30 சதவீதமும் பெண்களுக்கான உயிராபத்து15 வீதமுமான உடற்பருமன் அதிகரிப்பே காரணமென உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு சராசரி மனிதனின் ஆயுட்காலம் உடல் பருமனாக இருந்தால் ஆயுள் மூன்று வருடமாக குறையும் என ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கேள்வி : இலங்கையில் உடற்பருமன் நோயின் பாதிப்பு எவ்வாறுள்ளது ?

பதில் : இறுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் இலங்கையில் இளம் மற்றும் நடுத்தர வயதானோரில் 25 சதவீத ஆண்களும் 34 சதவீத பெண்களும் உடற் பருமன் நோயால் பாதிக்கப்பட்டிருப்பது அறியப்பட்டுள்ளது. இதனால் இன்று, உடற்பருமனால் நடுத்தர வயதினர் மத்தியில் சடுதியான மரணங்கள் அதிகரித்துள்ளது.

கேள்வி : உடல் பருமனாக இருப்பதை எவ்வாறு அறிந்து கொள்ளமுடியும் ?

பதில் : உடற்திணிவு சுட்டி (BMI) எனும் முறை இருந்தபோதிலும் மிக இலகுவான முறை வயிற்றின் சுற்றளவு கணிப்பீடாகும். ஆணாக இருந்தால் தொப்புள் ஊடான வயிற்றின் சுற்றளவு 90 சென்றிமீற்றரை விட அதிகமாக இருந்தாலோ பெண்களாக இருந்தால் 80 சென்றிமீற்றரை விட அதிகரித்து இருந்தாலோ உடற்பருமன் நோய் உள்ளதென்று இலகுவாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

கேள்வி : அப்படியானால் மெலிந்த உடலுடன் இருப்பவர்களுக்கு எந்த ஆபத்தும் வராதா ?

பதில் : சாதாரணமாக உடற்திணிவுச் சுட்டி குறைவான மெலிந்த உடல் தோற்றம் உடையவர்களில் அதாவது சுமார் 25 சதவீதமானோர் அதிக கொழுப்புகளை உடலில் கொண்டவர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

உடல் மெலிவாக இருந்தாலும், ஒப்பீட்டளவில் அதிக கொழுப்பு உள் உறுப்புகளினை சுற்றி படிந்திருப்பதனால் உள்ளுறுப்புகளில் ஒட்டியிருக்கும் கொழுப்புகள் (visceral fat) வெளித்தோலின் கீழ் காணப்படும் கொழுப்பினை விட உருவ அமைப்பிலும் செயற்பாட்டிலும் வித்தியாசமாக இருப்பதால் அவை ஏற்படுத்தும் பாதிப்புகள் சற்று வீரியம் கொண்டவையாக இருக்கும். எனவே, வெளியில் இருக்கும் கொழுப்புகள் செய்யும் தீங்கு மெல்லிய உடலமைப்பு உள்ளவர்களுக்கும் ஏற்படும். அதாவது மெல்லிய உடல் இருந்தும் நான்கில் ஒருவர் அதிக உடற்பருமனை ஒத்தவருக்கு நிகரான பாதிப்புகளை எதிர்கொள்கிறார்கள்.

> அம்பாறை வைத்தியசாலையின் திட்டமிடல் பொறுப்பதிகாரியும் பொது சுகாதார அதிகாரியும் சமூக மருத்துவருமான டாக்டர் **ச.லவப்பிரதன்.**

நேர்கண்டவர்:
பாக்கியராஜா மோகனதாஸ்

என்ன சாப்பிட்டாலும் எனக்கு பிரச்சினை கிடையாது எனும் கண்ணோட்டத்தில் மெல்லிய உடலமைப்பை கொண்டவர்கள், அதிக கொழுப்பு அதிலும் குறிப்பாக transfat போன்ற உருமாற்றப்பட்ட, உடலுக்கு அதிகம் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய கொழுப்புகள், நார்ச்சத்து நீக்கப்பட்ட மாப்பொருள்கள், துரித உணவுகள், அதிக சீனி என உடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் உணவுகளை எந்தக் கட்டுப்பாடும் இன்றி உண்பதும், உடலுக்கு ஆரோக்கியத்தை தரும் ஆன்டிஆக்ஸிடன்ட்கள் நிறைந்த உடலில் ஏற்படும் டாக்சின் பாதிப்புகளை குறைக்கக்கூடிய இலைவகைகள், தாவர உணவுகள், பழங்கள், நல்ல எண்ணெய், நல்ல கொழுப்புகள் மற்றும் நல்ல புரதங்கள் போன்றவற்றை குறைவாக உண்பதும் தீங்குகளை மேலும் அதிகரிக்கிறது.

சாதாரண, மெலிதான குறைவான உடல் எடை கொண்ட 25 வீதமானவர்கள் உயர்குருதி அமுக்க, இதய மாரடைப்பு நோய்களுக்கும் புற்றுநோயின் பாதிப்பிற்கும் உள்ளாவதுடன் பத்து வீதமானவர்கள் அதிக உடல் பருமனால் ஏற்படும் நீரிழிவு என கருதப்படும் இரண்டாவது வகையான நீரிழிவு நோய்க்கும் ஆட்படுகின்றர்.

உயர் குருதி அமுக்கம் மற்றும் மேலும் பல பிரச்சினைகளுக்கு மன அழுத்தம் நேரடிக் காரணமாக இருப்பதுடன், புகைபிடித்தலானது மாரடைப்பு, புற்றுநோய், உயர் குருதி அமுக்கம் என எல்லா நோய்களோடும் நேரடியாகத் தொடர்புபட்டதாக காணப்படுகிறது.

மெல்லிய உடல் இருந்தாலும் புகைப்பிடித்தல் மற்றும் மதுபான பாவனை உடையவர்களால் தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவது சிரமமாக இருப்பதுடன் உடற்பயிற்சி குறைவும் இந்நோய் நிலைமைக்கு காரணமாகிறது.

எனவே இறுதியாக, உடல் எடையை கட்டுக்குள் வைத்தால் பெருமளவு இளவயது மரணங்களை தவிர்க்கலாம். ஆனால் உடலமைப்பு மெல்லியதாக இருக்கின்றது எனும் ஒரே காரணத்துக்காக ஆரோக்கிய வாழ்க்கை முறையை தவிர்த்தால் ஏற்படும் தொற்றா நோய்களும் அதனால் ஏற்படும் மரணமும் தவிர்க்க முடியாத தொன்றாகும்.

வடக்கில் வேகமாகப் பரவும் நச்சுச்செடி

யாழ்ப்பாணத்தில் பாத்தீனியம் செடி மிக வேகமாக விவசாய நிலங்களில் பரவி , விவசாய நிலங்களை ஆக்கிரமித்து வருகின்றன.

குறிப்பாக யாழ்ப்பாணம் இராச வீதியில் இருபாலை தொடக்கம் அச்சுவேலி வரையிலான சுமார் 10 கிலோ மீற்றர் தூரமான வீதியின் இரு மருங்கிலும் பாத்தீனிய செடி அதிகளவில் காணப்படுகின்றன.

கடந்த சில மாதங்களாக சிலர் தமது விவசாய நிலங்களில் விவசாயம் செய்யாது கைவிட்டுள்ள நிலையில் அவர்களின் விவசாய காணிகள் முழுவதும் பாத்தீனிய செடிகள் ஆக்கிரமித்து வளர்ந்துள்ளன.

இவ்வாறு ஆக்கிரமித்துள்ள பாத்தீனிய செடிகளை அழிப்பதற்கு தற்போது எவரும் கவனம் செலுத்தாது இருப்பது கவலைக்குரியதே..

வடமாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் பாத்தீனியம் செடிகளை அழிப்பதற்கான வேலை திட்டங்களை அவர் அமைச்சராக இருந்த கால பகுதியில் முன்னெடுத்து இருந்தார்.

பாத்தீனிய செடிகளை வேருடன் புடுங்கி வருபவர்களுக்கு அவற்றின் கிலோவிற்கு ஏற்றவாறு ஊக்க தொகைகளை வழங்கியும், பாத்தீனியம் தொடர்பிலான விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் விதமாக, பாத்தீனிய ஒழிப்பு செயற்திட்டங்களையும் முன்னெடுத்து வந்திருந்தார்.

தற்போது இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாத நிலையில், யாழில் மீண்டும் பாத்தீனிய பரவல் மிக வேகமாக அதிகரித்துள்ளது.

தமதமதமபச்சை இராணுவம்?

"பார்த்தீனியம் எங்களுடைய மண்ணுக்கு உரித்தான ஒரு சுதேசிய இனமல்ல. இந்தியாவிலிருந்து இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்தபோது, கொண்டுவரப்பட்ட அல்லது பரவிய ஒரு இனம்.

எங்களுடைய விவசாய சூழலில் இதனை ஏன் ஆக்கிரமிப்பு இனமென்று நான் சொல்லுகின்றேன் என்றால், எல்லா களைகளையும் போலவே எங்களுடைய பயிர்களுடன் உணவுக்காக ஒளிக்காக வாழிடத்திற்காக கனியுப்புக்காக போட்டிபோட்டு, மற்றைய பயிர்களிலும் பார்க்க மிக விரைவாக வீறுடன் எங்களுடைய பயிர்களை அழிப்பதன் மூலம், எங்களுடைய கண்ணுக்கு தெரியாத மிகப் பெரும் பொருளாதார இழப்பை விவசாயத்தில் ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது.

எங்களுடைய விளைநிலங்களிலிருந்தும் இராணுவத்தை வெளியேற சொல்லுகின்ற நாம், ஒரு பச்சை இராணுவமாக எங்களுடைய வயல்களிலும் தெருக்களிலும் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் இந்த பார்த்தீனியத்தையும் அகற்ற வேண்டிய கட்டாய நிலையில் நாங்கள் இருக்கின்றோம்" என வடமாகாண சபையின் முன்னாள் விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் நிகழ்வொன்றில் தெரிவித்து இருந்தார்.

பாத்தீனியத்தால் சுவாச நோய்.

பாத்தீனியம் வெளியிடும் மகரந்தம் மற்றும் வித்துக்கள் விலங்குகள் மற்றும் மனிதர்களுக்கு சுவாசக்கோளாறுகளையும், ஒவ்வாமைகளையும் ஏற்படுத்தக்கூடியவை.

அவை எமது உடலில் பட்டால், ஒருவிதமான அரிப்பு ஏற்பட்டு , சிலருக்கு தோல் வியாதிகள் ஏற்படவும் வாய்ப்புண்டு.

மயூரப்பிரியன் ...✍

அவற்றை உணவாக உண்ணும் பசுக்கள் , ஆடுகளின் பால் ஒரு வித கசப்புத்தன்மையையும், மறைமுகமான நச்சுத்தன்மையையும் கொண்டதாகும்.

இந்தியாவில் இருந்தே பாத்தீனியம்

வடக்கில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்த கால பகுதியில், இந்திய இராணுவத்திறகு உணவு வழங்குவதற்காக கொண்டுவரப்பட்ட ஆடுகள் மூலமே வடமாகாணத்திற்குள் பார்த்தீனிய செடி பரவியது என்ற குற்றச்சாட்டு உள்ளது.

இந்திய இராணுவத்தினரின் உணவு தேவைக்காக இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஆடுகளின் உடல்களில் பாத்தீனிய செடிகளின் விதைகள் ஒட்டியும் , ஆடுகளின் புழுக்கைகளில் விதைகள் காணப்பட்டு அதனில் இருந்து செடிகள் முளைத்தது என கூறப்படுகிறது.

ஒரு பார்த்தீனிய செடி சுமார் 2000 முதல் 5000 வரையான விதைகளை உருவாக்கும் என்றும் இதனாலேயே அது மிக வேகமாக பரவுகிறது என்றும் விதைகள் 20 ஆண்டுகள் வரை உறக்கத்தில் இருந்து முளைக்கக் கூடியவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவை வளர கூடிய நிலங்களில் வேறு பயிர்கள் வளர முடியாத அளவுக்கு நிலத்தில் உள்ள கனியுப்புக்கள் உள்ளிட்ட சத்துக்களை இவையே உறிஞ்சி விடும். இதேவேளை நச்சு வேதி பொருட்களை உருவாக்க கூடிய செடியாகும்.

பல ஆபத்துக்களை தன்னகத்தே கொண்ட இச்செடி மண்ணில் இருந்து முற்றாக அகற்றப்பட வேண்டும். இதற்கான செயற்திட்டங்களை விவசாய அமைச்சுக்கள் , திணைக்கள அதிகாரிகள் கவனம் செலுத்தி முன்னெடுக்க வேண்டும்.

21

கொழும்பின் கதை

என். சரவணன்

சுதந்திர சதுக்கமாக மாறிய விமான கூடாரம்

‘1949ம் ஆண்டு சுதந்திர விழாவில் பிரதமர் வந்ததும் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டதோடு தேசத்தின் செய்தி சிங்களம், தமிழ், அரபு மற்றும் ஆங்கில மொழிகளில் வாசிக்கப்பட்டது. விழா நிறைவில் தேசிய கீதம் சிங்களத்தில் இசைக்கப்பட்டது' கண்டி கடைசி மன்னனின் மகுல் மடுவையை அடியொற்றியே கட்டம் அமைக்கப்பட்டது’

1948 பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்துவிட்டாலும். 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி தான் உத்தியோகபூர்வ அறிவிப்பு ஒரு சடங்காக நிகழ்ந்தது சுதந்திர சதுக்கத்தில், (டொரிங்டன் சதுக்கத்தில்) க்ளூசெஸ்டர் பிரபுவும், ஆறாம் ஜோர்ஜ் மன்னரின் சகோதரருமான இளவரசர் ஹென்றி (Prince Henry, Duke of Gloucester) சம்பிரதாயபூர்வமாக பாராளுமன்றத்தை முறைப்படி இந்த சுதந்திர சதுக்கத்தில் வைத்துத் தான் பிரித்தானிய ஆட்சியிலிருந்து இலங்கை, சுதந்திரம் பெற்றதாக அறிவித்தனர் இலங்கைமுதல் அமர்வை ஆரம்பித்தும் வைத்தனர்.

ஆரம்பத்தில் இது விமானங்களை உள்ளே வைத்து பாது காக்கும் ஒரு கூடாரமாகவே காணப்பட்டது. எனவே அது கற்களால் கட்டப்பட்ட ஒரு கட்டடமாக காணப்படவில்லை. இரண்டாம் உலக யுத்த காலத்தில் விமானப்படை இதனை இப் படித்தான் பயன்படுத்தியது. பாரிய இரண்டு விமானக் கூடா ரங்கள் இங்கே இருந்தன. சுதந்திர சதுக்கத்தின் முன்னால் இன்றும் இருக்கின்ற “சுதந்திர அவேனியு” (Independence Avenue) அன்று ஒரு விமான ஓடுப்பாதை!



இந்த நிகழ்வு அவசரமாக ஏற்பாடு செய்ய வேண்டி இருந் தது. ஒரு வாரத்துக்கும் குறைவான நாட்களே இருந்ததால் அந்த மகா பணி எச்.ஆர்.பிரேமரத்ன (Hapugoda Rankothge (H R) Premaratne) என்கிற பிரபல கட்டடக் கலைஞரிடம் ஒப் படைக்கப்பட்டது.

சேதமடைந்திருந்த அந்த விமான கூடாரத்தை பெரிய மண் டபமாக ஆக்கினார் பிரேமரத்ன. இரும்புப் பாளங்களால் ஆன கூரையை இருபதினா யிரம் யார் வெள்ளைத் துணியால் போர்த் தியும் வர்ண நிறங்களில் சோடனைகளை செய்து, சிங்களவர்களின் சிங்கக் கொடி, தமிழர்களின் நந்திக் கொடி, முஸ்லிம் களின் அலங்கார ஓவியங்களையும் (motifs) அதற்குப் பயன்படுத்தினார். மிகப் பிரமாண்டமான அந்த கட்டடத்தில் நிகழ்ந்த வரலாற்று முக்கியத்துவமான நிகழ்வை பிரேமரத்ன வரைந்தார். அந்த ஓவியம் தான் நமக்கு முக்கிய சான்றாக இன்றும் எஞ்சியிருக்கிறது.

சுதந்திர தினப் பிரகடன நிகழ்வின் போது இங்கே முதலில் இளவரசர் ஹென்றி வந் தமர்ந்தார். பின்னர் இலங்கைக்கான ஆங்கிலேய ஆளுநரின் வரவேற்பு உரை நிகழ்த்தப்பட்டது. பின்னர் பிரதமரும் உரையாற்றினார். புதிதாக அமைக்கப் பட்ட இந்த சதுக்கத்தில் சுமார் 20,000 பேர் கலந்து கொண் டிருக்கிறார்கள். சுமார் 5000பேர் சுதந்திர மண்டபத்திலேயே அமர்ந்திருந்தனர். விழாவைத் தொடர்ந்து, பிரதமர் டீஎஸ். சேனநாயக்க, நாடு புதிதாக சுதந்திரம் பெற்றதைக் கொண் டாடும் வகையில், அருகில் உள்ள கொடி மரத்தில் சிங்கக் கொடியை ஏற்றினார்.

சுதந்திர இலங்கையின் முதலாவது பிரதமரான சேனநா யக்க இலங்கை சுதந்திரம் பெற்றதன் நினைவாக இங்கே ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்பியாக வேண்டும் என்று தீர்மா னித்தார். அப்பொறுப்பை போக்குவரத்து அமைச்சராக இருந்த ஜோன் கொத்த லாவலவிடம் ஒப்படைத்தார். ஆனால் அந்தக் காணி குதிரைப்பந்தய கழகத் துக்கு சொந்தமாக இருந்தது. அதில் ஒரு பகுதியைத் தான் விமானப்படையும் தற் காலிகமாக பயன்படுத்தி வந்தது. இறு தியில் ஐந்து லட்சம் ரூபாவை செலுத்தி அக்காணியை அரசாங்கம் வாங்கியது.

இக் கட்டடத்தை கண்கவரும் வகையில் பண்பாட்டு கலையம்சங்கள் கொண்டதாகவும் அமைக்கவேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு எட்டு கட் டுமானக் கலைஞர்களைக் கொண்ட ஒரு குழு உருவாக்கப்பட்டது. டீ. என். வினே ஜோன்ஸ் அந்தக் குழுவின் தலைவராக இயங்கினார். எஃப். எச். பிலிமோரியா, ஷர்லிதஅல்விஸ், ஒலிவர்வீரசிங்க, எச். ஜே. பிலிமோரியா, ஜே.சமரசேகர,எம். பி.மோரேனா ஆகியோர் அந்தக் குழுவில் அங்கம் வகித்தனர். அவர்கள் உத்தேச மாதிரி வரைபடங்களை கையளித்தனர். டீ.எஸ்.சேனநாயக்கவைக் கவர்ந்த கட்டட அமைப்பாக கண்டி 'மகுல் மடுவ' விளங் கியதால் அதை ஒத்த கலைத்துவமான வரைபடத்தை அவர் விரும்பினர்.

கண்டியின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் சிம்மாசனம் அமைக்கப்பட்டிருக்கும் 'மகுல் மண்டபய' எனப் படும் மண்டபத்தின் வடிவத்தை நினைவுபடுத்தும் கட்டட அமைப்பு இது. ஆங்கிலேயர்களின் கண்டி இராச்சியத்தை தமது கட்டுபாட்டுக்குள் கொண்டுவரும் 1815 கண்டி ஒப்பந் தம் இந்த 'மகுல் மண்டபத்தில்தான்' செய்து கொள்ளப்பட்டது.

1949 ஆண்டு முதலாவது சுதந்திர தின நிகழ்வை இங்கு கொண்டாடிய போது தான் இந்த மண்டபத்துக்கான அடிக் கல்லும் நாட்டப்பட்டது. ஆரம்பத்தில் இது “டொரிங்டன் சதுக் கம்” என்றே அழைக்கப்பட்டது. இதைப் பற்றி பதிவு செய்த பத்திரிகைகள் அப்படித்தான் குறிப்பிட்டுள்ளன. அழைப்பிதழிலும் அப்படித்தான் குறிப்பிடப்பட் டுள்ளது.

1949ஆம் ஆண்டு இலங்கையின் முதலா வது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது எப்படி என்பது பற்றி அடுத்த நாள் 05.02.1949 தினமின பத்திரிகை இப்படி எழுதியது.

“மாலை 4 மணிக்கு பிரதமர் வந்தடைந் ததும் தமிழில் தேசிய கீதம் பாடப்பட்டது... நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து வந்த இளைஞர்கள் சிங்களத்திலும், அரபி மொழி யிலும், ஆங்கிலத்திலும், தமிழிலும் தேசத்தின் செய்தியை வாசித்தார்கள். அதன் பின்னர் சுதந் திர சதுக்கத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. 133 வருட காலனித்துவத்தை நினைவுபடுத் தும் வகையில் 133 புறாக்கள் பறக்கவிடப்பட் டன. பின்னர் பிரதமர் டீ.எஸ்.சேனநாயக்கவின் உரையைத் தொடர்ந்து அணிவகுப்புகள் நிகழ்ந்தன. பிற்பகல் 5.15க்கு சிங்களத்தில் தேசிய கீதம் பாடி நிறைவு செய்யப்பட்டது.”

ஆனால் அந்த கட்டடத்தை பிரதமர் சேனநாயக்க காண்ப தற்கு முன்னரேயே திடீரென காலமானார். பின்னர் 1956 ஆம் ஆண்டு பண் டாரநாயக்க அந்தப் பணியை பூர்த்தி செய்தார். மகுல்மடு வவையை வை விட பிரமாண்டமாக கருங் கற்களைக் கொண்டு இது அமைக்கப்பட்டது. சுதந்திர மண்டபத்தின் தரைத் தளத்தின் பரப்ப ளவு மாத்திரம் 10,000 சதுர அடிகளைக் கொண்டது. சுற்றிலும் சுவர்கள் இல்லாமல் திறந்த வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பல பாரம்பரிய சிற்ப வேலைப்பாடுக ளைக் கொண்ட பல கருங்கற் தூண்கள் உள்ளே உள்ளன. வெளியில் சிங்கச் சிலைகளும் உள்ளன. இவை 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த யாப்பஹுவ ஆட்சிக்காலத்து கலை நுட்பத்தைக் கொண்டவை. மிக உயரமான கொடிக்கம்பமும் அருகில் தேசபிதா டீ.எஸ்.சேனநாயக்கவின் பெரிய சிலையும் உள்ளதைக் காணலாம்.

இம்மண்டபத்துக்கு அருகிலேயே ஒரு பெரிய மைதானமும் அமைக்கப்பட்டது. மண்டப நிகழ்வுகள் பெரிய அளவில் நிகழ் கிற போது கலாசார பண்பாட்டு நிகழ்வுகளை நடத்துவதற்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற நோக்கத்தில் அன்று அது கட்டப்பட்டது. பிற்காலத்தில் அந்த மைதானம் விளையாட்டுத்துறை அமைச்சின் தேசிய ஓட்டப்பந்தய பயிற்சிக்கான மைதானமாக மாற்றப்பட்டது. ஆரம்பத் தில் மண்டபமும், மைதானமும் ஒன்றாகத் தான் இருந் தன. பிற்காலத்தில் தான் நடுவில் பாதை போடப்பட்டதால் இரண்டும் தனியாக ஆகின. தற்போதுள்ள பூரணப்படுத்த பட்ட அமைப்பு 1957 இல் தான் பிரதமர் பண்டாரநாயக் கவால் திறக்கப்பட்டது. அன்றைய நிகழ்வில் சீனப் பிரத மர் சௌ என் லாய் கலந்து கொண்டார்.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டேயில் புதிய பாராளுமன் றக் கட்டடம் திறக்கப்படும் வரை இது தான் செனட் சபை, அரசாங்க சபை மற்றும் என்பவற்றின் சம்பிரதாயபூர்வ மான நிகழ்வுகளை நடத்தும் மண்டபமாக திகழ்ந்தது.

இலங்கையின் வருடதாந்த சுதந்திர தின வைபவங் கள் பிரதானமாக மூன்று இடங்களில் கொண்டாடப் படுவது வழக்கம். பழைய பாராளுமன்றத்தின் அருகில் உள்ள காலிமுகத்திடல், சுதந்திர சதுக்கம், கண்டி தலதா மாளிகை பத்திருப்பு ஆகிய இடங்களில் விழா நடை பெற்றாலும் அதிக தடவைகள் சுதந்திர சதுக்கத்தில்தான் நிகழ்ந்ததிருக்கின்றன.

கலாசார திணைக்களம் தரும் இணையத்தள தகவலின் படி, பிரதான சுதந்திர சதுக்கக் கட்டட வளாகம் பிரதமர் அமைச்சர்கள், மேற்சபை, கீழ்சபை ஆகியவற்றின் உறுப் பினர்கள் என 224 பேர் உள்ளே இருக்கக் கூடிய வகை யிலும், திறந்த வெளியில் சுமார் 25,000 பேர் அமர்ந்தி ருந்து பார்க்கக் கூடியவகையிலும், சூழ ஒரு லட்சம் பேர் கூடியிருக்கக் கூடிய வகையிலும் நிர்மானிக்கப்பட்டது. உள்ளே மேற் சுவரில் இலங்கையின் முக்கிய வரலாற்று நிகழ்வுகளை வெளிப்படுத்தும் சித்திரங்கள் வரிசையாக இருப்பதை இன்றும் காணலாம். விஜயனின் வருகையிலி ருந்து சுதந்திரம் வரையிலான ஓவியங்கள் அவை.

20 ஏப்ரல் 1983 ஆம் ஆண்டு ஜே.ஆர் அரசாங்க அமைச்சரவை எடுத்த முடிவின் பிரகாரம் இது கலாசார அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. இன்று நகர அபி விருத்தி அதிகாரசபையின் பராமரிப்பில் அது இருக்கிறது. உல்லாசப் பிரயாணிகளை கவரும் கொழும்பின் முக்கிய தேசியச் சின்னங்களில் ஒன்றாக இதனைக் குறிப்பிட லாம்.

பின்னேரங்களில் இளைப்பாறிச் செல்லவும், அமைதியாக தியானிக்கவும், உடற் பயிற்சி செய்யவும் நாளாந்தம் பலர் இங்கு வந்து செல்கின்றனர். இலங்கையின் செல்வந்த பிரதே சமாக அறியப்படுகிற கறுவாத் தோட்ட பகுதியில் (கொழும்பு 7இல்) அமைந்திருப்பது அதன் இன்னொரு சிறப்பு எனலாம்.

மைத்திரிபால சிறிசேன இங்கேதான் ஜனாதிபதியாக சத்தி யப்பிரமாண செய்து கொண்டார்.

ரணசிங்க பிரேமதாச, காமினி திசாநாயக்க, லக்ஷ்மன் கதிர்காமர், டபிள்யு.டீ. அமரதேவ, விஜயகுமாரதுங்க, லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், கங்கொடவில சோம தேரர் போன்றோரின் இறுதிச் சடங்குகள் இவ்வளாகத்திலேயே நடைபெற்றன.

இம்மண்டபத்தின் கீழ் உள்ள உள் அறை ஒரு நூதனசாலை யாக இயங்கிவருகிறது. வார நாட்களில் அதனை பார்வைட முடியும்.

பனைசார் உற்பத்திகளை எதிர்கால சந்ததியினருக்கு அறிமுகப்படுத்துவோம்

தற்போது பிளாஸ்டிக் பொருட்களின் பாவனை அதிகமாகக் காணப்படும் போதிலும், அவை ஒருவகையில் மனித ஆரோக்கியத்திற்கு தீங்கு பயப்பவையே. ஆனால் பனைசார் மூலப்பொருட்களைக் கொண்டு தயா ரிக்கப்படும் கைப்பணிப் பொருட்கள் என்றைக் கும் மனித ஆரோக்கியத்திற்கு நன்மை பயப் பவையாக காணப்படுகின்றன என, பனைசார் கைப்பணி போதனாசிரியர் திருமதி மேரி உதய குமாரி பற்றிக் தெரிவித்துள்ளார்.

பழந்தமிழர் வாழ்வில் கற்பக விருட்சமாகக் கொள்ளப்படும் பனைமரத்தின் மூலப்பொருட்க ளைக் கொண்டு தயாரிக்கப்படும் கைப்பணிப் பொருட்களினால் கிடைக்கும் நன்மைகளோ ஏராளமானவை, ஆரோக்கியமானவை, இயற் கையானவை. பனையின் மூலப்பொருட்கள் தேக ஆரோக்கியத்திற்கு ஊட்டத்தை அளிப் பது, குளிர்ச்சி தருவது, வெப்பத்தை தணிப்பது என்று பனையின் பெருமைகளை அவர் அடுக் கிக்கொண்டே போகின்றார்.

அத்துடன், பிளாஸ்டிக் பொருட்கள் பழுதடை யும் பட்சத்தில் சூழல் மாசடையும் நிலை காணப் படுகின்றது. ஆனால், பனைசார் கைப்பணிப் பொருட்கள் பழுதடையும் பட்சத்தில் அவை நிலத்திற்கு உரமாக மாறுவதாகவும் அவர் கூறு கின்றார்.

மட்டக்களப்பு, தாழங்குடாக் கிராமத்தைச் சேர்ந்தவரான திருமதி மேரி உதயகுமாரி பற்றிக், பெற்றோருடன் இருந்த காலகட்டத்தில் குடும்ப வறுமை காரணமாக, தனது க.பொ.த. உயர் தரக் கல்வியை இடைநடுவில் கைவிட்டதுடன், தொழில் வாய்ப்பை நாடிச்செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டார். அப்போது அவரது 19ஆவது வயதில் பனைசார் கைப்பணி உற்பத் திகளை பழகுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அப்பனைசார் கைப்பணி உற்பத்திகளை பழகி, தனது வாழ்வாதாரத்திலும் தொழிலிலும் முன் னேறிய விதம் பற்றி அவர் தினகரன் வாசகர்க ளுடன் பகிர்ந்துகொள்கிறார்.

1989இல் பனை அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில், பனைசார் கைப்பணி வேலை தொடர்பான 6 மாத இலவச பயிற்சிநெறி தாழங்குடாவில் 20 பெண்களுக்கு வழங் கப்பட்டதுடன், அதில் நானும் ஒருவராக இணைந்துகொண்டேன். இப்பயிற்சியினால் பனைசார் கைப்பணிகளை தயாரிக்கத் தொடங்கியதுடன், அதன் மூலம் வருமா னம் ஈட்டி, எனது பெற்றோருக்கு பண ஒத்தாசை புரிந்தேன்.

பின்னர் திருமண பந்தத்தில் இணைந்த நான், பனைசார் கைப்பணி வேலையை கைவிடாது தொடர்ந்தேப னைசார் கைப்பணி உற்பத்திகளை தயா ரிப்பதில் நன்கு தேர்ச்சி பெற்ற நான், அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியு டன் ஏனைய பெண்களுக்கு பனைசார் கைப்பணி வேலையை பழகத் தொடங் கினேன்.

இவ்வாறிருக்கையில், கடந்த1994 ஆம் ஆண்டில் பனைசார் கைப்பணி போதனாசிரியராக பனை அபிவிருத்திச் சபையால் நான் தெரிவு செய்யப்பட் டேன். இந்நிலையில் நான் நிரந்தர வரு மானத்தை ஈட்டத் தொடங்கினேன்.

மேலும், கடந்த 2015ஆம் ஆண்டில் பட்டிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட கொக்கட்டிச்சோலை, முனைக் காடு, பண்டாரியாவெளி, கடுக்காமுனை, வாள் கட்டு ஆகிய பகுதிகளில் பனைசார் கைப்பணி வேலை தொடர்பான பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டதுடன், அந்நிலையங்களில் போதனாசிரியராக கடமையாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது என்கிறார் அவர்.

கடுக்காமுனை பயிற்சி நிலையத்தில் பனைசார் கைப்பணி உற்பத்திகள் அதிகள வாக காணப்படுவதால், கடந்த 2021ஆம் ஆண்டு அப்பயிற்சி நிலையமானது சௌபாக் கியா வேலைத்திட்டத்தின் கீழ் தெரிவுசெய் யப்பட்டது. தற்போது அந்நிலையத்தில் 120 பெண்கள் மாதமொன்றுக்கு சுமார் 200,000 ரூபாய் பெறுமதியான பனைசார் கைப்பணிப் பொருட்களை தயாரிக்கின்றார்கள்.பனைசார் கைப்பணி உற்பத்திகளுக்கு கேள்வி அதிகம் இருப்பதுடன், உள்ளூர் மற்றும் வெளியூர்வா சிகள் விரும்பி வாங்குகின்றார்கள். அனைத்து வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கும் ஈடி ணையாக பனைசார் கைப்பணிகளை நவீன முறையில் நாம் தயாரிக்கின்றோம். பெட்டி, கடகம், பாய், மூடுபெட்டி, சுளகு, இடியப்பத் தட்டு, தொப்பி, பூச்செண்டு, உணவுப்பெட்டி, கூடை உள்ளிட்ட ஏராளமான கைப்பணிப் பொருட்களை நாம் தயாரிக்கின்றோம் என்கி றார் அவர்.

தங்களது குடும்ப வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வதில் சிரமப்பட்ட பெண்களே,

இப்பனைசார் கைப்பணி வேலையை என்னி டம் பழக வந்தார்கள். தற்போது அவர்கள் தங் களது வாழ்வாதாரத்தில் ஓரளவேனும் முன் னேறியுள்ளார்கள்.

பெண்களாகிய நாம் என்னதான் படித்து உத்தியோகத்திற்கு சென்றாலும், ஏதோவொரு கைத்தொழிலை பழகியிருக்க வேண்டும். அவ் வகையில் இயற்கையோடிணைந்த பனைசார் கைப்பணிகளை நாம் பழகி, அவற்றின் தாற் பாரியங்களை எதிர்கால சந்ததியின ருக்கு எடுத்துச் சொல்வோம் என்கி றார் த.விஜயன்.

கிழக்கு மாகாணத்தில் 4,000 இற்கும் மேற்பட்ட பெண்கள், பனைசார் கைப்பணி வேலையை தங்களது வாழ்வாதாரத் தொழிலா கக் கொண்டுள்ளதாக, பனை அபி விருத்தி சபையின்; மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கான முகாமையாளர் த.விஜயன் தெரி வித்துள்ளார்.

பனைசார் கைப்பணி வேலையில், மட்டக்களப்பிலும் அம்பாறையிலும்

பனைசார் கைப்பணி போதனாசிரியர் திருமதி மேரி உதயகுமாரி பற்றிக்

சுமார் 3,500 பெண்கள்; ஈடுபடுகின்றமை தெரி யவந்துள்ளது. இதில் மட்டக்களப்பைச் சேர்ந்த பெண்களே அதிகமெனவும் அவர் தெரிவித் துள்ளார். பனைசார் கைப்பணியில் மட்டக்களப் பில் சுமார் 1,500 பெண்களும் அம்பாறையில் சுமார் 500 பெண்களும் ஈடுபடுகின்றார்கள்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கை யில்,வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பனை வளம் மிக்க மாகாணங்களாகக் காணப்படும் நிலையில், வடமாகாணமானது பனைசார் உணவு உற்பத்தியில் முன்னணியில் திகழ்வ துடன், கிழக்கு மாகாணமானது பனைசார் கைப்பணி வேலையில் முன்னணியில் திகழ்கின் றது.

வடமாகாணத்தில் பனைசார் உணவு உற்பத் திகள், பனை அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் அமைக்கப்பட்ட சங்கங்கள் மூலம் முன்னெடுக் கப்படுவதுடன், அங்கு ஆண், பெண் என இரு பாலாரும் பனைசார் உணவு உற்பத்திகளில் ஈடுபடுகின்றார்கள். இப்பனைசார் உணவு உற் பத்திகளினால் வடமாகாணத்தில் அதிகளவு வரு மானமும் ஈட்டப்படுகின்றது.

ஆனால், கிழக்கு மாகாணத்தில்; பனை அபி விருத்தி சபையின் ஏற்பாட்டிலான சங்கங்கள் இன்மையால், பனைசார் உணவு உற்பத்திகள் மிகக் குறைவாக காணப்படுகின்றன. அவ்வ கையில் இம்மாகாணத்தில் பனைசார் உணவு உற்பத்திகளை அதிகரிப்பதற்கான வேலைத் திட்டங்கள் எமது சபையால் இவ்வருடத்தில் (2022) முன்னெடுக்கப்படவுள்ளன. அத்து டன், பனைசார் உணவு உற்பத்திகள் மற்றும் பனைசார் கைப்பணி வேலைகளை வலுவூட்டு வதற்காக கிழக்கு மாகாணத்தில் பனை அபி விருத்தி சபையின் ஏற்பாட்டில் சங்கங்களை யும் நிறுவவுள்ளோம். மேலும், சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ், பனைசார் உற்பத்தி களை பெருக்குவதற்காக மட்டக்களப்பில்; பட்டிப்பளை மற்றும் மண்முனை வடக்கு பிர தேசசெயலகப் பிரிவுகளும் அம்பாறையில் நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இதற்குரிய பணிகளில் ஈடுபடுவதற்காக மண்முனை வடக்கில்; 127 பெண்களும் பட்டிப்பளையில் 120 பெண்களும்; நாவி தன்வெளியில்; 300 பெண்க ளும்; தெரிவு செய்யப்பட்டுள் ளார்கள்.

(30ஆம் பக்கம் பார்க்க)

ஆர்.சுகந்தினி...✍

களனிப் பல்கலைக்கழகம் - இலங்கை

வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக 2022-04-30ஆம் திகதி வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

மருத்துவ பீடம்

மகப்பேறு மற்றும் பெண் நோயியல் கல்விப் பிரிவு

விரிவுரையாளர் (பயிலுநர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

மூலக்கூறு மருத்துவப் பிரிவு

விஞ்ஞானம் சார் உதவியாளர் II

மருத்துவ நிலையம்

மருத்துவ அதிகாரி

பல் மருத்துவ அதிகாரி

மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பதவிக்காகவும் சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் மற்றும் இயைபுடைய சகல தகவல்களையும் https://www.kln.ac.lk/vacancies ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

சம்பள அளவு

1. **விரிவுரையாளர் (பயிலுநர்)**
   ரூபா 54,600 – 10 x 1,335 - 67,590 (*U-AC 3 (IV)* (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 141,110.00)
2. **விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத)**
   ரூபா 69,580 – 5 x 1,630 – 77,730 p.m. (*U-AC 3 (II)* (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 187,445.00)
3. **சிரேஷ்ட விரிவுரையாளர் - II**
   ரூபா 79,360 – 11 x 1,630 – 97,290 p.m. (*U-AC 3 (II)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 227,865.00)
4. **சிரேஷ்ட விரிவுரையாளர் - I**
   ரூபா 91,310 – 7 x 2,170 – 106,500 p.m. (*U –AC 3 (I)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 260,250.00)
5. **விஞ்ஞானம் சார்ந்த உதவியாளர்**
   ரூபா 48,385 – 19 x 690 – 61,495 p.m. U-AS 1 (I) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 92, 635.00)
6. **மருத்துவ அதிகாரி / பல் மருத்துவ அதிகாரி**
   ரூபா 55,350 – 10 x 1,335 – 10x1,630 – 85,000 p.m. U-MO 1 (II) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 123,500.00)

விண்ணப்பிக்கும் முறை

இந்த பதவியின் பொருட்டான விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை அலுவலக நேரத்தினுள் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ கல்வி நிறுவனங்கள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறே https://www.kln.ac.lk/vacancies எனும் பல்கலைக்கழக இணையதளத்திற்குப் பிரவேசித்து உரிய விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தரவிறக்கம் (Downloads) செய்துகொள்ளலாம். விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தபாலில் பெற வேண்டுமானால் அதற்கான வேண்டுகோளொன்றுடன் முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23x10 செ.மீ. அளவான கடித உறையொன்றை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவியின் பொருட்டும் தனித்தனியான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரர் உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2022-04-30ஆம் திகதி அல்லது அதற்கு முன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / கல்வி நிறுவனங்கள், களனிப் பல்கலைக்கழகம், களனி எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி, திணைக்களம் மற்றும் மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பத்தை அனுப்பும்போது தலைப்பு (Subject) குறிப்பிடப்படும் நிரலில் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் திணைக்களம் என்பன குறிப்பிடல் வேண்டும். பூரணமற்ற, தெளிவற்ற மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மருத்துவ பீடம்	-	applyme@kln.ac.lk
விஞ்ஞானம் சார்ந்த உதவியாளர்	-	aead@kln.ac.lk
மருத்துவ அதிகாரி / பல் மருத்துவ அதிகாரி	-	applycm@kln.ac.lk

அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச்சபை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை குறும்பட்டியலிடும் முழுமையான உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

பதிவாளர்
களனிப் பல்கலைக்கழகம், களனி.
2022-04-04

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER ad Z it's what you want
Classified
Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 000000377
Inquiries :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் -
கமத்தொழில் அமைச்சு - IDA Credit No.: 5873 LK

பெறுகை அறிவித்தல்

கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்ட காய்ந்த மிளகாய் உற்பத்தி திட்டத்திற்காக 1900 முலாமிடப்பட்ட இரும்பு குழாய்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP ஆகுசெலவிற்காக) 58.63 மில்லியன் அஐடொ இற்கு நிகரான தொகையை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை **கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்ட காய்ந்த மிளகாய் உற்பத்தி திட்டத்திற்காக 1900 முலாமிடப்பட்ட இரும்பு குழாய்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்கான** ஒப்பந்தத்தின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. **கிழக்கு மாகாண மட்டக்களப்பு மாவட்ட காய்ந்த மிளகாய் உற்பத்தி திட்டத்திற்காக 1900 முலாமிடப்பட்ட இரும்பு குழாய்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக** தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகை குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

விளக்கம்	ஒப்பந்த இலக்கம்	அளவு	விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்)	மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்)
மட்டக்களப்பு மாவட்டத்திற்காக முலாமிடப்பட்ட குழாய்களை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்	LK-MOA-PMU-252040-GO-RFB	1900 எண்ணிக்கைகள்	350,000.00	10,000.00

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை **2022.04.11 ஆம் திகதியிலிருந்து 2022.05.02 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக விவசாய அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் பெறுகை திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.**
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். செயற்றிட்டத்தின் நிதி முகாமையாளரிடம் ரொக்கப் பணத்தில் பணக்கொடுப்பனவு முறைமை இருத்தல் வேண்டும்.
6. **2022.05.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. **2022.05.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இந்த இரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு ஒப்பந்த இலக்கம் மற்றும் **"Supply and Delivery of 1900 Nos. of Galvanized Iron Pipes for Dry Chilli Production Program in Batticaloa District, Eastern Province"** ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேலே குறியீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

தலைவர்,
செயற்றிட்ட பெறுகைக் குழு,
விவசாயதுறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,
இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை, பத்தரமுல்ல.

தொலைபேசி: 011-2696086 அல்லது 0777419521
திகதி: 10.04.2022.

வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்

வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்கள்

இலங்கையின் விநியோக அமைப்பொன்றான வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனமானது நீர்கொழும்பிலிருந்து காலி வரையுமான கரையோர பிரதேசங்களை உள்ளடக்கிய ஏழு கிளைகளையும் 500,000 இற்கு மேலான வாடிக்கையாளர்களுக்கு சேவைபுரிவதுடன் 1500 ஊழியர்களுடனான தொழிற்படையையும் கொண்டுள்ளதுடன் தெரிவு செய்யப்பட்ட விநியோக பிரதேசங்களில் எதிர்கால மின்சார தேவையை பூர்த்தி செய்வதுடன் முறைமை நம்பகத்தன்மை மட்டங்களை மேம்படுத்துவதுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சக்தி நம்பகத்தன்மை வலுப்படுத்தல் செயற்றிட்டத்தில் (PSRSP) ஈடுபடுவதற்காக பின்வரும் பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் தகைமையுள்ள ஆளணியினரை தேடுகின்றது.

1. செயற்றிட்ட கணக்காளர்:

கல்விசார் தகைமைகள்	இளமாணிப்பட்டம் அல்லது நிகரானது
அனுபவம்	• பதவிக்கு உரித்தான விஷேடத்துவமுள்ள ஆகக்குறைந்தது 4 வருட அனுபவம் **அல்லது** • செயற்றிட்ட நிதியிடல், கணக்காய்வு செய்தல், காப்புறுதி பத்திரங்கள், நாணயப் பத்திரங்களை கையாளுதல், தரப்படுத்திய ஒப்பந்த நியதிகள் மற்றும் விலைப்பட்டியல் செயற்பாடு. **மற்றும்** • ஆகக் குறைந்தது பின்வரும் துறையொன்றில் பணியாற்றிய அனுபவம்: வலு, தொடர்பாடல், சுற்றாடல் உட்கட்டமைப்பு, நீர் மற்றும் கழிவுநீர் மற்றும் போக்குவரத்து.
ஏனைய தகைமைகள்	• ஆங்கிலத்தில் வாய்மூல மற்றும் எழுத்து மூலமான மிகச்சிறந்த தொடர்பாடல் திறன்கள். • சுறுசுறுப்பான சுற்றாடலில் இறுக்கமான இறுதி திகதிகளை பூர்த்தி செய்வதற்காக அணியொன்றாக வேலை செய்யும் ஆற்றல். • சுதந்திரமாக பணியாற்றல், முயற்சி எடுத்தல், முன்னுரிமைகளை அமைத்தல் மற்றும் செயற்றிட்டங்களை விரைவாக பூர்த்தி செய்தல்.

பொதுவான சலுகைகள்:

- தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி 2 வருட ஆரம்ப காலத்திற்கு நியமிக்கப்படுவார்.
- தெரிவு செய்யப்பட்ட தனிநபரின் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் போட்டிரீதியிலும் திரட்டிய வேதன பொதியொன்று வழங்கப்படும்.
- LECO ஆனது ஒவ்வொருவரும் கௌரவத்துடனும் சிறந்த சுற்றாடலில் சமமான வாய்ப்புக்களுடனும் பணிபுரிவதற்காக LECO ஆனது ஊழியர்கள் அனைவரையும் இன, மத மற்றும் கலாச்சார பின்புலம், பால்நிலை, பால்நிலை நோக்கல் மற்றும் ஆற்றலின்மை ஆகியன நீங்கலாக பணிபுரிவதற்காக ஊக்குவிக்கின்றது.
- **2022** ஏப்ரல் 20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் தன்மையில் உங்கள் விபரமான சுயதரவு அத்துடன் சான்றிதழ்களின் பிரதிகள் அத்துடன் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து அனுப்புங்கள்.
- விண்ணப்பிக்கும் பதவியானது உங்கள் சுயதரவிலும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையிலும் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக பொது முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிருவாகம்),
வரையறுக்கப்பட்ட இலங்கை மின்சார (தனியார்) நிறுவனம்
1 ஆம் மாடி, ஈ.ஏச். குரே கட்டிடம்,
411, காலி வீதி, கொழும்பு-03.

කෘෂි නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
Ministry of Agriculture

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் -
கமத்தொழில் அமைச்சு - IDA Credit No.: 5873 LK

பெறுகை அறிவித்தல்

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்திற்கு சின்ன வெங்காய 500 கி.கி. உண்மையான விதைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP ஆகுசெலவிற்காக) 58.63 மில்லியன் அஐடொ இற்கு நிகரான தொகையை பல்வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை **வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்திற்கு சின்ன வெங்காய (Red Onion) 500 கி.கி. உண்மையான விதைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்கான** ஒப்பந்தத்தின் கீழான தகுதியுள்ள பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. **வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டத்திற்கு சின்ன வெங்காய 500 கி.கி. உண்மையான விதைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தலுக்காக** தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகை குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

விளக்கம்	ஒப்பந்த இலக்கம்	அளவு	விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்)	மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபாவில்)
வட மாகாண, யாழ்ப்பாண மாவட்டத்திற்கு சின்ன வெங்காய உண்மையான விதைகளை வழங்கல் மற்றும் ஒப்படைத்தல்	LK-MOA-PMU-277320-GO-RFB	500 கி.கி.	180,000.00	5,000.00

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை **2022.04.11 ஆம் திகதியிலிருந்து 2022.05.02 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக விவசாய அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் பெறுகை திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.**
5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். செயற்றிட்டத்தின் நிதி முகாமையாளரிடம் ரொக்கப் பணத்தில் பணக்கொடுப்பனவு முறைமை இருத்தல் வேண்டும்.
6. **2022.05.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. **2022.05.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு** கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
7. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இந்த இரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு ஒப்பந்த இலக்கம் மற்றும் **"Supply and Delivery of 500 kg of Red Onion True Seeds to Jaffna District Northern Province"** ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.
8. மேலே குறியீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

தலைவர்,
செயற்றிட்ட பெறுகைக் குழு,
விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,
இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை, பத்தரமுல்ல.

தொலைபேசி: 011-2696086 அல்லது 0777419521
திகதி: 10.04.2022.

அமைதியின் முடிவு

குப்பிளான்
ஆ.மோகனசுந்தரம் ...✍

சுப்பன் ஒரு சிறந்த உழைப்பாளி. சுப்பையா என்ற அவனது பெயரை சிறுவயதில் சுப்பு, சுப்பு என்று அழைத்தார்கள். இளவயதில் சுப்பு சுப்பன் ஆனான். அவனது பெற்றோர்கள் ஏழைகளாக இருந்தனர். ஆனால் மனசாட்சியோடும் நேர்மையாகவும் சமூகத்தில் வாழ்ந்தார்கள். பெற்றோரது இரக்ககுணமும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையும் சுப்பனின் மனதிலும் ஆழமாகப் பதிந்திருந்தது. சிறுவயதில் அவன் பாடசாலைக்குச் சென்றான். ஆனால் படிப்பு என்னவோ அவன் மண்டைக்குள் ஏறவில்லை. அதனால் ஆசிரியர்களின் ஏச்சுக்களுக்கும், பேச்சுக்களுக்கும் ஆளானான். சகமாணவர் கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளானான். பாடசாலை செல்வதற்கே அஞ்சினான். அதனால் 5ம் வகுப்புடனேயே பள்ளிக்கு செல்வதை நிறுத்தினான். ஆனால் பள்ளி செல்லும் காலத்தில் எழுதுவதற்கும் கணக்குப் பார்ப்பதற்கும் தெரிந்துகொண்டான். கல்வியறிவற்ற பெற்றோரும் அவன் பாடசாலை செல்லாததையிட்டு அலட்டிக் கொள்ளவில்லை.

சுப்பன் திடகாத்திரம் கொண்டவனாகவும், சிவந்த நிறம் கொண்டவனாகவும், அழகாகவும் இருந்தான். சிறந்த நேர்மையான உழைப்பாளி என்பதால் அவனுக்கு ஒவ்வொருநாளும் கூலிவேலைகள் கிடைத்தன. வேலை முடிந்ததும் சம்பளம் கொடுத்தார்கள். சுப்பன் பணத்தை விரயம் செய்யும் புகைத்தல், மது, மாது போன்ற தீய பழக்கங்களிலிருந்து விலகியிருந்தான். இதனால் அவன் தன் உழைப்பில் பெரும் பகுதியை தனது பெற்றோர்களுக்கு வழங்கினான். சுப்பனின் குடும்பம் தாய், தந்தை, சகோதரர்கள் சகோதரிகள் என பெரிய குடும்பமாக இருந்தது. பெற்றோரின் வருமானம் குடும்ப செலவுகளுக்கு போதவில்லை. அவனது தந்தையும் நோயாளியாக இருந்தார். இதனால் சுப்பன் கொடுக்கும் பணம் குடும்பத்திற்கு பெரும் நிம்மதியை தந்தது.

சுப்பனின் அழகில் மயங்கிய பல பெண்கள் அவனைச் சுற்றி சுற்றி வந்தனர். அவன் தனது குடும்ப நிலைக்காக எல்லாவற்றையும் தவிர்த்து வந்தான். ஆனாலும் சரண்யா என்ற பெண் ஏனோ அவன் மனதைக் கவர்ந்திருந்தாள். சரண்யாவும் மிக ஏழைக் குடும்பத்தில் பிறந்த சராசரி அழகு நிறைந்த பெண்ணாக இருந்தாள். ஆனால் அவள் மனதில் எப்படியாவது சுகபோகங்களை அனுபவிக்க வேண்டும் என்ற பேராசை இருந்தது. அவள் 10 ம் வகுப்புவரை படித்திருந்தாள். சுப்பனும் சரண்யாவும் கோயில்களிலும் வீதிகளிலும் சந்தித்து கதைத்தார்கள். சரண்யா தன் ஏழ்மை நிலையால் சுப்பனை விரும்பினாள். ஆனால் அவளது ஆழ்மனது அவனிலும் மேலான வசதியுடையவனையே விரும்பியது. அப்பாவியான சுப்பன் சரண்யாவின் நடிப்பை உண்மையானது என நம்பினான்.

சரண்யாவின் பெற்றோர் தமது மகளை மைத்துனன் ஒருவருக்கு மணமுடித்துக் கொடுக்க விரும்பினர். அவன் வேலை செய்வதில் சோம்பேறியாகவும், புகைத்தல் மதுப் பழக்கம் கொண்டவனாகவும் இருந்தான். இதனால் அவனை சரண்யா கணவனாக ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. ஆனால் அவளது பெற்றோர் சரண்யா சுப்பனுடன் காதல் கொண்டதை அறிந்து, மைத்துனன் உடனான திருமணத்தை உடனடியாக நடாத்த ஏற்பாடுகள் செய்தனர். இதனை சரண்யா அறிந்துகொண்டாள். சுப்பனை சந்தித்து தனது நிலையை எடுத்துச் சொன்னாள்.

சுப்பனுக்கு மனதுக்குள் பெரும் போராட்டம் ஏற்பட்டது. ஏழைகளான தனது பெற்றோரை பார்ப்பதா அல்லது காதலுக்காக சரண்யாவை ஏற்றுக்கொள்வதா என்று திணறினான். இறுதியில் தனது உயிருக்குயிரான நண்பன் ராசனிடம் சென்றான். அவனது ஆலோசனையுடன் யாழ்ப்பாணத்தில் வசித்த

சுப்பன் வன்னிக்கு சரண்யாவை அழைத்துச் செல்வதாகவும், அங்கு பதிவுத் திருமணம் செய்துகொள்வதாகவும் தீர்மானித்தான். மேலும் வன்னியிலிருந்து பெற்றோர்களுக்கு பணம் அனுப்புவதாகவும் தீர்மானித்தான். அன்று இரவே நண்பனின் உதவியுடன் இரகசியமாக சரண்யாவை அழைத்துச் சென்றுவிட்டான்.

அடுத்த நாள் யாழ்ப்பாணத்தில் சரண்யாவின் வீட்டில் அவளை காணாத தாய் சத்தம் போட்டு அழுது குளறி ஆர்ப்பாட்டம் செய்தாள். இதனையறிந்த தந்தையும் சகோதரர்களும் சரண்யாவை உறவினர் வீடுகளிலும் அவளது நண்பிகள் வீடுகளிலும் தேடினர். பொலிசில் முறைப்பாடு செய்வதற்கும் பயந்தனர். உள்நாட்டு யுத்தகாலமாக இருந்ததால் இந்நிலமை ஏற்பட்டது. திடீர் பதற்றத்தால் சரண்யாவின் தாய் தந்தையருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. திடீரென்று சரண்யாவின் தாய்க்கு மின்னல் வெட்டியது போல சுப்பனுடனான தொடர்பு நினைவுக்கு வந்தது. உடனடியாக தாயும் தந்தையும் சயிக்கிளில் சுப்பனின் வீட்டுக்கு சென்றனர்.

சுப்பன் தனது தாய் தந்தையரிடம் தான் வேலை விடயமாக மன்னாருக்குச் செல்வதாக கூறியிருந்தான். வருவதற்கு பத்து நாட்கள் செல்லும் எனவும் கூறியிருந்தான். இதை நம்பாத சரண்யாவின் தந்தையும்தாயும் கூச்சலிட்டனர். சுப்பனின் பெற்றோரை ஆயுதங்களால் தாக்க முற்பட்டனர். இருதய நோயினால் சுப்பனின் தந்தை பாதிக்கப்பட்டிருந்தார். இவர்களது ஆர்ப்பாட்டம் தாங்காது சுப்பனின் தந்தை மயக்க முற்றுக் கீழே விழுந்தார். இந்த நிலையில் மேலும் சிறிது நேரம் ஆர்ப்பாட்டம் செய்த சரண்யாவின் பெற்றோர் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

மயக்கமடைந்து கீழே விழுந்த சுப்பனின் தந்தையை உடனடியாக யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரது உடலை பரிசோதனை செய்த டொக்டர் அவர் இறந்துவிட்டார் எனக் கூறினார். பின்னர் சுப்பனின் தந்தையின் பூதவுடல் அவரது கிராமத்தில் அடக்கம் செய்யப்பட்டது. சுப்பனுக்கு தந்தையின் மரணம் குறித்து அறிவிக்க முடியவில்லை. சுப்பனை அனுப்பிவைத்த நண்பனுக்கும் அவன் சென்ற இடம் பற்றி எதுவும் தெரியவில்லை.

இது இவ்வாறு இருக்க வன்னிக்கு சென்ற சுப்பனுக்கும் சரண்யாவுக்கும் பெரியவர் ஒருவரின் உதவி கிடைத்தது. சுப்பன் தன் கதையை அவருக்கு கூறினான். அவர் எல்லாமே இயற்கையே தீர்மானித்தது என்றும், இயற்கையின் சக்தியே உங்களை இணைத்து வைத்தது என்றும் கூறினார். அவரது ஆலோசனைப்படி இருவரும் அடுத்த நாள் பதிவுத் திருமணம் செய்து கொண்டனர். அப் பெரியவரே தனது தென்னந் தோட்டத்தில் சுப்பனுக்கும் சரண்யாவுக்கும் வேலை வழங்கினார். சுப்பனுக்கு தனது பெற்றோரை நினைத்து மனம் கலங்கியது. சரண்யாவும் தனது பெற்றோர்கள் சகோதர்களையிட்டு கவலை கொண்டாள். குறித்த பெரியவரின் ஆலோசனைகள் இருவருக்கும் ஆறுதல் தந்தது.

பிறந்த வீட்டுக் கவலைகளுக்கு மத்தியிலும் சுப்பனதும் சரண்யாவினதும் வாழ்க்கை மகிழ்ச்சியாக சென்று கொண்டிருந்தது. இந்த நாலு ஆண்டுகளில் சரண்யா ஒரு மகனையும் ஒரு மகளையும் பெற்றெடுத்திருந்தாள். சுப்பன் தனது வீட்டுக்கு மாதாமாதம் மணியோடர் மூலமாக பணம் அனுப்பிவந்தான். தனது முகவரியை அவன் தெரிவிக்கவில்லை.

இந்த நாலு ஆண்டுகளின் பின்னர் சுப்பன் தனது பிரதேசமான முழங்காவலில் இருந்த சந்தைக்குப் போனபோது தன்னுடன் சிறுவயதில் படித்த நண்பன் ஒருவனைக் கண்டான். அவனிடம் ஊர் நிலமைகளைப் பற்றி விசாரித்தான். அப்போது அந்த நண்பன் அவனது தந்தை உயிரிழந்த செய்தியை தெரிவித்தான். சுப்பன் மன முடைந்து அவ்விடத்திலேயே அழத் தொடங்கினான். அப்பா நானே உங்களுக்கு எமனாகி விட்டேன் என கதறினான். வீட்டுக்கு வந்த சுப்பன் சரண்யாவிடம் தனது தந்தை இறந்த செய்தியை சொல்லவில்லை. அவளும் மனவேதனைப் படுவாள் என்ற இரக்கத்தினால் அதனை வெளியிடவில்லை. ஆனாலும் பெரியவரிடம் தனது துன்பத்தை பகிர்ந்து கொண்டான். அவர் அவனுக்கு ஆறுதல் சொன்னார். உலகத்தில் பிறந்த எந்த உயிரும் ஒரு நாள் இறக்க வேண்டியதே எனவும், இயற்கையின் நியதியை யாராலும் வெல்ல முடியாது எனவும் கூறினார். பெரியவர் அவ்வப்போது கூறும் கருத்துக்களால் சுப்பன் ஆறுதலடைந்து வந்தான்.

சுப்பன் முழங்காவிலுக்கு வந்து ஆறாவது வருடத்தில் அவனும் மனைவியும் உழைத்ததன் மூலமாக ஓரளவு சேமிப்பை மேற்கொள்ள முடிந்தது. அதை வைத்து பெரியவரின் உதவியுடன் சொந்தமாக ஒரு தென்னந் தோப்பை வாங்கினர். அதன் மூலம் அவர்களுடைய வருமானம் மேலும் அதிகரித்தது. இதன் பின் சரண்யா சுப்பனுடன் வாதிட்டு பிள்ளைகளை ஆங்கில சர்வதேச பாடசாலையில் சேர்த்தாள். பிள்ளைகள் கல்வியில் பெருமளவு முன்னேறாத போதும் அவர்களது செலவுகள் அதிகரித்தன. இந்நிலையில் வங்கிக் கடன் பெற்று தங்களது தென்னந் தோப்பில் வீடு ஒன்றையும் கட்டினர்.

சுப்பன் தனது உழைப்பு முழுவதையும் சரண்யாவிடமே கொடுத்து வந்தான். அவளே வீட்டுச் செலவை முழுமையாக நிர்வகித்து வந்தாள். வங்கிக் கடனுக்கும் வட்டிக்குமாக பெருந்தொகையை செலவிட வேண்டி ஏற்பட்டது. செலவுகளை சமாளிக்க முடியாத சரண்யா தனது பிழையான தீர்மானத்தினால் தான் இந்நிலை ஏற்பட்டது என்பதை மறைத்து சுப்பன் மீது குற்றம்சாட்டி நாளாந்தம் சண்டையிட்டாள். சுப்பன் ஏதுமறியாது அமைதிகாத்து வந்தான்.

இந்நிலையில் உள்நாட்டு யுத்தத்தினால் பலர் பாதிக்கப்பட்டு இருந்தனர். சுப்பன் தனது தோப்பிலுள்ள தேங்காய்களை சந்தைக்கு கொண்டு சென்று விற்று விட்டு திரும்பும் வேளையில் அவனுக்கு அருகில் செல்லொன்று விழுந்து வெடித்து சிதறியதால் படுகாயமடைந்து ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டான். அவன் உயிர் தப்பியதே தவிர, ஒருகையையும் காலையும் இழந்தான். ஆஸ்பத்திரியால் மீண்டு வந்த சுப்பன் ஊன்று கோலின் துணையுடன் வீட்டில் நடமாடினான். வீட்டுச் செலவுக்கு சரண்யாபடும் துன்பங்களைக் கண்டு ஒருநாள் ஊன்று கோலுடன் சென்று சந்தைக்கு அண்மையில் இருந்தான். அவனது பரிதாப நிலையை கண்ட பலர் சில்லறைகளையும் தாள் காசுகளையும் போட்டு விட்டு சென்றனர். பிச்சை எடுப்பதை வெறுத்த சுப்பன் தனது இயலாமையை எண்ணி வருந்தினான்.

அடுத்த நாள் அவன் உடல் நிலை சரியில்லாததால் படுக்கையில் படுத்தபடியே இருந்தான். இதேவேளை நேற்று சுப்பன் கொண்டு வந்த காசை சரண்யாவிடம் கொடுத்திருந்தான். அதில் 1240 ரூபா இருந்தது. பேராசை கொண்ட சரண்யா சுப்பனை வற்புறுத்தி ஒவ்வொரு நாளும் பிச்சை எடுத்து வர செய்தாள். பிச்சையெடுக்க செல்லாவிட்டால் சாப்பாடு தேநீர் எதுவும் சுப்பனுக்கு கிடைப்பதில்லை. இதனால் விரக்தியடைந்த சுப்பன் மதுவிற்கு அடிமையானான். குடும்பத்தில் எல்லா நாளும் ஒரே சண்டையாக இருந்தது. பிள்ளைகளும் விரக்தியடைந்திருந்தனர். சுப்பனும் இவற்றுக்கு முடிவு ஒன்று தேவையென்று எண்ணினான். அவனது எண்ணத்தை பிரபஞ்சம் ஏற்றுக்கொண்டது. அடுத்த நாள் மது போதையில் வீதியால் சென்ற சுப்பனை கனரக வாகனம் ஒன்று மோதியது. பிரபஞ்சத்தின் சக்தியுடன் அம்புலன்ஸ் வாகனம் ஒன்று அவனது உயிரற்ற உடலைச் சுமந்து சென்றது.

பனைசார் உற்பத்திகளை... (28ஆம் பக்கத் தொடர்)

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பிலிருந்தே அதிகளவான பனைசார் கைப்பணி பொருட்கள் ஏனைய மாவட்டங்களுக்கு பனை அபிவிருத்தி சபையால் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் பனைசார் உற்பத்திகளில் ஈடுபடும் பெண்களுக்காக பனை அபிவிருத்தி சபையால் 6 மாத பயிற்சி வழங்கப்படுவதுடன், அவர்களின் உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பையும் பெற்றுக்கொடுக்கின்றோம். பனை அபிவிருத்தி சபையின் ஊழியர்கள், பனைசார் உற்பத்திகளில் ஈடுபடும் பெண்களின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் உற்பத்திகளை கொள்வனவு செய்வதுடன், அவர்களுக்கான கொடுப்பனவை அவர்களின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுகின்றார்கள்.

மேலும், கிழக்கு மாகாணத்தில் பனை வளத்தை அதிகரிப்பதற்காக பனை விதை நடுகை வேலைத்திட்டமும்; எமது சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் பனை வளம் குறைவாகவுள்ள மாவட்டங்களிலும் பனை வளத்தை அபிவிருத்தி செய்ய எண்ணியுள்ள மாவட்டங்களிலும் பனை விதைகளை நடுகின்றோம். கடந்த வருடத்தில்; மட்டக்களப்பில் 195,000 பனை விதைகளையும் அம்பாறையில் 50,000 பனை விதைகளையும் நடுகை செய்துள்ளோம்.

இதனைத் தவிர, இவ்வருடத்தில் பனங்கன்றுகளை நடுவதற்கு பனை அபிவிருத்தி சபை உத்தேசித்துள்ளது. அவ்வகையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்கள் தோறும் 20,000 பனங்கன்றுகளை நடுவதற்கு உத்தேசித்துள்ளோம். இதற்காக பயனாளிகளிடமிருந்து தலா பனங்கன்று 40 ரூபாய்க்கு கொள்வனவு செய்யவுள்ளோம்.

இலங்கையில் பனைசார் உற்பத்திகளுக்கு அதிகளவான கேள்வி இருக்கின்றது. ஆனால் அதன் உற்பத்திகள் போதாமல்; உள்ளன. உற்பத்திகளை அதிகரிக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் என்கிறார் அவர்.

பனைசார் உணவு உற்பத்தி மற்றும் கைப்பணி வேலைகளை பழகி அத்தொழில்களில்; ஈடுபடுவதற்கு பெண்கள் முன்வர வேண்டுமென்று அழைப்பு விடுக்கின்றேன். பெண்கள் தங்களது வீடுகளிலிருந்தவாறே பனைசார் உணவு உற்பத்திகள் மற்றும் கைப்பணி வேலைகளில் ஈடுபட்டு வருமானத்தை ஈட்ட முடியும் என்கிறார் அவர்.

பனைசார் உற்பத்திகளில் ஈடுபட விரும்பும் பெண்கள், பனை அபிவிருத்தி சபையுடன் தொடர்புகொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கான வசதிகளை எமது சபை செய்து கொடுக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மனிதநேயம் கொண்ட தலைவர்களை வளர்த்தெடுக்கும்
இலங்கை ரிசோல்வர்ஸ் கழகம்

ஆசியா பசுபிக் இன்ஸ்டிட்யூட் ஒஃப் இன்போர்மேசன் டெக்னோலொஜி ஸ்ரீலங்கா கல்வியகத்தின் மாணவர்களால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் செயலூக்கமுள்ள ஒரு சுயாதீன மாணவர் இயக்கமாக திகழும் ரிசோல்வர்ஸ் கழகம் இளைய தலைமுறையினர் மத்தியில் இரக்கம், மற்றவரின் உணர்வறிந்து செயற்படல் மற்றும் சமூக கலாசார நல்லிணக்கம் ஆகியவற்றை கட்டியெழுப்புவதில் அதிக கவனம் செலுத்திச் செயற்படுகின்றது.

கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக இயங்கி வருகின்ற இந்தக் கழகமானது 2022 மார்ச் 10ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதுடன், இதன்போது ரிசோல்வர்ஸ் செயற்குழாமும் நியமனம் செய்யப்பட்டது.

இக்கல்வியகத்தின் பெறுமதிகளை உலக அரங்கிற்கு பாரியளவில் கொண்டு செல்வதில் அர்ப்பணிப்புடன் உள்ள அதிகாரிகளாக திகழும் கௌஷாலி அமரதிவாகர, ஹர்ஷ விதானபத்திரண மற்றும் தெஹானி பென்டிகிரஸ்ட் ஆகியோரினால் வழிநடாத்தபடும் அதீத ஆர்வமுடைய 10 தலைவர்களை இந்த செயற்குழாம் உள்ளடக்கியுள்ளது.

இந்த மாணவ தலைவர்கள் தங்களால் வடிவமைக்கப்பட்டு முன்னெடுக்கப்படுகின்ற வேறுபட்ட ஆறு விடயதானத் துறைகளில் தலைமைத்துவத்தை வழங்குவார்கள். தொலைத்தொடர்பு மற்றும் கருவிகள், உள்ளடக்கம் மற்றும் காட்சித்தன்மை, நிகழ்ச்சி விவகாரங்கள், புதுமையான தீர்வுகள், உறுப்புரிமை மற்றும் டிஜிட்டல் சேவைகள் ஆகியவையே அந்த துறைகள் ஆகும்.

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 18



திரு/திருமதி.செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .....
.....
.....
....
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 18
த.பெ.இல.834. கொழும்பு

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :18

இடமிருந்து வலம்

(01) இம்மாதம் வரும் தமிழ், சிங்கள மக்களுக்குரிய திருநாள்.
(04) இன்னொருவரிடமிருந்து பெறவேண்டிய பணம்.
(08) உயரம் குறைந்த மலை. (திரும்பியுள்ளது)
(09) புகையிலையிலிருந்து தயாரிக்கப்படுவது. (குழம்பியுள்ளது)
(10) இதுவும் ஒரு நிறம். (குழம்பியுள்ளது)
(12) ஒரு கருமத்தை தொடர்ந்து முன்னெடுக்காமல் செய்வது.
(13) ஒருவகை மீன். (திரும்பியுள்ளது)
(16) பெண் குழம்பிவிட்டாள்.
(19) பாக்கு மரம்.
(21) எதிர்பார்ப்புடன் கூடிய விருப்பம். (திரும்பியுள்ளது)
(23) இதுவும் ஓர் உறவுமுறை. (திரும்பியுள்ளது)
(24) வியாபாரம். (குழம்பியுள்ளது)
(25) 1961ஆம் ஆண்டில் வெளிவந்த திரைப்படம். (குழம்பியுள்ளது)
(26) பாதை. (திரும்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

(01) விருப்பம் இன்மை.
(02) ஆதாரம்.
(03) இருமல் - இப்படியும் சொல்வர். (குழம்பியுள்ளது)
(04) தழும்பு.
(05) அத்தாட்சி.
(06) வயலும் வயல்சார்ந்த இடமும்.
(07) சற்று மேடாகத் தெரியும் பகுதி.
(11) வேகம் மிகுந்த காற்று.
(14) உரையாடுவதையும் குறிக்கும்.
(15) அஞ்சல் தலை. (குழம்பியுள்ளது)
(17) நெல் பயிரிடும் இடம். (குழம்பியுள்ளது)
(18) சமய அல்லது பொது ஒழுக்கத்துக்கான நெறிமுறை. (குழம்பியுள்ளது)
(19) நாற்காலி.
(20) சமையல் அறை.
(22) மனவருத்தம். (குழம்பியுள்ளது)
(24) வேலை அல்லது சேவை. (தலைகீழ்)

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 17

விடைகள்

இடமிருந்து வலம்

01. புத்தாண்டு 05. அனு 06. மகிழ்ச்சி
08. திண்மை 11. குறும்பு 12. மணி
13. சத்தி 14. அத்தி 16. வாதை
17. வாய்மை 18. ஏரி 19. கோதுமை
21. கூழ் 22. ஆடி 23. தனிமை

மேலிருந்து கீழ்

01. புத்திமதி 02. தாழ்மை 03. மண்
04. கிடுகு 05. அச்சம் 07. சிறுத்தை
09. அண்ணி 11. புத்திரி 15. வாத்து
16. வாய் 18. ஏழ்மை 19. கோடி
20. ஆமை 21. கூனி

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 16

பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு

ஸாஹிரா பானு லியாவுடீன்,
இல. 12/6, சென். பீற்றர்ஸ் லேன்,
நிந்தனி, புத்தளம்.

இரண்டாம் பரிசு

மொஹமட் பிலால்,
மதார் சதுக்கம்,
பழநகர், மூதூர்.

மூன்றாம் பரிசு

த. சிவபாக்கியவதி,
435/36, 3ம் குறுக்கு,
பம்புகார், மட்டக்களப்பு.

பாராட்டு பெறுவோர்

1. எஸ்.ஏ. நுஹா,
கே/மா/சாஹிரா தேசியக் கல்லூரி,
மாவனெல்லை.

2. சடாட் அஹமட்,
337, மங்கெதர,
துல்ஹிரிய.

3. வி. இராஜேந்திரன்,
88, விபுலானந்த வீதி,
காரைதீவு 01.

4. என். பாத்திமா ஹனா,
155, அம்பாறை வீதி,
அக்கரைப்பற்று 19.

5. சி. அருந்ததி,
241/15, ரொக்ஹில்,
பதுளை.

6. ஏ.ஆர்.எம். அபூபக்கர்,
411, அலுத்வீதிய,
வெலிகம.

7. நி. வினோமதிவதனி,
லுனுகலை பஸார்,
லுனுகலை.

8. எஸ். உமாதேவி,
கட்டுக்கலை மேற்பிரிவு,
தலவாக்கலை.

★ ★ ★

ஈழத்தின் முதலாவது சஞ்சிகை 'பாரதியை' வெளியிட்ட கே. கணேஷ்

ஈழத்தின் முதலாவது இலக்கியச் சஞ்சிகை பாரதி 1946ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியாகியது. இந்த இதழை முதுபெரும் எழுத்தாளர் கே. கணேஷ் தமது நண்பரான கே. ராமநாதனுடன் இணைந்து வெளிக்கொணர்ந்தார். இச்சஞ்சிகையே ஈழத்தின் முதலாவது சிறுசஞ்சிகையாகும். இதற்கு மூலதனம் வேண்டியபோது தந்தை இவருக்குக் கொடுத்த தலாத்து ஓயா இடத்தை விற்று அதனை மூலதனமாகக் கொண்டே இச்சஞ்சிகையை ஆரம்பித்தார். பீற்றர் கெனமன் அவர்களது வீட்டையே செயலகமாகக் கொண்டு இச்சஞ்சிகை வெளிவந்தது. 1946 ஜனவரி முதல் 1946 ஆகஸ்ட் வரையான எட்டு மாதங்களில் ஐந்து இதழ்கள் மடடுமே வெளிவந்தன. கே. ராமநாதன் இந்தியா சென்றபின் இரண்டு ஆண்டுகள் கழித்து 1948 ஜனவரியில் அ.ந. கந்தசாமியுடன் இணைந்து ஆறாவது இதழை வெளிக்கொணர்ந்தார் கணேஸ் முற்போக்கு எழுத்தாளர்கள் ஓரணியில் திரண்டு பணிபு ரிய வைத்தது பாரதி இதழ். பா ரதியில் வெளிவந்த கட்டுரைகள் ஈழத்தமிழ் இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க மாறுதல்களை ஏற்படுத்தியிருக்கின்றன. முதலாவது இதழின் ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு அமைந்துள்ளது:

'விஞ்ஞான முடிவுகளில் புரட்சி ஏற்படுத்திய அணுசக்திபோல தமிழ் மொழிக்குப் புதுமைப் போக்களித்த மகாகவி பாரதியின் பெயர்தாங்கி வருகிறது இந்த இதழ். மகாகவி பாரதி தமிழுக்கப் புதுவழி காட்டியது போலவே எமது பாரதி இதழும் கண்டதும் காதல் கதைகள் மலிந்துவிட்ட இன்றைய தமிழிலக்கியப் போக்கிற்கும் புதுவழி காட்டும்.

ஏகாதிபத்தியத்தை அழிக்க கவிபாடிய பாரதியார் முப்பதுகோடி ஜனங்களின் சங்க முழுமைக்கும் பொதுவுடமையான ஒப்பில்லாச் சமதாயத்தை ஆக்கவும் கவி பாடினார். அவர் காட்டிய அந்தப் பாதையில் பாரதி யாத்திரை தொடங்குகிறது. இந்தப் பணிக்கு வேண்டியது தமிழர் ஆதரவே.'

கணேஷ் கண்டியை அடுத்துள்ள அம்பிட்டிய என்னும் இடத்தில் உள்ள 'தலைப் பின்னாவ' என்னும் தோட்டத்தில் கருப்பண்ணபிள்ளைக்கும் வேளூரம்மாளுக்கும் ஏக புத்திரனாக 02.03.1920இல் பிறந்தார். இவரது பெற்றோரும் மூதாதையரும் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தத்தமங்கலம் என்னும் சிற்றூரில் இருந்து இலங்கைக்கு வந்து தலாத்துஓயாவில் குடியேறியவர்கள். கணேஷு க்குத் தாய் தந்தையர் இட்டபெயர் சித்தி விநாயகம். ஆனாலும் வீட்டுப் பெயராகிய கணேசன் என்பதே எழுத்துலகில் கணேஷ் ஆகி நிலைகொண்டுவிட்டது.

கே.கணேஷ் தனது ஆரம்பக் கல்வியை தலாத்துஓயா பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை கண்டி புனித அந்தனீஸ் கல்லூரியிலும் கற்றவர். பின்னர் தமிழகம் சென்று மதுரைத் தமிழ்ச்சங்கத்திலும் திருவையாறு ராஜாக்கல்லூரியிலும் பயின்றவர். தமிழகத்தில் கல்விகற்றபோது இவருக்கு இடதுசாரிகளின் தொடர்புகள் ஏற்பட்டன.

1939இல் அவர் தமிழ்நாட்டில் இருக்கும்போது மணிக்கொடி சஞ்சிகையில் எழுதத் தொடங்கினார். அவர் எழுதிய ஆசாபாசம், அதிர்ஷ்டசாலி ஆகிய சிறுகதைகளும் மொழிபெயர்ப்புகளும், மணிக்கொடியில் வெளியாகியுள்ளன. கணேஷின் சுய ஆக்கங்களாக ஏழு சிறுகதைகளும், பல கவிதைகளும், கட்டுரைகளும் வெளியாகியுள்ளன.

1934இல் கல்விகற்க இந்தியா சென்ற கே.கணேஷ் அங்கு கம்யூனிச சித்தாந்த அறிவையும் இந்திய சுதந்திர வீரர்களின் தொடர்பையும் தமிழ் அறிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரின் நட்பையும் பெற்று 1938இல் இலங்கை திரும்பினார்.

1940இல் உலகப் புகழ்பெற்ற எழுத்தாளரான டாக்டர் முல்க்ராஜ் ஆனந்த் இலங்கை வந்தபோது அவர் முன்னிலையில் அகில இலங்கை எழுத்தாளர் சங்கத்தை கே.கணேஷ் உருவாக்கினார். அந்தச் சங்கத்திற்கு சுவாமி விபுலானந்தர் தலைவராகவும், மார்ட்டின் விக்கிரமசிங்க உபதலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். டாக்டர் சரத்சந்திரவும் கே.கணேஷும் இணைச் செயலாளர்களாகவும் பி.கந்தையா பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டார்கள். 1946இல் தனது நண்பர் கே.இராமநாதனுடன் இணைந்து இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை உருவாக்கினார்.

பெரியார் ஈவேராவுடன் சேர்ந்து கம்யூனிஸ இயக்கத்தைக் கட்டியெழுப்பிய ப.ஜீவானந்தத்துடன் மிக நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார் கே.கணேஷ் கம்யூனிஸ்ட் கட்சி தமிழகத்தில் தடைப்பட்ட காலத்தில் 1950இல் ப.ஜீவானந்தம் இலங்கையில் தலைமறைவாக இருந்தார். அப்போது இலங்கையின் பல பாகங்களுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் சென்று கம்யூனிச கொள்கைப் பிரசாரங்களில் ஈடுபட்டார். ஜீவானந்தத்துடன் கணேஷ் பல இடங்களுக்கும் சென்றார்.

யாழ்ப்பாணத்தில் ப.ஜீவானந்தமும் கே.கணேஷும் தங்கியிருந்த காலத்திலேதான், டொமினிக்ஜீவா, எஸ்.பொ. தி.ராஜகோபால் போன்றவர்கள் ப.ஜீவானந்தத்துடன் கலந்துரையாட வாய்ப்புக் கிடைத்தது. ஜீவானந்தத்தின்மீது கொண்ட அபிமானத்தால் டொமினிக் தனது பெயரை ஜீவா என்ற பெயருடன் இணைத்துக்கொண்டார். பின்னர் ப.ஜீவானந்தம் இந்தியா திரும்பிச் செல்வதற்கு பாதுகாப்புக்கருதி கணேஷ் அவருடன் கூடவேசென்றார். வல்வெட்டித்துறையில் இருந்து ஒரு இரவில் மீனவர்களின் விசைப்படகொன்றில் சென்று நாகப்பட்டினம் கரையில் கொண்டுசேர்த்ததும் கே.கணேஷே..

கணேஷின் எழுத்து முயற்சிகளில் மிக முக்கியமானது சிறந்த பிறநாட்டு இலக்கியங்களை தமிழ் மொழியில் மொழி பெயர்த்தமையாகும். உலக இலக்கியங்கள் பலவற்றை மொழிபெயர்த்து 22 நூல்களை அவர் வெளியிட்டுள்ளார். பாரதத்தில் வெளிவந்த தலித் இலக்கியத்தின் முதல் நாவலாகக் கருதப்படும் முல்க்ராஜ் ஆனந் எழுதிய தீண்டத் தகாதவர்கள் என்ற நாவலை முதன்முதலாக மொழி பெயர்த்து தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர் கே. கணேஷ்.

1958இல் ஜப்பான் சக்கரவர்த்தியின் பிறந்த தினத்தையொட்டி உலகரீதியில் நடத்தப்பட்ட கவிதைப்போட்டியில் மேகங்கள்| என்ற கவிதையை எழுதி ஜப்பானிய சக்கரவர்த்தியின் ஹீராஹிட்டோவின் அரசவைக் கவிஞர்களின் பாரட்டு விருதைப் பெற்றார்.

உக்ரேனிலும் பல்கேரியாவிலும் நடைபெற்ற உலக மொழிபெயர்ப்பாளர் மாநாடுகளில் 1984இலும் பின்னரும் இருதடவைகள் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.

இங்கு குறிப்பிட்ட தகவல்களில் அனேகமானவை கே.கணேஷோடு உரையாடிப் பெற்றவை. ஞானம் 31ஆவது இதழ் எழுத்தாளர் கே.கணேஷ் சிறப்பு மலராக வெளிவந்தது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கே. கணேஷுக்கு கனடா இலக்கியத் தோட்டத்தின் இயல்விருது 2003ஆம் ஆண்டில் வழங்கப்பெற்றது.

அவர் தனது 86ஆவது வயதில் 5.04.2004 அன்று அமரரானார்.

20

துப்பறியும் கதையில் காதலும் வருகிறதா? கொலைக்கும் இவர்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதா?

சிறிதுநேரம் அவனைப்பார்த்துக் கொண்டிருந்து "வருகிறேன்... ஆனால் எந்த இடம் என்று சொல்லுங்களேன் பார்ப்போம்?" என்று சொல்லிவிட்டு,

ஆதாரங்களை ஒரு மாதிரி குவித்தாள் மதுமிதா.

"எலகந்தையில் இருந்து ஆற்றோரமாக நடந்து செல்லும் போது 'பள்ளிய வத்த' பாலம் வரும். அந்தப் பாலத்துக்கு முன்னால் இருக்கிறது ஒரு பெரிய தோட்டம்.

அந்த தோட்டத்திற்கு நடுவில் இருக்கிறது ஓர் ஓட்டல்... தோட்டத்தின் மரநிழலில் ஆங்காங்கே பெரிய நாற்காலிகளைப் போட்டு வைத்திருக்கிறார்கள். அங்கே போனால் நாம் நிம்மதியாகப் பேசிக் கொண்டிருக்கலாம்...!"

அவன் பேசி முடிப்பதற்குள், கூட 'பியோ கார்டன் என்று நினைக்கிறேன்...!" என்றாள் மதுமிதா,

அவள் இப்படிச் சொன்னதும்,

பிரசன்னாவின் விழிகள் விரிந்து,

அவன் வியப்பினுள் விழுந்தான்.

"ஓ... அப்படீன்னா நீங்க இதுக்கு முந்தி அங்க போயிருக்கீங்க... யார் கூட போனீங்க? எதுக்கு போனீங்க?" படபடவென்று பட்டாசைப்போல், வார்த்தைகளை வெடிக்க விட்டான் பிரசன்னா!

"மண்ணாங்கட்டி... நீங்க நெனைக்கிறமாதிரி அப்படியாரோடையும் நான் போகவில்லை. தங்கச்சி உறவு முறையுள்ள ஒருத்திக்கு அங்கதான் கலியாணம் நடந்திச்சி... நான் அப்பா கூடத்தான் போயிருந்தேன்...!" ம்... அதுக்குள்ள கற்பனைக்குதிரையைஎங்கெல்லாமோ ஓட விட்டீங்களே பிரச்சன்னா!" என்றால்,

அதரங்களில் புன்னகையை ஓட விட்ட படியே!

"ஓ... அப்படியா... அப்ப பரவாயில்ல...?" என்று நிம்மதி மூச்பெருமூச்சு விட்டான் பிரசன்னா,

"ம்... அதுசரி... உங்களுக்கு எப்படி அந்த ஓட்டல் தெரியும்...? யாரையாவது கூட்டிக்கிட்டு போனீங்களா?" அவன் கேட்ட கேள்வியை, இப்போது அவன் பக்கமே திருப்பி விட்டாள் மதுமிதா!

ஆனாலும்,

பிரசன்னா என்பவன்,

கௌரவமான,

நேர்மையான உணர்வுகளைக் கொண்ட மனிதன் என்பதை மதுமிதா புரிந்து கொண்டிருக்கவில்லை!

"ஓட்டலின் பெயரைத் தெரிந்து கொள்வதற்கு குட்டிகளை கூட்டிக்கொண்டுதான் போக வேண்டுமா என்ன... ம் அப்படி போகிறவர்களும் இருக்கலாம்... ஆனால் பிரசன்னா என்பவன் அப்படிப்பட்டவன் அல்ல... அவன் ரொம்பவும் வித்தியாச மானவன் அவன் அப்படியெல்லாம் போக மாட்டான் தெரியுமா மதுமிதா?" கேட்டு விட்டு,

தலையை ஒருபக்கமாக சாய்த்து,

மதுமிதாவைப் பார்த்தான்.

"ஓ... ராமர் பரம்பரை போலிருக்கிறது... சரி... சரி... அந்த ஓட்டலைப் பற்றி எப்படி தெரிந்து கொண்டீர்கள் என்று சொல்லுங்களேன் பார்ப்போம்...!"

"எங்கள் கம்பெனியில் உள்ள ஏரியா மெனேஜர்களுக்கும் முக்கியமான கஸ்டமர்களுக்கும் அந்த ஓட்டலில் தான்.

பார்ட்டி வைப்போம்...

அதனால் தான் எனக்கு அந்த ஓட்டலைப்பற்றி நன்றாகத் தெரியும், போதுமா... இப்போது தீர்ந்ததா உங்கள் சந்தேகம்?"

அவன் இப்படி சொன்னதும், அவள் சிந்தையுள் மூழ்கினாள்.

'இவனுடன் போவதா வேண்டாமா' என்பதைப் பற்றிய சிந்தனை தான் அது!

அவள் சிந்திப்பதைப் பார்த்ததும்,

"ம்... சரி... மது உங்களுக்கு விருப்பம் இல்லையென்றால் நீங்கள் வரவேண்டாம்... சரி அப்ப நான் புறப்படுறேன்!" சொல்லியபடியே,

மெல்ல நகர்ந்தான் பிரசன்னா,

"இல்லை...இல்லை அதில் ஒன்றும் பிரச்சினை இல்லை. நான் வர்றேன்... அப்போ எங்கள் காலை சாப்பாட்டையும் அந்த ஓட்டலிலேயே வைத்துக் கொள்ளலாம் தானே பிரசன்னா?"

"ம்... நல்ல யோசனை தான் சரி அப்ப நாம் கிளம்புவோம்!"

"ஆகட்டும்!"

அடுத்து,

இருவரும் சென்று,

தங்கள் காரில் ஏறிக்கொண்டார்கள்.

பிறகு,

கார்கள்,

ஊர்ந்து பயணித்தன.

சிறிது நேரத்தில்

எலகந்தையில் இருந்து பியோ கார்டன் ஓட்டலில்

சங்கமித்தார்கள்.

ஓட்டலுக்கு வந்த அவர்கள்,

தோட்டத்தில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்து கொண்டார்கள்.

சுதந்திரமாக மனம் விட்டுப் பேச வேண்டும் என்ற அவர்கள் எண்ணம் நிறைவேறுமா?

அவர்கள் சென்று அமர்ந்த சிறிதுநேரத்தில்,

வேட்டர்வந்து,

அவர்களிடம் உணவு அட்டவணையை கொடுத்தான்!

பிரசன்னா அதை வாங்கிப்பார்த்தான்.

"ம்... மது என்ன சாப்பிடு றீங்க?"

"காலை சாப்பாடுதானே எனக்கு இடியப்பம் பால் சொதி.....

"சரி... எங்க ரெண்டு பேருக்குமே அத கொண்டு வாங்க... அதுதவிர ரெண்டு கட்லட்டும் ரெண்டு ரோலும் கொண்டு வாங்க....!"

"குடிப்பதற்கு என்ன சேர்?வேண்டும்?" வேட்டர் தான் கேட்டான்

"ரெண்டு டீ கொண்டு வாங்க!

"ஆகட்டும் சேர்!"

வேட்டர் போன பிறகு,

இருவரும் பேசுவதற்குத் தயாரான போது,

மதுமிதாவின் தொலைபேசி அலறியது.

எடுத்தாள்,

பார்த்தாள்,

அவள் அப்பா

பேசினாள்,

"அப்பா...எனப்பா..?"

"மது உன்னுடைய காரின் ஸ்பெயா விலும் ஜெக்கும் என்னுடைய காரில் இருக்கிறது!"

"ஆமா அப்பா அதை எடுக்க நான் மறந்து போயிட்டேன்!"

"இந்த வயசிலேயே உனக்கு ஞாபக மறதியா...திடீரென்று டயர் பெச்சானால் என்ன செய்கிறது...?"

"இல்லை அப்பா... கடவுள் புண்ணியத்தில் நான் வீட்டுக்கு வரும்வரை அப்படி எதுவும் நடக்காது.

அப்படி நடந்தால் சரி... திடீரென்று டயர் பஞ்சரானால் அதை ஓட்டித்தருவதற்கு கடவுள் வரமாட்டார் என்ன புரிந்ததா...?"

அவள் அப்பா இப்படிச் சொன்னதும்,

மது மெல்லத் திரும்பி பிரசன்னாவை பார்த்தாள்!

கொலைகாரனைக் கண்டுபிடித்தால் பரிசு!

கொல்லுவதோ இளமை தொடர்கதையை வாசித்துக் கொண்டு வரும் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி.
ஆமாம்,
இந்த துப்பறியும் கதையில் கொலைகாரன் யார் என்று கண்டு பிடித்து எழுதும் வாசகர்களில் மூன்று பேருக்கு நம் நாட்டு எழுத்தாளர்களின் விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

நீங்கள் செய்ய வேண்டியது கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து எழுதி அனுப்புவது மட்டும்தான். ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதமுடியும்.

கொலைகாரனை கண்டுபிடியுங்கள் நூல்களை பரிசாக வெல்லுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி:
கொல்லுவதோ இளமை
தினகரன் வாரமஞ்சரி, லேக்ஹவுஸ்
கொழும்பு-10.

படித்ததும் பகர்வதும் 91

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

நல்லதை சொல்கிறோம்

முஸ்லிம்களின் உபவாச மாதம்

முஸ்லிம்களின் உபவாச நாட்களான ரமழான் நோன்பு மாதம் ஆரம்பித்துள்ளது. முஸ்லிம்கள் ஆர்வத்தோடு இந்நோன்பு காலத்தில் நற்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மனிதர்களை புனிதர்களாக்க, கெட்டவர்களை நல்லவர்களாக்க, சிறந்தவர்களை மேலும் சிறந்தவர்களாக்க, எண்ணங்களை தூய்மையாக்கி இறை நம்பிக்கையை அதிகரிக்க என பல காரணங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ரமழான் மாதம் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இம்மாதத்தில் நோன்பு நோற்பவர்கள் பகல் முழுதும் சுமார் 14 மணித்தியாலங்கள் உண்ணாமலும், ஒரு சொட்டு நீர் கூட பருகாமலும் பசியோடும் தாகத்தோடும் பக்குவமாக இருக்கின்றனர். தீமையான எண்ணங்கள், தீய பார்வைகள், கேட்ட கேள்விகள், பாவச்செயல்கள் என்பவற்றை முற்றாக தவிர்க்கின்றனர் .

ஏனைய காலங்களைவிட அதிக அளவில் இறை வணக்கங்களில் ஈடுபடுதல், ஏழைகளுக்கும், தேவையுள்ளவர்களுக்கும் தாராளமாக தான தருமங்களை வழங்குதல், உறவினர்களோடு சேர்ந்து நடத்தல் போன்ற புண்ணிய பணிகளில் அதிக அளவில் ஆர்வம் செலுத்துகின்றனர்.

ரமழான் 'அல் குர்ஆன்' அருளப்பட்ட மாதம் என்பதால் இம்மாதத்தில் விசேடமாக அல் குர்ஆனை முறைப்படி ஓதவும், அதனை சரியாக் விளங்கவும், அதன்படி நடக்கவும், மற்றவர்களையும் அது காட்டும் சீரிய வழியில் நடக்கச் செய்யவும் அதிக அக்கரை எடுக்கின்றனர்..

இவ்வாறு தொடர்ச்சியாக ஒரு மாதம் பயிற்சி பெறுபவர்கள் ஏனைய நாட்களிலும் அவற்றை கடைபிடித்து நல்லவர்களாக வாழும் தகுதியை பெறுகின்றனர். பசியோடு இருந்து பசியின் பிணி உணர்ந்தவர்கள் மற்றவர்களின் பசி போக்கும் பரோபகாரிகளாக மாறுகின்றனர். மற்றவர்களைப் பற்றி தவறாக ஒரு வார்த்தையேனும் பேசாது பழகியவர்கள் பிறர் நலன் பேண முன்வருகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு விடயத்திலும் நற்செயல்களில் பயிற்சி பெரும் மாதமாகவே இந்த உபவாச மாதம் திகழ்கின்றது.

இம்மாதம் முழுதும் நோன்பிருந்த பின்பும் இத்தகைய மாற்றங்கள் ஒருவரில் ஏற்படவில்லையாயின் அவர் பிடித்த நோன்புகளின் பிரதிபலன் முழுமையாக கிடைக்கவில்லை என்றே அர்த்தமாகிறது. இவற்றை உணர்ந்து நற்செயல்களுக்கு பயிற்சியளிக்கும் நோன்பு மாதத்தில், அதன் உண்மையான, சரியான தாத்பரியத்தை தெளிவாகப் புரிந்து, அதன் நோக்கை நிறைவேற்றும் வகையில் செயல்பட வேண்டியது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும்.

நெஞ்சுக்கு நீதி

சோதனைகள் வருவதெல்லாம் வாழ்வில் சகஜம்
வேதனைகள் பெறுவதாலே இன்பத்தில் பங்கம்
போதனைகள் ஏற்பதால்தாம் துயரங்கள் நீங்கும்
சாதனைகள் செய்வதாலெம் வாழ்வே சிறக்கும்!

பிரிந்தார் பெருமை

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

எனது பல்கலைக் கழக ஆசான், இலங்கையின் பிரபல தமிழ் கல்விமான், இலக்கியவாதிகளின் நண்பன், தமிழ் முஸ்லிம் நல்லுறவின் பாலம், பல்துறை ஆளுமை பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள், கடந்த 2022.04.04ம் திகதியன்று இவ்வுலகைப் பிரிந்தார். காணுமிடமெல்லாம் அன்போடும், கனிவோடும் உரையாடும் அவரது பணிவும், நட்பும், ஆதரவும், எப்போது எதற்காகப் பேசினாலும் தயங்காது உதவிடும் பாங்கும் என்றும் எம் நெஞ்சில் பசுமையாகவே இருக்கிறது.

மலையகத் தமிழராய் பிறந்து, தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியிலும் இலங்கை, ஜப்பான் பல்கலைகழகங்களிலும் கல்வி கற்று, கல்வியிலே உச்சம்தொட்டு, முழு இலங்கை நாட்டு மக்களினதும் அபிமானத்தை வென்ற மூத்த கல்விமானாக சரித்திரம் படைத்தவர் பேராசிரியர் சோ. சந்திரசேகரம்.

பல்கலைகழகங்களிலே விரிவுரையாளர், பேராசிரியர், பிரிவுத் தலைவர் என்று பல்வேறு பதவிகளை வகித்து, எண்ணற்ற கல்விமான்களையும், துறைசார் நிபுணர்களையும் உருவாக்கிய இவர், கணக்கிட முடியாத அளவில் ஆய்வுக்கட்டுரைகள், மேடைப் பேச்சுக்கள், கலந்துரையாடல்கள், பத்திரிகை ஆக்கங்கள், இருபதுக்கும் மேற்பட்ட நூல்கள் என சமூகத்துக்காக அள்ளி வழங்கியுள்ளார்.

பல்வேறு உயர் பதவிகளை அலங்கரித்து, குறிப்பாக தமிழ் மக்களுக்கும், விசேடமாக மலையகத் தமிழருக்கும், பொதுவாக முழு நாட்டுக்கும் பாரிய சேவைகளை செய்துள்ளார். எத்தகைய உயர் பதவிகளை வகித்தபோதிலும், எந்தவித பகட்டும், பந்தாவும் இல்லாமல் எல்லோருடனும் நட்போடு பழகிய பண்பாளர்.

முஸ்லிம்களின் உயர்கல்வி பற்றியும் அதிக அக்கறையோடு செயல்பட்ட பேராசிரியர், முஸ்லிகளின் கல்வி தொடர்பான நிகழ்வுகளில் தவறாது பங்குபற்றி ஆக்கபூர்வமான பங்களிப்புகளைச் செய்துள்ளார். காலத்துக்கேற்ற வகையில் பொருத்தமான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதி வழிகாட்டியுள்ளார்.

கொழும்பு தமிழ் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினரான பேராசிரியர் சோ. சந்திரசேகரம், அதன் தலைவராகவுமிருந்து சேவையாற்றியுள்ளார். இலக்கிய நிகழ்வுகளிலும், புத்தக வெளியீடுகளிலும் இவரது பங்களிப்புகள் அளப்பரியன.

அன்னாரது மறைவு இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்கள்களுக்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்பதோடு, தமிழ் மக்களின் கல்வித்துறையில் இலகுவில் நிரப்ப முடியாத பாரிய இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையல்ல.

சிந்தனை செய் மனமே

கடனும் பிள்ளைகளும்

ஒரு முதியவர் மரணமடைந்தார். அவர் வீட்டில் அவரை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்து கொண்டு இருந்தார்கள்.

அவ்வேளையில் அங்கே ஒருவர் வந்தார். அவர் மரணம் அடைந்தவரைக் காட்டி "இவர் என்னுடைய நண்பர். இவர் எனக்கு பத்து லட்சம் ரூபாய் தரவேண்டும். அதனை தந்தால்தான் உடலை அடக்கம் செய்ய இடம் தருவேன்." என்றார். 'யார் அந்த பணத்தை வழங்குவது' என்று விவாதங்கள் நடந்தது. அவரது மூன்று மகன்களும் "நாங்கள் பணம் தர மாட்டோம். எங்கள் தந்தை இதைப் பற்றி எதுவும் எங்களிடம் சொல்லவில்லை. மேலும் அதற்கு நாம் பொறுப்பல்ல." என்று கூறி ஒதுங்கி விட்டார்கள்.

அங்கு இருந்த ஏனைய உறவினர்கள், 'மகன்களே கொடுக்காதபோது எங்களால் ஒன்றும் செய்ய முடியாது' என்று சொல்லவே, அங்கே பதட்டம் அதிகரித்து கொண்டே போனது. எந்தவொரு தீர்வும் வந்ததாக இல்லை.

இறந்தவருக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அவளுக்கு திருமணம் ஆகவில்லை,

அவள் ஓடி வந்து தன் கழுத்தில், கையில் என இருந்த எல்லா நகைகளையும் கழட்டி, அந்த பெரியவரிடம் நீட்டி, "ஐயா இதை வைத்துக் கொள்ளுங்கள். மீதி பணத்தை நான் பின்னர் தருகிறேன். அப்பாவை அடக்கம் செய்ய விடுங்கள்" என்று சொன்னாள்.

உடனே அந்தப் பெரிய மனிதர், "வேண்டாம் தாயே! நீ ஒன்றும் தரத் தேவையில்லை. நான் தான் உன் தந்தைக்கு பத்து லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும். உன் தந்தை தன்னுடைய மரணத்துக்குப் பிறகு உண்மையில் யார் என்னை உண்மையாக நேசிக்கிறார்களோ, அவர்களிடமே இந்த பணத்தைக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதனால் தான் இப்படி ஒரு நாடகம் ஆடினேன். என்னை மன்னித்து விடுங்கள்". என்று சொல்லி தனது கையிலிருந்த பத்து லட்சம் ரூபாய் பணத்தை அந்த பெண்ணிடம் கொடுத்தார்.

'உண்மையில் பெண் பிள்ளைகளைப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள்தாம்.' என்று அங்கு வந்திருந்தவர்கள் பேசிக்கொண்டார்கள்.

புது வரவு

குடிபெயரும் கனவுகள்

மினுவாங்கொடை, கல்லொளுவை றுவைதா மதீன் எழுதியுள்ள கவிதைகளின் தொகுப்பு நூல் 'குடிபெயரும் கனவுகள்'.



வேலை, ஆசிரியர், பெண், நிம்மதி, மனிதம், சுமை, புகை போன்ற சிறிய, சிறிய தலைப்புகளில் ஐம்பது கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இவற்றில் சில நவமணி, எங்கள் தேசம், தினகரன் பத்திரிகைகளில் பிரசுரமானவை. 'காவியாபிமானி' கலைவாதி கலீல் நூலாசிரியரை அறிமுகம் செய்துள்ளார்.

'ஈழத்து நூன்' எம்.ஏ.எம். நிலாம், 'குடிபெயரும் கனவுகள்' நூல் பற்றி இப்படி கூறியுள்ளார், "பாடசாலை ஆசிரியராக இருப்பதாலும், பலருடனும் பழகும் தன்மை இருப்பதனாலும் சமூகத்தின் அவலங்களை நன்கு அறிந்து வைத்திருப்பதாலும் அவரது அனைத்துக் கவிதைகளும் வெகு சிறப்பாகவே அமைந்துள்ளன. இவற்றை வெறுமனே கவிதைகள் என்பதைவிட "காலத்தின் கண்ணாடி" என்றும் வர்ணிக்கலாம்.".

நூல்: **குடிபெயரும் கனவுகள்,** ஆசிரியர்: **றுவைதா மதீன்,** பக்கங்கள்: **viii + 60,** விலை: ரூபா. **200/=,** வெளியீடு: **மக்கள் பதிப்பகம்,** கல்லொளுவை மினுவாங்கொடை, தொடர்புகளுக்கு: **077 6556852**

சரித்திரத்தில் ஒரு சம்பவம்

காலச் சக்கரம்!

கவிஞர் வாலியின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவம் இது. அவரே பதிந்து வைத்திருந்தது:

அது சென்னை எழும்பூர் ரயில் நிலையம். அங்கிருந்த சிமெண்ட் பெஞ்சில் ஒருவர் அமர்ந்திருக்கிறார். நான் அவரைக் கவனித்து விட்டேன். எத்தனை புகழ் பெற்ற மனிதர். இன்றைய தலைமுறைக்கு அவரைத் தெரியவில்லை போலும்.

ஓடிப் போய் அவரருகே சென்று, "நமஸ்காரம் அண்ணா! நானும் உங்க மாதிரி திருச்சிக்காரன்தான். இப்போ, சினிமாவில பாட்டு எழுதிண்டிருக்கேன். என் பேரு வாலி'' என்று என்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, அவரை வணங்குகிறேன்.

உடனே அவர், 'ஓ! நீங்கதான் அந்த வாலியா..?' என்று என் கைகளைப் பற்றுகிறார். அவர் எம்மைத் தொட மாட்டாரா என்று தமிழர்கள் ஏங்கித் தவமிருந்த காலம் ஒன்று இருந்தது. இன்று அவர் என்னைத் தொடுகிறார். நான் சிலிர்த்துப் போகிறேன்.

அவர் தொட்டதால் அல்ல. எந்த ரயில் நிலையத்தில் அவரை ரயிலிருந்து இறங்கவிடாமல் மக்கள் ஆர்வம் மிகுதியால் முண்டியடித்துக்கொண்டு அலை மோதினார்களோ அதே ரயில் நிலையத்தில் இன்று கவனிக்க ஆளில்லாமல் தனியாக அவர் அமர்த்திருந்த நிலையை பார்த்து நான் நான் சிலிர்த்துப் போகிறேன். எழும்பூர் ரயில் நிலையத்தில் எவரது கவனத்தையும் ஈர்க்காமல் அங்கே அமர்ந்திருந்தவர் வேறு யாருமல்ல! தமிழ் சினிமாவின் முதல் சூப்பர் ஸ்டார் எனப் புகழப்பட்ட மாபெரும் சினிமா நடிகர் திரு. எம். கே. தியாகராஜ பாகவதர் அவர்கள்.

பாகவதர் பற்றிய ஒரு குறிப்பு: எம். கே. தியாகராஜ பாகவதர் நடித்து, 1944ம் ஆண்டு தீபாவளி தினத்தன்று சென்னை 'சன்' தியேட்டரில் திரையிடப்பட்ட 'ஹரிதாஸ்' என்ற திரைப்படம் அதே திரையரங்கில் 100 வாரங்கள் தொடர்ந்து ஓடி சாதனை படைத்தது. 1946 தீபாவளி வரை தொடர்ந்து ஓடியது. பிற திரையரங்குகளையும் சேர்த்து மொத்தம் 130 வாரங்கள் ஓடி இருக்கிறது.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்ஸப் (WhatsApp): 0777314207

திருவள்ளுவம் எனும் தெய்வீகத் திரவியம்

அக்காலத்தில் நிலவிய சாதி, சமூக, சமயக் கருத்துக்களை எதிர்த்து பல குறட்பாக்களை திருவள்ளுவர் எழுதியுள்ள காரணத்தால் பல எதிர்ப்புகளை எதிர்நோக்கி இருந்தார் என்பதை திருவள்ளுவ மாலையின் கீழ்வரும் பாடல் எடுத்துக்காட்டுகிறது.

திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்

கே. பத்மானந்தன் 03

"ஆற்றல் அழியுமென்று
அந்தணர்கள் நான்மறையைப்
போற்றி உரைத்து ஏட்டின்
புறத்தில் எழுதார் – ஏட்டை
எழுதி
வல்லுநரும் அல்லாரும்
வள்ளுவனார் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்
சோர்வின்று."

சாதி, சமூகம் ,சமயம் தொடர்பான செய்திகளை சூழ்ச்சிகளை யாரும் அறிந்து தெளிவு பெறக்கூடாது என்று ரிக், யசூர், சாம, அதர்வணம் என்கிற நான்கு மறை நூல்களை பிராமணர்கள் மறைத்து விட்டார்கள். ஆனால் வள்ளுவரோ அந்த நூல்களுக்கு எதிராக மூன்று வகையான வாழ்வின் நெறிகளைச் சொல்லும் திருக்குறளை எழுதினார் என்பதுதான் இப்பாடலின் பொருள். திருக்குறளைப் படித்து புரிந்து கொள்ளும்போது, திருவள்ளுவர் எத்தகைய சமூக சீர்த்திருத்தவாதி என்பதை அறிந்து கொள்ளலாம் . இத்தகைய எதிர்ப்பின் காரணமாக மதுரைத் தமிழ்சங்கத்தில் ஔவையாரின் உதவியுடனேயே திருவள்ளுவர் தனது திருக்குறளை அரங்கேற்றம் செய்தார் என்ற செய்தி ஒன்றும் இருக்கிறது .

இத்தகைய திருக்குறளுக்கு பழங்காலத்திலும் தற்காலத்திலுமாகப் பலர் உரை எழுதியுள்ளனர். பழங்காலத்தில் திருக்குறளுக்கு பத்து அறிஞர்கள் உரை எழுதியுள்ளார்கள் என்ற செய்தியை கீழ்வரும் பாடல் தருகின்றது .

"தருமர் மணக்குடவர்
தாமத்தர் நச்சர்
பரிதி பரிமே
லழகர்திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள்
காலிங்கர் வள்ளுவர்நூற்கு
எல்லையுரை செய்தார் இவர்"

இவர்களுள் காலத்தால் முந்தியவராக தருமர் கொள்ளப்படும் அதேவேளை பிந்தியவராக பரிமேழலகர் கொள்ளபடுகின்றார் இவர்களில் பரிமேலழகர், மணக்குடவர், காலிங்கர், பரிதி, பரிப்பெருமாள் ஆகிய ஐவர் உரைகள் வெளிவந்துள்ளன. தருமர், தாமத்தர், நச்சர் ஆகிய மூவரின் உரைகள் சில குறட்பாக்களுக்கு மட்டும் கிடைத்துள்ளன. திருமலையர், மல்லர் ஆகிய இருவர் உரை கிடைக்கவில்லை.

கிடைத்துள்ள உரைகளில் காலத்தால் பிந்திய பரிமேலழகர் உரை 13 ஆம் நூற்றாண்டில் தோன்றியதாகவும் பரிப்பெருமாள் காலம் 11 ஆம் நூற்றாண்டு எனவும் தமிழ் அறிஞர்கள் கூறுகிறார்கள். மேலும் பரிப்பெருமாள் உரை மணக்குடவர் உரையைத் தழுவி எழுதப்பட்டுள்ள காரணத்தால் மணக் குடவர் காலம் 10 ஆம் நூற்றாண்டு என்பதாகிறது என தமிழ் அறிஞர்கள் வரையறை செய்துள்ளார்கள் . ஏனைய மூவர் உரைகளைக் காலிங்கர், பரிப் பெருமாள், பரிமேலழகர் எனக் கால வரிசைப் படுத்தியுள்ளார்கள். மேலும் பரிதியார் உரை காலிங்கர் உரையைத் தழுவிச் செல்கிறது என்றும் கூறுகிறார்கள் .

திருக்குறளுக்கு நேரே உரை எழுதியவர்களே அல்லாமல் இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார், சேக்கிழார், கம்பர் போன்றவர்கள் தம் நூல்களில் ஆங்காங்கே திருக்குறளை எடுத்தாண்டு விளக்கமும் கூறியுள்ளனர். அப்பகுதிகளை எல்லாம் ஒன்றுசேர்த்துப் பார்த்தால் அவர்கள் திருக்குறளுக்குச் செய்யுள் வடிவில் உரைவிளக்கம் கூறி இருப்பது வெளிப்படும் என்கிறார்கள் அறிஞர்கள் . பிற்காலத்தில் நீதி நூல்களை இயற்றிய புலவர்களும் கூட திருக்குறளுக்குச் செய்யுள் வடிவில் உரை இயற்றியுள்ளனர் என்பது இவ்வறிஞர்களின் கருத்து.

திருக்குறளுக்கு உரை எழுதாமல் வேறு நூல்களுக்கு உரை எழுதியவர்கள் கூட தம் உரைகளில் தேவையான இடங்களில் திருக்குறட்பாக்கள் சிலவற்றிற்கு உரை எழுதியுள்ளதனைக் காண முடியும் என்றும் இவ்வறிஞர்கள் கூறுகிறார்கள். உதாரணமாக சிலப்பதிகாரத்தின் அரும்பதவுரையாசிரியர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியிர், மயிலைநாதர், சங்கர நமசிவாயர் ஆகியோர் தம் உரைகளில் வாய்ப்பு கிடைத்த போது எல்லாம் திருக்குறள் சிலவற்றிற்கு உரை கண்டுள்ளனர் என்பது இவ்வறிஞர்களின் கருத்தாகும் .

கம்பர் காலத்தில் திருக்குறளுக்குச் சில உரைகள் வழங்கப்பட்டுள்ளன என்று அறிஞர்கள் சிலர் கருதுகிறார்கள் . அதற்கு ஆதாரமாக அவர்கள்

"அன்போடு இயைந்த
வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த
தொடர்பு"

என்ற குறளுக்குத் தம் காலத்தில் வழங்கிய வேறு உரைகளைப் பின்வரும்

பாடலில் கம்பர் குறிப்பிடுகின்றார் என்று குறிப்பிடுகிறார்கள்.

"என்பென்பது யாக்கைஎன்பது
உயிர்என்பது இவைகளெல்லாம்
பின்பென்ப அல்லவேனும்
தம்முடை நிலையிற்பேரா"

" முன்பென்ப உளஎன்னும்
முழுவதும் தெரிந்தவாற்றால்
அன்பென்பது ஒன்றின்தன்மை
அமரரும் அறிந்ததன்றால்"

(யுத்தமருத்துமலை4)

பிற்காலத்தில் மு.வரதராசன், நாமக்கல்கவிஞர், புலவர் குழந்தை, தேவநேயப்பாவணர், கலைஞர் கருணாநிதி,நாவலர் நெடுஞ்செழியன், சொலமன் பாப்பையா போன்றோரும் உரை எழுதியுள்ளனர். எனினும் தமிழறிஞர்களால் பரிமேலழகர் உரையே முதன்மையானதாகக் கொள்ளப்படுகி றது.

திருக்குறளுக்குப் பல உரைகள் தோன்றியதற்கு உரிய காரணங்களை ஆராய்ந்த அறிஞர் டாக்டர் வ.சு.ப.மாணிக்கம் பின்வரும் காரணங்களைக் கூறுகின்றார்:

- பாட வேற்றுமையால் சில உரை வேற்றுமைகள் காணப்படும். இவை ஆராய்ந்து ஏற்கத்தக்கன.
- பாடம் கற்பித்துக்கொண்டு ஓரிருவர் புதுப் பொருள் காட்டியுள்ளனர். இவர்கள் பொறுக்கத்தக்கவர்கள் அல்லர் , மக்கள் கண்டிக்கவும் அரசு தண்டிக்கவும் தகுந்தவர்கள் .
- இலக்கண வறுமையாலும் இலக்கணச் செருக்காலும் எழுந்த உரைவேற்றுமைகளும் உள்ளன . இவை பழிக்கத் தகுந்தவை ஆகும் .
- முன்னோன் எழுதிய உரைப்பொருளைப் பெரிதும் தழுவக்கூடாது. தாம் ஒரு தனியுரை எழுதத் துணிந்ததற்குச் சான்றாக எங்ஙனமேனும் பல குறள்களுக்கு புத்துரை சொல்ல வேண்டும் என்னும் முனைப்பு.

என்று அவர் காரணங்களைக் கூறுகிறார் .

திருக்குறள் உரை வேற்றுமைகளை நன்கு ஆராய்ந்து வெளியிட்ட டாக்டர் இரா. சாரங்கபாணி உரை வேற்றுமைக்கு உரிய காரணத்தைப் பின்வருமாறு உரைக்கின்றார்.

"ஏடெதுவோர் பிழையால் புகுந்த பாட வேறுபாடுகளும், குறளைப்பிரிக்கும் முறைகளும் சொற்களைக் கொண்டு கூட்டும் நெறிகளும், காலத்தால்சொற்கள் எய்திய பொருள் வேறுபாடுகளும் சமுதாயத்தின் பழக்க வழக்கமாறுபாடுகளும் இயல்பாகவே உரை வேற்றுமைகட்கு இடங்கொடுத்து விட்டன.புற நாகரிகச் சார்பும் சமயச் சார்பும் அரசியற் சார்பும் முன்னிற்க, வலிந்துவேறுபட்ட உரைகளை எழுதினோரும் உளர். "

(தொடரும்)

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 10 திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2022 ஏப்ரல் 10 ஞாயிற்றுக்கிழமை

24 மணி நேரத்தில் பூமியின் வரலாறு!

பூமிக்கு தற்போது வயது 4.6 பில்லியன் ஆண்டுகள் ஆகிறது. இந்த ஒட்டுமொத்த பூமியின் வரலாற்றையும் 24 மணி நேரத்துடன் ஒப்பிட்டால் மனிதன் எப்போது பூமியில் தோன்றினான் தெரியுமா? அதாவது பூமி நள்ளிரவில் தோன்றிது என்று வைத்துக்கொள்வோமே அடுத்த நள்ளிரவுக்கு சற்று முன்னர் தான் மனிதன் தோன்றினான். ஒட்டுமொத்த பூமியின் வரலாற்றை இந்த 24 மணி நேரத்துடன் ஒப்பிட்டுப் பார்ப்போம், அப்போது இது நன்றாகப் புரியும்.

0:00 – நியுடனின் புவியீர்ப்பு விதியின் அடிப்படையில், சூரிய குடும்பத்தில் உள்ள வாயுக்கள் ஒன்றுடன் ஒன்று சேர்த்து அழுத்தப்பட்டு கிரகம் பிறந்தது.

மு.ப. 05:00 தொடக்கம் 06.00 வரை – நிலப்பரப்புகள் உருவாகி, கண்டங்கள் தோன்றின.



மு.ப. 06.00 – உயிர்கள் தோன்றின!

மு.ப. 6 தொடக்கம் 22:00 மணி வரை 16 மணித்தியாலங்கள் (சுமார் 3 பில்லியன் ஆண்டுகள்!) – அனைத்து உயிர்களும் தண்ணீரில் இருந்தன!

22:00 – அல்லது அதற்குப் பின்: தாவரங்கள் தோன்றின.

22:45 – டைனோசர்கள் பூமியில் உலாவ ஆரம்பித்தன.

23:23 – நள்ளிரவை தொடுவதற்கு 37 நிமிடங்கள் இருக்கும்போது ஆபிரிக்கா தோன்றியது.

23.30 – நள்ளிரவுக்கு 30 நிமிடங்கள் இருக்கும்போது, பாலூட்டிகள் உருவாகின.

23:40 – அனைத்து டைனோசர்களும் பூமியில் இருந்து அழிந்தன. (பூமி மீது விண்கல் மோதியதை அடுத்து ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் இது நிகழ்ந்திருக்கக் கூடும்)

23:58 – நள்ளிரவுக்கு 2 நிமிடங்கள் இருக்கும்போது, மனித மூதாதையர்கள் பூமியில் எழுந்து நடக்க ஆரம்பித்தார்கள்.



23:59:59 மற்றும் 999 மில்லி விநாடிகள் – அதாவது ஒரு மில்லி விநாடிக்கு முன்னர் மனிதன் நிலவில் கால் பதித்தான் (1969 ஆம் ஆண்டு).

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

அபூர்வ தேவாலயம்

செல்டெக் ஒசுவாரி என்ற தேவாலயம் செக் குடியரசில் இருக்கிறது. அந்த நாட்டில் அதிக சுற்றுலா பயணிகள் வரும் இடம் இதுதான். இந்த தேவாலயத்தை எலும்பு தேவாலயம் என்றும் அழைப்பார்கள். கல்லறை ஒன்றுக்குக் கீழேயே இந்த தேவாலயம் இருக்கிறது. அப்படி என்ன இந்த தேவாலாயத்தில் இருக்கிறது என்றால் பார்க்கும் திசை எல்லாம் உண்மையான மனித எலும்புகளை காணலாம். மண்டையோடு தொடக்கம் உடலின் அனைத்த எலும்புகளும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருக்கும். இங்கே 40,000 தொடக்கம் 70,000 எலும்புக் கூடுகள் இருப்பதாக கணக்கு.

அதாவது 1278 ஆம் ஆண்டு காலவாக்கில் ஜெருசலத்தில் இருந்து புனித மண்ணை கொண்டுவந்து இந்தக் கல்லறை பூமியில் தூவியதாக பேச்சு. அது பிராந்தியம் எங்கும் பரவியதை அடுத்து இங்கே அடக்கம் செய்யப்படுவதை விரும்பியதால் 15 ஆம் நூற்றாண்டாகும்போது அந்தக் கல்லறை கட்டுக்கடங்காமல் வளர்ந்துவிட்டது. இதனால் எலும்புகளை தொண்டி எடுத்து இப்படி அலங்காரமாக தொங்கவிட்டிருக்கிறார்கள்.

தலாய்லாமா

இந்தியாவில் தஞ்சமடைந்து 63 ஆண்டுகள் கடந்த நிலையிலும் தலாய் லாமாவின் திபெத்திய கனவு நிறைவேறுமா? தலாய் லாமா என்பது இவரது பெயரல்ல. திபெத் நாட்டின் பௌத்தர்களின் ஆத்மீக தலைவர், தலாய்லாமா என்ற பதவிப் பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றனர். தலாய்லாமா தேர்வு செய்யப்படுவதில்லை; கண்டுபிடிக்கப்படுகிறார்கள். திபெத்தின் முதலாவது தலாய் லாமாவாக கெண்டுன் ட்ருப் (1391–1474) பதவி வகித்தார். 13 ஆவது தலாய் லாமாவாக துப்டன் கியாட்ஸோ (1876–1933) பதவி வகித்தார். 14 ஆவது தலாய்லாமாவாக தற்போதிருக்கும் தலாய் லாமாவிற்கு பெற்றோர் இட்ட பெயர் லாமோ தொண்டுப் (தலாய் லாமாவாக இனங்காணப்பட்டதன் பின் டென்ஸின் கியாட்ஸோ).

லாமோ தொண்டு 1935 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6 ஆம் திகதி டக்ஸ்டர் எனும் கிராமத்தில் வைக்கோல் பரப்பப்பட்ட அழுக்கான தரையில் சோக்யாங் செரின், சோனம் சோமோ எனும் தம்பதியினருக்கு 16 குழந்தைகளில் ஒருவராக பிறந்தார். ஏழு குழந்தைகள் மட்டுமே உயிர் பிழைத்தன. தாயார் குழந்தைகளைப் பெற்றெடுத்த போது செவிலியர்கள் யாரும் உடனில்லை. தொப்புள் கொடியைக் கூட தானே அறுத்தெறிய வேண்டிய நிலை. பிரசவம் முடிந்து சில தினங்களில் வீட்டு வேலைகளையும் கவனிக்கத் தொடங்கிவிட்டார். அந்தளவுக்கு அசாத்தியமான மனவுறுதியும் திடமான மனநிலையும் கொண்டவர்.

தலாய் லாமாக்கள் புத்த பெருமானின் அவதாரங்கள் என்றே திபெத் மக்கள் நம்புகின்றனர். ஆனால் புத்த மதத்தில் இது போன்ற நம்பிக்கைகளுக்கு இடமில்லை. ஒரு தலாய் லாமா இறந்ததும் அவரது ஆத்மா புதிதாக பிறந்த குழந்தையொன்றின் உடலினுள் புகுந்துகொள்வதாக அவர்கள் நம்புகின்றனர். பல்வேறு சோதனைகளின் ஊடாக இந்தக் குழந்தை இனங்காணப்பட்ட பின் ஊர்வலமாக லாஸா நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டு சம்பிரதாய முறையில் தலாய் லாமா என்ற புனிதப் பதவியில் அமர்த்தப்படும். லாஸாவிலுள்ள ஆயிரம் அறைகளைக் கொண்ட பொதாலா அரண்மனையே தலாய் லாமாவின் வாசஸ்தலமாகும். ஒவ்வொரு அறையிலும் பழங்காலப் பொருட்கள் நிறைந்திருக்கும். ஒரு சில அறைகளில் வெள்ளியும் தங்கமும் விலையுயர்ந்த கற்களும் இருந்தன. வேறு சில அறைகளில் அந்தக் காலத்தில் பயன்படுத்திய வாள், கத்தி, கவசம், ஈட்டி ஆகியவற்றுடன் துப்பாக்கிகளும் தோட்டாக்களும் குவித்து வைக்கப்படிருக்கின்றன. பழைய தலாய் லாமாக்களின் தனிப்பட்ட பொருட்கள் புத்தகங்கள் ஆகியவை சில அறைகளில் காணப்படுகின்றன.



தலாய் லாமாவுக்கு அடுத்த அந்தஸ்துள்ள பதவி பஞ்சன் லாமா ஆகும். திபெத்தியர்களைப் பொருத்தவரை இவர்கள் இருவருமே அரசியல், ஆன்மீகம் இரண்டிலும் கௌரவமான உயர்பதவி வகிப்பவர்கள். ஒரு பஞ்சன் லாமா அடுத்த தலாய் லாமாவை தேர்ந்தெடுப்பதும், அந்த தலாய் லாமா அடுத்த பஞ்சன் லாமாவை தேர்வு செய்வதும் சங்கிலித் தொடர் போல் பலநூறு ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வருவது பாரம்பரிய விடயமாகும்.

தற்போது பதவியிலிருப்பவர் தலாய் லாமா என இனங்காணப்பட்ட முறையைப் பற்றி அலசுவோம். இந்தத் தேடல் தியானத்தில் தொடங்குகிறது. திபெத்திலுள்ள புனித ஏரியின் பெயர் லாமோ லாட்சோ. இந்த ஏரியை பால்டன் லாமோ எனும் தேவதை பாதுகாப்பதாக நம்பப்படுகிறது. தலாய் லாமா இனங்காண முன்பு இந்த ஆற்றங்கரையில் அமர்ந்து பௌத்த தர்மகர்த்தாக்கள் தியானம் செய்வது வழக்கம். தியானம் செய்பவரின் கனவில் தேவதை தோன்றி அடுத்த தலாய் லாமாவை அடையாளம் காட்டுவதாக நம்பப்படுகிறது. குறித்த இடத்தில் அவர் வசிக்கிறார் என்று தேவதைகள் கைகாட்டுவதில்லை. மாறாக சில குறிப்புகளை தேவதைகள் அளிக்கும். சங்கேத வடிவில் அவை அமைந்திருக்கும். உதாரணத்திற்கு ஏரிக்கருகில் ஒரு பள்ளம் தோன்றி அதற்கு மேலே மேகங்கள் பல வடிவங்களில் தோன்றும். இந்த வடிவங்கள் அனைத்தும் சங்கேதக் குறிப்புகள். அடுத்த தலாய் லாமா யார் என்பதற்கான விடை இதில் அடங்கியிருக்கும். இந்தக் குறிப்புகளை சரியான முறையில் உள்வாங்கிக் கொண்டால் விளக்கங்கள் கிடைக்கத் தொடங்கும். ஒவ்வொரு தலாய் லாமாவும் ஒவ்வொரு விதமாக அடையாளம் காட்டப்படுவார். பீடத்தில் இருக்கும் தலாய் லாமா இறந்துவிட்டால் அவரை எரிக்கும் புகை எந்தத் திசையில் செல்கிறது என்பதை குறித்து வைத்துக் கொள்வார்கள். குறிப்பிட்ட திசையில் உள்ள பகுதிகளை ஆராய்வார்கள். அங்கேயுள்ள குழந்தைகளை உன்னிப்பாக பார்வையிடுவார்கள். சோதனைகள் செய்து பிறகு முடிவெடுப்பார்கள்.

தற்போதுள்ள தலாய் லாமாவை இனங்காண்பதற்கு அனைத்து திறமைகளையும் கொண்ட ரெடிங் ரின்போசே இந்தப் பணிக்கு தேர்வு செய்யப்பட்டார். சம்பிரதாயப்படி முதல் குறிப்பை பெற இவர் லாமோ லாட்சோ ஏரிக்கு சென்று தியானத்தை ஆரம்பித்தார். அப்போது பலத்த காற்று வீசியது. நீல நிற தண்ணீர் வெள்ளை நிறமாக மாறி கறுப்பு நிறத்தில் பெரிய பள்ளம் தோன்றியது. அதன் மேலே கருமேகங்கள் பல வடிவங்களில் விரிந்தன. அவர் கண்களுக்கு மட்டும் தெரியும் வகையில் அ, க, ம எனும் மூன்று திபெத்திய எழுத்துக்கள் தோன்றி மறைந்தன. கூடவே பல காட்சிகள் அடுத்தடுத்து கண்முன் விரிந்தன. அவையாவன மூன்று அடுக்குகள் கொண்ட பொற்கூரை வேய்ந்த பௌத்த ஆலயம், ஒரு கிராமப்புற வீடு, மழை நீர் இறங்கும் கால்வாய், மலைப் பாதை, கொடி மரம், வீட்டு வாசலில் ஒரு கறுப்பு, வெள்ளை நாய். ரெடிங் இந்தக் காட்சிகளை தொகுத்துக் கொண்டார். 13 ஆம் தலாய் லாமா இறந்த போது அவர் தலை திரும்பிய கிழக்குத் திசையை குறித்துக் கொண்டார். அனைத்தையும் ஒன்றிணைத்துப் பார்த்தார். சில விடயங்கள் புரிந்தன. அ என்பது ஆம்தோ என்ற பகுதியைக் குறிக்கும், க என்பது மூன்றடுக்கு கொண்ட கும்பம் பௌத்த ஆலயம், ம என்பது கர்மா ரோல்பாய் தோர்ஜே எனும் இடத்தைக் குறிக்கிறது. இந்த அடையாளங்களை வைத்துக்கொண்டு தலாய் லாமாவை தேட ஆரம்பித்தார்கள்.

பஞ்சன் லாமா அவர்களால் நியமிக்கப்பட்ட ரெடிங் ரின்போசே 13 ஆம் தலாய் லாமா வைத்திருந்த சில பொருட்களை தன்னுடன் எடுத்துச் சென்றார். அந்தப் பொருட்களைப் போல உருவாக்கப்பட்டிருந்த போலிகளையும் உடன் கொண்டு சென்றார். அவர் கொண்டு சென்றவை தியானத்தின் போது பயன்படுத்தப்படும் மஞ்சள் மற்றும் கறுப்பு மணிகள் கொண்ட இரண்டு ஜெப மாலைகள், இரண்டு கைத்தடிகள், இரண்டு உடுக்கைகள் என்பனவாகும்.

பஞ்சன் லாமா அவர்களினால் ரெடிங் ரின்போசே மூலமாக மூன்று குழந்தைகள் தேர்வு செய்யப்பட்டனர். மூவரும் ஆம்தோ பகுதியை சேர்ந்தவர்கள். அனைவரும் கும்பம் பௌத்த ஆலயத்திற்கு அருகே வசித்தவர்கள். இவர்களில் ஒருவரே அடுத்த தலாய் லாமா என கணிக்கப்பட்டார்கள். தேடல் தொடங்கியது. ஆரம்பிக்கும் போதே மூவரில் ஒரு சிறுவன் இறந்து போயிருந்தான். அடுத்த சிறுவனோ இவர்களைப் பார்த்ததும் ஓட்டம் பிடித்தான். எனவே மூன்றாவது சிறுவன் இருக்குமிடத்தை நோக்கிச் சென்றனர். நம்பிக்கையுடன் முன்னேறிய குழு ரின்போசேவின் குறிப்புகளின் அடிப்படையில் வீடு வீடாத் தேடினார்கள். இறுதியில் ஒரு வீட்டை அடைந்தனர்.

கிராமப்புற வீடு, மழைநீர் இறங்கும் சரிவுக் கால்வாய், மலைப் பாதை, கொடி மரம், வாசலிலே ஒரு நாய் ஒன்றுவிடாமல் அனைத்தும் பொருந்தியிருந்தன.

ரின்போசே தன்னை அடையாளம் தெரியாதவாறு உடைகளை மாற்றிக்கொண்டு மாறுவேடத்தில் அந்தச் சிறுவன் வீட்டிற்குள் நுழைந்தார். கடுமையான பனிப் பொழிவால் இரவு தங்க வேண்டுமென்று அந்த வீட்டினரிடம் அனுமதி கோரினார். அனுமதி கிடைத்தது. சுவையான தேநீர், ரொட்டி ஆகியவை பரிமாறப்பட்டன. தேநீர் குடித்துக் கொண்டிருந்த போது லாமோ தொண்டுப் (இன்றைய தலாய் லாமா) திடீரென்று ஓடி வந்தான். ரின்போசே கையிலிருந்த ஜெப மாலை மணிகளை சில நிமிடம் உற்றுப் பார்த்தான். பிறகு பரபரப்புடன் சொன்னான். “இது என்னுடையது. இதை ஏன் நீங்கள் வைத்திருக்கிறீர்கள்? அதை என்னிடம் தாருங்கள்” என்றான். ரின்போசே தன் திகைப்பை மறைத்தபடி “இது பழையது. வேண்டுமானால் வேறு தருகிறோம்” என்று கூறினார். அந்தச் சிறுவன் ஒப்புக்கொள்ளாமல் “புதியது வேண்டாம். எனக்கு இதுதான் வேண்டும்” என்றான். இதுதான் தருணம் என்று ரின்போசேவுக்கு தெரிந்து போனது. தாமதிக்காமல் பரிசோதனைகளை ஆரம்பித்துவிட வேண்டியதுதான் என நினைத்து பையிலிருந்த பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்து மேசையில் வைத்தார். சிறுவனை அருகில் அழைத்தார்.

கலாபூஷணம்
பரீட் இக்பால்
யாழ்ப்பாணம்

கவிதையின் வரைபடம்

மறுவாசல்
முல்லை முஸ்ரிபா

இருபத்தோராம் நூற்றாண்டு இலக்கியவரலாற்றை எழுதுதல் அல்லது இற்றைப்படுத்தல் தொடர்பில் மறுசொல்லில் பேசி வருகிறோம். இவ் விரிதளத்தில் தமிழில்,ஈழத்தில், மூன்றாம் தசாப்தத்தில்,கவிதையில் எனசுருங்கிய பரப்புக்குள் இவ் இற்றைப்படுத்தலை அல்லது எழுதுவதைச் சாத்தியமாக்குதல்; குறித்து சாத்தியமான கருத்தாடலை நீங்களும் தொடரலாம்.

உண்மையில் 21ஆம் நூற்றாண்டின் கவிதை எத்திசையை அவாவி நிற்கிறதென்பதும், அதன் பயணப்பாதை எவ்வாறு வளைந்து நெளிந்து செல்கிறதென்பதும், அதன் பாய்ச்சல் அல்லது திருப்பம் குறித்தும் இதுவரையான பிரதிகளை முன்வைத்து இந்தக் கதையாடலை நிகழ்த்தலாம்.

மூன்று தசாப்தத்திலும் வெளிவந்த பிரதிகள் பட்டியல் அல்லது சுவடியாற்றுப் படையொன்றின் உருவாக்கம் குறித்தும் சிந்திப்பதன் வழி உட்பரப்பை உறுதிப்படுத்தவும் இயலுமாகும் என்பதனால் ''கவிதையின் வரைபடம்''என்கிற இப் பத்தியில் இருபத்தோராம் நூற்றாண்டுக்கவிதைகள் குறித்தும் பேசுவோம்.

தமிழ்க்; கவிதை வரலாறு நெடுகிலும் அதன் நதியோட்டமும் விரி கிளைகளும் குறித்த அவதானம் முக்கியமானது. பாரதியில் தொடங்கி நதியெடுத்த இப்போக்குமாய ஐதார்த்தவாதப் புனைவில் வேறுதிசையெடுத்து நிற்கிறது. இவ் இடைப்பயணத்தில் விரி கிளைகள் பல தோன்றின. 21ஆம் நூற்றாண்டு முதல் இரு தசாப்தங்களிலும் இப்போதும் இவ் விரிகிளைகளின் போக்குகளை இக்காலப் பனுவல்கள் ஊடாகவும் அவை பற்றியெழுந்த திறனாய்வு ஊடாகவும் வரலாற்றுக் குறிப்புக்கள் ஊடாகவும் விரிவாகப்பேசுவதன் ஊடாகக்க விதையின் வரைபடத்தை இற்றைப்படுத்துவோம்.

பூனையம்

மதுரன் பூனையொன்றை வரையத்தொடங்கினான்.முன்னம் அவன் வரைந்த எலியொன்று பத்துநாட்களிலேயே பெருகிவிட்டிருந்தன. ஆனால் அவற்றின் ஓடு பாதை அவன் வரைந்ததல்ல. அவையாக வரைந்து கொண்டபாதையது. இதற்கு முன் பொங்கும் பாற்சட்டி ஒன்றை வரைந்திருந்தான். அதுபொங்கியபடியே இருக்கிறது. பாற்போச்சியையோ, எலிப்பொறியையோ வரைவதற்கு மதுரன் விரும்பவில்லை. அல்லது அந்தயோசனை அவனுக்கு வரவில்லை.

இப்போதுதான் பூனையை வரையத் தொடங்கியிருக்கிறான். அதற்கெனமிருதுவான கால்கள் பற்றியும், கால்நகங்கள் பற்றியும், உணர் மீசைபற்றியும், கண்கள் எப்படியானவை என்றும் தேடிப்படித்திருந்தான் மதுரன்.

முதலில் இரண்டுகாதுகளையும் தலையின் மேற்பகுதியையும் கோடுகளால் அமைத்தான். பின் முள்ளந்தண்டோடு சேர்த்துவால்வரை இழுத்தான்.பூனையின் தோற்றம் வெளிப்படத்தொடங்கியது.

அவனுக்கும் முன் வீட்டு வீமிக்குமிடையில் கனநாள் உறவு இருக்கிறது. இவன் பள்ளியால் வரும்போது காலைச் சுற்றிச்சுற்றி வரவேற்பது வீமிதான். அதன் மெதுமெதுப்பான வருடல் அதன் மீதான அன்பை அவனுக்குள் வளர்த்திருந்தது. அவனைப்போல் வீமியும் பொரித்தமீன் பிரியர்.ஒருநாள் மதுரனின் மீன் மீது வீமி பாய்ந்தபோது கூர்நகம் இவனது மென் கையில் வடுவை ஏற்படுத்திற்று. அன்றைக்கு விட்டுப்போனது மதுரன் - வீமி உறவு.

நீண்ட நாட்களுக்குப்பிறகு பூனையம் மீது இவனுக்கும் பிரியமாயிற்று. அதன் அக அடையாளம்தான் இந்தவரைவு முயற்சி.

வரைவு நிறைவுறுவதற்கு முன் நாமம் சூட்டிக் கொண்டான். வீரி. ஏனென்று கேட்க வீமியின் தம்பி என்கிறான். வீரி இவனைப்போல வீரமுடையது தான்.

வரைவிலிருந்து எழுந்துபாய்ந்து எலி வருபாதையைக் கூர்ந்தது. அப்போதுதான் பேரெலியொன்று மறையும் வால் தெரிந்தது. இது ஓடு முன் அது நழுவிற்று.

மீண்டும் வரைகிறான் பூனையம். சட்டியில் பொங்கும் பாலைக் காப்பாற்றும் பொருட்டு பூனை மீசையை வேண்டுமென்றே வரையாதுவிட்டான்.ஆனாலும் வரைவிலிருந்த பூனைபொங்கும் பாற்சட்டியைபதம் பார்த்துவிட்டது. இப்போது மதுரன் வரைந்த பொங்கும் பாற்சாட்டி தீர்ந்துபோனது. சிலநாட்கள் இவன் வரைவதை நிறுத்தினான். அதற்குள் எலியம் பெருத்துவிட்டது. பின்னொருநாள் மீண்டும் பூனைவரைபைத் தொடர்ந்தான். அதன் கால்களை மிருதுவாக வரைந்தான்.

பூனை-வீரி இவனோடு உலாத்தத் தொடங்கியது. அதன் கண்களில் இவன் கண்களை வைத்து பூனைக்கண் பார்வைபார்த்தான். அதன் மென்மையான பாதங்களோடு மெது மெதுக்க நடந்தான். குசினியில் பொரித்த மீனைப் பதமும் பார்த்தான். பூனையின் உணர் மீசையுமானான்.

இரவென்றில்லாது பகலிலும் தம் பாதையை ஹைவேயாக்கிய எலிகளைப் பிடிப்பதென்பது வீரிக்கு ஏலாதகாரியமாயிற்று. தொடக்கத்தில் எலிப்பொறியாகி தொழிற்படுமென்ற எதிர்பார்ப்பில் இவன் வரைவு அங்கீகரிக்கப்பட்டது என்றாலும் வீரி அடுப்பங்கரையில் சுருண்டுபடுக்கும் காட்சிபலவற்றைத் தன் பின் நாட்களில் மதுரன் வரையவேண்டியதாயிற்று.

அடுப்பங்கரையில் நுழைந்த பேரெலிகளிலொன்று மதுரன் வரைந்த பூனையைக்கொஞ்சம் கொஞ்சமாகக் கவ்வத் தொடங்கியது.

இப்போது பூனைக்கண்ணோடு மதுரன் மட்டும் அலைகிறான்.

மனம் ததும்பும் ஹைக்கூ 4

பனி நிறை மலைகளின்
நடுவில் ஒரேயொரு சலனம்
கருங்குருவியின் கண்

கவிதையில் இயற்கையின் இடம் பிரதானமானது. கற்பனையின் ஊற்று மூலமும் இயற்கைதான். சங்கக் கவிதைகளில் இயற்கை கருவாகி நின்றிலங்குவதனை ஐந்திணை மரபில் காணுகிறோம். அவ்வவ் திணையின் இயற்கைக்காட்சிகளும், பொருள்களும் கவிதையில் இழையோடிப் பொருளுணர்த்;தும் பாங்கு அலாதியானது. ஜப்பானிய ஹைக்கூ கவிதைகளிலும் இயற்கையோடு இயைந்து நிற்கும் பண்பு அற்புதமானது. இயற்கையின் வனப்புகளில் அல்லது இயற்கையின் படைப்புகளில் மனதைப் பறிகொடுத்து நிற்கும் உணர்வு நிலை மனம் ததும்புறச் செய்வது. மாலைக் குளிரின் அனுபவிப்பு இதமானது.''அதற்கொரு பிறவியும் வேண்டுவதே''என்கிற ஹைக்கூ கவிஞனின் மனம் இயற்கைலயிப்பில் ஈர்ப்புடையது.

மாலைக் குளிர்
எத்துணை மகிழ்ச்சி எனக்கு
மனிதனாகப் பிறந்திருக்கிறேன்

The Evening Cool
How Glad I Am
I was Born a Man

மானுடப் பிறவியின் பெருமை இது. இயற்கையின் அழகில் ஈடுபடும் மனம் ஹைக்கூ கவிஞனுடையது. இன்னொரு ஹைக்கூ

I Fell in love
With the Wings of The Birds
The Light of Spring on Them

காதல் வயப்பட்டேன்
வசந்தத்தின் ஒளியில்
பறவைகளின் சிறகுகளோடு

பறவைகளின் சிறகில் சிக்கிய மனசின் அழகு இது. இளவேனிலின் இதமான வெளிச்சம் பறவைச் சிறகுகளில் பட்டு மின்னும் அழகுக் காட்சியில் இலயிப்புறும் கவி மனம் ஹைக்கூ. மின் வெட்டாகவரும் இவ் அழகுக்காட்சி இயற்கையின் இன்பத்தைமெருகூட்டச் செய்வது.

காலைப்பனியில் காகமும்
அழகாகவே தெரிகிறது.

How Beautiful
The Usually Hatful Crow
This Morn of Snow

வழக்கமாய் வெறுத்தொதுக்கும்
காக்கையும்
எத்துணைஅழகு
காலைப்பனி
ஹைக்கூவில் செர்ரிமலர்களும்
தேவதைகளாகிவிடுகின்றன.

Cherry Blossoms at Night
Just Like Angels
Come Down From Heaven

சொர்க்கத்தில் இருந்து
கீழேவந்ததேவதைகளா
இரவில் செர்ரீமலர்க்கொத்துக்கள்

இரவுநேரத்தின்
செர்ரிமலர்க்கொத்தின்
அழகுக்காட்சியைக் காண்பிக்கும்
ஹைக்கூ இது. இப்படித்தான்
ஜப்பானியஹைக்கூ தேவதைகள்
போல அழகுரு எடுத்துநிற்பன.

''பனிநிறை.....''என்கிற ஹைக்கூவின் முதலிருவரியும் அழகிய மலைக்காட்சியை படம் பிடிக்கின்றன. கடைசிவரி அத்துணை பிரம்மாண்டமான பின்னணியில் ஒரு சிறு குருவியின் சின்னஞ்சிறிய கண்களுக்கு அழைத்துச் செல்கிறது கருங்குருவியின் கண்கள். அவற்றின் அசைவு அதனிடை வெளிப்படும் இச்சை இரைதேடும்; இச்சை உயிர் தேடும்;;;;;; இச்சை பரிதவிப்பு, தனிமை, அழகு..... எல்லாம் அடக்கம். உண்மையில் ஹைக்கூ கவிதையின் ஆகிறது. கருங்குருவியின் கண்கள் போல.....

''எக்ஸ்ரே படத்தை உங்க நாய், தூக்கிட்டு போகுது டாக்டர்!''
''எங்கே எலும்பு தெரிஞ்சாலும், அது விடாது!''

"வா சாப்பிடப் போலாம்!"
"இடம் இல்லே!"
"பந்தியிலா இடமில்லே?"
"இல்லே என் தொந்தியிலே!"

"சூரியனைச் சுற்றும் கோள்கள் பெயரைச் சொல்லு பார்க்கலாம்னு கேட்டா பேசாம இருக்கியே?_ என்ன ஆச்சு உனக்கு?"
"கோள் சொல்லக்கூடாதுன்னு சொன்னீங்களே சார்!"

''தலைவர் சந்தோஷமா இருக்காரே... ஏன்?''
''குடும்பத்துல மூணு பேர் அரஸ்ட் ஆனா, ஒருத்தருக்கு ஜாமின் தர்றேன்னு சொன்னாங்களாம்!''

''எதற்காக நம்ம தலைவருக்கு, வைக்கோல் மாலை போடுறாங்க?''
''கட்சிக்காக மாடா உழைச்சாராம்!''

"தரகரே... நீங்க ஒரு பெரிய விஷயத்தை மறைச்சிட்டீங்க."
"என்ன சொல்றீங்க?"
"பெண் அஞ்சடி உயரம்னு சொன்ன நீங்க, மூணு அடி அகலம் இருப்பாள்னு சொல்லவே இல்லையே..."

"சாயங்காலம் மொட்டை மாடியிலே யிருந்து வர்றப்ப அம்மா மூணு வாயில் புடவை வெச்சிருந்தாங்க!"
"கர்சீப்னா பரவாயில்லே_ நம்பலாம்!_ மூணு புடவையை வாயில் வெச்சிருந்தாங்களா?_ நம்பவே முடியலையே!"

பூசாரி: சாமி தலையில் இருக்கிற கீரிடத்தை எதுக்கு எடுத்த..?
பக்தர் : என் எஜமான் சாமிக்கு மொட்டை போடுறதா வேண்டிக்கிட்டாரு அதுதான்.

பஸ் ஸ்டாண்ட்ல பஸ் நிக்கும் .
ஆட்டோ ஸ்டாண்ட்ல ஆட்டோ நிக்கும் .
சைக்கிள் ஸ்டாண்ட்ல சைக்கிள் நிக்கும்.
ஆனா... கொசுவத்தி ஸ்டாண்ட்ல கொசு நிக்குமா ?? யோசிக்கனும் ...!!

"வரிசையிலே கடைசியிலே போய் நிக்கச் சொன்னேனே_ ஏன் போகலே?"
"ஏற்கனவே யாரோ ஒரு பையன் அங்கே நின்னுக்கிட்டிருக்கானே சார்!"

''கால் உடைஞ்ச உங்க தாத்தாவை, ஏன் டாக்டர்கிட்டே கூட்டிட்டு போகாம, ஜோசியர்கிட்டே அழைச்சிட்டு போறீங்க?''
''அந்த ஜோசியர்தான், 'நடக்க' போறதை சொல்வாருன்னு சொன்னாங்க!''

"பொன்மனச் செம்மல்" கலாபூஷணம்

தாஜ்மஹானுக்கு கொழும்பில் மாபெரும் பாராட்டு விழா

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

37 ஆவது கலாபூஷணம் அரச விருது வழங்கும் விழாவில் கலாபூஷணம் விருதைப் பெற்றுக்கொண்ட இலங்கை பொன்மனச் செம்மல், பொன்தமிழ்க்கவிஞர் கலாபூஷணம் எம்.எஸ். தாஜ்மஹான் கொழும்பில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்நிகழ்வு கடந்த (02) சனிக்கிழமை மாலை கொழும்பு பழைய நகர மண்டபத்தில் இடம்பெற்றது.

அக்ஷரா இசைக்குழுவினரின் ஏற்பாட்டில், இலக்கியச் செம்மல் சட்டத்தரணி ரஷீட் எம். இம்தியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு தினகரன் தினசரி மற்றும் வாரமஞ்சரியின் பிரதம ஆசிரியர் தெ.

செந்தில் வேலவர் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு,

வரவேற்புரையை இளநெஞ்சன் முர்ஷித், வாழ்த்துரையை கலைஞர் கலைச்செல்வன் ஆகியோர் வழங்கியதோடு, வகவத்தலைவர் என்.நஜ்முல் ஹுஸைன், கவித்தென்றல் அலி அக்பர் ஆகியோர் கவிவாழ்த்துப் பாடினர். நிகழ்வை கவிஞர் கிண்ணியா அமீரலி சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்வில், வகவம் தலைவர் என். நஜ்முல் ஹுஸைன், செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், கலைஞர் கலைச்செல்வன், கவித்தென்றல் அலி அக்பர், கலைவாதி கலீல், பாரம்பரியம் புகழ் கலைஞர் எம்.எஸ்.எம். ஜின்னா, அபூஉபைதா மௌஜூத், இம்ரான் நெய்னார், பாடகர் கவிக்கமல், வர்த்தகப் பிரமுகர் பஸ்லிரூமி, நூருல் ஐன் நஜ்முல் ஹுஸைன், கலைஞரும் எழுத்தாளருமான மொழிவாணன், கலாபூஷணம் முஹம்மட் அலி, ஊடகவியலாளர் எம்.எஸ்.எம். ஸாகிர் என ஏராளமானோர் கலந்து கொண்டு பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து அவரைக் கௌரவித்தனர்.

இலங்கை பொன்மனச் செம்மல் பொன் தமிழ் கவிஞர் எம்.எஸ். தாஜ்மஹானுக்கு அக் ஷரா இசைக்குழுவினால் நடத்தப்பட்ட பாராட்டு விழா இலக்கியச் செம்மல் சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ் தலைமையில் மிகக்கோலாகலமாக நடைபெற்றது.

புகைபடப்பிடிப்பாளர்களான சுரேந்தர், எஸ்.ஏ.கரீம் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இதன்போது கலாபூஷண விருதின் போது கிடைத்த பணப்பரிசை வறிய குடும்பத்தைச் சேர்ந்த, திருமணம் முடிக்கும் நிலையில் இருக்கும் ஒரு பெண்ணுக்கு தானமாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

நாட்டின் இக்கட்டான சூழ்நிலை கருதி குறிப்பிட்ட நேரத்தில் பாராட்டு நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு, மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது.

கலையுடன் பயணிக்கையில் நிறைய விடயங்களைக் கற்றுக் கொள்ளலாம்

நடனக் கலைஞர் கலாவிபூஷணன் லேணுஜா சடாஈஸ்வரன்

கலையுடன் பயணிக்கும்போது மாத்திரமே நிறைய நிறைய விடயங்களைக் கற்றுக் கொள்ளலாம். இவ்வாறு கூறுகிறார் நடனக் கலைஞர் கலாவிபூஷணன் லேணுஜா சடாஈஸ்வரன்.

இலங்கையில் பரதநாட்டியக் கலையில் தனக்கென தனி இடத்தைப் பிடித்து கலைத்துறையில் களைகட்டி வருபவர்

லேணுஜா . முறையாக பரதநாட்டியக் கலையை கற்றுத் தேர்ந்தவர் அக்கலையை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்து பல பரதநாட்டியக் கலைஞர்களை உருவாக்கி வருபவர் இவர்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் என்னும் பகுதியைச் சேந்த இவரது தந்தையாரின் பெயர் சடாஈஸ்வரன். இவரை ஈன்ற தாயாரின் பெயர் யோகராணி.பரதநாட்டியக் கலையில் நான் மேன்மைப் பெற வேண்டும் என்பதே எனது பெற்றோரதும் நண்பர்களதும் நன்நோக்கமாகும்.

நான் எனது ஆரம்பக்கல்வியை திருக்கோவில் மெதடிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் கற்றேன். நான் 1ஆம் வகுப்பு தொடக்கம் 13ஆம் வகுப்பு வரை இப்பாடசாலையில் கற்றேன்.

நான் பாடசாலையில் கற்று வந்த காலத்தில் நடனம் சம்பந்தமான எந்த போட்டியாக இருந்தாலும் ஆசிரியர்கள் கூப்பிட்டவுடன் எந்த வித மறுப்பும் தெரிவிக்காமல் பெற்றோர்களிடமும் கேட்காமல் கலந்து கொள்ள சம்மதம் கொடுத்து விடுவேன். பிறகு தான் பெற்றோரிடம் கூறி சம்மதத்தைப் பெற்றுக் கொள்வேன். நடனக் கலையின் மீது எனக்கு அவ்வளவு ஆர்வம் இருந்தது. எனது பெற்றோர்களுக்கும் பரதநாட்டியக் கலையில் அவ்வளவு ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வம் எனக்கு பரதநாட்டியத்துறையில் வெற்றிக் கொடி கட்ட உறுதுணையாகியது. நான் பாடசாலைக் கல்வியின் முடிவுறுத்திவதற்குரிய பரீட்சையில் சித்தியடைந்து இராமநாதன் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகி அங்கு நான் இப்போது கல்வி கற்று வருகின்றேன். முழு நேரமும் கலையுடன் வாழும் வாய்ப்புக் கிடைத்தால் வரமாக அதை நான் ஏற்றுக் கொள்வேன். நான் கற்றுக் கொண்டது வெறும் கை மண் அளவே. எனக்கு எப்பொழுதும் கலையை மென்மேலும் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறது.

எனக்கு மிகச்சிறிய வயதிலேயே பழனி மலைக்கு காவடி என்ற பாடலுக்கு ஆடுவதற்கான வாயப்பு கிடைத்தது. அதுதான் எனது முதலாவது நடன அரங்கேற்றம். அதனைத் தொடர்ந்து பாடசாலை நிகழ்ச்சிகளில் ஆடுவதற்கான வாய்ப்புகள் கிடைத்தன. இவ்வாறு கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, அம்பாறை ஆகிய பகுதிகளுக்கும் சென்று ஆமடைகளில் நடனமாடியக் கூடிய வாய்ப்புகள் கிடைத்தன.

பரதநாட்டியம் மட்டுமன்றி கிராமிய நடனம், கண்டிய நடனம் ஆகிய நடனங்களும் ஆடி எனது நடன ஆற்றுகையை வெளிப்படுத்தி உள்ளேன். இந்தியாவுக்குச் சென்று திருவாவூரில் உள்ள தியாகராஜ சுவாமி ஆலயத்திலும் நடனமாடி எனது நடன ஆற்றுகையை வெளிப்படுத்தி உள்ளேன்.வெளிநாடுகளுக்கும் சென்று பரதநாட்டியம் ஆடி எனது நடன ஆற்றுகையை வெளிப்படுத்த ஆவலாய் உள்ளேன். அதற்கு இறைவன் விரைவில் திருவருள் பாலிப்பான் என்று எண்ணுகின்றேன்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற கலாவிபூஷண விருது வழங்கும் வைபவத்தில் நடனமாடியக்கூடிய வாயப்பு கிடைத்தது. இதற்கு சங்கவி பிலிம்ஸ் நிறுவளத்தின் பணிப்பாளர் துரைராசா சுரேஸுக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும்.

கே. ஈஸ்வரலிங்கம்...✍

Senthooram செந்தூரம்

சினி பஜார் கேள்வி பதில்

மொழிவாணன்

எம். மலர்ராணி
கொழும்பு13

கேள்வி: நயன்தாரா சினிமா உலகை விட்டே விலகப் போகிறாராமே உண்மையா?

பதில்: ஒப்புக்கொண்ட சில படங்களில் மட்டும் நடித்து விட்டு நடிப்பதை நிறுத்திக் கொள்கிற முடிவுக்கு வந்து விட்டார் நயன்தாரா. சிறு படங்களை நிறைய தயாரிக்கும் திட்டத்தில் நயன்தாராவும் விக்னேஷ் சிவனும் இருக்கிறார்கள். அவர்கள் உடனடியாக திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று விக்னேஷ் சிவனின் தாயார் விரும்புகிறார். அதையே நயன்தாராவின் அம்மாவும் விரும்புகிறாராம். அதனால் அடுத்த வருட ஆரம்பத்தில் கட்டாயமாக திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதுதான் நயன்தாராவும் விக்னேஷ் சிவனும் எடுத்திருக்கும் முடிவு.

எல்.எம்.முபாரக்
மாவனல்ல.

கேள்வி: கமலஹாசனின் இரண்டாவது மகள் அக்ஷரா என்ன செய்து கொண்டிருக்கிறார்?

பதில்: மூன்று வருடத்திற்கு ஒரு படத்தில் நடித்தாலும் ஈடுபாட்டுடன் நடிக்க முயல்வர் அக்ஷரா ஹசன். அவரை பெண்மையக் கதாபாத்திரமாகக் கொண்டு உருவாகியிருக்கும் படம் 'அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு'. அதில் பழமை வாதக் குடும்பத்தைச் சேர்ந்த பவித்ரா என்கிற 19 வயதுப் பெண்ணின் நவீன உலகப் பாடுகளை பிரதி பலிக்கும் கதா பாத்திரத்தில் நடித்திருக்கிறார் அக்ஷரா. இந்தப் படத்தை எழுதி,இயக்கியிருப்பவர் ராராமூர்த்தி. அக்ஷ ராவுடன் உஷா உதுப், அஞ்சனா ஜெயபிரகாஷ் நடித்துள்ள இப்படம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமேசன் ப்ரைம் வீடியோவில் வெளியாகியது.

" "கிட்டத்தட்ட இது எனக்கொரு பரீட்சை" என்று கூறியிருக்கிறார் அக்ஷரா.

ஆர். ராஜகோபால்
மன்னார்.

கேள்வி: மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் பெண் வேடம் போட்டு ஏதாவது படத்தில் நடித்திருக்கிறாரா?

பதில். ஆமாம்...'காதல் வாகனம் 'என்ற படத்தில் பெண் வேடத்தில் நடித்திருக்கிறார்.

ஏ. மாகிரட்
எலபடகம

கேள்வி: நடிகர் கௌதம் கார்த்திக்கின் காதல் கைகூடாமல் போய் விட்டதாமே..?

பதில்:உண்மைதான். ஆனால் மகன் காதல் கைகூடாமல் போய்விட்ட பிறகு மகனைவிட அதிகம் கவலையில் இருக்கிறார் அவர் அப்பா. நடிகர் கார்த்திக். உடனே சொந்தத்தில் பெண் பார்த்து திருமணம் செய்யும் ஏற்பாட்டில் அவர் தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அடுத்த ஆறு மாதத்திற்குள் திருமணம் நடக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார் கார்த்திக்.

எஸ்.எல். மணியன்,
புத்தளம்.

கேள்வி: பிரபல இயக்குநர் கௌதம் மேனன் இப்போதெல்லாம் படங்களை இயக்குவதை விட்டு விட்டு வில்லனாக நடிக்க ஆரம்பித்து விட்டாராமே..!

பதில்: ஆமாம் படத்தை இயக்குவதை விட இது மிக எளிதாக இருக்கிறதாம். அவர் வில்லனாக நடித்து அடுத்து வெளிவர இருக்கும் படம் 'செல்ஃபி' இதில் ஜி.வி பிரகாஷ், வர்ஷா பொல்லம்மா இருவரும் நாயகன் நாயகியாக நடித்திருக்கிறார்கள். வெற்றி மாறனிடம் உதவி இயக்குனராக பணி புரிந்த மதி மாறன் படத்தை இயக்கி இருக்கிறார்.

கேள்வி: இயக்குநர் மணிரத்தினத்தின் பிரமாண்ட தயாரிப்பான 'பொன்னியின் செல்வன்' எப்படி இருக்கிறான்?

பதில்: 'பொன்னியின் செல்வன்'இறுதிக்கட்ட பணிகளில் மூழ்கி. விட்டதால் மணிரத்னம் இப்போது யாரையுமே அதிகம் பார்ப்பதில்லை. அயராமல் காலையில் இருந்து மாலை வரை எடிட்டிங்,ட்ரீம் செய்வதில் தீவிரமாக இருக்கிறார். இந்த மாதக் கடைசியிலேயே முதல் பிரதியைப் பார்த்து விடும் திட்டத்தில் இருக்கிறார்.

எம்.எம்.புஹாரி,
இப்பாகமுவ.

சினி பஜார் கேள்வி பதில்,
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.

நடிகர் வினய் பிரபல நடிகையுடன் காதல்

நடிகர் வினய் பிரபல நடிகையை காதலித்து வருகிறார். அவர்களது திருமணம் விரைவில் நடைபெறும் என தகவல் வெளியாகி உள்ளது.

தமிழில் கடந்த 2007ம் ஆண்டு வெளியான உன்னாலே உன்னாலே படம் மூலம் ஹீரோவாக அறிமுகமானவர் வினய் இதையடுத்து அவர் மோதி விளையாடு, மிரட்டல், ஒன்பதுல குரு என அடுத்தடுத்து படங்களில் நடித்தார்.

மிஷ்கின் இயக்கிய துப்பறிவாளன் படத்தில் மிரட்டலான வில்லன் வேடத்தில் நடித்து அசத்தினார். அவரது உயரத்திற்கும், தோற்றத்திற்கும் வில்லன் வேடம் செட் ஆனதால் தொடர்ந்து அவ்வாறே நடித்து வருகிறார் வினய். அண்மையில் இவர் வில்லனாக நடித்த டாக்டர், எதற்கும் துணிந்தவன் ஆகிய படங்கள் பிளாக்பஸ்டர் ஹிட் ஆகின. தற்போது தமிழ் சினிமாவின் முன்னணி வில்லனாக மாறியுள்ளார்.

இந்நிலையில், வினய்க்கு விரைவில் திருமணம் நடைபெறவுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. 42 வயதாகும் நடிகர் வினய், 40 வயதாகும் நடிகை விமலா ராமனை காதலித்து வருகிறாராம்.

கடந்த சில ஆண்டுகளாக காதலித்து வரும் இவர்கள் ஒன்றாக மாலத்தீவு உள்ளிட்ட நாடுகளுக்கு சுற்றுலாவும் சென்றுள்ளனர். அப்போது எடுத்த புகைப்படங்களும் வெளியாகி வைரலாகி வருகின்றன.

விரைவில் இருவரும் திருமணம் செய்துகொள்ள போவதாக அந்த தகவலில் தெரிவித்துள்ளனர். ஆனால் அவர்களின் திருமணம் குறித்த செய்திகளை நடிகர்களோ அல்லது அவர்களது குடும்பத்தினரோ உறுதிப்படுத்தவில்லை.

நடிகை விமலா ராமன் ஆஸ்திரேலியாவில் வாழ்ந்தவர் . 'பிரணயாகலம்', 'கல்லூரி குமரன்', 'நேரம்', 'ஒப்பம்', 'ரோமியோ' உள்ளிட்ட மலையாளப் படங்களின் மூலம் பிரபலமானார். தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் நடித்துள்ளார். நடிகை விமலா ராமன் தமிழில் பாலசந்தர் இயக்கிய பொய், இயக்குனர் சேரனுக்கு ஜோடியாக ராமன் தேடிய சீதை ஆகிய படங்களில் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

விஜய்யின் 66வது படத்தின் புதிய அப்டேட் வெளியாகியுள்ளது

நடிகர் விஜய் நடிப்பில் தற்போது உருவாகியுள்ள திரைப்படம் பீஸ்ட். இப்படத்தை கோலமாவு கோகிலா, டாக்டர் போன்ற படங்களை இயக்கிய நெல்சன் இயக்கியுள்ளார் . இதில் விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடித்துள்ளார். அனிருத் இசையமைக்கும் இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது . பீஸ்ட் திரைப்படம் ஏப்ரல் மாதம் 13ஆம் தேதி திரையரங்கில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படத்தை தொடர்ந்து தோழா உள்ளிட்ட படங்களை இயக்கிய வம்சி பைடிப்பள்ளி இயக்கும் படத்தில் நடிகர் விஜய் நடிக்கவுள்ளார். 'தளபதி 66' என்று பெயரிடப்பட்டுள்ள இப்படம் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் நேரடியாக வெளியாக உள்ளது. இப்படத்தைப் பிரபல தயாரிப்பாளர் தில் ராஜு தயாரிக்கவுள்ளார். இந்நிலையில் இந்த திரைப்படம் குறித்து புதிய அப்டேட் வெளியாகியுள்ளது. அதன்படி விஜய் 66 படத்தின் லுக் டெஸ்ட் ஷூட் சில நாட்களுக்கு முன்பு முடிந்துள்ளதாகவும், படப்பிடிப்பு இந்த வாரத்தில் தொடங்கவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

கிசுகிசு வந்தால் ஜாலி...கிசுகிசு ஜாலி...

வாணி போஜன்

சின்னத்திரையின் நயன்தாரா என பட்டம் பெற்று, சீரியல்களில் கட்டம் கட்டி கலக்கி, மெருகேறிய அழகோடு தமிழ் சினிமாவில் களமிறங்கி, ரசிகர் பட்டாளங்களை பரவசமாக்கும் பேரழகி நடிகை வாணி போஜன் மனம் திறக்கிறார்....

சின்னத்திரை டு பெரிய திரை வரவேற்பு

பெரிய திரை அப்படியே மாறியிருக்கு. எந்த வித்தியாசமும் இல்லை நிறைய பேருக்கு எளிதாக நடிக்க வாய்ப்பு கிடைக்கிறது. பிரியா பவானிக்கு பின் எனக்கு ஒரு அங்கீகாரம் கிடைத்திருக்கு.. என்ன மாதிரி இன்னும் நிறைய பேர் வராங்க. சந்தோஷமான விஷயம்

தமிழ் பேசும் நடிகைகளுக்கு வாய்ப்புகள்

தமிழ் பேசும் நடிகைகள் தங்கள் படங்களுக்கு வேண்டும் என்று நினைப்பவர்கள், கண்டிப்பாக தமிழ் பேசும் நடிகைகளுக்கு வாய்ப்பு தராங்க. அவங்க கதையில் என்ன யோசிக்கிறாங்கனு இயக்குனருக்கு தானே தெரியும்.

டூயட் பாடல்களுக்கு மட்டும் ஹீரோயினா நான் சும்மா வந்து டூயட் பாடிட்டு போகாமல். அந்த படத்தில் எனக்கு நடிக்க வாய்ப்புகள் இருக்கான்னு பார்த்து நடிக்கிறேன். கதை நல்லா இருந்தாலே இயக்குனரிடம் ஏதோ இருக்கு, சொன்ன மாதிரி பண்ணிடுவார்னு நம்பிக்கை வரும். அதையும் பார்ப்பேன்

வாணி போஜனின் நோக்கம், குறிக்கோள்

வரிசையா 10 படம் பண்ணனும் அப்படிங்கிறத விட ஒரு படம் பண்ணினாலும் மக்கள் மறக்க கூடாது. அப்படி ஒரு கதை உள்ள படமாக பண்ணனும்னு ஆசை..இப்போ வரை 'ஓ மை கடவுளே' படத்தை மக்கள் சொல்லிட்டே இருக்காங்க.

கலையரசனின் காதலும் கவுந்து போகும்

கலையரசன், ஆனந்தி நடித்துள்ள 'டைட்டானிக்' படத்தின் ரிலீஸ் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

நடிகர் கலையரசன் நடித்துள்ள 'டைட்டானிக்: காதலும் கவுந்து போகும்' என்ற திரைப்படம் ரிலீசுக்கு தயாராகி உள்ளது. இந்த திரைப் படத்தை அறிமுக இயக்குனர் ஜானகி ராமன் இயக்கி உள்ளார். இவர் பாலா, சுதா கொங்கரா, பாலாஜி மோகன் உள்ளிட்ட இயக்குனர்களிடம் உதவி இயக்குனராக பணிபுரிந்தவர்.

இந்த படத்தில் ஆனந்தி, ஆஷ்னா சவேரி, காளி வெங்கட் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். சி.வி.குமார் தயாரிப்பில் உருவாகியுள்ள இந்தப் படத்துக்கு நிவாஸ் கே.பிரசன்னா இசையமைத்துள்ளார்.

முதலில் இந்த திரைப்படம் நேரடியாக ஓடிடி தளத்தில் வெளியாக இருப்பதாக தகவல்கள் வெளியானது. ஆனால் தற்போது மே 6ம் திகதி ரையரங்குகளில் வெளியாகும் என்று படக்குழு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்தியா தேனி மாவட்டம்

அன்புச்செல்வி சுப்புராஜ்

தமிழ்நாட்டில் உள்ள தேனி மாவட்டம் ஆண்டிபட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட எழுத்தாளர் அன்புச்செல்வி சுப்புராஜ் 45 வது வயதில் எழுத்துத் துறையில் தடம்பதித்தார். இவர் ஆடையலங்காரம் மற்றும் வடிவமைப்பு சம்பந்தமான பயிற்சி பெற்றுள்ளார். இவர் புலவர் அழ.தமிழ்ச்செல்வன், பஞ்சவர்ணம் ஆகியோரின் புதல்வியும் மத்திய அரசு அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்ற சுப்புராஜ் என்பவரின் மனைவியுமாவார். இவருக்கு இருபிள்ளைகள் உள்ளனர். இவரது பேத்தி சு.பிரவந்திகா இளம் வயதிலேயே கவிதை, கதை எழுதி வருகிறார்.

இவரது அப்பா தமிழாசிரியர் என்பதால் இயல்பிலேயே தமிழ் ஆர்வம் இவருக்கு இருந்தது. குழந்தைகள் வளர்ந்த பின்னர் நிறைய நேரம் கிடைத்தது. அப்பொழுது முகநூலில் கணக்கு தொடங்கி "கூட்டாஞ்சோறு" எனும் முகநூல் குழுமத்தில் முதலில் எழுதத் தொடங்கினார். பாராட்டும், ஊக்கமும் கிடைக்கவும் தொடர்ந்து எழுத ஆரம்பித்தார். தனது கவிதையுலகம் இங்கு புதுக்கவிதை, ஹைக்கூ , நவீனம், என விரிந்தது. கவிதைகளுடன் கதை, கட்டுரை, நூல் விமர்சனம் என எழுதி வரும் இவர் உலகத் தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம் நிர்வாகியாக ஹைக்கூ உலகிலும், தன்முனைக் கவிதை குழுமம் நிர்வாகியாக தன்முனைக்கவிதை உலகிலும் பயணித்து வருகிறார். இதன் தொடர்ச்சியாக தன்முனைக் கவிதை படைப்பாளர்கள் பேரவை மற்றும் அன்பின் சங்கமம் சிறுவர் உலகம் என்ற இரு அமைப்புகளைத் தொடங்கி நடாத்தி வருகிறார். அன்பின் சங்கமம் சிறுவர் உலகில் குழந்தைகளுக்கு தன்முனைக் கவிதைகள் எழுதும் பயிற்சி அளித்து வருவதோடு "அன்பின் சங்கமம் சிறுவர் உலகம்" மற்றும் "சர்வதேச தமிழாழி தொலைகாட்சி கனடா" அமைப்பும் இணைந்து நடாத்தும் குழந்தைகளுக்கான "பல்சுவைக்களம்" நிகழ்வினை 45 வாரங்களுக்கும் மேல் தொடர்ந்து நடாத்தி வருகிறார்.

மேலும் முதன்முதலில் இவர் குறுங்கவிதைக்காக "கூட்டாஞ்சோறு" குழுமம் வாயிலாக சான்றிதழ் பெற்றுள்ளார். அன்று தனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும், தன்னம்பிக்கைக்கும் அளவே கிடையாது என கூறுகிறார். தொடர்ந்து பல குழுமங்கள், தமிழ் அமைப்புகள், சங்கங்கள் வாயிலாக கவிதைக்கென நூற்றுக்கணக்கான சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

எழுத்துத்துறையில் கிடைத்த விருதுகளாக

கவியுலகப் பூஞ்சோலை குழுமம் வாயிலாகப் பெற்ற "கவி வேந்தர்" விருதே இவர் பெற்ற முதல் விருது. தொடர்ந்து பல குழுமங்கள், அமைப்புகளின் வழியாக

"அப்துல் கலாம் விருது"
"கவியருவி"
"கவிச்சாகரம்"
"அமுதகவி"
"கவியமுது"
"கவி இமயம்"
"கவியரசி"

பன்னாட்டு பெண்கள் அமைப்பு வழங்கிய "தேன்மொழி விருது" தமிழ்ப்பட்டறை மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இணைந்து வழங்கிய "கவிச்செம்மல் விருது "

அம்மா தமிழ்ப்பீடம் வழங்கிய "பாவரசு விருது"



தென்னிந்தியக் கலை மற்றும் கலாச்சார மையம் வழங்கிய

" கவிதைக்கலை வித்தகி விருது" உள்ளிட்ட இன்னும் பல விருதுகளைப் பெற்றிருந்தாலும் கம்போடிய அரசுடன் இணைந்து அங்கோர்வாட் தமிழ்ச்சங்கம் அளித்த "சர்வதேச பாரதியார் விருது" பெற்ற தருணத்தை மகிழ்வின் தருணமாக உணருகிறார்.

மேலும் இவர் கவிதைகள் முகநூல் வழியாக செயல்படும் கவிதைக் குழுமங்கள் பலவற்றில் பதியப்பட்டு வந்த சூழலில் முதன்முதலில் "இனிய உதயம்" இலக்கிய இதழில் இவர் கவிதை வெளிவந்தது. இது தனக்கான ஊக்கமாக அமைந்ததாக கூறினார். தொடர்ந்து பிரான்ஸ் நாட்டில் இருந்து வெளிவரும் தமிழ் நெஞ்சம், ஈழத்திலிருந்து வெளிவரும் முத்தமிழ்க் கலசம், பொம்மி, மகாகவி, வெட்சி உள்ளிட்ட பல இலக்கிய இதழ்களிலும், நவீன விருட்சம், குவிகம், ஏழை தாசன், நீலநிலா, பொதிகை மின்னல், வளரி உள்ளிட்ட பல சிற்றிதழ்களிலும் ஹைக்கூ திண்ணை, தன்முனைக்கவிதை, வல்லினச் சிறகுகள், உள்ளிட்ட பல மின்னிதழ்களிலும் இவர் படைப்புகள் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஏறக்குறைய பதினைந்திற்கும் மேற்பட்ட நூல்களுக்கு இணை தொகுப்பாசிரியராக இருந்துள்ளார்.

இவர் இதுவரை வெளியிட்ட நூல்கள்

1) மே 2017 ஆம் ஆண்டு "அன்பின் கவிதைகள்" (புதுக்கவிதை)
2) ஏப்ரல் 2018 "நிலவோடு நான்" (குறுங்கவிதை)
3) மே 2018 "துளிர்க்கும் மரம்" (ஹைக்கூ)
4) 2020 ம் ஆண்டு வெளிவந்த "மகரந்தம் தூவும் மலர்கள்" (தன்முனைக் கவிதை முதல் பெண்கள் தொகுப்பு) பன்னாட்டுப் பெண்களின் தன்முனைக் கவிதைகள் இடம் பெற்றுள்ள முதல் பெண்கள் தொகுப்பு என்ற சிறப்பைப் பெற்றது.
ஏப்ரல் 2021 "மகரந்தத்தின் தேடல்கள்"(புதுக்கவிதை) வல்லினச் சிறகுகள் மின்னிதழ் நடாத்திய அமரர் மருத்துவர் ஜெ. அம்பிகாதேவி நினைவுப் பரிசுப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற நூலாகும்
7) நவம்பர் 2021 "இமயம் தொடும் இயைபுகள்" (தமிழில் பெண் படைப்பாளர்களின் முதல் தொகுப்பு நூல்)
9) டிசம்பர் 2021 " குட்டி மேகங்கள் தூவிய தூறல்கள்" (சிறுவர் கதைகள், தொகுப்பு நூல்)
10) டிசம்பர் 2021 "வாண்டுகள் சொன்ன கதைகள்" (சிறுவர் கதைகள், தொகுப்பு நூல்)

மேலும் இவர் எழுதிய தன்முனைக் கவிதைகள் "லாந்தர் விளக்கின் வெளிச்ச சிதறல்கள்" நூலாக அச்சிடப்பட்டுள்ளது. இவ்வாண்டின் முதல் நூலாக வெளிவரவுள்ளது.

மேலும் கவிதை எழுதுவது பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

எத்தகு சூழலிலும் கைகொள்ளும் மன அமைதியானது நம்மை நமக்கு அறிமுகம் செய்யும். சுற்றுப்புறங்களை உற்று நோக்கச் செய்யும். இயற்கையை இரசிக்கவும், சமூக அவலங்களைக் கண்டு வெகுளவும், பல்லுயிர்களை நேசிக்கவும், கனியவும், ரௌத்திரம் பழகவும், சிந்திக்கவும் தூண்டும். மௌனத்தின் உள்ளீடையும், பெருஞ் சத்தத்தின் அதிர்வையும் ஒன்றென நோக்கச் செய்யும். நம்மைச் சுற்றிலும் நடக்கும் நிகழ்வுகளின் நேர்மறை மற்றும் எதிர்மறை தாக்கங்கள், அவை சார்ந்த நம்மின் உணர்வுகளை எழுத்தின் வழியாக வடிப்பதே கவிதை என்பேன். காலத்தின் கண்ணாடியாம் கவிதைகள் எழுதுபவர் எச்சூழலில் எழுதினாரோ அந்தச் சூழலை வாசிப்பாளரை உணரச் செய்ய வேண்டும் எனக் கூறுகிறார்.

மேலும் இத்தகு கவிதைகள் எவ்வளவு காலம் கழித்து வாசித்தாலும் எழுதும் பொழுது இருந்த சூழலை உணர்த்தும் வரலாற்றுப் பதிவாக இருத்தல் சிறப்பு. எழுதுவோருக்கும், வாசிப்போருக்கும் சிறு அதிர்வை உண்டாக்க மீண்டும் மீண்டும் வாசிக்கத் தூண்ட வேண்டும். வாசிக்கும் தாகத்தை அதிகமாக்க வேண்டும்.

மேலும் நடப்பியல் நிகழ்வுகளை எளிய சொற்களில் உணர்வுகளைக் குழைத்து மிக நீண்டதாக இல்லாமல் குறுவடிவத்தில் எழுதும் கவிதைகள் வாசிப்பாளர்களை ஈர்க்கும் எனவும் கூறுகிறார்.

மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி.

தமிழர்களுக்கு என தனியே மரபணு அமைப்பு உள்ளதா?

அறிவியல் சொல்லும் ரகசியம்

உலகில் அனைத்து ஜீவராசிகளும் பரிணமிக்கின்றன. சமகாலத்திய உயிர்கள் அனைத்தும் பரிணாம கிளைகளின் தொடர் சங்கிலியின் தற்போதைய கண்ணி. பரிணாம தொடர்ச்சியில் தற்போதைய உயிரினங்களில் மனிதனுக்கு நெருக்கமானது சிம்பன்சி. சுமார் 65 லட்சம் ஆண்டுகளுக்கு முன் மனிதனுக்கான பரிணமித்த பாதையும் சிம்பன்சி பயணித்த பாதையும் பிரிந்தன. இருந்தும், ஒப்பீட்டளவில் 98.8% மரபணு தொகுப்பு ஒன்று போல் இருக்கும்.

அறிவியல் ரீதியாக மனிதனை புரிந்து கொள்ள, சிற்றினம், பேரினம், குடும்பம் போன்ற சில அடிப்படை அறிவியல் வழங்கு வார்த்தகளை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். உதாரணமாக Panthera எனும் ஒரே பேரினத்தை சேர்ந்தவைதான் சிங்கம் (leo), புலி (tigris), சிறுத்தை (pardus). அவைகளின் சிற்றின பெயரை அடைப்புக்குள் கொடுத்துள்ளேன். இவை மூன்றும் பூனை (Felidae) குடும்பத்தை சார்ந்தவை.

ஆக, புலியின் அறிவியல் பெயர் pandarus tigris, சுருக்கமாக P. tigris எனவும் தொடர்ந்து குறிக்கலாம். சிங்கம் P. leo, சிறுத்தை P. pardus.

மனிதனின் அறிவியல் பெயர் Homo sapiens. Homo பேரினம், sapiens சிற்றினம். தற்போது உலகில் உள்ள மனிதர்கள் அனைவரும் H. sapiens தான். இந்த H. sapiens எப்போது எங்கே எப்படி உருவானாது, எப்போது, எப்படி பரவியது?

Sahelanthropus tchadensis என்னும் மனிதக்குரங்குதான் (Primate என்று கூறுவர், முதனி என தமிழ்படுத்துகின்றனர்) தற்கால மனிதனுக்கும், சிம்பன்சிக்குமான பொதுவான மூதாதையின் நெருங்கிய உறவாக கருதப்படுகிறது. ஆப்ரிக்க கண்டத்தின் மேற்கு பகுதியில் சுமார் 70 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருக்கிறது. இது எப்போதும் அல்லாமல், அவ்வப்போது மட்டும் நிமிர்ந்து நடந்திருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

அதாவது மனிதன் எனும் உயிரினம் உருவாவதற்கான முதல் படிநிலை இந்த உயிரினத்தினிடமிருந்து தொல்லியல் ஆதாரத்தில் அறியப்படுகிறது.

பின் மனித பரிணாமத்தில் பாதையில் முக்கிய திருப்புமுனையில் இருந்த உயிரினம் Orrorin tugenensis எனும் கிழக்கு ஆப்ரிக்காவில் வாழ்ந்த பிரைமேட். அது கிட்டத்தட்ட முழுவதுமாக நிமிர்ந்த நடை கொண்டிருந்தது. இந்த O. tugenensis மனிதனின் மூதாதை வழியில் அல்லாமல், ஆனால் மூதாதை விலங்கின் நெருங்கிய பரிணாம தொடர்பு கொண்ட உயிரியாக இருக்கலாம் என்றும் கருத்துகள் உண்டு.

அதன் தொடர்ச்சியாக, 55 லட்சம் ஆண்டுகளுக்கு முன் கிழக்கு ஆப்ரிக்காவில் Ardipithecus kadabba எனும் விலங்கு இரு கால்களைக் கொண்டு நிமிர்ந்து நடக்கும்படியான ஆற்றல் பெற்றிருந்ததை அதன் தொல் எலும்பு படிமங்கள் மூலம் அறியப்படுகிறது (Gobbons 2009).

இதன் நெருங்கிய உயிரினமாக 44 லட்சம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த Ardipithecus ramidus எனும் விலங்கும் நேர் நிமிந்து நடத்துள்ளது.

ஆனாலும், இந்த Ardipithecus பேரின

விலங்குகள், மரத்தினை பற்றும் படியான உள்ளங்கை உள்ளங்கால்களை கொண்டிருந்தன. இவைகளின் மூளை அளவும் 300 350cc (1cc என்பது ஒரு கன செண்டிமீட்டர்) அளவிலேயே இருந்தன.

இந்த Ardipithecus பேரினத்திலிருந்து தான் Australopithecus பேரினம் பரிணமிக்கிறது. இந்த நிகழ்வுமனித பரிணாமத்தில் முக்கிய மைல்கல்.

சுமார் 40 லட்சம் ஆண்டு காலம் முன் வாழ்ந்த Australopithecis anamensis எனும் விலங்கின் தொல் படிமத்தால் அறியப்படும் முக்கிய நிகழ்வு, அதன் உள்ளங்கைகள், உள்ளங்கால்கள் மரத்தில் ஏறும்படியாக இல்லாது இருந்தது, பரிணாமத்தில் முக்கிய நிகழ்வு (Leakey et al.1995).

பின் 35 லட்ச ஆண்டுகளுக்கு முன் பலப்பல Australopithecus பேரினத்தின் சிற்றினங்கள், A. afarensis, A. bahrelghazali தோன்றி, மிக முக்கியமாக 30 லட்சம் ஆண்டுகளுக்கு முன், தெற்கு ஆப்ரிக்காவில் தோன்றிய A. africanus மிக முக்கிய திருப்புமுனை உயிரியாக கருதப்படுகிறது.

இதன் மூளை அளவு 420 510cc ஆக அதிகரிக்கிறது. இதன் பின் கால சுழற்சியில் பரிணாமத்தில் Australopithecus பேரினம் பல வேறுபட்ட சிற்றினங்கள் என, (உதாரணம் A. garhi) பரிணமிக்கிறது. இதன் கிளையாக paranthropus aethiopicus எனும் உயிரினமும் வாழ்ந்தது அறியப்படுகிறது. இதே காலகட்டத்தில்தான் (25 27 லட்சம் ஆண்டுகளுக்கு முன்) கற்களை கருவிகளாக இந்த விலங்குகள் பயன்படுத்தி இருக்கின்றன என உறுதிபட கூற முடியாவிட்டாலும், அதற்கான சமிக்ஞைகள் பரிணமித்திருக்கும் என கருதப்படுகிறது.

இதன் அந்திம காலத்திலேயே (23 லட்சம் ஆண்டுகளுக்கு முன்) Homo habilis எனும் Homo பேரினத்தை சார்ந்த விலங்கும் தோன்றுகிறது. மனிதனான Homo sapiensஐயும், H. habilisஐயும் ஒரே பேரினத்தை சார்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

இனி, அது இது என அஃறிணையில் குறிக்காமல்

உயர்திணையிலேயே குறிப்போம். H. habilis கற்களை குச்சிகளை கருவிகளாக மாற்றி, அதை உபயோகப்படுத்தியதும் கண்கூடாக, தொல் எச்சங்கள் மூலம் அறியப்படுகிறது (இந்த கருவிககளை இதற்கு முன்னும், இதே காலகட்டத்திலும் வாழ்ந்த Australopithecus garhi, paranthropus aethiopicus விலங்குகள் செய்திருக்கலாம் எனும் வாதமும் உண்டு). Homo பேரினத்தில் வெளிப்புற தொற்றம் தாண்டி, மூளை/அறிவு சார்ந்த பரிணாமமும் மிகப்பெரிய மாற்றங்களை உண்டாக்கியுள்ளது.

இவரை முதல் மனிதன் என்றே சொல்லும் அளவுக்கு மனிதனுக்கான பண்புகள் உருவாகிவிட்டிருந்தன. இவர் சுமார் 23 லட்சம் ஆண்டுகளுக்கு முன் உருவாகி, 16.5 லட்சம் ஆண்டுகள் வரை வாழ்ந்துள்ளான். இவரை 'HANDY MAN' என்று அழைக்கலாம். காரணம் ஆயுதங்களை செய்ய கற்றுக்கொண்டார்.

அதனை பத்திரப்படுத்தி மீண்டும் மீண்டும் உபயோகப்படுத்தினார் (இதற்கு முந்தைய விலங்குகள், தற்போதும் சில குரங்குகள் கற்களை குச்சிகளை கருவிகளாக பயன்படுத்தினாலும், பத்திரப்படுத்தி மீண்டும் மீண்டும் உபயோகித்ததில்லை). அதாவது, எதிர்காலத்தில் தேவை உண்டு எனும் சிந்தனை மேலோங்க தொடங்கிய காலம். குறிப்பிடத்தகுந்த மாற்றமாக, இவரது மூளையின் அளவு 500 900cc வரை விரிவடைந்திருந்தது. இது மூளை/அறிவு சார்ந்த பரிணாமத்தின் மிகப்பெரிய லாங்ஜம்ப் என்றே சொல்லலாம். இந்த H. habilis, பிற Homo சிற்றினங்களுக்கும், முந்தைய Australopithecus பேரினத்திற்குகான இடைப்பட்ட குணாதிசியங்களுடனே இருந்தார் (Tobias 2006). வெளித்தோற்றமும் சற்றே குரங்கு ஜாடை இருந்தது.

Erectus என்றால் நிமிர்ந்த என்று பொருள். இவரை 'UPRIGHT MAN' என்றும் குறிப்பிடுவதுண்டு. Homo erectus சுமார் 20 லட்சம் ஆண்டுகளுக்கு முன் கிழக்கு ஆப்ரிக்காவில் தோன்றியது. உடல்ரீதியாக மனிதனாகவே தெரிந்தார். H. habilisக்கு இருந்தது போல அல்லாமல், குரங்கு முகஜாடை பெருமளவு மறைந்து மனித முகஜாடை கொண்டிருந்தார். இவரது மூளை அளவு 546 1,251cc வரை விரிவடைந்திருந்தது. இவர் பயன்பாடு சார்ந்த பலதரப்பட்ட வதவிதமான கல் ஆயுதங்களை செய்தார்.

அதாவது, இன்ன வேலைக்கு இன்ன ஆயுதங்கள் என பிரித்தறியும் அறிவு பெற்றிருந்தார். மிக முக்கியமாக, நெருப்பை உண்டாக்க கற்றுக்கொண்டாரா என்பதில் ஐயப்பாடு இருந்தாலும், நெருப்பை பயன்படுத்த கற்றுக்கொண்டார். இயற்கையாக தோன்றிய நெருப்பை, தொடர்ந்து எரிய விட்டு பயன்படுத்திருக்கலாம் என்றே கருதப்படுகிறது. ஹோமோ எரக்டஸ் மனிதர்கள் அறிவு சார்ந்த ஆதிக்கம் செலுத்தி ஆபிரிக்கா முழுவதும் பரவினர்.

06 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்

நிறம் தீட்டுங்கள்

இடைவெளியை நிரப்புங்கள்



வழிகாட்டுங்கள்

எழுதிப் பழகுங்கள்



இளைய சமுதாயத்தை அவர்கள் மனங்களில் உள்ளவைகளை எழுத சுதந்திரம் கொடுங்கள்

கவிதாயினியும் பெண்ணிய சமூக செயற்பாட்டாளருமான கவிமணி பாயிஷா நௌபல் உடனான எமது நேர்காணல்

பன்முக ஆளுமை கொண்ட ஒருவரை ரொம்ப பிஸிக்காக சந்தித்தேன். கவிதாயினியும் பெண்ணிய சமூக செயற்பாட்டாளருமான கவிமணி பாயிஷா நௌபல் உடனான எமது நேர்காணல்

கேள்வி: உங்களை பற்றிய ஒரு அறிமுகம் தாருங்கள்

மீன்கள் காதல் பாடும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீராவோடை எனும் ஊரில் யாஸீன்வாவா சேகுலெப்பை. அகமது லெவ்வை கதீஜா உம்மா ஆகியோருக்கு ஆறு ஆண் மூன்றுபெண் வாரிசுகள். அவர்களில் கடைசிப் பிள்ளையாக பிறந்து அதே ஊரில் கல்வி கற்று யுத்தகாலத்தில் இடம்பெயர்ந்து மீராவோடை 4 ஆலீம்வீதியில் கணவர் மகள் மகன் என இரு குழந்தைகளின் தாயாக வாழ்ந்து வருகிறேன்.

கேள்வி: நுட்பம் குழுமத்தின் ஐந்தாவது ஆண்டை முன்னிட்டு 1001 ஒரு கவிதைகள் தொகுப்பை கொடுக்க இருப்பதாக அறிந்தோம் இது பற்றி

ஆமாம் குழுமம் என்பதை விட நாம் எனலாம் இது இலங்கையில் பிறந்துவளர்ந்த எல்லோரையுமே சார்ந்தது இலங்கையின் முதல் நூல் என்றாலும் இதன் பெருமை. இலங்கை மக்களையும் ஒற்றுமையையும் சேர்ந்தவையே உலகில் பரந்துவாழும் இலங்கை சிறந்த கவிஞர்களை ஒன்று சேர்த்து ஒரே கூரைக்குள் எந்த பாகுபாடும் இன்றி சேர்ப்பதே எமது நோக்கம். படிக்கும் போது மன ஒற்றுமை மகிழ்ச்சி சமரசம் என உருவாகவேண்டும் என்ற ஒரு சுயநலமும்தான் ஏன் என்றால் நான் என்றுமே இதனையே எதிர்பார்க்கிறேன்.

கேள்வி: இலங்கையில் முகநூலில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது குழுமம் நுட்பக் குழுமம் இதன் செயற்பாடுகள் என்ன இதனை நீங்கள் நிறுவிய நோக்கம் என்ன?

நான் 2015 காலப்பகுதில் முகநூலுக்குள் நுழைந்தேன் அன்றில் இருந்து என் இலக்கிய பயணம் முகநூலில் தொடர்ந்தது அந்த நேரம் இந்தியாவில் மூன்று முகநூல் குழுமங்கள் மட்டுமே இருந்தது. அதனால் நடாத்தப்படும் போட்டிகளில் பங்கு பற்றி சான்றுதல் பரிசுகள் விருதுகள் என பெற்ற நான் காலப்போக்கில் அக்குழுங்களில் உறுப்பினர், நிருவாகி, உபதலைவர் என பொறுப்புகளோடு செயல்பட்டேன். பின் 2017 நான் அமுதசுரபி பூச்சோலை எனும் விழாக்களில் விருது பெறவும் எனது நூல்களை வெளியிடவும் கவிபாடவும் என சென்னை சென்றிருந்தேன். அப்போதுதான் தெரிந்தது எவ்வளவு கவிஞர்கள் ஆளுமைகள் இலங்கையில் இருக்கிறார்கள் என்று.139 விருதுகள் அந்தக்காலப்பகுதியில் இலங்கையருக்கு கிடைத்திருந்தது .

அனைத்தையுமே நான் கொண்டுவந்து ஓட்டமாவடியில் முப்பெரும் விழா வைத்து அதில் முன்னாள் முதலமைச்சர் நஸீர் ஹாபீஸ் அவர்களால் வழங்கி வைத்தேன். அப்போது பல ஆளுமைகள் வேண்டிக்கொண்டதற்கு அமையவே நுட்பக் குழுமத்தை ஆரம்பித்தேன். அது இன்று ஐந்நுவருட முடிவை எதிர்பார்த்திருப்பதை நினைத்தால் ஆச்சரியமே இதனூடாக போட்டிகளை நடாத்துகிறோம். சிறந்த நடுவர்களை கொண்டு தெரிவு செய்து சான்றிதழும் வழங்கி வருட இறுதியில் நினைவுச்சின்னம் வழங்கி வைக்கிறோம். அத்தோடு தொகுப்பு நூல்களையும் வெளியீட்டுவருகிறோம்..இலக்கிய வளர்ச்சியையும் தாண்டி சமுக ஒற்றுமை நல்லிணக்கம் இரு உறவுகளிடமும் நிலவ வேண்டும் என்பதே என்றுமே எனது நோக்கம். இவ்வாறான விழாக்கள் வெளியீடுகளில் தான் நாம் தொலைத்த நம் பிரதேச மத ஒற்றுமையை கொண்டுவரும் என்ற நட்பாசை. .

கேள்வி: இவ்வாறுதான் எழுதவேண்டும் என குறுகிய

வட்டத்திற்குள் விமர்சிக்கும் கவிஞர்களை பற்றி நீங்க என்ன கூறவிரும்புகிறீர்கள்?

என் விடைகூட பலருக்கு பிடிக்காமல் போகலாம். அதைப்பத்தி எனக்கு கவலையே இல்லை. என்னைப் பொறுத்தவரை கவிதை ஒரு வேதவாக்கோ அல்லது குர்ஆனோ, பைபிளோ, பகவத் கீதையோ இல்லை. தவறாக எழுதிவிட்டோமே இறைவன் குற்றம் என்று அல்லது. எல்லோரும் பிறக்கும் போதே மரபு, புதுக்கவிதை, ஹைக்கூ என்று முழுவதும் கற்று வரும் கவிஞன் அல்ல. அவனும் படிப்படியா கற்றுத்தான் வரவேண்டும். அவன் வருமுன்னரே பாதைகளில் பலதடைகளைபோட்டு அவனை கேவலப்படுத்தி அசிங்கப்படுத்தி அவன் நாமமே இல்லாமல் அழிந்துவிட நினைப்பது எந்தவகை நியாயம். இதுதான் உங்கள் கவிதைத்துறை தர்மமா ?நான் ஒன்று கேட்கிறேன். எழுத்தையோ எழுத்தாளனையோ சிறைப்படுத்துவதுதான் உங்களைப்போல் குறுகிய வட்ட சிந்தனையாளர்கள் நோக்கமா பணிவாய் வேண்டுகிறேன். இதுவும் ஒருவகை பாவம்தான் அத்தோடு துரோகமும் கூட. வளர்ந்துவரும் இளைய சமுதாயத்தை அவர்கள் மனங்களில் உள்ளவைகளையும் எழுத சுதந்திரம் கொடுங்கள். முடிந்தால் தட்டிக்கொடுங்கள். இல்லையேல் ஒதுங்கி நின்று வேடிக்கைபாருங்கள்.

கேள்வி: நீங்கள் இலக்கியத்துறைக்கு ஆற்றும் ஆற்றிய பணிகள் பற்றி பேசலாமே? என் இலக்கியத்துறைகள் பற்றி பேசுவதாக இருந்தால் நுட்பம் எனது கண்ணி நூல். நுட்பம் சிறுவர் பாடல். நுட்பக்குழந்தைகள் இறுவட்டு. நுட்ப பாக்கள் கவிதை. நுட்ப துளிப்பாக்கள் 'ஹைக்கூ' என்று நூல்களும் கவிநுட்பம் என புனைப்பெயரிலும் கவிமணி கவிநுட்பம் என்று முகநூல் பக்கத்தையும் நுட்பம் குழுமம் என்று இலக்கிய குழுமத்தையும் அன்புடன் நுட்பம் என்று தனக்கான யூடிப் பக்கத்தையும் செய்து வருகிறேன்.

கேள்வி: உங்கள் நூல்கள் பற்றி கூறுங்களேன்.

எனது நூல்கள் என்று சொல்லப்போனால் நான் முதலில் வெளியிட்டநூல்" நுட்பம்" எனும் என் கன்னி நூல். தையல் மெயிண்டிங் வரைதல் என இலகுபடுத்தல்நூல். அதன்பின் என் நுட்பக் குழந்தைகள் எனும் சிறுவர் பாடல்கள் நூல். அதன்பின் நுட்பக் குழந்தைகள் இறுவட்டு. இதில் 19 பாடல்கள் உள்ளது. இதனை நானே எழுதி நானே மெட்டமைத்து நானே பாடியுள்ளேன். மூன்று விடயமும் நானே செய்தேன்.

கேள்வி: உங்கள் இலக்கிய பயணம் பற்றி கூறுங்கள்.

எனது இலக்கியப்பயணம் பற்றி கூறுவதாக இருந்தால் நான் சிறுவயதிலையே இதற்குள் வந்துவிட்டேன். இதற்கு காரணம் முதலில் என் தந்தை என் பாடசாலை ஆசிரியர்கள் என் நட்புகள் இவர்களோடு சேர்த்து என்கணவர் குழந்தைகள் என இன்று நீண்டுகொண்டே செல்கிறது. நான் சிறுவயது இருக்கும் போதே என் தந்தை என் வாசிப்பு திறனில் அதிகம் அக்கறை கொண்டிருந்தார். அதனால் என்னை அதிகஅதிகம் வாசிக்க தூண்டினார். எனக்கு மேடை ம் வாசிப்பது என்றால் அதிக விருப்பம். அவ்வாறான வாசிப்பு திறன் என்னை அதனால் நிகழ்ச்சி களுக்கு ஊக்கப்படுத்தியது. நான் சிறு வயதுமுதலே பாடல், பேச்சு போட்டி, கவிதை, ஓவியம், விளையாட்டு என்று ஒன்பது வயது இருக்கும்போதே பாடசாலையில் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டேன். அதில் பல சான்றிதல் பரிசில்கள் எனவும் சிறுவயதிலையே பலர் பாராட்டுகளையும் பெற்றேன். அன்று ஆரம்பித்த கலைப்பயணம் இன்றுவரை பல விருதுகள் பலமேடைகள் பல நூல்கள் என்று தொடர்ந்து கொண்டே போகிறது.

கேள்வி: உங்கள் படைப்புகள் அனைத்திலும் நுட்பம் என்று ஏதாவது ஒரு இடத்தில் இடம்பிடிக்கிறதை காணமுடிகிறது. அது பற்றி?

நான் ஆரம்ப காலங்களில் பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி என்று என் படைப்புகளை கொடுத்துவந்தாலும் அனைத்தும் புனைப்பெயரிலே பதிவிட்டேன். ஓட்டமாவடி ஸாயிபா, பிரிய நிலா என குழந்தைகள் பெயரோடும் சேர்த்து இன்ஷிரா நௌபல், இன்ஷாப் நௌபல் என்றும் எழுதினேன். அப்போது தையல், சமையல், பெயிண்டிங், அழகுக்கலைகளில் அதீத ஆர்வம் கொண்டிருந்தேன். அதனால் இவைகளின் நுணுக்கங்களை ஆராய்ந்து மாணவர்களுக்கும் எவ்வாறு இலகுவாக கற்றுக்கொள்ள வழிவகுப்பதற்கான ஒரு நூலை எழுத இருக்கிறேன். அந்தநேரத்தில் மர்ஹூம் ஆசிரியர் பரீன் அப்துல்காதர் சேர் அவர்களால் வானொலியில் நடாத்தப்படும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வேன். அவர் என் எழுத்துகளுக்கும் என் திறமைக்கும் களம் அமைத்துக்கொடுத்தவர்களில் ஒருவர் என்பேன். அந்த காலப்பகுதியில்தான் சேர் இவ்வாறு ஓர் நூல் நான் எழுதியுள்ளேன் என்றும் இதற்கு பெயர் சூடும்படியும் வேண்டி அவருக்கு நான் தபால் செய்தேன். அவர் நூலில் பிரதிகளை படித்துவிட்டு அதற்கு நுட்பம் என பெயர் சூடினார். நான் உடனே ஆச்சரியமாகவும் சிரிப்பாகவும் என்ன சேர் இது நுட்பமா என்றேன். தொழில்நுட்பம் என்ற பார்வையில் காரணம் தொழில் நுட்பம் பற்றிய இப்போதைய அறிவு அப்போது இருந்ததில்லை . இது நூலுக்கு என்பதைவிட உங்களுக்கு மிக பொருந்தும் என்றார்.

தொடர்புகளுக்கு:
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

யு.எல்.எம். ஹரீஸ்
(வாழைச்சேனை விசேட நிருபர்)

கருத்தரிக்க நினைக்கும் பெண்களுக்கு கைகொடுக்கும் உணவுகள்

புதுமணத் தம்பதிகள் இந்த உணவுகளை கடைப்பிடித்தால் கரு நிற்பதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கலாம். இன்று பல கணவர் மனைவிக்கு இருக்கும் பிரச்சினை குழந்தை கருவுறுதலில் ஏற்படும் சிக்கல்கள்தான்.

அதனால்தான் சமீப காலமாக லாபம் காண்கின்றன கருத்தரித்தல் மையங்கள். சில உணவுகளை தினமும் உட்கொள்வது கரு தங்குவதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும். குறிப்பாக புதுமணத் தம்பதிகள் இந்த உணவுகளை கடைப்பிடித்தால் கரு நிற்பதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கலாம்.

மாதுளை :

மாதுளை ஆண்களின் விந்தணுக்களின் எண்ணிகையை அதிகரிப்பது மட்டுமன்றி இரட்டிப்பாக்குகிறது. கருப்பையையும் வலுப்பெறச் செய்கிறது.

பால் மற்றும் பால் பொருட்கள் :

பாலில் உள்ள வைட்டமின்கள் ஆண் மற்றும் பெண்ணின் ஹார்மோன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்கிறது. இதனால் பெண்கள் கருவுறுவதற்கான வாய்ப்புகளும் அதிகரிக்கின்றன.

பேரிட்சை :

பேரிட்சை பழத்தில் உள்ள வைட்டமின் மற்றும் தாதுக்கள் கர்பத்தின் ஆரம்ப நிலையிலிருந்தே உதவுகிறது. கருப்பையின் உறுதியை பாதுகாப்பது மட்டுமன்றி கரு நின்ற பிறகும் தக்க வைக்க உதவுகிறது.

சிட்ரஸ் பழங்கள் :

ஆரஞ்சு, சாத்துகுடி என சிட்ரஸ் பழங்களை சாப்பிடுவதால் இனப்பெருக்க செயல்பாட்டை துரிதப்படுத்த உதவும் என்பது ஆய்வுகளிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இதில் உள்ள வைட்டமின் சி பெண்களுக்கு மிகவும் உதவக் கூடியது.

அல்வா ஸ்டம்ப்டு பூரி

தேவையான பொருட்கள்

கடலை பருப்பு 250 கிராம்
பாதாம் (ஊற வைத்தது) 50 கிராம்
தேங்காய் அரை மூடி (துருவியது)
கோவா 100 கிராம்
பால் 3 கப்
நெய் 1 கப்
உலர்ந்த திராட்சை 50 கிராம்
ஏலக்காய் தூள் அரை தேக்கரண்டி
சர்க்கரை 350 கிராம்
மைதா 250 கிராம்
உப்பு தேவையான அளவு
எண்ணெய் தேவையான அளவு
தண்ணீர் தேவையான அளவு

செய்முறை

கடலை பருப்பை குக்கரில் போட்டு தண்ணீர் ஊற்றி குழையும் வரை வேக வைக்கவும்.

ஆறியதும் அதை மிக்சியில் போட்டு நன்றாக அரைத்து கொள்ளவும்.

பிறகு ஊறவைத்த பாதாமை விழுதாக தனியே அரைத்து எடுத்து கொள்ளவும்.

ஒரு வாணலியில் 2 டேபிள் ஸ்பூன் நெய் ஊற்றி அதில் உலர்ந்த திராட்சையை போட்டு நன்றாக வறுத்து கொள்ளவும்.

அதே வாணலியில் 4 டேபிள் ஸ்பூன் நெய் ஊற்றி அதில் அரைத்து வைத்திருந்த கடலை பருப்பு விழுதை சேர்த்து பச்சை வாசனை போகும் வரை கிளறவும்.

பின்பு அதில் துருவிய தேங்காய், பாதாம் விழுது, கோவா, பால், ஏலக்காய் தூள், சர்க்கரை சேர்த்து கலந்து மிதமான தீயில் கிளறவும்.

பிறகு தீயை அணைத்து வறுத்து வைத்திருந்த திராட்சையை கலந்து ஆற விடவும்.

மைதாவை பாத்திரத்தில் போட்டு அதில் தேவையான அளவு உப்பு 1 மேசைக்கரண்டி நெய், அரை கப் பால் மற்றும் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி சப்பாத்தி மாவு பதத்திற்கு பிசைந்து அரை மணிநேரம் ஊறவைக்கவும். பிறகு பிசைந்து வைத்திருந்த மாவை சப்பாத்தி போல் திரட்டி அதற்குள் கடலை பருப்பு அல்வாவை வைத்து மூடவும்.

ஓரங்களில் தண்ணீர் தடவி சோமாஸ் போல் மடித்து சூடான எண்ணெயில் போட்டு பொன்னிறமாக பொரித்து எடுக்கவும்.

சூடான சுவையான அல்வா பூரி ரெடி.

"ராஜ ராஜ சோழன்"

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 162 வது படமான "ராஜ ராஜ சோழன்" திரைப்படம் திரைக்கு வந்து (31.03.1973 – 31.03.2022)

கடந்த 31ஆம் திகதியுடன் 49 ஆண்டுகள் நிறைவடைந்தது. "ராஜ ராஜ சோழன் ஆண்ட நற்காலமே தமிழகத்தின் பொற்காலம் என்பது சான்றோர் வாக்கு "அம் மாமன்னின் வரலாற்றை தென்னகத்தில் முதன்முதலாக அகலத்திரையில் (சினிமாஸ்கோப்) அமைத்து, நடிப்புலக மாமேதை நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சோழச்சக்ரவர்த்தியாக நடித்து அமோக வெற்றி கண்ட படமே "ராஜ ராஜ சோழன் ".

ராஜ ராஜ சோழன் 1973 ஆம் ஆண்டு மார்ச் 31 அன்று வெளிவந்த தமிழ்த் திரைப்படமாகும். தமிழின் முதல் சினிமாஸ்கோப் திரைப்படமும் இதுவாகும். வண்ணத்தில் வெளியான இப்படத்தை பிரமாண்ட இயக்குனர் அருட்செல்வர் ஏ. பி. நாகராஜன் இயக்கினார். இத்திரைப்படத்தில் சோழச்சக்ரவர்த்தியாக சிவாஜி கணேசன் வாழந்து காட்டினார்.

இப்படத்தை தயாரித்தவர் ஜி.உமாபதி ஆவார். இவர் பின்னாளில் மணிரத்னம் இயக்கிய "அக்கினி நட்சத்திரம் "படத்தில் வில்லனாக நடித்தார். "ராஜ ராஜ சோழன்" படத்திற்கு குன்னக்குடி வைத்தியநாதன் இசையமைப்பாளராக பணியாற்றினார். இவரின் அன்புக் கட்டளைக்கிணங்கி பழம்பெரும் பாடகர் டி.ஆர்.மகாலிங்கத்துடன் இணைந்து "தென்றலோடு உடன் பிறந்தாள் செந்தமிழ்ப் பெண்ணாள்" என்ற ஜனரஞ்சக பாடலை சிவாஜி கணேசன் பாடினார்.

இக்காவியத்தில் நம்பியாண்டார் நம்பியாக பழம்பெரும் பாடகர், நடிகர் சீர்காழிஎஸ். கோவிந்தராஜன் நடித்தார். ராஜ ராஜ சோழனின் வாரிசு ராஜேந்திர சோழனாக சிவகுமார் நடித்தார். சோழன் மகள் குந்தவை நாச்சியாராக லட்சுமி நடித்தார். விமலாதித்தன் வேடத்தில் நவரசத் திலகம் முத்துராமனும், சோழனின் அந்தரங்க நண்பர் பால தேவராக எம்.என்.நம்பியாரும், அமைச்சர் மதுராந்தகராக எஸ். வி.சஹஷ்ர நாமமும், எதிரி நாட்டு அரசன் சத்யாசிரியனாக ஆர்.எஸ். மனோகரும், டி.ஆர்.மகாலிங்கமும், சிவாஜிக்கு ஜோடியாக சோழமாதேவி வேடத்தில் விஜயகுமாரியும், சோழனின் அக்கா குந்தவைப் பிராட்டியாக எஸ்.வரலட்சுமியும், சோழனுக்கு உளவாளியாக பூங்கொடி வேடத்தில் மனோரமாவும் மிக பிரதான பாத்திரங்களில் நடித்துள்ளனர். இலங்கை கலைஞர் ஸ்ரீசங்கர் இப்படத்தில் ஈழத்துப் புலவராக கௌரவ வேடத்தில் நடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

> **சோழமன்னின் சரித்திரங்கள் பல இருப்பினும், இப்படத்தில் அவைகள் குறைவாகவும், சோழமன்னன் குடும்பத்தில் இடம்பெற்ற ஒரு சில வரலாறுகளுக்கு மட்டுமே இப்படத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டதாக பல விமர்சனங்கள் இப்படத்திற்கு எழுந்தன. இருப்பினும் "ராஜ ராஜ சோழன்" எனும் திரைப்பட அரண்மனையின் பிரதான தூணாக இருந்து தனது சிம்மக்குரலில் துடிப்பான நடிப்பாற்றலை வழங்கி மகத்தான வாகை சூடியமைக்கு கருவூலமாக இருந்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசனே.**

நீண்ட வருடங்கள் தன்னுடன் நட்பாகவிருந்த ஸ்ரீசங்கரை தன் சொந்த சிபாரிசில் இப்படத்தில் நடிக்க வாய்ப்பு வழங்கினார் நடிகர் சிவாஜி கணேசன். சோழமன்னின் சரித்திரங்கள் பல இருப்பினும், இப்படத்தில் அவைகள் குறைவாகவும், சோழமன்னன் குடும்பத்தில் இடம்பெற்ற ஒரு சில வரலாறுகளுக்கு மட்டுமே இப்படத்தில் முக்கியத்துவம் வழங்கப்பட்டதாக பல விமர்சனங்கள் இப்படத்திற்கு எழுந்தன.இருப்பினும் "ராஜ ராஜ சோழன்" எனும் திரைப்பட அரண்மனையின் பிரதான தூணாக இருந்து தனது சிம்மக்குரலில் துடிப்பான நடிப்பாற்றலை வழங்கி மகத்தான வாகை சூடியமைக்கு கருவூலமாக இருந்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசனே. சிவாஜி தோன்றும் ஒவ்வொரு கட்டங்களும் ரசிகர்களை மெய்சிலிர்க்க வைத்தன என்றால் மிகையாகாது. கங்கை கொண்ட சோழபுரம், தஞ்சை பெருவுடையார் கோவில், சோழமன்னின் அரண்மனை, போர்க்களம், தஞ்சைப் பெருவுடையார் ஸ்ரீ பிரஹதீஷ்வரர் ஆலயம், கோவில் கும்பாபிஷேகம், சிற்பிகள் பணியாற்றும் சிற்பக் கூடங்கள், தில்லைவாழ் அந்தணர்களின் தில்லைச் சிதம்பர ஆலய அமைப்புகள் போன்ற அனைத்து காட்சிகளையும் பிரசாத், வாசு ஸ்டுடியோக்களில், அரங்கம் (செட்)அமைத்து, நிர்மான கலைஞர்களான சி.குப்புசாமி, சுப்பையா ஆச்சாரி, பி.சுப்ரமண்யம் போன்றோரின் கைவண்ணத்தில் தத்ரூபமாக அமைக்கப்பட்டு இப்படத்தின் பிரமாண்டம் பறைசாற்றப்பட்டது.தேவாரம் அருளிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் நேரில் வந்தால் தான் அவர்கள் பாடியருளிய திருமுறைகள் கொண்ட ஓலைச்சுவடிகள் இருக்கும் அறை திறக்கப்படும் என்ற ஓர் ஐதீகம் இருப்பதாக கூறப்படும் தில்லைவாழ் அந்தணர்களின் திருக்கோவிலான தில்லைச் சிவசிதம்பர ஆலயத்தின் கட்டளைக்கிணங்கி, சோழமன்னன் தேவாரம் பாடிய மூவரையும் பொற்சிலையாக வடித்து பல்லக்கில் எழுந்தருளச் செய்து, அறையைத் திறக்கச் செய்து தேவாரச் சுவடிகளை அடையும் காட்சி மிக அருமை. இதற்காக தில்லைவாழ் அந்தணர்களிடம் சோழமன்னன் கூறும் விளக்கம் பிரமாதம். சிவாஜியை சோழனாக மாற்றியமைத்த சிறப்புக்குரியவர் சிவாஜியின் ஆஸ்தான ஒப்பனையாளர் ரங்கசாமியே கவியரசு கண்ணதாசன், கே.டி. சந்தானம், பூவை செங்குட்டுவன், உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் போன்ற கவிஞர்கள் இப்படத்திற்கு பாடல்கள் புனைந்துள்ளனர். திருநாவுக்கரசு நாயனார் பாடிய "ஓசை ஒலியெலாம்" என்ற தேவாரமும் இப்படத்தில் சீர்காழி கோவிந்தராஜனால் பாடப்பட்டது. இப்படத்தில் இடம்பெற்ற பாடல்கள்: தென்றலோடு உடன் பிறந்தாள் செந்தமிழ் பெண்ணாள், தஞ்சை பெரிய கோவில் பல்லாண்டு வாழ்கவே, மயக்கும் மன்னன், நாதனைக் கண்டேனடி, மாதெனைப் படைத்தான், ஏடு தந்தானடி தில்லையிலே, உன் கையில் என் பிள்ளை உனக்கே... போன்றன.

நடிகர் முத்துராமனும் இப்படத்தில் ஒரு பாடல் பாடியுள்ளார். சிவாஜி கணேசனின் சினிமா வாழ்வில் "ராஜ ராஜ சோழன் "ஓர் சகாப்தம்.

இலங்கையில் இப்படம் அமோக வெற்றி பெற்றது. கொழும்பு, யாழ், திருமலை, மட்டுநகர் மற்றும் மலையகமெங்கும் ஜனத்திரள் காட்சிகளாக ஓடி சாதனை படைத்தத "ராஜ ராஜ சோழன்". இன்றைய காலம் போல் அப்போது பல திரையரங்குகளில் சினிமாஸ்கோப் கண்ணாடி வில்லைகள் (லென்ஸ்) இல்லாததால் சாதாரண கண்ணாடி வில்லைகளால் ஆன ஒளிபரப்பில் இப்படம் காட்சிப்படுத்தப்பட்டது.

இயக்கம், திரைக்கதை: ஏ. பி. நாகராஜன் தயாரிப்பு: ஜி. உமாபதி, ஆனந்த் மூவீஸ் கதை, திரைக்கதை: அரு. இராமநாதன். இசை: குன்னக்குடி வைத்தியநாதன் படத்தொகுப்பு:டி. விஜயரங்கம் ஒளிப்பதிவு: டப்ளியூ, ஆர், சுப்பாராவ். நடிகர்கள்: சிவாஜி கணேசன் (சோழச்சக்ரவர்த்தி) விஜயகுமாரி(சோழமாதேவி)

முத்துராமன்(வேங்கை நாட்டு மன்னன் விமலாதித்தன்) சிவகுமார்(சோழன் மகன் ராஜேந்திர சோழன்) லட்சுமி(சோழன் மகள் குந்தவை) எம். என். நம்பியார் (சோழனின் அந்தரங்க காரியதரிசி) ஆர். எஸ். மனோகர் (ரெட்டபாதி நாட்டின் அரசன்,சோழனின் எதிரி) டி. ஆர். மகாலிங்கம்(கருவூர்த்தேவர்)

சீர்காழி கோவிந்தராஜன் (நம்பியாண்டார் நம்பி) எஸ். வரலட்சுமி (சோழனின் சகோதரி குந்தவைப் பிராட்டியார்) சுருளிராஜன் (அரண்மனை பணியாளன்) மனோரமா (சோழனின் உளவாளி பூங்கொடி).

ஆக்கம்:எஸ். கணேசன்
ஆச்சாரி சதீஷ் கம்பளை

கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்க கல்லூரியின் 2021 ம் ஆண்டிற்கான "மகுடம்" கலைவிழா

கொழும்பு டி.எஸ் சேனாநாயக்க கல்லூரியின் தமிழ் இலக்கியமன்றத்தினால் நடாத்தப்பட்ட 30ஆவது வருடாந்த கலை விழா வெகுவிமர்சையாக கடந்தவாரம் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட சிரேஷ்ட ஒலிபரப்பாளர் இரகுபதி பாலஸ்ரீதரன் வாமலோசனன் மற்றும் தமிழ் இலக்கியமன்ற பொறுப்பாசிரியர் க.சீராளன் மற்றும் தமிழ் இலக்கியமன்ற உறுப்பினர்களும் படத்தில் இருப்பதை காணலாம்

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.